
ஆசைக்
கிளியே...
CPL 592730
ஆர். மணிமாலா

785/05/9

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஆசைக் கிளியே... |
| ஆசிரியர் பெயர் | : | ஆர். மணிமாலா |
| முதற் பதிப்பு | : | டிசம்பர் 2004 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| தாள் | : | 11.6kg வெள்ளைத் தாள் |
| மொத்தப் பக்கங்கள் | : | 288 |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| பைண்டிங் | : | சாதா அட்டை பைண்டு |
| வெளியீடு | : | இராமு நிலையம்<br>23, காசிம் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-600 014. |


592730

894.8113
MAN

**விலை ரூ. 80.00**


| | | |
|---|---|---|
| ஒளி அச்சு | : | 'சிவம்'ஸ், போன்: 9444232005 |
| அச்சிட்டோர் | : | ஜீ.எம். கிராபிக்ஸ், சென்னை-14 |


சென்னை-600 008

# ஆசைக் கிளியே...

## உள்ளே...


1. ஆசைக் கிளியே 5

2. காதல் வலையில் விழலாமா? 128

3. வெண்ணிலா 228


* * *

பெறப்பட்டது

# ஆசைக் கிளியே...




ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள், ஜனனி.

எங்கோ தொலைதூரத்தில் நாயின் குரைப் பொலி தேய்ந்து... மெல்ல செவியைத் தொட்டது. தொடர்ந்து டொக்... டொக்... என்ற ஒலி இடைவிடாமல் அதிர்வாய்க் கேட்க...

கொஞ்சம் கொஞ்சமாய் உறக்கத்திலிருந்து விடுபட்டாள், ஜனனி.

படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவள், கண்களைத் திறக்காமலேயே கைகளை உயர்த்தி, சோம்பல் முறித்தாள்.

எழுந்து நின்று கைகளையும், கால்களையும் உதறி சோம்பல் முழுவதையும் போக்கினாள். சுறுசுறுப்பு ஓடிவந்து ஒட்டிக் கொண்டது.

ஜன்னல் திறந்தாள்.

பனியில் குளித்த மலர்களை கைநிறைய அள்ளி முகத்தில் வீசியது போலிருந்தது. சில்லென்று பாய்ந்து வந்த குளிர்த் தென்றல்.

விடிய இன்னும் நேரமிருந்ததால் கொஞ்சமாய் இருள் சூழ்ந்திருந்தது.

வானில் நட்சத்திரங்கள் கண்சிமிட்டிக் கொண்டிருக்க, அவர்களை வேவு பார்த்துக் கொண்டிருந்தது நிலா.

'டொக்... டொக்' சத்தம் இப்போது தெளிவாய் கேட்டது. வேறொன்றுமில்லை... பக்கத்து வீட்டு குடிநீர் குழாயில் தண்ணீர் அடிக்கும் சத்தம்தான். எல்லாம் குடிநீர் தட்டுப்பாடு படுத்தும்பாடு... ஒரு மணி நேரம்தான் தண்ணீர் வரும். அதற்குள் பிடித்தாக வேண்டும்.

ஜனனிக்குள் இப்போது கூடுதல் பரபரப்பு.

அவசரமாய் குளியலறை சென்று முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

ஒரு மூலையில் கை கால்களை பரப்பி உறங்கிக் கொண்டிருந்தான். உதயன், இருபத்தி ஆறு வயது இளைஞன். வேலையை சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருப்பவன்.

நடு அறையில் தலை முதல் கால் வரை போர்வையை போர்த்திக் கொண்டு கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சுஜாதாவுக்கு பதினெட்டு வயது. பி.பி.ஏ இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருப்பவள்.

இடதுபுற அறைக் கதவு மூடியிருந்தது. ஜனனியின் பெற்றோரின் அறை அது.

பரபரவென செயல்பட்டாள்.

ஓடுவேய்ந்த சின்ன வீடு. வீட்டின் சொந்தக்காரர் முன்புறம் தாராளமாக இடம்விட்டு சுவர் கட்டியிருந்தார். சுவர் ஓரமாய் குழாய் இருந்தது.



ஜனனி, குடங்களை கொண்டுவந்து தண்ணீர் பிடித்து நிரப்பினாள்.

வீட்டைச் சுற்றிலும் பூச்செடி, காய்கறித் தோட்டம் அமைத்து உதிரும் சருகுகளை அப்புறப்படுத்தி, அந்த இடத்தை அழகிய நந்தவனமாக்கி இருந்தாள் ஜனனி.

அவற்றுக்கும் நீர்வார்த்துவிட்டு மூச்சுவாங்க வீட்டுக்குள் நுழைந்தாள்.

மணி ஐந்தரையாகிவிட்டது. உறக்கத்தின் பிடியிலிருந்து இன்னும் யாரும் விடுபடவில்லை.

புதுக் காய்கறிகளை எடுத்து நறுக்கினாள். குக்கரில் பருப்பை வேகப்போட்டாள். முன்தினம் அப்பா வடைகறி சாப்பிட வேண்டும் போலிருக்கு என்று ஆசைப்பட்டது நினைவுக்கு வர... கடலைப்பருப்பை ஊறவைத்துவிட்டு குளிக்கச் சென்றாள்.

பத்து நிமிடத்தில் புத்தம் புதுமலராய் மலர்ச்சியுடன் வெளிப்பட்டாள். பால்காரன் இரண்டு பால் பாக்கெட்டுகளை வழக்கம் போல கேட்டில் இருந்த துணிப்பையில் போட்டு விட்டுப் போயிருக்க, அதை எடுத்து வந்தாள்.

உதயனிடம் லேசாய் அசைவு தெரிந்தது.அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் வெளிச்சம் அவன் கண்களை கூசச் செய்தது.

தலையை உயர்த்தி ஜனனியைப் பார்த்தான்.

"ஜனனி... ப்ளீஸ்,விளக்கை அணைச்சிடேன்!"

"பொழுது விடிஞ்சாச்சு.. தூங்கினது போதும்!"

"எந்திரிச்சி என்ன பண்ணப் போறேன்? அதோ... அவளை எழுப்பு... காலேஜுக்குப் போகணும். இப்பதான் பால்

வந்ததா? காபிப் போட்டு முடிச்சதும் ஒரு குரல் கொடு எந்திரிச்சிடுறேன்.''

எந்திரிச்சு என்ன பண்ணப் போறேன்? 'இருபத்தி ஆறு வயது இளைஞனிடம் வரக்கூடிய வார்த்தையா இது! பத்து வயதுகூட நிரம்பாத எத்தனை சிறுவர்கள், உழைத்தே ஆகவேண்டிய கட்டாயத்தோடு அதிகாலையில் விழித்தெழுந்து செயல்படு கிறார்கள். அவர்களால் முடிகிற உழைப்பு... இளைஞனே... திடகாத்திரமான உன்னால் முடியாதா?' ஜனனியின் நெஞ்சம் கசந்தது. வளர்ப்பில் ஏற்படும் பிசகல் இது!

பெருமூச்சுடன் சுஜாதாவைத் தொட்டு உலுக்கினாள்.

''எல்லாம் கேட்டுட்டுதான் இருந்தேன். அந்த வெட்டி ஆபீசர் சொன்னார்னு நீயும் வந்து எழுப்பறியே! நடுராத்திரி வரை கண்விழிச்சு படிச்சதை நீயும்தானே பார்த்தே? ஏழு மணிக்கு முன்னாடி எந்திரிக்கிறதாயில்லே'' கண்களை திறக்காமலேயே பேசிவிட்டு நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டாள், சுஜாதா.

''உங்ககிட்டே வந்து நேரத்தை வீண் பண்ணுறேனே... என்னை சொல்லணும் முதல்ல'' ஜனனி அங்கிருந்து நகர்ந்தாள்.

சமையலறைக்குள் நுழைந்தவள், வேகவேகமாய் வேலைகளைச் செய்தாள்.

அப்பாவுக்கு எப்போதும் சுக்கு காபிதான் வேண்டும். அம்மாவுக்கு சர்க்கரை போடாமல் டீ! மற்ற இருவரும் காபி. தனக்கும் ஒரு தம்ளர் போட்டாள்... குடித்தாள்.

பருப்பை இறக்கி, மதியத்துக்கு மணக்க மணக்க வெங்காய சாம்பார் செய்தாள். பீன்ஸ் பொரியல், மோர்க்குழம்பு, கேரட்டு... சிறுபருப்பு கூட்டு,சோறு என எல்லாவற்றையும் முடித்துவிட்டாள்.



''ஜனனி...'' அம்மாவின் குரல் கேட்டது.

''இதோ வந்திட்டேன்ம்மா!''

தூங்கி எழுந்து அறையை விட்டு வெளியில் வந்தாள், பரிமளம்.

சோம்பலையும், களைப்பையும் மீறி முகத்தில் இன்னமும் செருக்கு மிச்சமிருந்தது.

ஒரு காலத்தில் ஓகோவென்று வாழ்ந்தவள், பரிமளம் அவளின் தந்தைக்கு இரண்டு மனைவி. இரண்டாம் தாரத்து பிள்ளைகள் அவரின் இறப்பிற்குபின் சொத்தில் பங்கு கேட்டு வழக்குப் போட்டு, ஆண்டுக் கணக்கில் இழுத்துக் கொண்டிருந்தது. இருபக்க வக்கீல்களும் ஏகமாய் சம்பாதிக்க... ஒருவழியாய் பத்து ஆண்டு கழித்து தீர்ப்பானது. அதுவும் இரண்டாம் தாரத்து பிள்ளைகளுக்கு சாதகமாக!

வேறு வழியின்றி சொத்தைப் பிரித்துக் கொடுத்தபின், பரிமளத்துக்கு சொற்பமாகத்தான் பங்கு கிடைத்தது. வசதியாய் வாழ்ந்து பழகிப்போன அவளால் செலவுகளைக் குறைக்க முடியவில்லை. சொத்தை விற்றுக் கிடைத்த பணமும், இரண்டு வீடுகளும் ஐந்தே ஆண்டில் காணாமல் போயின.

கணவர் பூபாலன் அரசாங்க ஊழியர். மனைவி மீது உயிரையே வைத்திருப்பவர். அவள் என்ன செய்தாலும் கடிந்து ஒரு வார்த்தை சொல்ல அவருக்கு மனசு வராது. மூன்று ஆண்டுக்கு முன்தான் ஓய்வு பெற்றார். அவர் வாங்கிய சம்பளத்தில் அடக்கமாய். நிறைவாய் குடும்பம் நடத்தி பிள்ளைகளுக்கும் ஓரளவு சேர்த்து வைத்திருக்கலாம். ஆனால், உடம்பு வளைந்து வேலை செய்ய முடியாத பரிமளம்,

சமைக்கவும் துவைக்கவும் இரண்டு வேலைக்காரிகளை போட்டிருந்தாள். வாய்க்கு சுவையாய் சாப்பிட்டுக் கரைத்தாள்.

ஜனனி படித்து முடித்த கையோடு வேலைக்கு சேர்ந்து ஆறு ஆண்டாகிறது. அவள் தலையெடுக்கவும் வேலைக்காரிகளை நிறுத்திவிட்டு அவளே எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாள்.

உட்கார்ந்தே சாப்பிட்டதன் விளைவால் பரிமளத்துக்கு ஏகப்பட்ட நோய்கள் தேடி வந்துவிட்டன. பூபாலனுக்கும் ரத்த அழுத்தம் இருந்தது.

இருவரும் இன்னும் எழவில்லை.

''நேரமாகுது... எந்திரிக்கிறாங்களா பாரும்மா? இந்தாம்மா டீ! சுஜா... மணி எட்டாகப் போகுது... காலேஜுக்குப் போகிற மாதிரி எண்ணம் இல்லையா!''

''என்னது மணி எட்டா? உன்னை ஏழு மணிக்கே எழுப்பிவிடச் சொன்னேனே!'' திடுக்கிட்டு எழுந்தாள்.

''சமையலைப் பார்ப்பேனா? உன்னைப் பார்ப்பேனா? இன்னும் அரை மணி நேரத்திலே நான் ஆபீசுக்கு கிளம்பியாகணும். அதுக்குள்ள காலைச் சாப்பாடு செஞ்சு முடிச்சாகணும்!''

''கடவுளே... நான் எப்ப குளிச்சு, எப்ப கிளம்பறது?''

ஜனனியை உர்ரென்று பார்த்தபடி குளியலைறையை நோக்கிச் சென்றாள், சுஜாதா.



ஜனனி, ''அம்மா... எனக்கும் நேரமாயிடுச்சு... கொஞ்சம் வந்து உதயனுக்குக் காபி எடுத்துட்டுப் போய்க் கொடுத்துடேன்'' என்றாள் கெஞ்சலாக.

''சரி,'' என்றாள்.

அதன்பின் அவசர அவசரமாய் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, தனக்கும் சுஜாதாவுக்கும் மதிய சாப்பாட்டை எடுத்து வைத்துவிட்டு நிமிர்ந்து பார்க்கையில் ஐந்து நிமிட அவகாசமே இருந்தது.

உடையை மாற்றிக் கொண்டு, ''வர்றேன்ம்மா... அப்பா இன்னுமா எந்திரிக்கலே?'' என்றபடியே செருப்பை மாட்டினாள்.

''டி.வி. பார்த்துட்டு தாமதமாத்தான் தூங்கினார். அப்புறம் ஜனனி... ஒரு விஷயம்...''

''என்னம்மா?''

''சாப்பிட்டியா?''

''அதுக்கு ஏதும்மா நேரம்? இன்னைக்காவது சாப்பிட்டுட்டு போகலாம்னு பார்த்தா... ப்ச்... முடியலே! எட்டு முப்பத்தஞ்சு ஆச்சு. பஸ்சை விட்டா... ஒரு மணி நேரத்துக்கு பஸ் கிடையாது. வரட்டுமா?''

''ஒரு நிமிஷம் ஜனனி!''

''என்னம்மா... சீக்கிரமா சொல்லு!''

''மளிகை கடையிலேருந்து ஆள் வந்துட்டுப் போறான். ஆயிரம் ரூபா வேணும்!''

''என்னது?'' ஜனனியின் முகம் மாறியது.




"அசிங்கமா இருக்கு ஜனனி. ஒரு வாரமா வந்து தொல்லை கொடுக்கிறான்."

"எப்படிம்மா? சம்பளப் பணம் கொடுத்து இருபது நாள்கூட ஆகலியே! அதுக்குள்ளே எப்படி ஆயிரம் ரூபாய்க்கு கடன் இருக்கும்!"

"இது போனமாச பாக்கி!"

"அதான் ,சம்பளப் பணத்தை அப்படியே கொடுத்திடு றேனே! அதிலே கொடுக்க வேண்டியதுதானே!"

"இருந்தாதானே கொடுக்கிறதுக்கு? நீ தர்ற ஆறாயிரம் ரூபாய் இந்த விலைவாசிக்கு பதினைஞ்சு நாள் வர்றதே பெரிய விஷயம்."

"உன் கை ஓட்டை! அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? போதாதுக்கு அப்பாவோட பென்ஷன் பணம் நாலாயிரம் வருது. அதெல்லாம் என்ன பண்ணுறே?"

"என்னடி... பெத்தவகிட்டேயே கணக்குக் கேட்கிறியா? எல்லாம் என் தலையெழுத்து! அவர் வாங்குற பென்ஷன் வீட்டு வாடகைக்கும், மருத்துவச் செலவுக்குமே சரியா இருக்கு. நான் என்ன பண்ணட்டும்?"

"நான் மட்டும் என்னம்மா பண்ண முடியும்? சம்பளத்தை அப்படியே கொண்டுவந்து கொடுத்திடுறேன். உங்களுக்குத் தெரியாம எனக்கு வேறு ஏதாவது வருமானம் வருதா என்ன? சிக்கனமா செலவு செய்தா நான் சம்பாதிக்கிற பணத்தில் இதே மாதிரி இன்னொரு குடும்பத்தையும் காப்பாத்தலாம். என்கிட்டே இனி பணமில்லே. ஆளைவிடுங்க... நேரமா யிடுச்சு!" எரிச்சலுடன் தெருவில் இறங்கி வேகமாய் நடந்தாள், ஜனனி.



முகத்தில் அறையப்பட்ட உணர்வில் ஸ்தம்பித்துப் போயிருந்தாள், பரிமளம்.

"என்னம்மா இப்படி பேசிட்டு போறா?" பொருமலுடன் அம்மாவின் அருகில் வந்தான், உதயன்.

"எல்லாம் என் போதாத காலம்டா..." என்றபடி விசும்பினாள்.

அம்மாவின் அழுகுரல் கேட்டு உடை மாற்றிக் கொண்டி ருந்த சுஜாதா, பதறி ஓடிவந்தாள்.

"என்னம்மா... என்னாச்சு? ஏன் அழுறே?"

அந்த விசாரிப்பு அவள் அழுகையை இன்னும் அதிகப்படுத்தியது.

"என்னம்மா?"

"எல்லாம் இந்த வீட்டு ஹிட்லரால வந்தது!" என்றான், உதயன்.

"யாரு... அக்காவையா சொல்லுறே!"

"வேற யாரு? ஆனாலும், வரவர ரொம்பதான் ஆடுறா. சம்பாதிக்கிற திமிர். இவளாலதான் சம்பாதிக்க முடியுமா? என்னால முடியாதா? எப்பவும் இதே மாதிரியா இருந்திடப் போறேன்!"

"பெத்த தாய்கிட்டே எந்தப் பொண்ணாவது கணக்கு கேட்பாளா? மளிகைக் கடைக்காரனுக்கு ஆயிரம் ரூபாய் தரணும். கொடும்மான்னு கேட்டா... 'சம்பளத்தை என்ன பண்ணினே. ஏது பண்ணினே'ன்னு நிக்கவச்சு கேள்வி கேட்கிறா. என் பொறப்பென்ன, வளர்ப்பென்ன? பெத்தப்

பொண்ணு கிட்டேயே என்னை கையேந்தி நிக்க வேண்டிய நிலமைக்கு தள்ளிட்டானே பாழாய்போன கடவுள்!''

''அழாதேம்மா... அழுதா உனக்கு ஆகாது!'' என்று கவலையுடன் தேற்றினாள், சுஜாதா.

''எனக்கு அசிங்கமா இருக்குடி சுஜாதா! அள்ளி அள்ளிக் கொடுத்த பரம்பரையிலேருந்து வந்தவ நான்! கடன்காரியா நிக்கிறேனே! மளிகைக் கடைக்காரன் வருவானே... என்ன பதில் சொல்லுவேன்! பணம் கிடையாதுன்னு முகத்திலடிக்கிற மாதிரி சொல்லிவிட்டுப் போயிட்டாளே... அந்த ஆணவக்காரி!''

''என்ன இங்கே சத்தம்?'' உறங்கிக் கொண்டிருந்த பூபாலன் அறையிலிருந்து வெளியே வந்தார்.

அங்கு மனைவி அழுது கொண்டிருந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

''பரிமளம்... என்னாச்சு? ஏம்மா அழறே?''

''அம்மாவை அக்கா ரொம்ப மோசமா திட்டிட்டா ளாம்ப்பா!''

''ஏன்... ஏன் திட்டினா? கூப்பிடு அவளை... ஜனனீ!'' கோபமாய் கத்தினார்.

''இங்கே எங்கே இருக்கிறா? ஆபீசுக்குப் போயிட்டா?''

''அவ திட்டிட்டுப் போறவரைக்கும் நீங்களெல்லாம் பார்த்துக்கிட்டா இருந்தீங்க!''

''அம்மாவையே எதிர்த்துப் பேசுறவ... நான் சொன்னா மட்டும் அடங்கிப் போயிடுவாளா?''

மனைவியின் தோளை இதமாய் அழுத்தினார், பூபாலன்.



''உங்கம்மாவுக்காக அம்பது ரூபாய் செலவு பண்ண மாட்டேனா? நமக்குள்ளே இந்த சம்பிரதாயம் எல்லாம் வேண்டாம். ஆனா உன்னை நினைச்சாதான் எனக்குக் கவலையா இருக்கு.''

''ஏன்?'' வியப்புடன் பார்த்தாள்.

''உங்க வீட்லே உள்ள ஒவ்வொருத்தர் மேலேயும் நீ ரொம்ப பாசமா இருக்கே. ஒவ்வொண்ணையும் பார்த்துப் பார்த்து அக்கறையோடு செய்யுறே! ஆனா, அந்த பாசமும், அக்கறையும் உன்மேலே அவங்களுக்கு இல்லையோன்னு தோணுது!''

''சேச்சே...தப்பு சுதா! சிலருக்கு பாசத்தை வெளிக்காட்டத் தெரியாது. எங்கவீட்டுலேயும் அப்படிதான் மத்தபடி எல்லோரும் நல்லவங்க!''

பேசிக் கொண்டிருக்கும்போதே உள் தொலைபேசி அலறியது.

எடுத்து ''அலோ'' என்றாள், ஜனனி.

''மேடம்... உங்களுக்குத்தான்!''

''கொடு...!''

''ஆய்... ஜன்னி!'' எதிர்முனையில் கோகுலின் கம்பீரமான உற்சாகமான குரல்.

ஜனனியின் உடம்பில் புது ரத்தம் பாய்ந்தது.

குபீரென்று மலர்ந்த அவள் முகத்தைப் பார்த்து புரிந்து கொண்ட சுதா, ''கோகுல்தானே? பேசு'' என்று சிரித்தபடி அகன்றாள்.

"அலோ கோக்! நான் ஜனனி... ஜன்னி அல்ல" என்றாள் குறும்புடன்.

"ஊகூம்... உன்னை நினைச்சாலே உடம்பெல்லாம் முறுக்கி, ஜன்னி வந்திடுதே..."

"போதும் உங்க கொஞ்சல்! காலையிலே வந்ததும் வராததுமா என்ன போன் வேண்டிக் கிடக்கு!"

"ஓ...! என் குரல் கேட்டதும் குபீர்னு ஒரு சந்தோஷம் உடம்பு முழுக்க பரவவில்லை. முகம் சிவக்கவில்லை. அப்படித்தானே? சரி வச்சிடட்டுமா?"

"சரி...சரி... போன் பண்ணிட்டீங்க... என்ன விஷயம்னு சொல்லிட்டே வையுங்க!"

"திமிருடி உனக்கு! இரவெல்லாம் கனவுல வந்து தூங்கவிடாம தொல்லை பண்ணுறியே... எச்சரிக்கலாம்னு தான் போன் பண்ணினேன்!"

"நான் தொல்லை பண்ணுறேனா? மகராசன், நேத்து நீங்க என் கனவுல வந்து தொந்தரவு பண்ணினதை நான் யாருக்கிட்டே, போய் சொல்லுறதாம்?"

"ஓ... நான் அங்கே வந்துட்டேனா? என்னெல்லாம் பண்ணினேன்?"

"ஊகூம்... சொல்ல மாட்டேன்!"

"கனவுலேயாவது என்னை முத்தம் கொடுக்கவிட்டாயா? இல்லையா!"

"ம்..."

"நிஜமாவா?"



"சத்தியமா!"

"எந்த இடத்திலே?"

"சொல்ல மாட்டேன்!"

"தெரிஞ்சுக்கலேன்னா என் தலை வெடிச்சிடும். நாலு மணிக்கு தியேட்டருக்கு வா!"

"இன்னைக்கா?"

"ஆமா! அதுக்காகத்தான் பேசினேன்."

"வீட்டுலேகூட சொல்லிவிட்டு வரலே!"

"படம் முடிஞ்சு நான் தானே கொண்டுவிடப் போறேன்? நாம ஜாலியா வெளியே போய் ரொம்ப நாளாயிடுச்சு. ஏங்கிப் போயிட்டேன் ஜன்னி. நீ வரலேன்னு வச்சுக்க... கனவில இல்லை... நேர்லேயே வந்து எதையாவது பண்ணிடுவேன்!"

"மிரட்டலா? சரி... சரி... வந்து தொலைக்கிறேன்!"

"கிண்டலா?வா... உன்னை என்ன பண்ணுறேன்னு பாரு!"

ஜனனி சிரித்துக் கொண்டே ரிசீவரை வைத்தாள்.




ஜனனி, வேலையில் மூழ்கிப் போனாள். வழக்கத்தை விடவும் வேகம் கூடியது. கோகுலை சந்திக்கும் நாளில் அவளுள் இப்படியொரு வேகம் ஒட்டிக் கொள்வது சாத்தியம்தான்.

மதிய சாப்பாடு இறங்கவில்லை. பாதிகூட சாப்பிடப் பிடிக்காமல் அப்படியே மூடி வைத்தாள்.

"என்ன ஜனனி? சாப்பிடலே!"

''அலோ கோக்! நான் ஜனனி... ஜன்னி அல்ல'' என்றாள் குறும்புடன்.

''ஊகூம்... உன்னை நினைச்சாலே உடம்பெல்லாம் முறுக்கி, ஜன்னி வந்திடுதே...''

''போதும் உங்க கொஞ்சல்! காலையிலே வந்ததும் வராததுமா என்ன போன் வேண்டிக் கிடக்கு!''

''ஓ...! என் குரல் கேட்டதும் குபீர்னு ஒரு சந்தோஷம் உடம்பு முழுக்க பரவவில்லை. முகம் சிவக்கவில்லை. அப்படித்தானே? சரி வச்சிடட்டுமா?''

''சரி...•சரி... போன் பண்ணிட்டீங்க... என்ன விஷயம்னு சொல்லிட்டே வையுங்க!''

''திமிருடி உனக்கு! இரவெல்லாம் கனவுல வந்து தூங்கவிடாம தொல்லை பண்ணுறியே... எச்சரிக்கலாம்னு தான் போன் பண்ணினேன்!''

''நான் தொல்லை பண்ணுறேனா? மகராசன், நேத்து நீங்க என் கனவுல வந்து தொந்தரவு பண்ணினதை நான் யாருக்கிட்டே, போய் சொல்லுறதாம்?''

''ஓ... நான் அங்கே வந்துட்டேனா? என்னெல்லாம் பண்ணினேன்?''

''ஊகூம்... சொல்ல மாட்டேன்!''

''கனவுலேயாவது என்னை முத்தம் கொடுக்கவிட்டாயா? இல்லையா!''

''ம்...''

''நிஜமாவா?''



''சத்தியமா!''

''எந்த இடத்திலே?''

''சொல்ல மாட்டேன்!''

''தெரிஞ்சுக்கலேன்னா என் தலை வெடிச்சிடும். நாலு மணிக்கு தியேட்டருக்கு வா!''

''இன்னைக்கா?''

''ஆமா! அதுக்காகத்தான் பேசினேன்.''

''வீட்டுலேகூட சொல்லிவிட்டு வரலே!''

''படம் முடிஞ்சு நான் தானே கொண்டுவிடப் போறேன்? நாம ஜாலியா வெளியே போய் ரொம்ப நாளாயிடுச்சு. ஏங்கிப் போயிட்டேன் ஜன்னி. நீ வரலேன்னு வச்சுக்க... கனவில இல்லை... நேர்லேயே வந்து எதையாவது பண்ணிடுவேன்!''

''மிரட்டலா? சரி... சரி... வந்து தொலைக்கிறேன்!''

''கிண்டலா?வா... உன்னை என்ன பண்ணுறேன்னு பாரு!''

ஜனனி சிரித்துக் கொண்டே ரிசீவரை வைத்தாள்.




ஜனனி, வேலையில் மூழ்கிப் போனாள். வழக்கத்தை விடவும் வேகம் கூடியது. கோகுலை சந்திக்கும் நாளில் அவளுள் இப்படியொரு வேகம் ஒட்டிக் கொள்வது சாத்தியம்தான்.

மதிய சாப்பாடு இறங்கவில்லை. பாதிகூட சாப்பிடப் பிடிக்காமல் அப்படியே மூடி வைத்தாள்.

''என்ன ஜனனி? சாப்பிடலே!''

"பிடிக்கலே."

"வெங்காய சாம்பார் மணம் கமகமன்னு இருக்கே... பசியைத் தூண்டுதே... பிடிக்கலேங்கிற!"

"...."

"புரியுது!"

"என்ன புரியுது?"

"கோகுலை சந்திக்கப்போற சந்தோஷம். மனசு நிறைஞ்சிருக்கும்... அப்படித்தானே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே சுதா!" வெட்கத்துடன் தலைகவிழ்ந்தாள், ஜனனி.

"நாலு ஆண்டா காதலிச்சுக்கிட்டே இருக்கீங்க. ரொம்ப நாளா காதலிச்சிட்டிருக்கக் கூடாது. சீக்கிரம் கல்யாண சாப்பாடு போடு, ஜனனி!"

"எனக்கு மட்டும் ஆசையில்லையா என்ன? என் தம்பிக்கு ஒரு வேலை கிடைச்சிட்டா, நிம்மதியா கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம்" பெருமூச்சு விட்டபடி கைகழுவ எழுந்து சென்றாள்.

"பட்டம் வாங்கியதும் அத்தனை பேரும் வேலை வாய்ப்பு அலுவலக வாசல்ல போய் பழியாய் கிடப்பது கடைந்தெடுத்த முட்டாள்தனம். நம்ம இளைஞர்களுக்கு சுயமாய் ஏதாவதொரு தொழில் செய்யணும்னா கசக்குது."

"நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன், சுதா. எவனோ வேலை வாங்கித் தர்றேன்னு சொல்லி பணம் வாங்கிட்டான். அப்பா ஓய்வு பெற்ற பணத்திலே சுளையா ஒண்ணரை லட்சம் கொடுத்தார். இரண்டு ஆண்டுக்கு மேலே



ஆகிப்போச்சு. வேலையும் கிடைச்சபாடாயில்லே. பணமும் கைக்கு வரலே. அதைப்பற்றி நினைச்சாலே கஷ்டமாயிடுது. வேற எதையாவது பேசுவோம், சுதா!"

"சரி விடு! இப்ப எந்தப் படத்துக்குப் போறீங்க?"

"என்ன படம்னு தெரியலே. அபிராமி தியேட்டருன்னு சொன்னார்."

மறுபடி கலகலப்புக்குத் தயாரானாள் ஜனனி.

**மூ**ன்று மணி இருக்கும்.

வேலைகளை முடித்துவிட்டு, எல்லாவற்றையும் சரிபார்த்த வள் தொலைபேசி அலறியதும் நிமிர்ந்தாள்.

"அலோ..."

"..."

"எ... எப்போ?"

"..."

"எ...எப்படி?"

"..."

"இ... இதோ... வர்றேன்!" பதற்றத்துடன் எழுந்தாள்,ஜனனி.

**வீ**டு பூட்டியிருந்தது.

ஆட்டோ சத்தம் கேட்டு வெளியில் வந்த பக்கத்து வீட்டுப் பெண்மணி, சாவியைக் கொண்டு கொடுத்தாள்.

"இந்தா ஜனனி சாவி! உங்கப்பா கொடுக்கச் சொன்னார்!"

"அம்மாவுக்கு என்னாச்சு மாமி?" பயத்தில் முகம் வெளிறிப் போயிருந்தது ஜனனிக்கு.

"தெரியலேம்மா... திடீர்னு மயங்கி விழுந்துட்டாளாம். தண்ணி தெளிச்சுப் பார்த்தும் எந்திரிக்கலேயாம். ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்காங்க.!"

"எந்த ஆஸ்பத்திரி?"

"நேதாஜி ஆஸ்பத்திரிக்கு."

அதே ஆட்டோவில் விரைந்தாள்.

பூபாலன், உதயன், சுஜாதா அத்தனைபேரும் டென்ஷனோடு இருந்தனர்.

'கல்லூரியிலிருந்து சுஜாதாவும் வந்திருக்கிறாள் என்றால், எனக்கு தாமதமாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஏன்?'

"அப்பா..."

இவளைப் பார்த்ததும் முகம் இறுகிப் போனது. பூபாலனுக்கு.

"என்னாச்சுப்பா? அம்மா மயங்கி விழுந்துட்டதா உதயன் சொன்னான். ஆஸ்பத்திரியில் சேர்க்கிற அளவுக்கு என்னாச்சுப்பா?"

"ஏன், ஆஸ்பத்திரியில் சேர்த்தா பணம் செலவாயிடும்னு கேக்கறியா? நீ ஒண்ணும் பணம் தரவேண்டாம். என் செயினை அடகு வச்சு பணத்துக்கு ஏற்பாடு பண்ணிட்டோம்" என்றாள். சுஜாதா வெடுக்கென்று.

அப்போதுதான் பார்த்தாள். சுஜாதாவின் கழுத்து வெறுமையாய் இருந்தது.

"ஏன்டி இப்படிப் பேசறே? அம்மாவுக்கு என்னாச்சு? அதை முதல்ல சொல்லு."



"..."

"உதயா... நீதானே எனக்கு போன் பண்ணினே? நீயாவது சொல்லு... என்னாச்சு?"

"அம்மா காலையிலேருந்து ஒண்ணும் சாப்பிடலே. அழுதுகிட்டே இருந்தாங்க. அதனால சர்க்கரை, அழுத்தம் எல்லாம் ஏடாகூடமாயிடுச்சு."

"ஐயோ... அம்மா ஏன் அழுதாங்க? நீங்கஎல்லாம் பார்த்துக்கிட்டு சும்மாவா இருந்தீங்க?"

"காரணமே நீதான்!"

"நானா? நான் என்ன பண்ணினேன்?"

"நீதான் அம்மாவை எடுத்தெறிஞ்சு பேசிட்டுப் போனே?"

"என் நிலைமையை எடுத்துச் சொன்னேன். அதுக்குப் போய்..." பரிதவித்தாள்.

"உதயா... நானே என் மனைவி நல்லபடியா பிழைச்சி வரணுமேன்னு கவலைப்பட்டுக்கிட்டிருக்கேன். சண்டை போடுறதை முதல்ல நிறுத்தறீங்களா?"

அப்பா தன் முகத்தைக் கூடப் பார்க்கப் பிரியப்படவில்லை என்பதை அறிந்த ஜனனி, துவண்டு போனாள்.

"என்னப்பா இது? நீங்ககூடவா என்னைப் புரிஞ்சுக்க மாட்டீங்க?"

"..."

அதற்குமேல் அங்கே இருப்பது அவ்வளவு உகந்ததாய் தெரியவில்லை. ஜனனி, மருத்துவரைப் பார்க்கச் சென்றாள்.

நர்ஸ் எதிர்பட்டாள். "இப்போ எப்படி இருக்கு? அம்மாவுக்கு ஒண்ணும்..."

"பிரச்னையில்லே. கண்விழிச்சதும் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடலாம்!"

கண்மூடி நிம்மதியாய் பெருமூச்சுவிட்டாள், ஜனனி.

ஏழு மணிக்கு கண் திறந்தாள், பரிமளம்.

"பரிமளம்..." அவள் தலையைத் தடவிக் கொடுத்தார், பூபாலன்.

"அம்மா... அம்மா..."

உதயனும், சுஜாதாவும் ஆளுக்கொரு கரத்தைப் பற்றிக் கொண்டனர்.

அவர்களைப் பார்த்துக் கண்ணீருடன் புன்னகைத்தாள்.

"அம்மா... என்னம்மா இப்படி பண்ணிட்டே? பட்டினி கிடந்தா உன் உடம்புக்கு ஆகாதுன்னு தெரிஞ்சும்... ஏம்மா...?" ஜனனி, தாயின் கன்னத்தைத் தொட்டுக் கேட்டாள்.

பரிமளம் அவளைப் பார்க்கப் பிடிக்காமல் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

பரிமளத்தை இரவு ஒன்பது மணிக்கு வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டனர்.

'ஏகப்பட்ட வேலை பாக்கி இருக்கே' மலைப்புடன் சமையலறைக்குள் நுழைந்த ஜனனி, ஸ்தம்பித்துப் போனாள்.

காலையில் சமைத்து வைத்துவிட்டுப் போன அத்தனையும் தொடாமல் அப்படி அப்படியே இருந்தன. சுஜாதாவுக்கு கட்டிக் கொடுத்த மதிய உணவு உட்பட!



கண்ணீர் துளிர்த்தது, ஜனனிக்கு!

படுக்கையில் வந்து விழுந்தவளுக்கு வேதனை நெஞ்சை அடைத்தது.

'என்ன செய்துவிட்டேன் என்று என்னை இப்படித் தண்டிக்கிறார்கள்? இவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவே மாட்டார்களா?'

இமைகள் ஒன்றுசேர மறுத்தன.

சுவர்க்கடிகாரம் பதினோரு முறை அடித்து ஓய்ந்தபோது தான் மின்சாரத்தில் தாக்குண்டவள் போல் எழுந்தமர்ந்தாள்.

'நாலு மணிக்கு கோகுல் வரச்சொன்னாரே? எப்படி மறந்தேன்? வரமுடியாத சூழ்நிலையைச் சொல்லவும் ஏன் மறந்தேன்? எனக்காக காத்திருப்பாரே!' விடிய விடிய உறங்காமல் தவித்தாள்.

"அவசரமா ஒரு ரெண்டாயிரம் வேணும் சுதா! பத்து நாள்ல எப்படியாவது திருப்பிக் கொடுத்துடுறேன்."

"தர்றேன். ஆனா, எதுக்காகன்னு நான் தெரிஞ்சுக்கலாம் இல்லையா?"

"தாராளமா" என்றபடி நேற்று நடந்தவைகளைக் கூறினாள்.

"என்னடி அநியாயமா இருக்கு? ஆயிரம் ரூபா கேட்டதுக்கு இல்லேன்னு சொன்னதுக்காக வீட்டில் உனக்கு ரெண்டாயிரம் நஷ்டம் வச்சிட்டாங்களா?"

"அம்மாவாச்சே! அதுவும் ஆஸ்பத்திரிச் செலவுக்கு! கணக்குப் பார்க்க முடியாதே!"

"நீ சரியில்லே ஜனனி. கைநிறையச் சம்பளம் வாங்குறே? பணத்தைப் பிரிக்காம வீட்டுலே கொடுத்திடுறே. இப்ப கடன்

வாங்கிச் செலவு பண்ணுறே! உன்னோட சம்பளம், உங்கப்பா வோட ஓய்வுப் பணம், அஞ்சுபேர் உள்ள குடும்பத்துக்கு ரொம்ப அதிகம். அப்படியிருக்க ஏன் இவ்வளவு செலவு?''

''அப்படியில்லே, அம்மா என் பேரில் பாங்கில் பணம் போட்டுட்டு வர்றாங்க. முழுக்கவே செலவு பண்ணிடலே!'' அம்மாவை விட்டுத்தராமல் பேசினாள்.

புரிந்து கொண்ட சுதா, அவள் கையைப் பற்றி மென்மையாய் அழுத்தினாள்.

''உன்னோட நன்மைக்காகத்தான் சொல்லுறேன். தாய்... பிள்ளையா இருந்தாலும் வாயும் வயிறும் வேறு. கவனமா இரு. கோகுலை சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்க!''

கோகுல் என்றதும் சட்டென தொலைபேசியை நோக்கிச் சென்றாள்.

அவனது செல்போன் எண்ணினை ஒற்றியெடுத்தாள். சற்று நேரத்தில் மணி ஒலித்தது. இணைப்பு அறுந்தது.

மறுபடியும் முயன்றபோது அந்த செல்போன் உபயோகத்தில் இல்லை.




**எ**ந்நேரமும் அழுதுவிடுபவளைப் போலிருந்தாள். ஜனனி கோகுலைத் தொடர்பு கொள்ளவே முடியவில்லை. தன் மீது கோபமாக இருக்கிறான் என்று புரிந்து கொள்ள முடிந்தது.

அவசியமின்றி அலுவலகத் தொலைபேசியில் பேச மாட்டாள். வேறு வழியின்றி அதற்கும் முயன்றாள்.



''மேடம்... சார் ரொம்ப முக்கிய வேலையாய் இருக்கிறார். பிறகு பேசுங்களேன்!'' என்று பதில் வந்தது.

தொய்ந்து போனாள் ஜனனி.

ஒருமணிநேர இடைவெளியில் மூன்றுமுறை தொடர்பு கொண்டாள். ஒவ்வொரு முறையும் அதே பதிலையே சொன்னார்கள்.

வாடி வதங்கிப் போனது அவள் முகம். கண்கள் பொங்கின.

சுதா அவள் அருகில் வந்தமர்ந்தாள்.

''என்ன ஜனனி?''

''அ... அவருக்கு என் மேலே கோபம்'' கன்னத்தில் கண்ணீர் கோடு போட்டது.

''என்ன சொல்கிறார்?''

''என்கிட்டே பேசாம நழுவுகிறார்!''

''....''

''நான் என்ன பண்ணட்டும் சுதா? அவர் மேலே உயிரையே வச்சிருந்தேன். எப்பவோ ஒருமுறை வெளியில் சந்திக்கிறோம். அதையே சுத்தமா மறக்கிற அளவுக்கு வீட்டில் ஒரு பிரச்னை. அதை சொல்லக்கூட மறந்துட்டேன். புரிஞ்சுக்க வேணாமா அவர்?''

''சரி... ஆபீசில் அழாதே... யாராவது பார்த்துட்டா தப்பா நினைச்சிடப் போறாங்க... முதல்ல கண்ணத் தொடைச்சுக்க.''

''...''

''இப்ப என்ன? உனக்கு கோகுல்கிட்டே பேசணும் அவ்வளவு தானே? பேச வைக்கிறேன். பொறுமையா இரு''

என்ற சுதா, கோகுலின் அலுவலகத்துக்குத் தொடர்பு கொண்டாள்.

அதே பெண்தான் எடுத்தாள்.

''அலோ...''

''அலோ... கோகுல் இருக்காரா?''

''நீங்க?''

''வெங்கடலட்சுமின்னு சொன்னாத் தெரியும்!''

அடுத்த மூன்றாவது விநாடி கோகுலின் குரல் கேட்டது.

''அலோ... கோகுல் பேசுறேன்!''

''அலோ சார்...''

''சொல்லுங்க... யாரு பேசுறீங்க?''

''சாரி மிஸ்டர் கோகுல். நான் சுதா... ஜனனியோட தோழி பேசுறேன். பொய் சொன்னாதான் உங்ககூட பேசமுடியும் அதனாலதான்...''

''அ...அப்படியெல்லாமில்லே...''

''ஒரு நிமிஷம் இருங்க... ஜனனி பேசணுமாம்'' ஒரு கணமும் தாமதிக்க விரும்பாமல் ஜனனியிடம் ரிசீவரை கொடுத்துவிட்டு இடையூறன்றி எழுந்து தன் கேபினுக்கு சென்றுவிட்டாள்.

ஆர்வமாய் வாங்கிய ஜனனிக்கு பேசுமுன்பே தொண்டை அடைத்துக் கொண்டது.

''அ... அலோ...''

''...''



மறுமுனை மௌனம் சாதித்தது.

''அலோ... ஐ... ஜனனி பேசுறேன்!''

''சொல்லுங்க... என்ன விஷயம்?'' என்றான், கோகுல்.

அவன் வார்த்தையில் இருந்த அந்நியம் மளக்கென்று கண்ணீரை வரச்செய்தது.

''என்னங்க... ஏன் இப்படி பேசுறீங்க?''

''என்ன பேசிட்டேன்? எனக்கு நேரமில்லே.''

''எ... எனக்கு உங்களைப்' பார்க்கணும்.''

''சாரி... என்னால முடியாது!''

''இல்லே... நீங்க என்னைத் தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க. நான் உங்களைப் பார்த்தே ஆகணும், பேசியே ஆகணும்.''

''...''

''காலையிலேருந்து உங்களுக்கு எத்தனை முறை போன் பண்ணினேன் தெரியுமா? எனக்காகவே 'செல்'லை ஆப் பண்ணி வச்சிருக்கீங்க. உங்க கோபம் என்னை பாதிக்குது கோகுல்.''

''வசனம் பேசாதே... எரிச்சலா இருக்கு!''

''நான் என்ன பேசினாலும் இப்ப உங்களுக்குத் தப்பாதான் தெரியும். நான் அப்படியென்ன பெரிய தப்பைப் பண்ணிட்டேன். இவ்வளவு கோபம்?''

''சரி... இப்ப எனக்குப் பேச நேரமில்லே... ஆபீஸ் முடிஞ்சதும் வழக்கம் போல நாம சந்திக்கிற இடத்திலே வந்து நில்லு. நான் வர்ரேன்!''

''நன்றி கோகுல்!'' நிம்மதியாய் மூச்சுவிட்டாள்.

சுதா, அவளருகில் வந்தாள், புன்னகைத்தாள், ஜனனி.

''அப்பப்பா... உன் முகத்திலே இப்பதான் ஒரு தெளிவு வந்திருக்கு. சந்தோஷமா இருக்கு, ஜனனி.''

''உனக்குத்தான் நன்றி சொல்லணும். நீதானே அவரைப் பேச வச்சே.''

''காதலர்களுக்குள்ளேயும் சரி, கணவன் - மனைவிக் குள்ளேயும் சரி, எதையும் தவறா புரிஞ்சுக்கிற நிலை வரக் கூடாது. அப்படி வந்துட்டா உடனுக்குடன் அதை சரிப்படுத்திடணும். கோகுலைப் பற்றிக் கவலைப்பட்டே... ஆனா, நீ சாப்பிடலே. வா... சாப்பிட்டுவிட்டு வரலாம்!''

''இல்லே சுதா, மனசு நிறைஞ்சிருக்கு. பசிக்கலே.''

''காலையிலே கூட சாப்பிடலே நீ... பசிக்கலேங்கிறே?''

''அவரை சந்திக்கப் போறேனே. அப்ப அவரோடு சாப்பிட்டுக்கிறேன்.''

உற்சாகமாய்க் கிளம்பினாள், ஜனனி.

அழகிய பூங்கா, அது! அவனுக்காக அங்கேதான் அவள் காத்திருப்பது வழக்கம்.

சாலையில் கடந்து சென்ற மனிதர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பூங்காவில் கூட்டம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

இவள் வயதொத்த பெண்ணொருத்தி கணவன், இரண்டு பெண் குழந்தைகளுடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்.



சற்று நேரம் அவர்களையே பார்த்தவள், தனக்குத்தானே புன்னகைத்துக்கொண்டாள்.

'காலாகாலத்தில் கல்யாணமாகி இருந்தால் நானும் இப்படித்தான் இரண்டு குழந்தைகளுடன் ஜாலியாய் நேரத்தைப் போக்கி இருப்பேன்? கோகுல் அப்போது லேசாய் சதை போட்டு கொஞ்சம் தொந்தியோடு இருப்பாரோ? கல்யாண மான உடனேயே குழந்தை பெத்துக்கணும். கோகுலுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியமாயிற்றே?'

நேரம் கடந்தது.

இன்னும் கோகுலைக் காணோம்.

ஐந்து மணிக்கு வருவதாக சொன்னவன் ஆறரை ஆகியும் வரவில்லை.

தவிப்புடன் அருகிலிருந்த தொலைபேசிக்குப் போனாள். ஏழாவது முறையாக தொடர்பு கொண்டாள்.

செல்போன், செயலற்று இருந்தது.

'என்னாயிற்று? ஏன் வரவில்லை?'

போவோரும், வருவோரும் வேடிக்கை பார்க்க... மணி ஏழரையை நெருங்கியது.

''அலோ...''

கரகரப்பான குரல் கேட்டுத் திரும்பினாள்.

இளைஞன் ஒருவன் கண்களில் தப்பான பார்வையோடு இவள் அருகில் நின்று கொண்டிருந்தான்.

''என்ன?'' என்றாள்.

''எவ்வளவு?''

''என்ன எவ்வளவு?'' புரியாமல் பார்த்தாள்.

''உன் 'ரேட்'டை கேட்டேன்!''

''என்ன?'' சில கணங்கள் கழித்தே அவன் கேட்டதன் அர்த்தம் உறைக்க, ''ராஸ்கல்... யாரைப் பார்த்து...'' அவள் குனிந்து செருப்பைக் கழற்ற...

அவன் காணாமல் போயிருந்தான்.

நெஞ்சு படபடவென துடித்தது. சாணத்தைக் கரைத்து மேலே கொட்டியது போல் அசிங்கமாய் உணர்ந்தாள்.

''என்னைப் போய்... ச்சே!''

அதற்கு மேலும் அங்கு நிற்பது முட்டாள்தனம் என்று உணர்ந்தவள், நடந்தாள். பேருந்தில் போகக்கூட பிடிக்காமல் ஆட்டோவில் ஏறினாள்.

ஜனனி, வீட்டிற்குள் நுழைந்ததும் பரிமளம் தலை உயர்த்தி கடிகாரத்தைப் பார்த்தாள்.

எட்டரையை நெருங்கிக் கொண்டிருந்தது. ஒன்றும் பேசாமல் மறுபடி டி.வி.யில் கவனம் செலுத்தினாள். பூபாலனும் மனைவி அருகில்தான் அமர்ந்திருந்தார்.

ஜனனியின் எண்ணமெல்லாம் கோகுலையே வட்டமடித்துக் கொண்டிருந்தது. உடை மாற்றக்கூட மறந்து சமையலறைக்குள் புகுந்தாள்.

அரைமணி நேரத்தில் சமைத்தாக வேண்டும்.

''சுஜாதா...'' என்று அங்கிருந்தே குரல் கொடுத்தாள்.



''என்ன? படிச்சிட்டிருக்கேன்.''

''கொஞ்சம் வந்துட்டுப் போ!''

அலுத்துக் கொண்டே வந்தாள்.

''இந்தா... உன்னோட செயின்!'' அடகு கடையிலிருந்து மீட்டு வந்திருந்த செயினை நீட்டினாள்.

சின்னவள் எந்த உணர்ச்சியும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் வாங்கி அணிந்து கொண்டாள்.

''ஏன் சுஜாதா... நான்தான் வர தாமதமாயிடுச்சே... நீயாவது அரிசியை குக்கர்ல போட்டு வச்சிருக்கலாமே! இப்ப பாரு அரக்கப் பரக்க சமைக்க வேண்டியதாயிருக்கு.''

''நீ தாமதமா வருவேன்னு எனக்கென்ன ஜோசியமா தெரியும்?'' வெடுக்கென்று கூறிவிட்டுப் போனாள்.

அவளிடமிருந்து பொறுமையாய், கனிவாய் எந்தப் பதிலும் வந்ததில்லை என்பதால், அவள் பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை.

சமையல் முடிந்தது. உடம்பு ஆயாசமாக இருந்தது. மன உளைச்சல், சரிவர சாப்பிடாதது எல்லாம் சேர்ந்து படுக்கைக்கு போகச் சொன்னது.

''சுஜாதா! பிளீஸ்... எல்லோருக்கும் நீயே பரிமாறிடு'' என்று கூறிவிட்டு, தன்னறைக்குள் சென்றுவிட்டாள்.

பூபாலனும், பரிமளமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

## 5

"பார்த்தீங்களா அவளோட திமிரை? வயசுப் பொண்ணு அலுவலகம் முடிஞ்சு வீட்டுக்குத் தாமதமா வர்றா. என்கிட்டதான் சொல்லவேணாம். உங்ககிட்டேயாவது சொல்ல வேணாமா? அசட்டு பிசட்டுன்னு எதையோ சமைச்சு வச்சிருக்கா. அதையாவது பரிமாறணும்னு தோணுச்சா? நேத்து நடந்ததை மனசுல வச்சுக்கிட்டுதான் இப்படி எல்லாம் நடந்துக்கிறா... நம்மகிட்டே பேசலே... சாப்பிடக்கூட இல்லே... அசிங்கமா இருக்குங்க... எனக்கு சாப்பாடு வேண்டாம்" என்றாள் நா தழுதழுக்க.

"எனக்கும் வேண்டாம்!" மனைவிக்கு ஒத்து ஊதினார் பூபாலன்.

அதை அறியாதவளாய் கோகுலின் உதாசீனத்தை நினைத்து தலையணையை நனைத்துக் கொண்டிருந்தாள் ஜனனி.

அதிகாலையில் விழித்தெழுந்து சமையலறைக்குள் நுழைந்தாள் ஜனனி, திகைத்துப் போனாள்.

அன்று நடந்தது போலவே இன்றும், சமைத்து வைத்த பொருட்கள் அத்தனையும் தொடப்படாமல் ஊசிப்போய் பல்லிளித்துக் கொண்டிருந்தன.

'ஏன்? இப்போதென்ன புதுப் பிரச்னையா? என் உழைப்பு மட்டுமல்ல; உணவும் வீணாகிறதே! கொஞ்சம்கூட உறுத்தாதா இவர்களுக்கு?' ஆத்திரம் வந்தது.

"க்கும்..." வாசலில் கனைப்புக் குரல்.

பரிமளம், அதிசயமாய் அந்நேரத்திற்கே எழுந்திருந்தாள்.

"அம்மா... என்னம்மா இதெல்லாம்? நேத்து யாருமே சாப்பிடலையா?"



"இங்கே பாரும்மா... நீ ஒண்ணும் கஷ்டப்பட்டு எங்களுக்காக வகை வகையா சமைக்க வேண்டாம். கஞ்சியோ, கூழோ எதையாவது நாங்க சாப்பிட்டு காலத்தைப் போக்கிக்கிறோம்."

"என்னது?"

"எனக்காக ஆஸ்பத்திரிக்கு செலவு பண்ணின பணத்தை என் புருஷனின், பென்ஷன் பணம் வந்ததும் திருப்பித் தந்திடுறேன்."

"கொல்லாதேம்மா என்னை! திரும்பவும் என்னாச்சு உங்களுக்கு? என்னை ஏன் வெளி ஆள் மாதிரி நடத்துறீங்க?" என்றாள், தவிப்புடன்.

"என்னையே கணக்கு கேட்கிறே? பணம் கேட்டதிலேருந்து நீ, இந்த வீட்டுலே சாப்பிடுறதில்லே. இதெல்லாம் எதனாலன்னு புரிஞ்சுக்க முடியாத ஜடமா நான்?"

"கடவுளே! இங்கே பாரும்மா! ரெண்டு நாளா நான் சாப்பிடாதது மட்டும்தானே தெரியும் உனக்கு? எத்தனை நாள் சாப்பிடாம பஸ்சை பிடிக்க ஓடியிருக்கிறேன் தெரியுமா?

"நேத்து ராத்திரிகூட சாப்பிடலியே! காரணம், ஆஸ்பத்திரி செலவு வச்சிட்டேன்னுதானே?"

"என்னை யாருமே புரிஞ்சுக்க மாட்டீங்களா? என் பிரச்னையே வேறு. கொஞ்சம் மனசு சரியில்லே. சாப்பிட பிடிக்காம படுத்துட்டேன். இனிமே உங்க பண விஷயத்திலே கணக்கு கேட்க மாட்டேன். போதுமா? நீ கேட்ட ஆயிரம் ருபாயை ஒரு வாரத்திலே எப்படியாவது ஏற்பாடு பண்ணி தர்றேன். போம்மா... போய்த் தூங்கு!" மகள் சொல்ல.

அதற்குமேல் பேசத் தோன்றாமல் பரிமளம் நகர்ந்தாள்.

'ஏன் கோகுல், எதற்காக என்னைப் போட்டு வதைக்கிறீர்கள்? உங்கள் மீதுதான் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறேன் தெரியுமா? உங்கள் கோபம், உதாசீனம் என்னை செயலிழக்க வைக்கிறது. என்னைப் புரிந்து கொள்ளுங்களேன்... பிளீஸ்...' கலங்கினாள் ஜனனி.

பரிமளம் மகனுக்கு சாப்பாடு எடுத்து வைத்தாள். தட்டில் பரிமாற முயன்றவளை தடுத்தான், உதயன்.

''இரு... இரு... என்ன இது?''

''உப்புமா!''

''எவன் சாப்பிடுறது? எனக்கு வேணாம். ஒரு இருபது ரூபாய் கொடு. நான் ஓட்டல்ல சாப்பிட்டுக்கிறேன்.''

''என்கிட்டே பணமில்லே. நீ எல்லாத்துக்கும் என்னை எதிர்பார்க்கிறதாலதானே, நான் ஜனனிகிட்டே பேச்சு வாங்க வேண்டிதாயிருக்கு? உனக்கும் வயசாகுதே உதயா. ஒரு வேலை தேடிக்கக் கூடாதா?''

''ஆமாம்... கொடுக்கிற வேலையை நான்தான் வேணாம்... வேணாங்கிறேன். போற இடமெல்லாம் இதோ... இந்த மாதிரி உப்புமா கம்பெனியா இருக்கு. அப்படி தப்பித்தவறி கிடைக்கிறதும், சுத்தி வளைச்சு எடுபிடி மாதிரியான வேலையா தர்றான். படிச்சிட்டு அவனவனுக்கு கூஜா தூக்கச் சொல்றியா?''

''எப்பக் கேட்டாலும் இப்படியே சொல்லிட்டிருந்தா எப்படி?''

''நான் என்னம்மா பண்ணட்டும்? நல்ல வேலை வேணாம்னா சொல்றேன். ஏகப்பட்ட பணம் செலவாகும். தர்றியா?''



''ஏற்கனவே அரசாங்க வேலை வாங்கித் தர்றாங்கன்னு எவன்கிட்டேயோ ஒண்ணரை லட்சத்தை சுளையா கொடுத்தியே... அது என்னாச்சு?''

''அவனைத்தான் தேடிக்கிட்டிருக்கேன். இந்த ஊர்லே இல்லே.''

''எவ்வளவு எளிதா சொல்றே? உங்கப்பா வியர்வை சிந்தி சம்பாதிச்ச பணம்டா!''

''சும்மா எப்பப் பார்த்தாலும் அதையே சொல்லிக்கிட்டு இருக்காதே! நான் மட்டுமா கொடுத்து ஏமாந்தேன்? என்னை மாதிரி நாலஞ்சு பேருகிட்டே கறந்துட்டான். இருபது ரூபா கேட்ட பாவம், பழைய கதையை ஆரம்பிச்சிட்டே! நீ தரலேன்னா என்ன? எத்தனையோ நண்பர்கள் இருக்காங்க. நான் வர்றேன்'' சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியேறினான்.

சுஜாதா வந்தாள். தட்டினை எடுத்துக் கொண்டாள்.

''உப்புமாவா? வாரத்துல நாலு நாள் இதையே சமைச்சு நம்ம எல்லோரையும் பழிவாங்கிட்டிருக்கா உன் பெரிய பொண்ணு கொஞ்சமா போடு!'' என்றாள், கிண்டலாய்.

பேருந்து நிலையத்தில் நின்றிருந்த ஜனனி, சோர்ந்து போயிருந்தாள்.

காதல் படுத்தும்பாடு கத்திரி வெயிலை விடவும் மோசமாக அல்லவா இருக்கிறது?

ஜனனி போகும் பேருந்து வந்து நின்றது.

இரண்டடி முன்னே சென்றவள், சட்டென நின்றாள்.

'நேரே கோகுலின் ஆபீசுக்கே சென்றால் என்ன? அதுதான் சரி!'

தீர்மானித்தவள், நடந்தாள். ஆட்டோவில் ஏறினாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் கோகுலின் அலுவலகத்தை அடைந்தாள்.

கோகுலின் வண்டி இல்லை. ஆக பத்து மணிக்குத்தான் வருவான்.

அலுவலக கட்டிடத்தை தவிர அருகில் கடையோ, வீடோ எதுவுமே இல்லை. அந்த வெட்டவெளி பிரதேசத்தில் ஒரு ஓரமாய் கோகுல் வரும்போது அவன் பார்வையில்பட இலகுவாய் நின்று கொண்டாள்.

கோடைக்காலம் என்பதால் காலை வெயிலே உக்கிரமாய் இருந்தது. என்றாலும் ஜனனி பொருட்படுத்தவில்லை.

வியர்த்துக் கொட்டத் தொடங்கியது. உடைகள், உடலோடு ஒட்டிக் கொண்டன.

மணி பத்தானது. கோகுல் இன்னும் வரவில்லை. அன்றைக்குப் பார்த்து, அலுவலகத்துக்கு ஒருமணிநேரம் தாமதமாய் வருவேன் என்று கோகுல் தெரியப்படுத்தியது, பாவம், ஜனனிக்குத் தெரியாது.

பத்தரையானது.

'ஒருவேளை... இன்று முன்னதாக ஆட்டோவில் வந்திருந்தால்? வாய்ப்பிருக்கிறதே?'

அந்த யோசனை எழ, கைக்குட்டையால் முகத்தை நன்றாக துடைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.



வரவேற்பாளரிடம் விசாரித்த போது, கோகுல் ஒரு மணி நேரம் தாமதமாய் வருவது பற்றிக் கூறினார்கள்.

மறுபடி வெளியில் வந்து காத்திருந்தாள்.

11.10 ஆனபோது கோகுல், கம்பீரமாய் வந்து கொண்டிருந்தான்.

அவனை தூரத்தில் பார்க்கும் போதே நெக்குறுகி கண்கள் கசிந்தாள்.

கோகுல் அவளைப் பார்த்ததும் துணுக்குற்றான். முகம் களைத்து, சுட்டெரிக்கும் வெயிலில் வியர்த்து வழிய அவள் நின்றிருந்ததைப் பார்த்து இளகிப் போனான்.

''ஜனனி... என்ன இங்கே?'' அவசரமாய் 'பைக்'கை விட்டிறங்கி அவளருகில் வந்தான். அவளால் பேச முடியவில்லை. கண்ணீர் வழிய நின்றிருந்தாள்.

பதறிப்போனான்.

''ஏய்... என்னாச்சு?''

''ஏ... ஏன்... இப்படி?''

''எப்படி?''

''நான் என்ன பண்ணிட்டேன்னு என் மனசை...'' பேச முடியாமல் தொண்டை அடைத்தது.

''முதல்ல கண்ணைத் துடை. ஏறு வண்டியிலே!''

அடுத்த பத்தாவது நிமிடம் இருவரும் உணவகத்தில் அமர்ந்திருந்தனர்.

அவளுக்குப் பிடித்தமான உணவு வகைகளை அவனே சொல்லிவிட்டு, அவளையே பார்த்தான்.

''இப்ப சொல்லு.''

''நேத்து... ஏழரை வரைக்கும் காத்திருந்தேன். 'வர்றியா... உன் ரேட் என்ன'ன்னு ஒரு ராஸ்கல் கேட்கிற வரைக்கும் காத்திருந்தேன். அப்படியென்ன வருத்தம்? என்னை கோவிக்கக் கூட மனசு வருதா உங்களுக்கு?''

''சாரி ஜனனி! நான் வேணும்னேதான் வராம இருந்தேன். நேற்று முன்தினம் உனக்காக காத்திருந்து நான் பட்ட அவதி, நீயும் படணும்னுதான் நேற்று வராமல் ஏமாற்றினேன்.''

''பழிவாங்குறதுக்கோ, தண்டிக்கிறதுக்கோ நான் விரோதியல்ல கோகுல். எப்பவோ ஒருநாள் சந்திச்சு பேசுறோம். நாம சந்திக்கிற ஒவ்வொரு நாளும் எனக்கு பண்டிகை மாதிரி. உங்களைப் பார்க்க எனக்கு மட்டும் ஆசையில்லையா? அம்மாவுக்கு திடீர்னு உடம்புக்கு முடியாம போச்சு... போன் வந்ததும் பயந்து போய் ஓடினேன். அந்த டென்ஷன்ல உங்களுக்குத் தகவல் சொல்ல மறந்துட்டேன். அது தப்புதான். ஆனா, அந்த சூழ்நிலையிலே...''

''சேச்சே... வருத்தப்படாதே ஜனனி. நான்தான் தெரியாம உன் மனசை கஷ்டப்படுத்திட்டேன். படத்துக்கு டிக்கெட் எடுத்து உனக்காக காத்திருந்தேன். நீ வரலேன்னதும் கோபம் வந்திடுச்சு...''

''ஆபீசுக்கு போன், பண்ணிக் கேட்டிருந்தாகூட சொல்லி இருப்பாங்களே!''

''அஞ்சரை மணிக்குப் பிறகுதான் பண்ணினேன். யாரும் இல்லே. சரி... நடந்ததை மறப்போம். நடக்கப் போவதை பேசுவோம்!'' என்றான், அவள் கையை மென்மையாக பற்றி!



## 6

''இப்பெல்லாம் உன்னைப் பார்க்காம என்னாலே இருக்க முடியலே, ஜனனி. நாம சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கணும். அதுதான் பிரச்னைக்கு நாம வைக்கிற முற்றுப்புள்ளி.''

''எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா என்ன? ஆனா இப்ப என் குடும்பம் எனது கையை எதிர்பார்த்துக்கிட்டிருக்கு. உதயனுக்கு ஒரு வேலை கிடைச்சிட்டா பிரச்னையில்லே. நிம்மதியா உங்களுக்குக் கழுத்தை நீட்டிடுவேன்.''

''எங்க வீட்டுலே இப்பெல்லாம் அடிக்கடி என் கல்யாணத்தைப் பற்றித்தான் பேசுறாங்க.''

திடுக்கிட்டுப் பார்த்தாள், அவனை.

''என்ன அதிர்ச்சியாயிட்டே? கூடிய சீக்கிரம் நம்ம விஷயத்தை போட்டு உடைச்சிடலாம்னு இருக்கேன். எனக்கு எந்த பயமும் இல்லே. உன்னை வேண்டாம்னு மறுக்கிறதுக்கு எந்தக் காரணமும் இல்லேங்கிறதே நமக்கு சாதகம்தானே?''

''சம்மதிப்பாங்களா?''

''நிச்சயமா! அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். அதிகபட்சம் ஆறு மாசத்துக்குள்ளே நம்ம கல்யாணம் நடந்தா நல்லாயிருக்கும்.''

''ஏன்?''

''நாம ஆரம்பிக்கப்போகிற மென்பொருள் நிறுவனத்துக்கு அண்ணாசாலையில் அழகா ஒரு இடம் கிடைச்சிருக்கு. கட்டிடம் கட்டிக்கிட்டிருக்காங்க. முன்பணம் கொடுத்திட லாம்னு இருக்கேன்.''

"சரிங்க...ஆனா ஆறு மாசத்துல ஏழு லட்சத்தை எப்படி ஏற்பாடு பண்ணுவீங்க?"

"ஐந்து லட்சம் ஏற்பாடு பண்ணுறது என் பொறுப்பு. மீதி ரெண்டு லட்சம், இன்னொரு 'எம்.டி.'யான உன்னோட பொறுப்பு. பணம் பத்திரமா இருக்குல்ல?"

சிரித்தாள்.

"பத்திரமா இருக்கு. உதயனுக்கு வேலை கிடைச்சதும், அடுத்த மாசமே நானும் நம்ம காதலை வீட்டுலே சொல்லிட்டு பணத்தைக் கொடுத்திடுறேன்."

"நான் பணம் கேக்கிறேனேன்னு என்னை தப்பா நினைக்கிறியா ஜனனி!"

"*சீச்சீ*... என்னங்க இப்படி பேசுறீங்க? இதெல்லாம் ஏற்கனவே நாம பேசிக்கிட்டதுதானே? நீங்க ஜனனியின் காதலன் மட்டுமில்லேங்க. ஒரு குடும்பத்தில் மூத்த மகன். ரெண்டு தங்கைகளை கரையேத்துற பொறுப்பைச் சுமக்கும் அண்ணன். பெண்ணாகப் பிறந்த எனக்கே இவ்வளவு கடமைகள் இருக்கும் போது உங்களுக்கு எவ்வளவு இருக்கும்? என்னால புரிஞ்சுக்க முடியாதா என்ன? உங்க பிரச்னை வேறு. என் பிரச்னை வேறுன்னு நான் பிரிச்சுப் பார்க்கலேங்க. உங்க தங்கச்சிகளுக்கு கல்யாணம் பண்ணுற பொறுப்பு எனக்கும் இருக்கு!"

"நன்றி ஜனனி. என்னை நீ நல்லா புரிஞ்சிருக்கே. நீ எனக்குக் கிடைக்க நிஜமாவே நான் ரொம்ப அதிர்ஷ்டம் செய்திருக்கணும்" அவள் கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

**த**ங்கைகள் இருவரும் மணமேடை ஏறவேண்டுமானால் அது கோகுலை நம்பிதான். ஜனனியை நான்கு ஆண்டாக



காதலித்து வருகிறான். நியாயப்படி பார்த்தால் தங்கைகளுக்கு மணமுடித்தபிறகே இவன் மணக்க வேண்டும். அப்படியானால் ஜனனி இன்னும் நான்கு ஆண்டு காத்திருக்க வேண்டும்.

உடனடியாக தொழிலைத் தொடங்கினால் ஒரே ஆண்டில் எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துவிடுவான். பணம் கொட்டோ கொட்டு என்று கொட்டும்.

இப்போதைய ஒரே தேவை - பணம்! அதுவும் ஏழு லட்சம். கோகுலின் சிரிப்பு மூலம் எப்படியும் இரண்டு லட்சம் கிடைக்கும். வங்கியில் இரண்டு லட்சம் கடன் வாங்கலாம். ஒரு லட்சம் வெளியில் யாரிடமாவது வட்டிக்கு வாங்கிக் கொள்ளலாம். மீதி இரண்டு லட்சத்தை ஜனனி தருவதாக ஏற்பாடு. பூபாலன் ஓய்வு பெற்றதும் கிடைத்த மொத்தப் பணத்தில் ஜனனி, சுஜாதா, உதயன் மூவருக்கும் தலா ஒன்றரை லட்சம் வீதம் வங்கியில் போட்டிருந்தனர்.

ஜனனி பெயரிலுள்ள பணத்தை எடுத்து, மீதி அம்பதாயிரத்திற்கு அலுவலகத்தில் கடன் போட்டுத் தரவேண்டும். திருமணத்தை எளிமையாக நடத்துவது. ஜனனியும் நிறுவனத்தில் பங்குதாரராக இணைவது என்பதே திட்டம்.

குறையே சொல்ல முடியாத எதிர்பார்ப்பு என்பதால் ஜனனி எள்ளளவும் கோகுலை தவறாக நினைத்ததில்லை.

'கடவுளே... உதயனுக்கு சீக்கிரம் ஒரு வேலை கிடைக்க வேண்டும்' மானசீகமாய் வேண்டிக் கொண்டாள், ஜனனி.

**சா**தாரணமாகவே சிவன் கோயிலில் கூட்டமிருக்கும். பிரதோஷ நாளில் கேட்கவா வேண்டும்? உட்கார இடமில்லை.

பத்மா, இரு மகளுடன் வந்திருந்தாள்.

பூமாவும், தீபாவும் தாயை கோபித்துக் கொண்டனர். "கொஞ்சம் முன்னாடியே கிளம்பியிருந்தா தேவலை. கேட்டா தானே? பார்த்தியா கூட்டத்தை?" என்றாள், இருபது வயது பூமா.

"கோகுல், பசி தாங்கமாட்டான். நாள் முழுக்க வேலை செய்துட்டு கேன்டீனில் கிடைக்கிறதை சாப்பிட்டுட்டு வருது. வாய்க்கு சுவையா சாப்பிட வேண்டாமா?"

"ஒரு நேரம் சாப்பிடலேன்னா அண்ணன் ஒண்ணும் ஒல்லியாகிடாது" என்றாள், தன் பங்கிற்கு தீபா.

"கோவில்ல வந்து என்ன பேச்சு? எதுவுமே எளிதா கிடைச்சிடக் கூடாது. சிரமப்பட்டு கிடைக்கணும். அப்பதான் பலனோட இன்பம் கூடுதலா கிடைக்கும். கடவுளை கஷ்டப்பட்டு பார்க்கணும். பாலாபிஷேகம் தொடங்கியாச்சு. மந்திரத்தைச் சொல்லுங்க" என்ற பத்மா, பக்தியுடன் கண்களை மூடிக் கொண்டாள்.

ஒன்றரை மணி நேரம் கடந்திருக்கும்.

அபிஷேகம், ஆராதனை எல்லாம் முடிந்தது. நெற்றி நிறைய விபூதியும், குங்குமமும் இட்டுக் கொண்டவள், "பத்மா!" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.

ஆதிலட்சுமி நின்றிருந்தாள்.

பத்மாவின் முகம் ஆச்சரியத்திற்குத் தாவியது.

"அ...ண்...ணி!"

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு. நானே உன்னை வந்து பார்க்கணும்னு நினைச்சிட்டிருந்தேன். கோவில்லேயே பார்ப்பேன்னு எதிர்பார்க்கலே."



"என்ன விஷயம் அண்ணி? அண்ணன் எப்படி இருக்கார்? கனடாவிலேருந்து வந்துட்டாரா?"

"கொஞ்சம் மூச்சு விட்டுக்க, பத்மா! எல்லாம் நல்ல விஷயத்துக்காகத்தான் உங்கண்ணன் இந்த ஆண்டு கடைசி யிலே வர்றார். இந்தக் கோவில் ரொம்ப பிரசித்தமாச்சே! வேண்டிக்கிறதெல்லாம் கிடைக்குமே! ஷோபாவோட கல்யாண விஷயம்.... அவ மனசுப்படி நடக்கணும்னு வேண்டிக் கிட்டேன்."

"மனசுப்படின்னா... ஷோபா யாரையாவது விரும்பு றாளா?"

"ம்..."

"யார் அந்த அதிர்ஷ்டசாலி?"

"என் வீட்டுக்காரரோட ஒரே தங்கை மகன்!"

"அ... அண்ணி!" என்றாள், நம்பமுடியாத ஆச்சரியமும் ஆனந்தமுமாய்.

"ஆமாம் பத்மா! இது விஷயமாத்தான் உங்க வீட்டுக்கு வந்து பேசணும்னு நினைச்சிட்டிருந்தேன். உங்கண்ணன் வெளிநாட்டிலேயே மாப்பிள்ளை பார்த்து ஷோபாவை கனடாவிலேயே வைக்கணும்னு நினைச்சார். கிட்டத்தட்ட பேசியும் முடிச்சிட்டார். ஷோபாகிட்டே போன்ல தகவல் சொன்னார். அவள், தாம் தூம்னு குதிக்கத் தொடங்கிட்டா."

"என்ன?"

"கல்யாணம் பண்ணினா கோகுலைத்தான் பண்ணிப் பேன்னு தைரியமா சொல்லிட்டா. 'அட கழுதை... இதை முதல்லே சொல்றதுக்கென்ன? எனக்கும் அந்த எண்ணம்தான்

இருந்தது. தங்கை வீடு வசதி குறைச்சல். அதைக் காரணம் காட்டி அம்மாவும் பொண்ணும் மறுத்திடுவீங்களோன்னு நினைச் சிட்டிருந்தேன்'னு அப்புறம் என்கிட்டே சொன்னார்."

ஷோபாவும் கோகுல் மாதிரியே கம்ப்யூட்டர் என்ஜினியர். 'ரெண்டு பேருக்கும் கனடாவிலே உங்கண்ணன் வேலை ஏற்பாடு பண்ணிடுறேன்னு சொல்லிட்டார். நீ என்ன சொல்றே பத்மா?"

பத்மாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மகிழ்ச்சிப் பெருக்கில் கண்கள் கலங்கின.

"சந்நிதியில் வச்சு பேசுற எந்த நல்ல காரியமும் சுபமாகத்தான் முடியும் அண்ணி! நான் அவர்கிட்டேயும், கோகுல்கிட்டேயும் பேசிட்டு..."

"ஒரு வாரம் கழிச்சு வீட்டுக்கு வர்றேன். அப்ப சொன்னாப் போதும். வர்றேன் பத்மா. வரட்டுமா பொண்ணுங்களா?"

"சரிங்கத்தே!" என்றனர் இளைஞிகள் உற்சாகமாய்.

பத்மா சொல்வதைக் கவனமாய் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார் கருணாகரன்.

கேட்டு முடித்தபின் நீண்டதொரு பெருமூச்சை வெளியிட்டார்.

"என்னங்க சொல்லுறீங்க?"

"என்னோட உண்மையான கருத்தைச் சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே?"

"என்னங்க நீங்க? உங்க பேச்சை என்னைக்கு நான் மீறியிருக்கிறேன்?



"உங்கண்ணன் நல்லவர்தான். ஆனா, பெரிய பணக்காரர். இது கிட்டத்தட்ட கோகுலை விலை பேசுற மாதிரி எப்பவும் நம்மை விட அந்தஸ்துல ஒருபடி கீழே உள்ள வீட்டுல பொண்ணை எடுக்கணும்னு நினைக்கிறவன் நான். ஆனா, கோகுலுக்கு ஷோபாவை கல்யாணம் பண்ணிக்க ஆசையிருந்தா, சத்தியமா தடை சொல்லமாட்டேன். கல்யாண விஷயத்திலே கட்டாயப்படுத்தக் கூடாது. என் பிள்ளை புத்திசாலி. அவனுக்கு எது பிடிக்குதோ அதுதான் என் விருப்பம் புரியுதா?"

"ம்..." என்று தலையாட்டினாள் பத்மா.

வாசலில் 'பைக்' சத்தம் கேட்டது.

கோகுல் வந்துவிட்டான்.




அம்மா சொல்வதைக் கேட்டுக் கொண்டே வெங்காய அடையை சாப்பிட்டு முடித்தான் கோகுல்.

"கனடாவிலேயே ரெண்டு பேருக்கும் வேலைக்கு ஏற்பாடு பண்ணுறேன்னு சொல்லியிருக்கார் எங்க அண்ணன். ஷோபாவும் நல்ல பொண்ணு. அழகான பொண்ணு. எங்க அண்ணனுக்கு ஒரே பொண்ணுங்கிறதால... அவ்வளவு சொத்தும் ஷோபாவுக்குத் தான்."

"அம்மா!" என்றான். அவள் திரும்பினாள்.

"ஷோபாவை எனக்கும் தெரியும். எந்த விஷயத்திலேயும் குறை சொல்ல முடியாது. ஆனா, எனக்குன்னு சில விருப்பங்கள், வரைமுறைகள் இருக்கு!"

"...!"

"முதல்ல... என் உழைப்பு நாட்டுக்கு பயன்படணும்னு நினைக்கிறேன். வெளிநாட்டுக்குப் போய் கத்தை கத்தையா சம்பாதிக்கணும்னு நான் நினைச்சதில்லே... இங்கே சொந்தமா தொழில் தொடங்கி நாலு பேருக்கு வேலை கொடுக்கணும்னு ஆசைப்படுகிறேன்."

"அதுக்கென்னப்பா? கல்யாணம் பண்ணிக்கிட்டு இங்கேயே இருந்துடலாமே...!"

"அவசரப்படாதேம்மா! என்னால ஷோபாவை கல்யாணம் பண்ணிக்க முடியாது. நா... நான் ஜனனின்னு ஒரு பொண்ணை விரும்புறேன்..." தயங்கித் தயங்கிப் போட்டு உடைத்தான்.

வீட்டினர் அத்தனை பேரும் அதிர்ச்சியுடன் பார்த்தனர்.

"அப்பா... நீங்க என்னை நல்லா புரிஞ்சுவச்சிருக்கீங்க. நான் எதையும் தப்பா முடிவு பண்ணமாட்டேன்ங்கிற நம்பிக்கை உங்களுக்கு நிறையவே உண்டு. ஜனனி விஷயத்திலேயும் அதே நம்பிக்கை இருக்கணும். அவளை நிராகரிக்கிறதுக்கு உங்களுக்கு எந்தக் காரணமும் இருக்காதுப்பா...!" என்றபடி அவளைப் பற்றி விபரத்தைக் கூறினான்.

"ரொம்ப நல்ல பொண்ணுப்பா! அவ கல்யாணத்துக்கென்று வைத்த பணத்தைதான் என்னோட தொழிலில் போடப் போறா கூட சேர்ந்து உழைக்கப் போறா!"

"அப்ப, தங்கச்சிங்களுக்கு முன்னாடி உங்க கல்யாணம் நடக்குமா?" என்றாள் ஆதங்கத்துடன், பத்மா.

"பத்மா" என்று அதட்டினார், கருணாகரன்.



"ஷோபாவைக் கட்டிக்கிறதுன்னு முடிவு பண்ணினாலும் உடனேதான் கல்யாணம் பண்ணணும்னு சொல்லுவார் உங்க அண்ணன்!"

"அப்ப நம்மப் பொண்ணுங்களோட கல்யாணத்துக்கு வேண்டிய பணத்தை அண்ணனே தந்திடப் போறார்!"

"அம்மா... என் தங்கச்சிகளோட கல்யாணத்தை என் உழைப்பில் வரும் பணத்தாலதான் முடிப்பேன். ஜனனி எனக்காக நாலு ஆண்டா காத்துக்கிட்டிருக்காம்மா! ப்ளீஸ் புரிஞ்சுக்க..."

பத்மா, கொஞ்சம் அடங்கினாள்.

"இதோ பாரு கோகுல்! உன்னை மீறி எதுவும் நடந்திடப் போவதில்லே. உன் விருப்பம்தான் எல்லாமே! உன் தேர்வு எப்பவும் சோடை போனதில்லே. வீட்டுப் பொறுப்பை சுமந்துக் கிட்டிருக்கிற பொண்ணாலதான் புகுந்த வீட்லே மனுஷங் களைப் புரிஞ்சுக்கிட்டு பொறுப்பா நடக்க முடியும். நாங்க முறைப்படி அவங்க வீட்டுக்குப் பொண்ணு கேட்டுப் போகணும். அதுக்கு ஏற்பாடு பண்ணு கோகுல்."

"நன்றிப்பா...!" என்றான், நிறைந்த நெகிழ்ச்சியுடன்.

"சுஜாதா... தலைவலிக்குது... இந்த கேரட்டை கொஞ்சம் நறுக்கிக்கொடேன்!" என்றாள் கெஞ்சலாய் ஜனனி.

"இல்ல... அடுத்த வாரம் பரீட்சை. படிச்சிட்டிருக்கேன். தொந்தரவு பண்ணாதே!" என்றவள், தீவிரமாய் புத்தகத்தில் கவனத்தைச் செலுத்தினாள்.

அவளருகில் யாராவது சென்று பார்த்திருந்தால் தெரிந் திருக்கும். புத்தகத்தின் நடுவில் ஒரு அழகான இளைஞனின் படம் இருந்தது.

சுற்றுமுற்றும் பார்த்த சுஜாதா, புத்தகத்தை உயர்த்தி படத்துக்கு ஒரு முத்தம் கொடுத்தாள்.

'மைடியர் ராஸ்கல்! கூப்பிட்டியேன்னு சினிமாவுக்கு வந்தா சும்மா இருக்கியா? அதுவும் தியேட்டர்ல இருபது பேர்கூட இல்லே... ரொம்ப வசதியாப் போச்சு உனக்கு. உதடு அழகா இருக்குன்னு சொல்லிச் சொல்லியே கடிச்சுக் குதறாத குறையா... ச்சீ! ஆனா, உன்னை ரொம்ப தவிக்கவிடுறேனோன்னு ஏக்கமா இருக்கு சுரேஷ். சீக்கிரமே நான் உனக்கு உரிமையான வளாகணும். அந்த நாள் எப்போது? காதல் பாடத்தைப் படித்து உருப்போட்டு உருகிக் கொண்டிருந்தாள், சுஜாதா.

''நான் காய் நறுக்கவா?'' என்று கேட்டாள், பரிமளம்.

''வேணாம்மா... அஞ்சு நிமிஷ வேலைதான். நானே பார்த்துக்கிறேன்.''

''உன்கூட வேலை செய்யுற பொண்ணு... அவ பெயர் என்ன சொன்னே?''

''சுதா!''

''ஆம்... சுதா... வீட்டுக்குப் போய் பார்த்துட்டு வந்தியே என்னாச்சாம் அவளுக்கு?''

''பாவம்! கல்யாணமாகி நாலு ஆண்டு கழிச்சு இப்பதான் உண்டாகியிருக்கா... அபார்ஷன் ஆயிடுச்சாம்...''

''ஓ!'' என்றபடி நகர்ந்துவிட்டாள், பரிமளம்.

ஏதோ பேசணும், எதையோ கேட்கணும் என்ற கட்டாயத்திற்கு உட்பட்டது போலிருந்தது அவள் செய்கை.

சுதாவை நினைத்தாலே வருத்தமாக இருந்தது ஜனனிக்கு.



CPL592730

தன் வயிற்றில் ஒரு சிசு வராதா என்று ஒவ்வொரு நாளும் கடவுளிடம் அவள் மனு போட்டுக் கொண்டிருந்ததை ஜனனி அறிவாள்.

592730

கடவுளுக்கும் இரக்கம் வந்து தாயாகும் பாக்கியத்தைக் கொடுத்தார். அப்பப்பா... அன்று எவ்வளவு ஆனந்தப் பட்டாள். ஜனனிக்குப் பிடிக்குமே என்று பாசந்தி செய்து எடுத்து வந்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டாளே!

ஆனால், மூன்று மாதம்கூட முடியவில்லை. நேற்றிரவு 'அபார்ஷன்' ஆகிவிட்டதென்று தொலைபேசி வந்தபோது துடித்துப் போய்விட்டாள், ஜனனி.

மாலையில் அலுவலகத்தில் அனுமதி சொல்லிவிட்டு சுதாவின் வீட்டுக்குச் சென்றாள்.

சுதாவின் கணவன் மூர்த்தி அமர்ந்திருந்தான்.

''வாங்க ஜனனி!''

894.8113
MAN

''இப்ப சுதாவுக்கு எப்படி இருக்கு?''

''பரவாயில்லீங்க...ஏதோ தெரிஞ்ச டாக்டரா இருந்ததால தப்பிச்சு... வேறு டாக்டரா இருந்தா பணத்தைப் பிடுங்கி இருப்பாங்க...''

அதிர்ந்து போனாள் ஜனனி.

''நாலு ஆண்டு கழித்து உதயமான கரு, உருத்தெரியாமல் போன கவலை துளியுமின்றி... பணத்தைப் பற்றி கவலைப் படுகிறானே... ச்சே!''

''சுதா உள்ளேதான் இருக்கா... போய்ப் பாருங்க!''

கட்டிலில் நைந்த துணிபோல கிடந்தாள், சுதா.

அலுவலகம் 16 ... 2015

"எ...எப்படி இருக்கே சுதா?"

"ம்..." என்றவளின் கண்கள் சட்டென கலங்கின.

"ஏய்... என்னப்பா இது? அழாதே...ஒண்ணென்ன, நாலு குழந்தை பெத்துக்கப் போறே? இதோடு முடிஞ்சிட்டமாதிரி..."

"ரொம்ப ஆசையா இருந்தேன் ஜனனி... போச்சு..."

"ப்ச்... தைரியம் இழக்காதே! உன் கணவர் மாதிரி தைரியமா இரு!"

"அவரை மாதிரியா?" விரக்தியுடன் சிரித்தாள்.

"இப்பப் பேசின ஒரு வார்த்தையிலேயே அவரை எடை போட்டிருப்பியே! அதுதான் ஜனனி அவர்! நிறையப் பணம் சேர்க்கணும். நிலம் வாங்கணும், கார் வாங்கணும். இதுதான் அவரோட ஆசையெல்லாம்.

"அதுக்கு அடுத்தபடிதான் குழந்தை குட்டி எல்லாம். ரொம்ப நாள் கழிச்சு உண்டாகி இருக்கீங்க. ரோடெல்லாம் மோசமா இருக்கு... ஆபீசுக்கு மூனு நாலு மாசம் லீவு போட்டுட்டு வீட்டோடு இருந்து ஓய்வு எடுங்கன்னு டாக்டர் சொன்னார். ஆனா, அவர் ஒத்துக்கல்லே...கணக்குப் போட்டார். ஓய்வு எடுத்திருந்தா... என் நாலு ஆண்டு கனவு, சிதைஞ்சி போயிருக்காது. சம்பளம் போய்விடுமேங்கிற கவலை அவருக்கு. ஆனா, சுமந்தவளுக்குத்தானே தெரியும் அதன் வேதனை?

"...!"

"எல்லோரும் இப்படித்தான் இருக்காங்க ஜனனி. வேலைக்குப் போற பெண்களுக்குச் 'சொந்தக் காலில் நிக்கிறோம், சுயமா சம்பாதிக்கிறோம்'ங்கிற சந்தோஷம்



மட்டும்தான் கிடைக்குது. அடிப்படையான எத்தனையோ சாதாரண விஷயங்களை கண்ணெதிரே இழந்துட்டுதான் இருக்கிறோம். நாமெல்லாம் பாவப்பட்ட பிறவிகள் ஜனனி" என்றாள், விரக்தியாக.

அதையெல்லாம் யோசித்துப் பார்க்கும் போது சரி என்றுதான் தோன்றியது ஜனனிக்கு.

மாதச் சம்பளத்திற்காக நாள் முழுக்க பேருந்தில் இடிபட்டு, ஓடி, மண்டைகாய வேலை செய்து வீட்டுக்கு வந்து சமைத்து, கடன்வாங்கி, அது ஒரு பக்கம் சுமையான வாழ்க்கைதான்.

'ஆனால் என் திருமண வாழ்க்கை இப்படி இருக்காது. மூர்த்தி போன்று கோகுல் ஈவு இரக்கமற்றவர் இல்லை. குழந்தைகள் மீது கொள்ளைப்பிரியம் உள்ளவர். தவிர வேலையை விட்டுட்டு சொந்தமாக தொழில் தொடங்கப் போகிறோம். எப்போதும் அவரை விட்டுப் பிரியாமல், சுமைகளை சுகங்களாக முன்னேற்றத்திற்காக பாடுபடப் போகிறோம். இனிதான் எனது வசந்தகாலமே!" மனதுக்குள் நினைத்தாள்.

நண்பனின் 'பைக்'கில் பின்னால் அமர்ந்திருந்த உதயா அவளைப் பார்த்துவிட்டான்.

ரோசிலினும் இவனைப் பார்த்துவிட்டாள்.சற்று தள்ளி வந்து கொண்டிருந்தாள்.

"மகேஷ் வண்டியை நிறுத்து... அதோ ரோசிலின்!"

இறங்கி அவளை நோக்கிச் சென்றான்.

"என்ன ரோசி... அவசரமா வரச்சொன்னியாமே?"

"உதய்" என்றாள் வார்த்தைகள் நடுங்க.

"ஏய்... என்ன?"

"வீட்டுலே கல்யாண ஏற்பாடெல்லாம் பண்ணிக்கிட்டி ருக்காங்க. நம்ம காதல் தெரிஞ்சிருக்குமோன்னு சந்தேகமா இருக்கு. எந்த நேரமும் என்னை கல்லூரிக்கு விடாம நிறுத்த லாம். உடனடியாக ஏதாவதொரு வேலைக்கு ஏற்பாடு பண்ணுங்க. நான் அடுத்த நிமிடமே வீட்டை விட்டு வந்திடு றேன்."

"உஷ்... இது ரோடு. கண்ணைத் துடை... முதல்ல கூடிய சீக்கிரம் வேலைக்கு ஏற்பாடு பண்ணிடுறேன். கவலைப் படாதே! ஆனா உன்னை மீறி என்னாகிடப் போவது? படிப்பு முடியட்டும்னு பிடிவாதமாக இரு. நீ எனக்கு. நான் உனக்கு. இதிலே எந்த மாற்றமும் இல்லை. புரியுதா? நான் வர்றேன்!" என்றான் உதயன்.




களைப்புடன் நுழைந்த ஜனனிக்காக வீட்டினர் அனைவரும் காத்திருந்தனர்.

அந்த சூழ்நிலையே அவளுக்கு ஒரு மாதிரி உணர்த்தியது உறுத்தியது.

அம்மாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு ஜனனியிடம் வந்த உதயன் இனிப்பை நீட்டினான்.

"எடுத்துக்க ஜனனி!"

"எதுக்கு?" குப்பென்று உடல் முழுக்க ஒரு மகிழ்ச்சி பரவியது ஜனனிக்கு.

"ஏதோ ஒரு நல்ல செய்தி என்னவா இருக்கும்?"



"என்ன உதயன் இனிப்பெல்லாம் தந்து அமர்க்களப் படுத்துறே!"

"முதல்ல சாப்பிடு... அப்புறம் சொல்லுறேன்!"

எடுத்து வாயில் வைத்ததும், மைசூர்பாகு கரைந்து அடித் தொண்டை வரை இனித்தது.

"இப்ப சொல்லு."

"எனக்கு வேலை கிடைச்சிடுச்சு ஜனனி!"

"நி... நிஜமாவா சொல்றே? நன்றி கடவுளே!" கைகூப்பி வணங்கியவள், பரவசமானாள்.

"இன்னொரு இனிப்பு கொடு. எவ்வளவு பெரிய செய்தி இது?" துள்ளி குதிக்க வேண்டும் போல் இருந்தது.

"இத்தனை ஆண்டு நான்பட்ட கஷ்டத்திற்கு விடிவுகாலம் பிறந்துவிட்டது. கோகுலுக்கு தெரிந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவார்?"

"என்ன வேலை உதயன்?"

"அது... துபாய்ல வேலை!"

"துபாயிலேயா?"

"ஆமாம்... சம்பளம் இருபதாயிரம். ஆறு மாசம் கழிச்சு முப்பது, நாப்பது தருவாங்களாம்!"

"கேக்கவே பூரிப்பா இருக்கு, உதயா."

"இந்த சந்தோஷம் நிலைக்கணும்னா நீதான் மனசு வைக்கணும், ஜனனி!"

"மனசு வைக்கணுமா? என்ன சொல்றே?" முகம் சுருங்கினாள்.

''ஆமா ஜனனி! இந்த வேலையை ரொம்ப கஷ்டப்பட்டு வாங்கியிருக்கேன். ஏகப்பட்ட போட்டி. ரெண்டு லட்சம் தரக்கூட 'நான் நீ'ன்னு வரிசையிலே நிக்கிறாங்க. ஆனா, எனக்காக ஒண்ணேகால் லட்சம்தான் கேக்கிறாங்க. மற்ற இதர செலவுகள் எல்லாம் சேர்த்து ஒண்ணரை லட்சம் ஆகும். ஒரே வாரத்துலே துபாய்க்கு அனுப்புறாங்க. நாளை மறுநாள் காலை பதினோரு.மணிக்குள்ளே பணம் கட்டியாகணும்!''

காற்று இறங்கிய பலூன் போலானாள், ஜனனி.

''ஒண்ணரை லட்சம் கட்டணுமா? என்ன விளையாட்டா இருக்கா? பணத்துக்கு எங்கே போறதாம்? அதைவிட இங்கேயே வேறு ஏதாவது வேலை தேடிக்க!''

''நல்ல விஷயம் பேசிக்கிட்டிருக்கப்ப ஏன் ஜனனி ஏறுமாறாகப் பேசுறே!'' என்றாள், எரிச்சலாய் பரிமளம்.

''பின்னே என்னம்மா? இவரு பணம் கட்டாம எந்த வேலையும் செய்யமாட்டாரா? ஏற்கனவே ஒண்ணரை லட்சம் கொடுத்து பட்டை நாமம் போட்டுட்டுப் போயிட்டான். ஒருமுறை பட்டாச்சே... உஷாரா இருக்க வேணாமா?''

''எல்லாம் உங்கப்பா விசாரிச்சுட்டார். இது நம்பிக்கையான ஆள்தானாம்!''

''சரி... நம்பிக்கையான ஆளாகவே இருந்துட்டுப் போகட்டும். பணத்துக்கு எங்கே போறது?''

''மாசம் இருபதாயிரம் சம்பளம். ஏழெட்டு மாசத்துல அந்தப் பணத்தை சம்பாதிச்சுடுவான். அதனால...''

''அதனால...?''

''அப்பா உன் பேரில் போட்டிருக்கிற பணத்தை எடுத்து...''



''அதுமட்டும் நடக்கவே நடக்காது!'' இரைந்து கத்திவிட்டு, தன்னறைக்குள் சென்று கதவை சார்த்திக் கொண்டாள் ஜனனி.

நெஞ்சு படபடத்தது. ஆத்திரம் தலைக்கேறியது.

'அந்தப் பணத்தை எடுத்து கொடுத்துவிட்டு, நான் அம்போ என்று உட்காருவதா? என் எதிர்காலமே அதில்தானே அடங்கி யிருக்கிறது? என்னைப் பற்றி யாருமே சிந்தித்தே பார்க்க மாட்டார்களா?' நினைக்க நினைக்க கசந்தது. வெறுப்பாய் இருந்தது.

இந்தப் பணத்தை எதிர்பார்த்ததுதானே கோகுல் காத்திருக் கிறார். இதில்தானே மூன்று பெண்களின் வாழ்க்கையே அடங்கி இருக்கிறது.

சமைக்க வேண்டும் என்பதைக்கூட மறந்து அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படி இருந்தாளோ?

''ஐயய்யோ...!'' என்று அம்மாவின் அலறல் சத்தம் கேட்டு... தூக்கி வாரிப்போட்டது. ஓடிவந்தாள், ஜனனி.

''நல்லவேளை... உடனே கூட்டிட்டு வந்ததால... அவனுக்கு ஆபத்தில்லே...'' என்ற மருத்துவரின் கூற்றைக் கேட்டபிறகு குடும்பத்தினர் முகத்தில் நிம்மதி பிறந்தது.

வேறொன்றுமில்லை. பணம் தர ஜனனி ஒப்புக் கொள்ளாததால், எலியைக் கொல்வதற்காக வாங்கி வைத் திருந்த மருந்தை உதயன் சாப்பிட்டுவிட்டான். வாயில் நுரைத் தள்ளி, சோபாவில் கோணல் மாணலாய் விழுந்துக் கிடந்த வனை பரிமளம் பார்த்து, பதறி இந்த அளவிற்கு வந்தாயிற்று.

பரிமளத்தின் முகம் அழுதழுது வீங்கிப் போயிருந்தது. பூபாலனின் முகம் அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை.

சுஜாதா, ஜனனியைப் பார்த்தப் பார்வையில் 'எல்லாம் உன்னால்தானே?' என்று இருந்தது.

கண்திறந்த உதயன், களைப்பின் மிகுதியில் இமைகளை உடனே மூடிக் கொண்டான்.

அப்போது...

எதிர்பாராத நொடியில் பரிமளம், ஜனனியின் காலில் விழுந்தாள்.

''அம்மா... எ... என்ன இது?'' அதிர்ந்து, பின்வாங்கினாள்.

''ஜனனி... என் பிள்ளையை நீதான் காப்பாத்தணும்... எனக்கு கொள்ளிப் போடுறதுக்கு முன்னாடி அவன் எமன்கிட்டே போய் சேர்ந்திடுவானோன்னு பயமா இருக்கு.''

''உதயன் பிழைச்சிட்டான்ம்மா! அவனுக்கு எந்தப் பிரச்னையும் இல்லேன்னு டாக்டர் சொல்லிட்டாரும்மா.''

''இப்ப பிழைச்சிட்டான். மறுபடி இதே முடிவுக்குப் போக மாட்டான்னு என்ன நிச்சயம்?''

''அ...ம்...மா...!''

''அவனும் வயசுப் பிள்ளைதானே? எத்தனை காலத்துக்கு இடிசோறு சாப்பிடுவான்? இந்தக் காலத்திலே லேசுலே வேலை கிடைச்சிடுதா? அவனும் சேலையை சுத்திக்கிட்டுப் போய் நின்னா... இளிச்சுக்கிட்டு வேலையைத் தருவாங்க. ஆம்பளையாப் பொறந்துட்டானே! எனக்கு என் பிள்ளை வேணும் ஜனனி. நீ மனசு வச்சா...''

''நான் என்னம்மா பண்ண முடியும்?''

''உன்பேர்ல உள்ள பணத்தை எடுத்துத் தரணும்.''



மனசு இறுகிப் போய் கிடந்தது.

இந்த ஏற்பாட்டில் துளியும் விருப்பமில்லை. ஆனால், முகத்தில் அந்த சாயல் தெரியாதபடி சாமர்த்தியமாய் வலிய புன்னகையை ஒட்டிக் கொண்டு... வங்கி வாசலில் இறங்கினாள், ஜனனி. முன்தினமே மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிவிட்ட உதயனும் உடன் வந்திருந்தான்.

'சுஜாதா பேரிலும் பணம் இருக்கிறது. அதை எடுக்க வேண்டும் என்று வீட்டாருக்குத் தோன்றவில்லையே ஏன்?' கேள்வி எழுந்தாலும் அதை கேட்கத் துணிவில்லை ஜனனிக்கு.

இன்னும் இந்த விஷயம் கோகுலுக்குத் தெரியாது. சொன்னால் எப்படி எடுத்துக் கொள்வானோ? அந்தப் பயத்திலேயே தொலைபேசியில்கூட அவள் பேசவில்லை.

''என்ன ஜனனி... வாசல்லேயே நின்னுட்டே? உள்ளே வா! உனக்கும் ஆபீசுக்கு நேரமாகுதே!'' கையில் பெட்டியுடன் அவளுக்கு முன்னே சென்ற உதயன், திரும்பிப் பார்த்து அழைத்தான்.

யோசனையிலிருந்து விடுபட்ட ஜனனி, வங்கிக்குள் நுழைந்தாள்.

அடுத்த அரைமணி நேரத்தில்... அவளின் எதிர்காலம் உதயன் வைத்திருந்த சாம்பல் நிறப் பெட்டியினுள் கட்டுக் கட்டாய் அடுக்கி வைக்கப்பட்டது.

''நிஜமாகவா சொல்றீங்க?'' ரோசிலின் ஆச்சரியத்துடன் உதயனை ஏறிட்டாள்.

''சத்தியமா! பணத்தைக் கட்டிட்டு நேரே உன்னை பார்க்கத்தான் வந்தேன்.''

''பணத்தை எப்படிக் கொடுத்தாங்க உங்கக்கா?''

''அவ்வளவு சீக்கிரம் கொடுத்துடுவாளா? சும்மா கொஞ்சம் எலி மருந்தை சாப்பிட்டேன்.''

''ஐயய்யோ...''

''பதறாதே... செத்துடுவேனா... என் ரோசிலினை விட்டுட்டு? நான் சாப்பிட்ட மருந்தை எலிக்குக் கொடுத்தாக்கூட சாகாது. எப்படியோ...வேலைக்கு ஏற்பாடு பண்ணியாச்சு. நான் வெளிநாடு போய் வர்றவரைக்கும் எனக்காக காத்திருப்பியா ரோசிலின்?''

''எனக்காக நீங்க இவ்வளவு பாடுபடும்போது என் வீட்டுலே நடக்கிற கல்யாண ஏற்பாட்டை என்னால நிறுத்த முடியாதா என்ன? தைரியமா போய் வாருங்க... வரும்போது நிறையப் பணத்தோடு வாங்க. ஏதாவது தொழில் தொடங்கி பிழைச்சுக்கலாம். மறுபடி ரெண்டு மூணு ஆண்டு உங்களைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியாது.''

''உனக்குத்தான் என்மேல் எவ்வளவு பாசம்?'' நெக்குருகிப் போனான்.

''உன்னுடைய முட்டாள்தனத்துக்கு ஒரு அளவே கிடையாதா?'' எரிச்சலுடன் கேட்டாள், சுதா.

''நான் என்ன பண்ணட்டும் சுதா! வீடு மொத்தமும் எனக்கு எதிராய்! தம்பி விஷம் சாப்பிட்டு படுக்கையிலே! அம்மா என் காலில் விழுந்து அழுறாங்க... அந்த சூழ்நிலையிலே என்னதான் பண்ண முடியும் சொல்லு?''

''யோசிச்சி முடிவெடுத்திருக்கணும். யார் கண்டது? பணத்தைப் பிடுங்க நடந்ததெல்லாம் நாடகமாகக் கூட



இருக்கலாம். நடந்ததை விடு. கோகுலுக்கு என்ன பதில் சொல்லப் போறே?''

''அதுதான் எனக்கும் புரியலே!'' திணறினாள்.

தொலைபேசி அலறியது.




கோகுலிடமிருந்துதான் அழைப்பு.

உற்சாகமாய் பேசினான்.

''ஜன்னி!''

''ஏய்!''

''உண்மையாவே ஜன்னி கண்டவ மாதிரி உளர்றே! சரி அதை விடு. உனக்காக ஒரு தித்திப்பான செய்தி வச்சிருக்கேன். என்னன்னு சொல்லுப் பார்க்கலாம்.''

''என்ன?''

''நீயே யூகிச்சு பாரு ஜன்னி!''

''முடியலே.. நீங்களே சொல்லுங்க!''

''சோம்பேறி! என் வீட்டுலே சம்மதிச்சிட்டாங்க.''

''எதுக்கு?''

''முண்டம்! நம்ம கல்யாணத்துக்குத்தான்!''

''நி... நிஜமாகவா சொல்லுறீங்க?''

''ஆமாம்! வீட்டுலே என் கல்யாண விஷயமா பேச்சு வந்தது. இதுக்கு மேலேயும் வாயை மூடிக்கி இருந்தா சரியா வராதுன்னு உன்னைப் பற்றி சொல்லிட்டேன். கொஞ்சம்

சலசலப்பு இருந்தது. அது இயற்கைதானே? அதுவும்கூட அம்மாவாலதான். ஆனா, அப்பா என்னை ரொம்ப நல்லா புரிஞ்சு வச்சிருக்கிறவர். 'உன் தேர்வு சோடை போகாது. எப்ப பொண்ணு பார்க்கப் போகலாம்'னு கேட்டார்."

"..."

"நீயும் உங்க வீட்டுலே என்னைப் பற்றி சொல்லிடு. ஒரு நல்ல நாள் பார்த்து பொண்ணு பார்க்க வர்றோம். உதயனுக்கு வேலை கிடைச்சதும் கல்யாணத்தை வச்சுக்கலாம்."

"..."

"என்ன ஜனனி... எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயத்தைச் சொல்லுறேன். உன்கிட்டே பதிலே இல்லையே."

"ஐயோ... அப்படியெல்லாமில்லே. சந்தோஷத்தில் பேச்சே வரலே..."

"அப்படியா? சரி... இந்த சந்தோஷத்தை இன்றே கொண்டாடுறோம். சரியா?"

"ச...சரிங்க!"

மாலை...

ஓட்டலில் சந்தித்தார்கள்.

"சாப்பிடு ஜனனி! உனக்குப் பிடிக்குமேன்னு ரெண்டு பாசந்தி ஆர்டர் பண்ணி இருக்கேன். மிச்சம் வைக்காம சாப்பிடு. இன்னைக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கிறேன் ஜனனி."

அவனை நிமிர்ந்து பார்க்கவே பயமாக இருந்தது.

"ஜனனி... என்னாச்சு உனக்கு? ஒரு மாதிரி தெரியுறே?"



"இ... இல்லேங்க... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே."

"நிஜமாவா?" இரு கைகளையும் மோவாய்க்கு முட்டுக் கொடுத்து அவளையே ஊடுருவிப் பார்த்தான்.

வெலவெலத்துப் போனாள், ஜனனி.

"சொல்லு... எதையோ சொல்ல நினைக்கிறே... சொல்லு."

"வ... வந்து..."

"ம்..."

"பொ... பொண்ணு பார்க்கிற ஏ... ஏற்பாட்டை கொஞ்ச நாள் தள்ளி வச்சுக்கலாமே!"

"ஏன்?"

"உதயனுக்கு வேலை கிடைச்சிடுச்சு."

"சொல்லவேயில்லை? நல்ல விஷயம்தானே? பிரச்னை தீர்ந்தது. அப்புறமென்ன?"

"இல்லீங்க... ஒரு ஏழெட்டு மாசத்துக்கு அப்புறமா... பொண்ணு... பார்க்க..." மென்று விழுங்கினாள், வார்த்தை களை.

"அதான் ஏன்?" ,

"உதயனுக்கு துபாயில வேலை!"

"ரொம்ப நல்லது!"

"ஒண்ணரை லட்சம் பணம் கட்டினாதான் வேலை கிடைக்குமாம்..."

"ஓ..."

"அ... அதனால... என் பணத்தை எடுத்து... கொடுத்திட் டேங்க..."

"எ...எ...ன்...ன?"

"இல்லேன்னா அந்த வேலை கிடைக்காதாம். அதனால..."

"நிறுத்து!" ஆத்திரத்துடன் கத்தியபடி எழுந்தாள். அவள் எழுந்த வேகத்தில் பாசந்தி கிண்ணம் நடனமாடி ஜனனியின் சல்வார் மீது கொட்டியது.

"கோகுல்!" அதிர்ச்சியும், அழுகையுமாய் அழைத்தாள்.

"என்னை என்ன கோமாளிப் பயல்னு நினைச்சியா?" கேட்டவன்; அங்கிருந்து காற்றாய் வெளியேறினான்.

சுற்றியிருந்தவர்கள் இவளை வேடிக்கை பார்த்த வலியைவிட, அவன் உதிர்த்துவிட்டுப் போன வார்த்தைகள் அவளை துண்டு துண்டாய் வெட்டிப் போட்டது.

கோகுலைத் தொடர்பு கொள்ளவே முடியவில்லை ஜனனி, கொஞ்சம் தனிமை கிடைத்தாலும் அழுது தீர்த்தாள்.

'அவர் கோபம் நியாயமானதுதான்! ஆனால், நான் என்ன பண்ண முடியும்? இருபக்கமும் மத்தளம் போல் அடிவாங்கிக் கொண்டிருக்கிறேனே!'

உதயம் துபாய்க்கு சென்றுவிட்டான். பரிமளம் மகிழ்ச்சியுடன் வளைய வந்தாள்.

'இனி என்ன கவலை? மகன் பணமாய் அனுப்பப் போகிறான். எப்படியாவது சொந்தமாய் ஒரு வீடு வாங்கிவிட வேண்டும். மூன்றுவட சங்கிலி கனமாய் செய்து போட வேண்டும்.' அவளின் ஆசைக் கனவுகள் விரிந்தன.



கோகுல் குடியிருந்த வீட்டின் தெருமுனையில் அவன் தலை தென்படாதா என்று காத்திருந்தாள், ஜனனி. மாலையில் அலுவலக வாசலிலும் காத்திருந்தாள்... ஊகூம்... பலனில்லை.

'அப்படியானால் நிச்சயம் வீட்டுக்குள்தான் இருக்கிறான். ஒரு ஆண்பிள்ளை எத்தனை நாள்தான் வீட்டுக்குள் அடைபட்டு கிடக்க முடியும்? வெளியில் வந்துதானே ஆகணும்? கடவுளே நான் அவர்மேல் வைத்திருக்கிற அன்பு நிஜமென்றால் அவரை இன்று எப்படியாவது என் கண்ணில் காட்டு.'

பகல் பன்னிரெண்டு மணி இருக்கும்.

மனசு சரியில்லாத காரணத்தால் பெங்களூரில் நண்பனின் வீட்டில் தங்கிவிட்டு ஊர் திரும்பிய கோகுல், ஆட்டோவில் வந்தான். தெருவுக்குள் நுழையும் போது...

அவளைப் பார்த்துவிட்டான்.

சுள்ளென்று வெயில், தீயாய் சுட்டுப் பொசுக்குவதுகூட உறைக்காமல், முகம் வியர்த்து வழிந்தது. நொடிக்கொருதரம் அவன் வீட்டை கண்காணித்தபடி அவள் நின்றிருந்தாள்.

அதுவரை உள்ளுக்குள் கனன்று கொண்டிருந்த நெருப்பு கொஞ்சம் கொஞ்சமாய் தணிவது போலிருக்க... ஆட்டோவை அவளருகே நிறுத்தச் சொன்னான்.

அது பூங்கா.

வீட்டுக்குக்கூட போகாமல் பெட்டியுடன் ஜனனி எதிரே அமர்ந்திருந்தான், கோகுல். அவள் விசும்பியபடி சொல்வதை பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

"அந்தச் சூழ்நிலையிலே நான் வேறு என்ன பண்ண முடியும் நீங்களே சொல்லுங்க!"

நெடியதொரு பெருமூச்சு வெளிப்பட்டது கோகுலிட மிருந்து.

''ரொம்ப ஆசையாய் இருந்தேன், ஜனனி. வீட்டில் அனுமதி கிடைச்சிடுச்சு. நாலு ஆண்டு காதல், கல்யாணத்தில் முடியப் போகுதேன்னு இருந்தேன். உன்னைப் பற்றி, நம்ம எதிர்கால திட்டம் பற்றி எல்லாத்தையும் வீட்டுலே சொன்னேன். அதனாலதான் சம்மதிச்சாங்க. இப்ப, இந்த விஷயத்தைச் சொன்னா என்னாகும்? யோசிச்சுப்பார்.''

''உங்க சூழ்நிலை எனக்குப் புரியது. ஆனா, எ... என்னால உங்களை இழக்க முடியாது. எனக்கு நீங்க வேணும். உங்களை அஞ்சு நாள் பிரிஞ்சி இருந்ததே உயிர் போன மாதிரி தவிச்சுப் போயிட்டேன். என்னால முடியாதுங்க. நீங்க எனக்குக் கிடைக்கலேன்னா செத்துப் போயிடுவேன்'' மறுபடி கண்ணீர் சுரந்தது.

''ப்ச்... அழாதே ஜனனி... யோசிப்போம். எனக்கு மட்டும் உன்னை பிரியணும்னு ஆசையா என்ன? நான் உன்னைப் பற்றிக் கவலைப்படுறதிலே பத்து சதமாவது உன்னைப் பெத்தவங்க கவலைப்பட்டாங்கன்னா, எந்தப் பிரச்னையு மில்லே. நானும் எவ்வளவுதான் கடன்பட முடியும்? நீயே சொல்லு?''

''...''

''நான் கேக்கிறேன்னு தப்பா நினைக்காதே! கல்யாண வயசைத்தாண்டிட்ட உன் பணத்திலேதான் கை வைக்கணுமா? ஏன் சுஜாதாவோட பணத்தை எடுத்துத் தரவேண்டியதுதானே? அவளுக்குக் கல்யாணம் பண்ண எப்படியும் நாலஞ்சு ஆண்டு ஆகுமில்லையா?''

''ம்...ஆகும்!''



''நான் ஒன்னு சொன்னாக் கேட்பியா?''

''என்ன சொன்னாலும் கேக்கிறேங்க.''

''சுஜாதாவின் பணத்தை எடுத்து உனக்குத் தரச்சொல்! அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிற பொறுப்பை நாம ஏதுக்கலாம்!''

''...''

''என்ன யோசிக்கிறே?''

''சம்மதிப்பாங்களா?''

''சம்மதிச்சுதான் ஆகணும்... வேறு வழியில்லே!''


''சரிங்க... கொஞ்சநாள் போகட்டும். நேரம் பார்த்துக் கேட்கிறேன்.''

''சரி... நேரமாச்சு... நான் கிளம்புறேன்!''

புறப்பட்டான், கோகுல்.

மனதிலுள்ள பாரம் குறைந்தாலும், புதுக்கவலை அவளைச் சூழ்ந்து கொண்டது.

'கேட்டால் தருவார்களா?'




ஒரு மாதம் கடந்தது.

'இன்று எப்படியாவது கோகுலைப் பற்றி வீட்டில் சொல்லிவிட வேண்டும். சுஜாதாவின் பெயரில் கிடக்கும் பணத்தை எடுத்துத் தரச்சொல்ல வேண்டும்' என்று ஜனனி தைரியத்தை வர வழைத்துக் கொண்டாள்.

அன்றைக்கு சற்று முன்னதாகவே எல்லா வேலைகளையும் முடித்துவிட்டாள்.

அப்பாவும், அம்மாவும் அமர்ந்திருந்தனர்.

'இதுதான் நல்ல தருணம்' என்றெண்ணியவள், தயக்கத்துடன் அவர்கள் அருகே சென்றாள்.

அப்போது...

அழைப்புமணி அலறியது.

"யாரு?" என்றெழுந்தாள் பரிமளம்.

"இரும்மா... நான் பார்க்கிறேன்" என்று வாசலுக்கு விரைந்தாள் ஜனனி.

கதவைத் திறந்தவள், அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

கையில் பெட்டியுடன் உதயன் நின்றிருந்தான்.

"உ...உ...த...யா!"

"யாரு... உதயனா?" ஐயோ... என்னடா ஆச்சு?"

"உதயன் வந்துட்டானா? ஏன்?" பூபாலனையும் அதிர்ச்சி தாக்கியது.

சோர்ந்துபோய் உள்ளே வந்தான், உதயன்.

"என்னாச்சு? ஏன் வந்துட்டே?"

"பிடிக்கலே ஜனனி... அங்கே இருக்க முடியலே!"

"அதுக்காக?"

"நான் இங்கேயே ஏதாவது வேலை தேடிக்கிறேன்" குரல், நைந்துபோய் வந்தது.



"மறுபடி போகமாட்டியா?" என்றார், பூபாலன்.

"..."

"அப்ப ஒண்ணரை லட்சம்? திருப்பித் தந்திடுவாங்க இல்லே?"

"இல்லேம்மா... ஒரு தடவை போய் வந்துட்டாலே தரமாட்டாங்க!"

"அடப்பாவி... என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்கே? உன்னை நம்பி சுளையா ஒண்ணரை லட்சம் கொடுத்தோமே! அவ்வளவுதானா? போச்சா? ஐயோ..." பரிமளம் வாய்விட்டு அழத் தொடங்கினாள்.

ஜனனி, உயி[illegible]று இன்றி தவிப்பது போல் தவித்தாள். தலையில் கைவைத்து அமர்ந்துவிட்டாள்.

பூபாலனும், பரிமளமும் மாறி மாறி வசை பாடினர்.

அதுவரை பொறுமையாய் இருந்த உதயன், சுவற்றில் முகம் பொத்தி கேவிக் கேவி அழுதான்.

"இப்ப... நான் ஏன் திரும்பி வந்தேங்கிறதுக்கு உண்மையான காரணத்தைச் சொல்லுறேன். அதுக்குப்பிறகு பணம் முக்கியமா, நான் முக்கியமான்னு முடிவு பண்ணுங்க."

"என்னடா சொல்லுறே?"

"ஆமாம்மா... அங்கே என் படிப்புக்கேத்த வேலை தரலே. கழிவறையைக் கழுவச் சொல்லுறாங்க. துணி துவைக்கச் சொல்லுறாங்க. செய்ய மறுத்தா அடிக்கிறாங்க, திட்டுறாங்க. அப்படியும் செய்தேன். நம்ம குடும்பத்தை நல்லநிலைக்கு கொண்டு வரணும், ஜனனி பணத்தைத் திருப்பித் தரணும்னு பல்லைக் கடிச்சுக்கிட்டு செய்தேன். ஆனா..."

"..."

"என்னமோ பயமாயிடுச்சும்மா! அதுக்குமேலே அங்க இருக்க முடியலேம்மா! நான் தப்பான முடிவெடுத்திருந்தா மன்னிச்சுடும்மா!" அம்மாவின் காலைக் கட்டிக் கொண்டு பெரிதாய் அழுதான்.

அதுவரை இருந்த கோபமெல்லாம் பஞ்சாய் பறந்துபோய் உருகிப் போனாள் பரிமளம்.

"பாத்தீங்களா என் பிள்ளையை? நீ இங்கேயே இரு... எங்கேயும் போக வேண்டாம்! எந்திரிப்பா... குளிச்சிட்டு வா சாப்பிடலாம்."

ஜனனி பொம்மை போல எழுந்தாள். யாரிடமும் பேசவில்லை. அலுவலகம் கிளம்பினாள்.

தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள். 'உதயனால் என்றைக்குத்தான் இந்த வீட்டுக்கு நல்லது நடந்திருக்கிறது. சுஜாதாவின் திருமணம் எங்கள் பொறுப்பு என்று அவள் பெயரிலுள்ள பணத்தைக் கேட்டால் தரமாட்டார்களா? என்ன? ஆனால், இந்தச் சூழ்நிலையில் வேண்டாம்' என்று முடிவெடுத்த ஜனனி, உதயன் விஷயத்தையும் இப்போதைக்கு கோகுலுக்குச் சொல்லவேண்டாம் என்றெண்ணினாள்.

ஆனால், உதயன் துபாயிலிருந்து வந்ததற்கு வேறு காரணம் இருந்தது.

'வீட்டில் கட்டாயப்படுத்தி திருமண ஏற்பாடுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இருபது நாளில் திருமணம். உடனடியாக ஊருக்கு வரவும் என்று ரோசிலின் எழுதிய கடிதம்தான். அவனை அடித்துப் பிடித்து வரவைத்தது.



ஊருக்கு வந்த நான்காவது நாளே ரோசிலினை வீட்டை விட்டு ஓடிவரச் செய்து கோவிலில் தாலி கட்டி தன் வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டான். அதுவும் கையில் விஷத்தோடு.

இப்படியொரு அதிரடியை எதிர்பார்க்காத வீடு பூகம்ப அதிர்ச்சியை உள்வாங்கியது.

"எ... என்னடா இது?" பரிமளம் சற்றும் எதிர்பார்க்க வில்லை.

பூபாலனும், சுஜாதாவும் உறைந்திருக்க... நம்ப முடியாமல் அந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தாள் ஜனனி.

"அம்மா... ரோசிலினை நான் கல்யாணம் பண்ணிக் கிட்டேன். இரண்டு ஆண்டா காதலிச்ச பொண்ணை எவனுக்கோ தாரை வார்க்க நான் தயாராயில்லை. அவள் இல்லேன்னா நான் உயிரோடு இருக்க மாட்டேன். நான் இல்லேன்னா அவளும் இருக்க மாட்டா" என்றான் விறைப்புடன்.

இது போதாதா பெற்றவர்களை அசைக்க?

"சாகுறதுக்கா உன்னைப் பெத்து வளர்த்தோம்! ஒரு பொண்ணுக்கு வாழ்க்கைக் கொடுக்கிறதுக்கும் நல்ல மனசு வேணும். அது உன்கிட்டே இருக்கு. வாப்பா... வாம்மா... ஏங்க இவங்களை உள்ளே கூப்பிடுங்களேன்."

"ஏன்டி... ஆரத்தி எடுக்காமலா?" என்றார், பூபாலன்.

பரிமளம் புன்னகைத்தாள்.

"ஜனனி... ஆரத்தி கரைச்சு எடுத்திட்டு வாயேன்!"

ஜனனி, பதிலேதும் கூறாமல் ஆரத்தி கரைத்து எடுத்து வந்தாள்.

தன்னைப் பெற்றவர்களை வியப்புடன் பார்த்தாள்.

'மூத்தவள் இருக்க... உனக்கென்னடா கல்யாணத்துக்கு அவசரம் என்று உங்களுக்குக்கூடவா கேட்கத் தோணாது?' அப்பாவை நினைத்து மனசுக்குள் மருகினாள்.

அந்த வீட்டில் இருந்ததே இரண்டு அறைதான். ஒன்றில் பூபாலனும், பரிமளமும் இருக்க மற்றொன்றில் ஜனனி இருந்தாள். ஜன்னலையொட்டிய அறை என்பதால் காற்று அள்ளிக் கொண்டு வரும். பூபாலனுக்கு அது வசதியாய் இருந்தது.

மகன் திடீர் திருமணம் செய்துவிட்டதால் பூபாலன் தன் அறையை ஒதுக்கி தர முன்வந்தார். ஆனால், ஜனனி அதை தடுத்து தன்னறையை புதுமண தம்பதிகளுக்கு கொடுத்தாள்.

வீட்டில் செலவு கூடிற்று. மூச்சுத் திணறியது ஜனனிக்கு.

அன்று...

பரிமளம், கோவிலுக்குச் சென்றிருந்தாள்.

பிரகாரத்தைச் சுற்றிவிட்டு மண்டபத் தூணில் சாய்வதற்கும் "அட... பரிமளம்!" என்ற ஆச்சரியக் குரல் கேட்கவும் சரியாக இருந்தது.

தூரத்து உறவுக்காரப் பெண்மணி!

பரிமளமும் சிரித்தாள்.

"அக்கா... நீங்களா? எப்படி இருக்கீங்க?"

"எனக்கென்ன குறைச்சல்? நாலு பொண்ணுங்களையும் கட்டி கொடுத்துட்டு நிம்மதியா கோவில் குளம்னு சுத்திக்கிட்டு இருக்கேன். ஆமா, நான் கேள்விப்பட்டது நிஜமா?"



"என்னக்கா?"

"உன் பையன் யாரோ ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்துட்டானாமே?"

"ஆ... ஆமா!"

"வீட்டில் அவனைவிட மூத்தவ ஒருத்தி இருக்காயில்லே?"

"ம்..."

"அவளுக்குக் கல்யாணம் பண்ணாம... எப்படி?"

"இ... இல்லேக்கா... அவதான்... 'எனக்கு இப்ப அந்த எண்ணமே இல்லே. பின்னாடி பார்த்துக்கலாம்'னு சொல்லிட்டா. அடடா... மணி எட்டாகப் போகுதே... நான் கிளம்புறேன். வீட்டுல காத்துட்டிருப்பாங்க!" விட்டால் போதும் என்று பிய்த்துக் கொண்டு கிளம்பினாள் பரிமளம்.

"அவ வேண்டாம்ன்னா... இவளும் விட்டுடுவாளாம் என்ன பிறவிங்களோ?"

"ஜனனி... உங்க வீட்டுலே பேசிட்டியா? அப்பா வேறு நச்சரிச்சுக்கிட்டே இருக்கிறார். எப்படா பொண்ணு பார்க்கப் போகலாம்னு?"

"இ... இன்னைக்கு எப்படியாவது கேட்டுடுறேன்" என்றவள், மாலையில் வீடு திரும்பியபோது ஒரு தீர்மானத்துடன்தான் நுழைந்தாள்.

எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, பூஜையறையில் விளக்கேற்றினாள். பெற்றோரின் அருகில் சென்றாள்.

"ம்க்கும்..." செருமினாள்.

தம்பதியினர் நிமிர்ந்தனர்.

"என்ன ஜனனி?"

"நா... நான்..."

"...!"

"ஒரு முக்கியமான விஷயம் பேசணும்."

"என்னம்மா? எதைப் பத்தி?"

"அது..."

"ஏதாவது பிரச்னையா?"

"இல்லேப்பா... அதில்லே!"

"வேறென்ன?"

"என் கல்யாண விஷயமா... உ.... உங்ககிட்டே பேசணும்!"

"என்னது?"

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள வீட்டார் அனைவரும் குழுமினர்.




"அவர் பேர் கோகுல்... கம்ப்யூட்டர் என்ஜினியரா இருக்கிறார்..." என்று சுருக்கமாய் அவனைப் பற்றிச் சொன்னாள்.

"என்னடி... பெரிய குண்டைத் தூக்கிப் போடுறே. நீ காதலிக்கிறாயா?"

"நானும் பெண்தானேம்மா?"

"அ... அதுக்குச் சொல்ல வரலே.. அந்தப் பையன் எப்படி என்ன ஏதுன்னு தெரியாம..."



"நாலு ஆண்டா பழகுறேனே... எனக்குத் தெரியாதா? ரொம்ப நல்லவரும்மா..."

"சரி இருக்கட்டும்... திடீர்னு கல்யாணம் அப்படி இப்படின்னா... பணத்துக்கு எங்கே போறது?"

"நான் சொல்லுறதை கொஞ்சம் நிதானமா கேளுங்கப்பா. நானும் அவரும் சேர்ந்து ஒரு கம்பெனி ஆரம்பிக்கப் போறோம்," என்று விளக்கமாக சொன்னாள்.

"புரியுதும்மா... உன்பேர்ல உள்ள பணத்தைத்தான் உதயனுக்கு எடுத்துக் கொடுத்துட்டோமே!"

"அதுக்குதாம்பா... நாங்க ஒரு யோசனை வச்சிருக்கோம். சுஜாதாவுக்கு நல்லபடி கல்யாணம் பண்ணி வைக்கிறது எங்களோட பொறுப்பு. அவ பேர்ல உள்ள பணத்தை எடுத்து என்கிட்டே..."

"சபாஷ்!" என்று கிண்டலாய் குரல் வந்தது.

சுஜாதாதான். அந்த குரலுக்குச் சொந்தக்காரி.

"ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு, கடைசியிலே என்னைக் கடிக்க ஆரம்பிச்சாச்சா?"

"சுஜாதா... என்ன சொல்றே நீ?"

"உன் இடத்துல என்னை உட்கார வைக்கலாமான்னு பார்க்கறியா?" கண்களில் உக்கிரம்.

"பெரிய வார்த்தையெல்லாம் பேசாதே சுஜாதா. உதயனுக்கு பணம் தர சம்மதிக்கலேன்னதும் நீயும்தானே என்னைத் திட்டினே?"

"நீ சம்பாதிக்கிறே... உன்னால சமாளிக்க முடியும். கொடுக்கிறதுல தப்பில்லேன்னு நினைச்சேன்."

"சரி... முடிஞ்சு போனதைப் பேச வேண்டாம். என் மேல நம்பிக்கை வை! உனக்கொரு நல்ல வாழ்க்கையை நான் அமைச்சுத் தர்றேன்."

"அந்த சிரமம் உனக்கு வேண்டாம்!"

"ஏ... என்ன சொல்றே?"

"படிப்பு முடியுறவரைக்கும்... சொல்லக்கூடாதுன்னு நினைச்சேன். எனக்குக் கல்யாணமாயிடுச்சு."

அடுத்த அதிர்ச்சி!

அது அந்த வீட்டையே ஒரு உலுக்கு உலுக்கியது.

இருந்த ஒரே பிடிமானமும் கையை விட்டு நழுவிய வேதனை ஒரு பக்கம், இப்படியொரு காரியத்தை செய்துவிட்டு இத்தனை நாளும் கமுக்கமாய் இருந்திருக்கிறாளே என்கிற ஆச்சரியம் மறுபக்கம். அவை ஜனனியை செயலற்று போக வைத்தன.

பெற்றவர்கள், அவளின் அடாத செயலுக்கு கத்தினர், திட்டினர்.பிறகு நடக்க வேண்டியதை கவனித்தனர்.

சுரேஷ், சுஜாதாவின் காதல் கணவன். நல்லவன்தான். ஓரளவு வசதியான குடும்பத்தை சேர்ந்தவன். சுஜாதாவை உயிருக்கு உயிராய் நேசித்தவன். தன் வீட்டில் சம்மதிக்க மாட்டார்கள் என்ற காரணத்திற்காகவே பதிவுத் திருமணம் செய்து கொண்டான்.

இப்போது ஊருக்காக மறுபடி திருமணம்.

நடந்துவிட்ட நிகழ்வுகளை மாற்ற முடியாது எனும்போது... இனி நடக்கவேண்டியதைப் பார்க்க வேண்டுமே என்று



தற்காலிகமாக தன் பிரச்னைகளை மறந்து திருமண வேலைகளில் மூழ்கிப் போனாள், ஜனனி.

உதயன் துபாயிலிருந்து வந்தது, ரோசிலினை திருமணம் செய்து கொண்டது. அடுத்த பதினைந்து நாட்களுக்குள் சுஜாதாவின் திருமணம் என களைத்துப் போனாள்.

சுஜாதாவின் அவசரத் திருமணத்திற்கான காரணத்தைச் சொல்லி கோகுலை அழைத்தாள்.

ஜனனியை ஏற இறங்க பார்த்துவிட்டு அழைப்பிதழைப் பெற்றுக் கொண்டவன் பதிலேதும் கூறவில்லை. திருமணத் திற்கும் வரவில்லை.

அவன் கோபம் ஜனனிக்குப் புரிந்தது.

கோகுல் மட்டுமல்ல; சுதாவும் திருமணத்திற்கு வரவில்லை.

மண்டபத்தில்... சோர்வாய் ஒரு ஓரமாய் அமர்ந்திருந்தாள், பரிமளம்.

"இங்கே என்ன பண்ணிட்டிருக்கே?" என்றபடி அருகில் வந்தமர்ந்தார், பூபாலன்.

"ப்ச்... ஒண்ணுமில்லே!"

"ஏன் ஒரு மாதிரியா இருக்கே?"

"நான் எதிர்பார்க்கவே இல்லே... இவ இப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுவான்னு?"

"நான் மட்டும் எதிர்பார்த்தேனா? அவளும் படிச்சு முடிச்சு வேலைக்குப் போவான்னு நினைச்சேன்... ஆனா, இப்படி ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து நிப்பாள்னு கொஞ்சம்கூட நினைக்கலை. இனி அதைப்பத்திப் பேசி என்னாகப் போகுது."

''அட... நான் சொன்னது ஜனனியை!''

''ஓ... அவளையா?''

''பார்க்க சாதுவா இருந்துக்கிட்டு திடீர்னு 'நான் ஒருத்தனை காதலிக்கிறேன். அவனைத்தான் கட்டிக்கப் போறேன்'னு சொன்னதும் தூக்கிவாரிப் போட்டுடுச்சு!''

''மத்த ரெண்டு பேரும் காதலிக்கும்போது, இவ மட்டும் காதலிக்கக் கூடாதா என்ன?''

''புரியாமப் பேசாதீங்க. நம்ம வீட்டு நிலைமையை யோசிச்சுப் பார்த்தீங்களா? கைநிறைய பணத்தோடு வருவான், கஷ்டப்படாம காலம் முழுக்க நிம்மதியா இருக்கலாம்னு ஆசையா இருந்தேன். ஒரே மாசத்திலே ஓடிவந்து மண்ணள்ளிப் போட்டுட்டானே உதயன்? போதாதுக்கு கல்யாணம் வேற? வீட்டு செலவு அதிகமாயிடுச்சு. உங்க பென்ஷன் பணம் நம்ம மருந்து செலவுக்கே சரியாப்போகுது. இவளை நம்பித்தானே சாப்பிட்டுக்கிட்டு இருக்கோம்? உதயன் ஒரு வேலைக்குப் போய் சம்பாதிக்கிற வரைக்குமாவது, அவ நமக்கு மகளா மட்டுமே இருந்தா நல்லாயிருக்கும்னு தோணுது.''

''...!''

''என்னங்க அப்படிப் பார்க்கிறீங்க? என்னடா, இவ இவ்வளவு சுயநலமா இருக்காளேன்னா? என்னங்க பண்ணுறது? காலம் முழுக்க நாம உழைச்சி சாப்பிட்டுக் கிட்டிருக்க முடியுமா? நம்மளை உக்கார வைச்சி சாப்பாடு போட வேண்டியது பிள்ளைகளோட கடமைதானே! மூத்தது ஆணாப் பிறந்திருந்தா எந்தக் கவலையுமில்லே. ஆனாலும், இந்தக் காலத்துல பொண்ணுங்களுக்கு எல்லாத்திலேயும் சமஉரிமை இருக்கு. சொத்துல மட்டும் பங்கு வேணும், கடமையிலே பங்கு வேணாமா? என்னங்க நியாயம்?''



ஆற்றாமையுடன் மனைவி பேசுவதைப் பரிதாபமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார், பூபாலன்.

ஆற்றில் போட்டாலும் அளந்து போடணும். ஆடம்பரச் செலவும், அநாவசியக் கடனும் அதிக கவலையைத்தான் உண்டாக்கும். சேமிக்கத் தெரியாத பெற்றோர்கள் சுயநலவாதிகளாகிறார்கள். அவர்கள் புலன்களுக்கு கடமையும் கடும் கடுமையாகத்தான் தெரியும்.

கோகுல் தீவிரமாய் எதையோ யோசித்தான்.

ஜனனி அவனையே பரிதாபமாய் பார்த்துக் கொண்டிருந் தாள்.

''கோகுல்...''

''ம்...''

''எதுவும் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?''

''உன் தம்பி, துபாயிலேர்ந்து வந்ததைக்கூட என்கிட்டே மறைச்சிட்டே இல்லே.''

''மன்னிச்சிடுங்க கோகுல்... நீங்க கோபப்படுவீங்கன்னு பயந்துதான்...''

''இப்ப மட்டுமென்ன மகிழ்ச்சியா பொங்கி வழியுது!''

''...''

''உனக்கடுத்த ரெண்டு பேருக்கும் கல்யாணமாயிடுச்சே... மூத்தப் பொண்ணு அப்படியே இருக்காளேன்னு உன்னைப் பெத்தவங்க நினைக்கவே மாட்டாங்களா?''

''...!''

''உனக்கு சேரவேண்டியதை மட்டுமில்லே... உன் தன்மானத்தையும் சேர்த்தே விட்டுக் கொடுத்திட்டிருக்கே!''

''...!''

''பெரியவள் இருக்க... உனக்கடுத்த இருவரும் குடும்ப கவுரவத்தைப் பற்றி கவலைப்படாமல் கல்யாணம் செய்து கொண்டதை உன் வீட்டுலே வேணும்னா தப்பா நினைக்காம இருக்கலாம். ஆனா, என் வீட்டுலே அசிங்கமா நினைப்பாங்க, ஜனனி!''

''கோ...கு...ல்!''

''அதுமட்டுமில்லே... என் லட்சியத்திலேயும் மண்ணள்ளிப் போட்டுட்டாங்களே! ஆபீசுக்கு இடமெல்லாம் பார்த்தாச்சு. இந்த நேரத்திலே நீ வெறுங்கையை விரிச்சுக் காட்டுவேன்னு நான் எதிர்பார்க்கலே!'' என்றான், வெறுப்பாய்.

''கோகுல், நான் என்ன பண்ணட்டும்? என் நிலைமையைக் கொஞ்சமாவது நினைச்சுப் பாருங்க... என்னை கைவிட்டுடாதீங்க, கோகுல்... அதை என்னால தாங்கிக்க முடியாது.''

''நானும் என்ன பண்ண முடியும் ஜனனி? சொந்தமா தொழில் செய்ய வேண்டும் என்பது என்னோட கனவு. உன்னைப் பார்ப்பதற்கு முன்பே விதைத்த லட்சியம் அது. உனக்காக... அதை புதைக்க முடியாது.''

''அப்படின்னா... இந்த ஜனனி வேண்டாமா உங்களுக்கு?'' சொல்லிவிட்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.






சுதா, ஜனனியையே கவலையுடன் பார்த்துக் கொண்டி ருந்தாள்.

''ஜனனி...''

''ம்... என்ன சுதா?''

''சாப்பிட்டு எத்தனை நாளாச்சு?''

''ஏன் அப்படிக் கேட்கிறே?'' சிரிக்க முயன்றாள்.

''சிரிக்காதே... எரிச்சலா இருக்கு. எப்படி இருந்தவ நீ? கண்ணாடியில் இப்ப உன்னைப் பார்த்திருக்கியா? கண்ணெல்லாம் உள்ளடங்கி, கன்னம் ஒட்டிப்போய், மெலிந்து, நிறம் குறைந்து... ஏன் இப்படியாயிட்டே ஜனனி?''

''மன உளைச்சல்தான்... வேறென்ன?''

''கோகுல் என்ன சொல்றார்?''

''பாவம்... என்னால அவருக்கும் பிரச்னை!''

''காதல்னா சும்மாவா? எல்லாத்தையும் சந்திச்சிதானே ஆகணும்? உன் வீட்டுலேயும் சரியில்லை. உன் எதிர்காலத்தைப் பற்றி நினைச்சுப் பார்க்க யாரும் தயாராயில்லே. இப்படிப்பட்டவங்களைப் பற்றி நீ ஏன் கவலைப்படணும்?''

''எதுவுமே திட்டம் போட்டு நடக்கலே, சுதா. எதிர்பாராம திடீர்னு நடந்ததுதான். அதுக்கு அம்மாவும், அப்பாவும் என்ன செய்வாங்க? பாவம், அவங்க.''

''அதுசரி... உன் தம்பி, காதலிச்ச பொண்ணைத் தைரியமா வீட்டுக்கே அழைச்சிட்டு வந்ததும், சுஜாதா ரகசியமா கல்யாணம் பண்ணக்கிட்டதும்கூட எதிர்பாராம நடந்ததுதானா? முதுகெலும்பில்லாதவங்க காதலிக்கக் கூடாது. நீயும்தான் நாலு

ஆண்டா காதலிக்கிறியே! என்னாச்சு? உன் தம்பியும், தங்கையும்தான் புத்திசாலிங்க. நீ இப்படின்னா... கோகுல் அதைவிடக் கோழை!''

''அவர் என்ன செய்வார்?''

''காதலிக்க மட்டும் தெரியுமா?''

''ஒரு ஆண்டு அவகாசம் கேட்டிருக்கிறேன். எப்பாடு பட்டாவது அந்தப் பணத்துக்கு ஏற்பாடு பண்ணுறேன்னேன். அவரும் ஒத்துக்கிட்டார்.''

''...''

''என்ன அமைதியாயிட்டே?''

''நீ எப்பேர்பட்ட பெண்? ஒரு பொண்ணு, கணவனுக்கு அன்பா, புகுந்த வீட்டுக்கு அனுசரணையா நடக்கிறது போதாதா? அப்படிப்பட்ட பொண்ணுதானே நீயும்!

''இதுக்கே கோகுல் கொடுத்து வச்சிருக்க வேண்டாமா? கோகுலைவிட உன் தம்பி எவ்வளவோ பரவாயில்லை. காதலிச்சவளையே கைப்பிடிக்கணும்னு அவன் எடுத்த முடிவைப் பாராட்டணும். அதனால் நீ பாதிக்கப்பட்டே... ஆனா, நம்பினவளை அவன் கைவிடலியே...''

''அதுக்காக கோகுலையும் அப்படிப் பண்ணச் சொல்றியா? அவரை நம்பிதான் அவர் குடும்பமே இருக்கு. அப்படியொரு முடிவை எடுத்தா, அவரோட ரெண்டு தங்கச்சி வாழ்க்கை பாதிக்காதா?''

''என்ன பாதிக்கும்? அம்போன்னு அவங்களை விட்டுடப் போறீங்களா என்ன?''



''பொண்ணுங்களுக்கு ஒரு வயசிருக்கு, சுதா. அந்த வயசுக்குள்ளே கல்யாணம் பண்ணுறதுதான் மரியாதை. நான்பட்ட வேதனையை அந்தப் பொண்ணுங்களும் படணுமா என்ன?''

''சரி... கல்யாணத்தை தள்ளிப் போட வேண்டாம். லட்சியத்தையும் கைவிட வேண்டாம். ஆனால், ஒத்திப்போடலாம் அல்லவா? தங்கச்சிங்க கல்யாணத்தை முடிச்சிட்டு, சில ஆண்டுகளுக்குப் பிறகு கம்பெனியை ஆரம்பிக்கலாமே? பணம் தந்தால்தான் கல்யாணம் என்றால் அதென்ன காதல்?''

''அவரென்ன பணக்காரரா? என்னை மாதிரிதானே. இது முன்னமே நாங்க பேசினதுதானே? எனக்கு சாமர்த்தியம் போதலே. அவரென்ன பண்ணுவார்?''

''ஹூம்... இப்படியெல்லாம் ஒரேயடியா அவருக்குத் தாளம் போட்டா... கடைசியல தலையிலே மிளகாய்தான்.''

''நீ அவரை தப்பாவே புரிஞ்சு வச்சிருக்கே சுதா. அவருக்காக பெரிய இடத்து வரனெல்லாம் காத்திருக்க, அவர் எனக்காக காத்திருப்பது அன்பில்லாமலா? எனக்கு அவரைப் பற்றித் தெரியும் சுதா! அவரை நான் காதலனா மட்டுமே பார்த்திருந்தால், உன்னை மாதிரிதான் யோசிச்சிருப்பேன். அவரது குடும்பத்தை சுமக்கிற மூத்தப் பிள்ளையாகவும் பார்க்கிறேன். அதனாலதான் அவருடைய கோபத்திலேகூட ஒரு நியாயத்தை உணருகிறேன்.''

''உன்னை நினைச்சு சிரிக்கிறதா, அழுறதான்னு எனக்கே புரியலே. உன் நம்பிக்கையை நான் மேலும் விமர்சிக்க விரும்பலே. ஆகவேண்டியதைப் பார்ப்போம். இப்ப பணத்துக்கு என்ன பண்ணப் போறே?''

''அதுக்கு ஒரு யோசனை வச்சிருக்கேன் சுதா. கபீர் இருக்காரில்லே...''

''யாரு, கோயம்புத்தூர்காரர்தானே?''

''அவரேதான்! அவர் நிறைய கம்பெனி நடத்துகிறார். கணக்கு வழக்குகளை கவனிக்க சரியான ஆள் கிடைக்கலே. வாரத்துல ரெண்டுநாள் பார்த்துக் கொடுத்தா... நல்ல சம்பளம் தர்றதா சொன்னார். அம்மா பேரில் தாம்பரத்திலே ஒரு நிலம் வாங்கினேனே! அதை வித்தா எப்படியும் எழுபத்தஞ்சாயிரம் தேறும். மீதிக்கு ஆபீசில் கடன் போடலாம். ஆக, அப்படி இப்படின்னு சமாளிக்க வேண்டியதுதான்.''

''நல்ல யோசனைதான்! ஆனா, வாரத்துல ரெண்டு நாள் கபீர் கம்பெனிக்கு எப்படிப் போவே?''

''நிறைய லீவு இருக்கே! அதையெல்லாம் எடுத்துக்க வேண்டியதுதான். சனி, ஞாயிறு ரெண்டுநாள் அந்தக் கம்பெனிக்கு போயிடுவேன்!''

''ஞாயிறு கூடவா? ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கப் போறியா ஜனனி?'' கவலையுடன் கேட்டாள்.

''காதல்னா சும்மாவா? கஷ்டப்படணும். எனக்கு கோகுல் வேணும். அதுக்காக எவ்வளவு வேணும்னாலும் கஷ்டப்படத் தயாரா இருக்கிறேன்'' சிரித்தபடி சொன்னாலும் ஜனனியின் கண்கள் கலங்கிப் போயின.

''என்ன கோகுல் சொல்லுறே?'' கருணாகரன் ஆச்சரியத்துடன் மகனைப் பார்த்தார்.

''பொண்ணுப் பார்க்கப் போறதை கொஞ்சம் தள்ளிப் போடலாம்னு சொன்னேன்!''



''புரியுது. அதான் ஏன்னு கேட்கிறேன்? நாம என்ன உடனடியாவா கல்யாணம் பண்ணப் போறோம்! ஒரு ரெண்டு மாசமோ, மூணுமாசமோ கழிச்சுதானே? இப்போதைக்கு நிச்சயம் மட்டும் பண்ணிடுவோம். அதுதான் நல்லது. உங்க அத்தை அடிக்கடி வந்துட்டுப் போறாங்க.''

''அத்தைகிட்டே நான் பேசிக்கிறேன்ப்பா.''

''அது அடுத்த பிரச்னை! முதல்ல ஜனனியைப் பற்றி சொல்லு. ஏன் விலகுறே?''

''அது... அது...வந்து...'' வெகுவாய் தயங்கியபடி சுருக்கமாய், அவள் வீட்டில் நடந்த குளறுபடிகளை கூறினான்.

கருணாகரனின் முகம் மாறியது.

''என்னப்பா இது? என்னன்னவோ சொல்றே! அவளுக் கடுத்து உள்ள தம்பி, தங்கைக்கெல்லாம் கல்யாணம் ஆயிடுச்சு. பணமும் போச்சுங்கிறே! இது நம்ம குடும்பத்துக்கு கவுரவப் பிரச்னையில்லையா? அந்தப் பொண்ணோட அம்மாவும், அப்பாவும் இதைத் தடுக்கலியா?''

''சந்தர்ப்பம், சூழ்நிலைகளால் சில விஷயங்கள் கைமீறிப் போயிடுமில்லையா? ஜனனி! பாவம் அவ என்ன செய்வா? என்னையும், கம்பெனியையும், இந்த குடும்பத்தையும் நல்லா பார்த்துப்பா.''

''ஹூம்... உன் மனசுல அந்தப் பொண்ணு ஆழமாப் பதிஞ்சுப்போயிருக்கான்னு புரியுது. ரொம்ப நாள் தள்ளிப் போடாதே கோகுல். உனக்கு ரெண்டு தங்கச்சிங்க இருக்காங்க. அதையும் நினைவிலே வச்சுக்க. எனக்கு என் பொண்ணுங் களோட வாழ்க்கையும் முக்கியமில்லையா?''

"அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம்ப்பா!"

ஜனனி, பம்பரமாய் சுழன்றாள். நிற்க நேரமின்றி உழைத்தாள்.

உதயனுக்கு சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமே வருவதில்லை. காதல் மனைவி வீட்டில் இருக்கும் போது, அவளைவிட்டுப் பிரிய மனசு வருமா? நேரத்துக்கு சாப்பாடு, கொஞ்சறதுக்கு மனைவி. வேறென்ன வேண்டும்?

உதயனும் இந்த வீட்டுப் பாரத்தை சுமக்க ஒரு கை கொடுக்க மாட்டானா என்று ஏங்கினாள், ஜனனி. 'செலவு கொஞ்சம் மிச்சமாகும். சேமிக்கலாம். ஆனால், எங்கே முடிகிறது?'

சென்ற வாரம்கூட ரோசிலினுக்கு கருச்சிதைவு ஆகிவிட்டது என்று இரண்டாயிரத்துக்கு செலவு வைத்தார்கள்.

'அம்மா, அப்பாவாவது உதயனுக்கு எடுத்துச் சொல்லலாமே! நீ இப்போது தனி மனிதனல்ல. பொண்டாட்டி வந்துட்டா. கூடவே பொறுப்பு வரணும்! எவ்வளவு காலத்துக்கு ஜனனியையே எதிர்பார்த்திட்டிருக்க முடியும்? அவளுக்கும் கல்யாணம் ஆகவேண்டாமா? எல்லாவற்றுக்கும் அவள் கையையே எதிர்பார்க்கலாமா? சீக்கிரம் ஒரு வேலையைத் தேடிக் கொள்' என்று! நான் சொன்னால் அது சரிவராது. 'சம்பாதிக்கிற திமிரில் பேசுகிறாயா?' என்பான்.

கோப்புகளை அடுக்கி வைத்துவிட்டு கிளம்பத் தயாரானாள், ஜனனி.

'கோகுலைப் பார்த்து எவ்வளவு நாளாகிவிட்டது? தொலைபேசியில் கூட சரிவர பேசிக் கொள்ள முடியவில்லை. அவ்வளவு வேலைப்பளு! கோகுல்... எனக்கு உங்களைப்



பார்க்க வேண்டும் போலிருக்கு... மனசு தவிக்கிறது' என்றெண்ணியபடியே வாசலுக்கு வந்தவள், நம்ப முடியாமல் விழிகளை விரித்தாள்.

'பைக்'கில் ஒரு காலைத் தரையில் ஊன்றியபடி ஈர்க்கும் புன்னகையுடன் அமர்ந்திருந்தான், கோகுல்.

"கோ...கு...ல்... நீங்க எங்கே இங்கே?"

"உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சே? தவிச்சுப் போயிட்டேன். உடனே பார்க்கணும் போலிருந்துச்சு... பறந்து வந்துட்டேன். வண்டியிலே ஏறு! ரொம்ப இளைச்சிட்டே ஜனனி... ஏன் அதிகம் கஷ்டப்படுறியாடா?" என்றான்.

வண்டியில் ஏறினாள்.

அவன் முதுகில் முகத்தைப் பதித்து பெருமூச்செறிந்தாள்.

"இப்ப... ரொம்ப சந்தோஷமா இருக்கேன் கோகுல். மனசுல நினைக்கிறதை உணர்ந்து ஓடிவர்ற என் கோகுல் இருக்கிறப்ப... எனக்கு எதுவுமே கஷ்டமில்லே!" என்றவள், அவன் மீது முகத்தை இன்னும் அழுத்திக் கொண்டாள்.




கடற்கரையில் கூட்டம் அதிகமிருந்தது. உடை நனைவதைப் பற்றிக் கவலைப்படாமல், ஆண்களுக்கு ஈடாக பெண்களும் அலைகளின் மோதல்களை எதிர்கொண்டனர்.

உதயனின் கையை இறுகப் பற்றியிருந்த ரோசிலின், குழந்தையைப் போல் ஆவலும் ஆசையுமாய் கணவனிடம் கேட்டாள்.

''ஏங்க... நானும் கடல் தண்ணியில் கால் நனைக்கட்டுமா?''

''ஊகூம்... வேண்டாம். உனக்கு கடல் காற்றே ஒத்துக்காது. ரொம்ப ஆசைப்பட்டுக் கேட்டியேன்னுதான் அழைச்சிட்டு வந்தேன்?''

''பிளீஸ்... ஒண்ணும் ஆகாது.''

''சொன்னாக் கேளு! நம்ம கெட்ட நேரம், காய்ச்சல் ஏதாவது வந்து அதிகமாயிடுச்சின்னா, டாக்டர்கிட்டே போறதுக்குக் கூட அந்த மகாராணி கையைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கு. தேவையா?''

''ஆமாங்க... உங்கக்கா என்கிட்டேகூட சிரிச்சு பேச மாட்டேங்கிறாங்க. ஊர்லே யாரும் சம்பாதிக்காததையா இவங்க சம்பாதிச்சிட்டாங்க? நான் எவ்வளவு வசதியான வீட்டைச் சேர்ந்தவ? எப்படி வளர்ந்தவ? சமையலறை பக்கமே எட்டிக்கூடப் பார்த்ததில்லே. அவங்க என்ன சொல்லுறாங்க தெரியுமா? 'ஏம்மா, நான்தான் வர தாமதமாகுதே! சோறாவது பொங்கி வச்சிருக்கலாமே! நான் வந்து மீதியை செஞ்சுப்பே னேங்கிறாங்க!' எனக்கு என்னங்க தெரியும்?''

''அவ பணத்தை வீண் பண்ணிட்டேனில்லே? அந்தக் கோபம். அதை என்கிட்ட காட்டப் பயந்து, உன்கிட்டே காட்டுறா!''

''ஏங்க, சொல்லுறேனேன்னு தப்பா நினைக்காதீங்க. நீங்க... ஏதாவது ஒரு வேலையை...''

''...''

''வேலை கிடைச்சப் பிறகும் அதே வீட்டுலேதான் இருப்பீங்களா?''



''ஏன்... உனக்குப் பிடிக்கலையா?''

''என்னங்க வீடு அது? புதுசா கல்யாணமான சின்னஞ் சிறுசுங்க நாம! டஞ்சன் மாதிரி ஒரு சின்ன அறை. ஆனா, உங்கம்மா, அப்பா அறை கொஞ்சம் பெரிசு. போதாதுக்கு விவஸ்தையே இல்லாம ஹால்ல வந்து கொஞ்சி சிரிச்சுக்கிட்டு... வயசுதான் ஆகிடுச்சில்லே? கோவில் குளம்னு போறதை விட்டுட்டு, உங்கம்மா மடியிலே தலைசாய்ச்சு படுத்துக்கிட்டு டி.வி. பார்க்கிறார், உங்கப்பா! எனக்கும் இந்த மாதிரி காற்றோட்டமான இடத்திலே உங்களோடு கொஞ்சணும், குலாவணும்னு ஆசை இருக்காதா?''

''ஏய்... உன் மனசுல இவ்வளவு ஆசை இருக்கா?'' கண்களை விரித்து ஆச்சரியமாய்க் கேட்டான்.

''இதுமட்டுமில்லே. இன்னும் நிறைய இருக்கு. நாம ரெண்டு பேரும் ஒண்ணா குளிக்கணும்.''

''அட்ரா சக்கை! நினைக்கும் போதே வாயில் எச்சில் ஊறுதே!''

''என் புருஷனுக்கு நான்தான் ஊட்டிவிடணும்!''

''தாங்க முடியலே ரோசி! உடனே ஏதாவதொரு வேலையைத் தேடிக்கிட்டு தனியாப் போயிடலாம். சரி... உனக்குத்தான் சமைக்கத் தெரியாதே?''

''என் கணவனுக்கு மட்டும்தான் நான் வேலைக்காரி. உங்களுக்காக எப்படியாவது சமைக்கக் கத்துக்க மாட்டேனா?''

''என் செல்லத்துக்குத்தான் என்மேல எவ்வளவு பாசம்?'' இடுப்பில் கைபோட்டு தன்னோடு சேர்த்து நெருக்கினான்.

''ஏங்க...''

''சொல்லுடா!''

''நான் ஒண்ணு சொன்னா, தப்பா நினைக்க மாட்டீங்களே!''

''சேச்சே... நானா? என் ரோசியையா? இல்லை...சொல்லு!''

''போன வாரம் கோவிலுக்குப் போயிருந்தேனே...''

''ஆமாம்!''

''அங்கே என் அம்மாவைப் பார்த்தேன்!''

''...''

''என்னைப் பார்த்ததும் அழ... ஆரம்பிச்சிட்டாங்க. இப்ப நம்ம மேலே அவங்களுக்கு எந்த கோபமும் இல்லே. அப்பாதான் கொஞ்ச நாளாகப் படுக்கையிலே இருந்திருக்கிறார். நீயும் உன் புருஷனும் ஒருநாள் வீட்டுக்கு வந்து, மன்னிப்புக் கேளுங்க. எல்லாம் சரியாப் போயிடும்னு அம்மா சொன்னாங்க!''

''...''

''அப்பாவுக்கு நிறையப் பேரைத் தெரியும். அவரே உங்களுக்கு நல்ல வேலையை வாங்கித் தருவார். நான் வற்புறுத்தலே. எல்லாமே உங்க விருப்பம்!''

''இப்ப... இந்தப் பேச்சு வேணாமே ரோசி... நேரமாச்சு... வீட்டுக்குப் போகலாமா?''

''என்னங்க... என்மேல கோபமா?''

''அதெல்லாமில்லே... நீ சொன்னதும் யோசிக்க வேண்டிய விஷயம்தான்... இப்ப என்னைக் கொஞ்சம் சுதந்திரமா விடு ரோசி!''



''சரிங்க'' என்றாள், பாதிக் கிணறு தாண்டிவிட்ட மகிழ்ச்சியுடன்.

''ஏய்... என்ன ஆச்சரியம். நான் இங்கே உன்னை எதிர்பார்க்கவே இல்லே ஷோபா!''

அலுவலகத்தில் அவன் எதிரில் அமர்ந்து இதழ்களில் நெளியும் புன்னகையுடன் அவனையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தாள், ஷோபா.

தோள் வரை புரண்ட, சாயத்தில் நிறம் மாறியிருந்த கூந்தல், செதுக்கப்பட்ட புருவங்களின் கீழே வசீகரிக்கும் கண்கள். காதில் சின்னதாய் முத்து கம்மல்.

கழுத்தும், நெற்றியும் வெறிச்சென்றிருந்தன. எளிமையான, கவர்ச்சியான உடையும், அவளின் பளீர் நிறமும் வடநாட்டுப் பெண்ணின் தோற்றத்தை தந்தன.

கோகுல், அவளைப் பார்த்து அசந்து போனான்.

''எப்படி இருக்கே கோகுல்?''

''ம்... நீ எப்படி இருக்கே?''

''இருக்கேன்.''

''என்ன ஒரேயடியா ஆளே மாறிட்டே? மாடலிங் பெண் மாதிரி இருக்கே!''

''நன்றி.''

''நாலஞ்சு ஆண்டு இருக்குமில்லே உன்னைப் பார்த்து?''

''இருக்கலாம். ஆனா, நான் உன்னை அடிக்கடி பார்ப்பேன்!''

''எங்கே?''

''உடற்பயிற்சி செய்ய வருவேயில்லே? நானும் அந்த வழியா அப்பப்ப வர்றதுண்டு.''

''ஓ...''

''நீ ரொம்ப அழகா இருக்கே கோகுல்.''

''நன்றி... என்ன சாப்பிடுறே? சூடாகவா? குளிர்ச்சியாகவா?''

''நன்றி... நான் வெளியிலே சாப்பிடுறதில்லே!''

''ரொம்பவே மாறிட்டே!''

''கோகுல்...''

''சொல்லு!''

''என்னை நல்லாப் பாரு!''

''....''

''என்கிட்ட என்ன குறைச்சல்?''

''ஐயோ... என்ன ஷோபா... நான் எப்ப உன்னை அப்படி சொன்னேன்?''

''பின்னே எதுக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்க மறுக்கிறே?''

''ஷோபா... நீ என்னைத் தப்பா புரிஞ்சிட்டிருக்கே. உன் கிட்டே இருக்கிற அழகுக்கும், பணத்துக்கும் என்னைவிட நூறுமடங்கு தகுதியுள்ள ஆண்தான் உனக்கு கணவனா வரணும்!''

''ஆனா, நான் உன்னை விரும்புகிறேன் கோகுல்!''

''...''



''தெரியும்... ஜனனிங்கிற பொண்ணைக் காதலிக்கிறே... அதனாலதானே என்னை வேண்டாங்கிறே?''

''ஷோ...பா...''

''ஆனா, என்னால உன்னை மறக்க முடியாது, கோகுல். நீ எனக்கு வேணும். ஜனனியை நீ மறந்துடு...''

''ஷோபா... என்ன பேசுறே நீ?''

''என்ன பேசுறேனா? நான் பைத்தியக்காரி. ஆமாம்... உன் மேலே பைத்தியமா இருக்கிறேன், கோகுல். ஜனனி என்னைவிட எதிலே உசத்தி? விசாரிச்சேன். அவளோட குடும்பக் கதை மகாமட்டமா இருக்கு. அவளைப் போய் எப்படி தேர்வு பண்ணினே கோகுல்? நான் உன் முறைப்பொண்ணு... என்கிட்டே என்ன இல்லேன்னு ஜனனியை காதலிச்சே?''

''வாயை மூடு! படிச்சப் பொண்ணு மாதிரியா நீ பேசுறே?''

''படிப்புக்கும் காதலுக்கும் சம்பந்தமில்லே. நினைவு தெரிஞ்சநாள் முதலா உன்னைத்தான் நினைச்சிட்டிருக்கேன். என்னைப் பாரு! இந்த அழகுக்கு எத்தனை பேர் போட்டிப் போட்டிருப்பாங்க! என் மனசு அசையலியே! ஆனா, நீ?''

''நான் உன்னை எப்பவும் அந்த மாதிரி நினைச்சதே இல்லே ஷோபா. ஜனனியும் நானும் நாலு ஆண்டா காதலிக்கிறோம். உயிருக்குயிரா நேசிக்கிறோம். அவளுக்கு வீட்டில் பொறுப்பான உறவுகள் அமையலேங்கிறதுக்காக, அவளைத் தப்பு சொல்ல முடியுமா? இப்போது உன் தகுதி வேறு! என் தகுதி வேறு! நான் ரொம்ப கீழே இருக்கிறேன். ஆனா, அதையெல்லாம் நீ பொருட்படுத்தாமல் என்னை நேசிக்கிறே! உண்மையான நேசத்துக்குப் பணம் அழகெல்லாம் ஒரு தடையே இல்லேன்னு ஒத்துக்கிறேயில்லே? அதேமாதிரிதான்

ஜனனி மேலே நான் வச்சிருக்கிற அன்பும். அதைப் புரிஞ்சுக்க... பிளீஸ்...''

''இல்ல கோகுல்! உன் மேலே நான் ரொம்ப அதிகமா பாசம் வச்சிட்டதாலதான் இப்படியெல்லாம் பேசிட்டேன். இது வரைக்கும் நான் கேட்டதெல்லாம் கிடைச்சது. நீயும் எனக்கு கிடைப்பேன்னு நம்பினேன். ஆனாலும் எனக்குள்ளே ஒரு குரல் ஒலிச்சுக்கிட்டே இருக்கு. 'கோகுல் உனக்குத்தான் உனக்குத் தான்னு' சொல்லிக்கிட்டே இருக்கு. எல்லாக் காதலும் கல்யாணத்துல முடிஞ்சிடுறதில்லே. எந்த நேரத்திலேயும், எது வேணாலும் நடக்கலாமில்லையா?''

முட்டாளாய் அவள் பேசுவதைக் கேட்டு அவனுக்கு எரிச்சல்தான் ஏற்பட்டது.

''உனக்கு சீக்கிரமே, எல்லா வகையிலும் பொருத்தமான மாப்பிள்ளையோடு கல்யாணம் நடக்கும். நானும் வந்து வாழ்த்துவேன். வாழ்த்துக்கள்'' என்றான்.

கோபத்துடன் அவனை முறைத்துவிட்டு அறையைவிட்டு வெளியேறினாள், ஷோபா.

''உஸ்'' என்று பெருமூச்சுவிட்டான், கோகுல்.




நேரம் கடந்தது! பேருந்து நிறுத்தத்தில் திருவிழா போல் கூட்டம் அதிகரித்துக் கொண்டே போனது. அவள் போக வேண்டிய பேருந்து வராமலில்லை. வந்தது. எந்நேரமும் கவிழ்ந்து விடுமோ என்றெண்ணும் அளவுக்கு மனித மூட்டைகளை சுமந்துகொண்டு! கூட்டத்தைப் பார்த்து சில பேருந்துகள் நிற்காமலே சென்றன.



''எப்போது வீட்டுக்குச் சென்று, சமைத்து,சாப்பிட்டு, உறங்கி? நேரமாகிவிட்டதே!''

இவளைப் போலவே பலரும் தவித்து, முணுமுணுத்து, வேறு வழியின்றி ஆட்டோவில் செல்லத் தொடங்கினார்கள்.

ஜனனி, ஆட்டோவில் செல்வதானால் நூறு ருபாய் ஆகும். இதுவே பழைய ஜனனியாய் இருந்தால் எதைப்பற்றியும் யோசிக்காமல், ஆட்டோவில் பயணித்திருப்பாள். ஆனால், இன்று? குருவி போல் சிறுகச் சிறுக சேமித்துக் கொண்டிருப் பவள்.

இங்கிருந்து பதினைந்து நிமிட நடையில் பேருந்து நிலையம் இருக்கிறது. அங்கே சென்றுவிட்டால் உட்கார்ந்தே போகலாம்.

அதற்குமேல் அரை நிமிடமும் தாமதிக்காமல் நடக்க எத்தனித்தாள்.

வீடு போய்ச் சேர்ந்தபோது ரொம்பவே தாமதமாகிவிட்டது.

இவளுக்காக வீட்டில் உள்ளும் வெளியிலுமாக நடை போட்டுக் காத்திருந்தான் உதயன்.

இவளைப் பார்த்ததும் எரிச்சலுடன் வந்தான்.

''எங்கே போயிட்டே?''

''என்ன கேள்வி இது?''

''ஆபீசுக்கு போன் பண்ணினா, அஞ்சரை மணிக்கே கிளம்பிவிட்டதா சொன்னாங்க. மணி இப்ப, ஒன்பது! ஏன் இவ்வளவு நேரம்?''

பதில் சொல்ல விரும்பாமல் அவனையே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன ஜனனி? நான் பாட்டுக்கு கேட்டுக்கிட்டே இருக்கிறேன்!''

''எதுக்காக இத்தனை கேள்வி?''

''அப்பாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறோம்.''

துணுக்குற்றாள் ஜனனி.

''ஏன்... என்னாச்சு?''

''காலையிலேருந்தே வயிறு வலிக்குதுன்னு சொல்லிக்கிட்டே இருந்தார். சாயங்காலம் அதிகமாயிட்டு. வலி தாங்காம மயங்கி விழுந்துட்டார்.''

''கடவுளே! அப்புறம்?''

''உடனே ஆஸ்பத்திரியில் சேர்த்துட்டு உனக்கு போன் பண்ணினேன். நீ கிடைக்கவேயில்லை. எங்கே போயிட்டே?''

''அது ரொம்ப முக்கியம் இப்ப? அப்பா இருக்கிறது எந்த ஆஸ்பத்திரி?''

கேட்டுத் தெரிந்துவிட்டு, அடுத்த நொடியே வாசலை நோக்கி ஓடினாள்.

**பூ**பாலனின் வயிற்றில் கட்டி! பெரிதாய் வளர்ந்து உயிருக்கே சவால் விட்டுக் கொண்டிருந்தது. உடனடியாக அறுவை செய்து அகற்ற வேண்டும். குறைந்தது முப்பதாயிரமாவது தேவை.

பரிமளம் அழுவதை நிறுத்தவேயில்லை.

''ஜனனி... உங்கப்பாவை எப்படியாவது காப்பாத்தி என்கிட்டே ஒப்படைச்சிடும்மா. அவரில்லாம நான் உயிரோடு இருக்க மாட்டேன். காப்பாத்திக் கொடும்மா!''



''அம்மா... அழாதேம்மா... இப்ப என்னாகிப் போச்சு? அழாதே... மத்த நோயாளிகளுக்குத் தொந்தரவா இருக்கும். பிளீஸ்ம்மா...''

''உடனடியா ஆபரேஷன் பண்ணியாகணுமாமே! இத்தனை நாளும் 'சாப்பிட்டதும் வயிறு வலிக்குது பரிமளம்'னு சொல்வார். அது இவ்வளவு பெரிய ஆபத்தா இருக்கும்னு நினைச்சு பார்க்கலியே... வயசான காலத்துல இந்த அவதி வேறா? கடவுளே...''

''அம்மா... அழுறதை கொஞ்சம் நிறுத்திட்டு நான் சொல்லுறதை கவனிம்மா!''

முந்தானையால் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டு கேட்டாள், அம்மா. ''என்ன சொல்லு?''

''இந்த ஆஸ்பத்திரியில் ஏம்மா அப்பாவை சேர்த்தீங்க?''

''அவசரத்துக்கு என்ன பண்ண முடியும்?''

''இந்த ஆஸ்பத்திரியைப் பற்றி வெளியிலே நல்ல அபிப்ராயம் இல்லை. ஏகப்பட்ட பணம் பறிப்பாங்களாம்.''

''அதுக்காக!'' பரிமளத்தின் முகம் மாறியது.

''இல்லேம்மா... அப்பாவை அரசாங்க ஆஸ்பத்திரியில் சேர்த்திட்டா என்னம்மா?''

''எ... என்ன சொன்னே? என் புருஷனை தர்ம ஆஸ்பத்திரியிலே சேர்க்கப் போறியா?''

''அம்மா... என்ன நீ... நான் சொல்லுறதை தப்பா...''

''நிறுத்துடி! அவரை என்ன அநாதைன்னு நினைச்சியா? உங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்க நாங்க எவ்வளவு

கஷ்டப்பட்டிருப்போம்? சின்ன வயசுல உனக்கு நோய் நொடின்னு வந்தப்ப, எந்த தர்ம ஆஸ்பத்திரிக்கும் தூக்கிட்டுப் போகலேடி. நான் வளர்ந்த வளர்ப்பென்ன? என் புருஷனைப் போய்... சே...''

''ஏம்மா அவசரப்படுறே? நான் சொல்லுறதை புரிஞ்சுக்கவே மாட்டியா? முப்பதாயிரம் செலவாகும்னு சொல்லுறாங்க. ஆனா, மருந்து, மாத்திரைன்னு நாப்பதுக்கு மேலே போகும் நம்மகிட்டே ஏது அவ்வளவு பணம்?''

''....''

''தவிர, நீ நினைக்கிற மாதிரி அரசு ஆஸ்பத்திரி ஒண்ணும் அவ்வளவு மட்டம் கிடையாது. எந்த ஆஸ்பத்திரியிலேயும் இல்லாத பல கருவிகள் அங்கேதானம்மா இருக்கு. இங்கே ஒரு ஸ்கேன் எடுக்கிறதுக்கு கொடுக்கிற பணத்தில் பத்துல ஒரு பங்குதானம்மா அங்கே வாங்குவாங்க. நமக்கு உயிரும் முக்கியம். பணமும் முக்கியம். இதுலே எங்கே வந்தது கவுரவக் குறைச்சல்.''

''புரியுதுடி... உன் பணத்தை துபாய் போறதுக்காக உதயனுக்குக் கொடுத்ததுக்கு இப்ப பழிவாங்குறே... அப்படித்தானே? என்னை வெள்ளைச் சேலை கட்டி பார்க்கணும்னு ஆசைப் படுறே! நிறைவேத்துறேன்ம்மா... உன்னைப் பெத்து வளர்த்து ஆளாக்கினதுக்கு இந்த ஆசையைக்கூட நிறைவேத்தலேன்னா, அப்புறம் நான் என்னடி அம்மா?''

விசும்பி அழுதாள், பரிமளம்.

அவளைப் பொறுத்தவரை சிகிச்சைக்கு நிறைய செலவு பண்ண வேண்டும். சொந்தக்காரர்களிடம் பெருமையளக்க வேண்டும்.



ஆனால், பாவம் ஜனனி, பணத்துக்கு என்ன பண்ணுவாள்? விடுமுறை நாட்களில்கூட ஓய்வெடுக்காமல் அவள் சேர்த்தப் பணம் இதற்கே சரியாய் போய்விடும் போலிருக்கிறதே!'

''அம்மா... ஏம்மா இப்படியெல்லாம் பேசுறே?''

''விட்டுடு... அவர் ஆயுசு அவ்வளவுதான்னு மனசைத் தேத்திக்கிறேன். நாப்பத்தெட்டு வயசுலேயே விதவையாகணும்னு என் தலையிலே எழுதியிருந்தா... பாவம் நீ என்ன பண்ணுவே?''

''கடவுளே...'' இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டாள், ஜனனி.

வேறு வழியின்றி, அதே மருத்துவமனையில் பூபாலனுக்கு ஆபரேஷன் நடந்தது.

ஜனனியின் எட்டுமாத உழைப்பு, சேமிப்பு ஒரே நாளில் கரைந்தோடியது.

ஜனனிக்கு உறக்கம் வரவில்லை. உண்ணப் பிடிக்கவில்லை.

'கோகுலுக்கு கொடுத்த ஓராண்டு கெடு முடிய இன்னும் நான்கு மாதங்களே இருக்க... பணத்திற்கு என்ன பண்ணப் போகிறேன்? கடவுளே... என்னை கைவிட்டுவிடாதே! என்னை எப்படியாவது கோகுலோடு சேர்த்து வை.'

மனதுக்குள் கெஞ்சினாள்.

தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

அப்பா குணமடைந்தார். வீட்டுக்கு அழைத்து வந்து விட்டாள். உதயன் எந்நேரமும் ரோசியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு அலைவதே வேலையாகிப்போக... ஜனனியின் பொறுமை காற்றில் பறந்தது.

அம்மாவோ, அப்பாவோ அவனைக் கேட்பதாய் தெரியவில்லை.

அதனால் அவளே கேட்டுவிட்டாள்.

''உதயன்... நீ எப்பதான் ஒரு வேலையைத் தேடிக்கப் போறே? உனக்குன்னு மனைவி வந்தாச்சு. நாளைக்கு குழந்தை குட்டின்னு குடும்பம் பெருகும். இப்படியே ஜாலியா பொழுதை ஓட்டிக்கிட்டிருந்தா எப்படி பொறுப்பு வரும்?''

உதயன் இதை எதிர்பார்க்கவில்லை. அவன் வாயைத் திறந்து பதில் சொல்லத் தொடங்குமுன் ரோசிலினிடமிருந்து பதில் வந்தது.

''ஆக... எங்களை தண்டச்சோறுங்கிறீங்க?''

''ஐயோ... என்ன ரோசிலின்... நான் எப்ப அப்படி பேசினேன்?''

''நேரடியாப் பேசினாத்தானா? நான் எப்படிப்பட்ட குடும்பத்திலேருந்து வந்தவ தெரியுமா? எங்க வீட்டுக் குளியலறை அளவுதான் இந்த வீட்டு அறை. எல்லாத்தையும் நான் இவருக்காகத்தான் சகிச்சுக்கிட்டேன்!'' என்றாள், முகம் சிவக்க.

''நான் இப்ப என்ன சொல்லிவிட்டேன்? உதயன், நீயே சொல்லு... நான் எதுவும் தப்பா பேசினேனா?''

''புதுசாவா பேசுறே? சம்பாதிக்கிற திமிர்... என் பொண்டாட்டி எதிரேயே என்னை மட்டமாப் பேசுறே?''

''...''

''இங்கே பாருங்க! நிஜமாகவே நீங்க மானம் ரோஷம் உள்ளவர்னா, என் பின்னே வாங்க! எங்கம்மா வீட்டுக்குப்



1 6 ஜூ

போகலாம். எங்கப்பா வாங்கித் தர்ற வேலையை வச்சுக்கிட்டு நிம்மதியா இருப்போம். என்னால் இனிமேல் இங்கே இடிசோறு சாப்பிட முடியாது'' ரோசிலின் வெளியேற, அவள் பின்னேயே உதயனும் செல்ல...

ஜனனி திகைத்தாள்.

''உதயன், ரோசிலின் நில்லுங்க...போகாதீங்க... நான் சொல்லுறதை...''

அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் போய் விட்டனர்.

பரிமளம் அதிர்ச்சியில் ஸ்தம்பித்தாள்.

மகளைக் கண்ணீரோடு ஏறிட்டாள். அதில் 'என் பிள்ளையை என்கிட்டேருந்து பிரிச்சிட்டியே?' என்ற கேள்வி இருந்தது.

CPL 592730

15

ஞாயிற்றுக்கிழமை!

ஜனனி, வீட்டுக்குத் திரும்புகையில் மழை பிடித்துக் கொண்டது. திடீர் மழை. கையில் குடையில்லை. அவசரத்துக்கு ஒதுங்கி நின்றாள்.

பக்கத்திலிருந்த பெண்மணி இவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஏம்மா... நீ பரிமளத்தோட பொண்ணுதானே?''

''ஆமாம்... நீங்க யாரு?'' என்றாள் ஆச்சரியமாக.

''என்னை உனக்குத் தெரியாது. தூரத்து சொந்தக்காரிதான். சமீபத்திலேகூட உங்கப்பாவுக்கு ஏதோ ஆபரேஷன் நடந்ததாக கேள்விப்பட்டேன். இப்ப எப்படி இருக்கிறார்?''

''ம்... நல்லா இருக்கார்!''

''எங்கே... கோவிலுக்குப் போயிட்டு வர்றியா?''

''இல்லே... ஆபீசுக்குப் போயிட்டு...''

''ஆபீசுக்கா... இன்னைக்குக் கூடவா?'' அவள் பார்வையில் நம்பிக்கையில்லை.

''ஆமாங்க... சனி, ஞாயிறு இன்னொரு கம்பெனியிலே வேலை செய்றேன்!''

''அடடா'' என்று பரிதாபமாய்ப் பார்த்தாள்.

''நான் கேட்கிறேன்னு தப்பா நினைக்காதே! பார்க்க லட்சணமா அழகா இருக்கிறே. கைநிறைய சம்பாதிக்கிறே. ஆம்பளை மாதிரி குடும்பத்தையே கட்டிக் காப்பாத்துறே. நல்ல குணமுள்ள பொண்ணா இருக்கிறே. அப்புறம் ஏம்மா, கல்யாணமே வேண்டாம்னு பிடிவாதமா இருக்கிறே?''

''எ... என்னது? கல்யாணமே வேண்டாம்னு பிடிவாதமா இருக்கிறேனா?'' திகைப்புடன் கேட்டாள்.

''ஆமாம்... உனக்கடுத்த தம்பிக்கும், தங்கைக்கும் கூட கல்யாணம் ஆயிடுச்சில்லே!''

''உங்களுக்கு யார் சொன்னது?''

''உங்கம்மாதான்! பெத்தவங்க மனசை ஏம்மா புண் படுத்தறே? இந்த வயசுல துணையோட அவசியம் புரியாது. வயசான காலத்துலதான் தெரியும் உனக்கு!''

''எப்படி கலகலன்னு இருந்த வீடு? வெறிச்சோடிப் போய் கிடக்கு? ஒரு ஆம்பிளைப் பிள்ளை எவ்வளவுப் பேச்சைதான் தாங்கிப்பான்? அதுவும் அவன் பொண்டாட்டி எதிரேயே



திட்டினா... அவனுக்கு அசிங்கமா இருக்காதா? என் பிள்ளையை வீட்டை விட்டே விரட்டிட்டா... இந்தாங்க குடியுங்க!'' காபியை பதமாய் ஆற்றி கணவரிடம் நீட்டினாள்.

''சுஜாதாவைப் பார்த்து ரொம்ப நாளாயிடுச்சு, பரிமளம். ஆஸ்பத்திரியில் கூட என்னை வந்து பார்க்கலே. அவளைப் பார்க்கணும் போலிருக்கு!''

''எப்படிங்க வருவா? நல்லதோ, கெட்டதோ அவளா ஒரு வாழ்க்கையைத் தேடிக்கிட்டா. வசதியான குடும்பத்திலே போய் சேர்ந்திட்டா. முழுகாம இருக்கிற பொண்ணுக்கு வளைகாப்பு நடத்துறது சம்பிரதாயம்தானே? 'மண்டபம் எடுத்து நல்லா பண்ணுங்க. அப்பதான் புகுந்த வீட்டுலே எனக்கு மரியாதை'ன்னு அவ சொன்னதுக்கு இவ எப்படிப் பேசினா?

''வீட்டுலே வச்சு நடத்தக்கூட இப்ப வழியில்லே... நீ மண்டபத்துல வைக்க சொல்றியான்னு? கிண்டலாக் கேட்டாளே! அதோடு போனவதான் நம்ம சுஜாதா. இனி புகுந்த வீடுதான். என் பொறந்த வீடுன்னு முடிச்சிட்டா. வளைகாப்புக்கூட நம்மை கூப்பிடலே. ஜனனி ஏன்தான் இப்படி நாக்கிலே நெருப்பை வச்சுக்கிட்டு எல்லாரையும் சுட்டுப் பொசுக்கிக்கிட்டு இருக்காளோ?''

வீட்டுக்குள் நுழைந்த ஜனனியின் காதில், உள்ளே நடந்த உரையாடல்கள் அட்சர சுத்தமாய் விழுந்தன.

கண்களில் துளிர்த்த கண்ணீர், கன்னத்தில் கோடு போட்டு, உடையில் விழுந்து கலந்தன.

'என்னைப் பற்றிய இவர்கள் அபிப்ராயம் இப்படிப்பட்டது தானா? நான் என்ன மாடா? எந்திரமாக உழைப்பது மட்டும் தான் என் வேலையா? வருமானத்தை மீறிய செலவென்றால்

நான் எங்கே போவேன்? என்னைப் பற்றி நினைத்தே பார்க்க மாட்டார்களா? கண்களைத் துடைத்துக் கொண்டவள் ஒரு தீர்மானத்துடன் உள்ளே போனாள்.

''அடடே... ஜனனி வந்துட்டியாம்மா? வரும்போது ஏதாவது வாங்கிட்டு வரச்சொன்னேனே?'' அம்மா கேட்டாள்.

''அதிருக்கட்டும்... நான் உங்கக்கிட்டே பேசணும்!''

''என்ன ஜனனி? முதல்ல துணியை மாத்திட்டு வா!''

''முதல்ல பேசணும்!''

''என்னடியம்மா?'' என்றாள், வித்தியாசம் உணர்ந்தவளாய், பரிமளம்.

''நான் என்றைக்காவது உன்கிட்டே எனக்கு கல்யாணமே வேண்டாம்னு சொல்லி இருக்கேனா?''

''இ... இல்லையே!''

''அப்புறம் எப்படியம்மா நான் சொன்னதா நீயே சொன்னே?''

''என்ன நீ... என்கிட்டே கேள்வி கேக்கிறே? எல்லாம் என் நேரம்டி?''

''இப்ப எதுக்காக உங்கம்மாவை அழவைக்கிறே? என்னாச்சு உனக்கு?'' என்றார் பூபாலன்.

'அன்பைத் தர்றவங்களா இருந்தா, பதிலைத் தந்திருப் பாங்க.இனி இவர்களுக்கா என் நேரத்தை மட்டுமல்ல, வாழ்க்கையையும் வீண் பண்ணுறதில் அர்த்தமில்லை' - நினைத்தவள்...



''அம்மா... அம்மா... உன்னைத்தான்!'' அழுத்தமாக அழைத்தாள்.

கண்களை சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

''என்ன?''

''உன்னிடம் ஒரு பைல் கொடுத்து வச்சிருந்தேனே... அதை எடுத்துக் கொடு!''

''எந்த பைல்?''

''அதான்... உன்பேர்ல தாம்பரத்திலே ஒரு நிலம் வாங்கி இருந்தேனே... அந்த பத்திரம் இருக்கிற பைல்.''

''அ... அது.. இப்ப?''

''என்னம்மா சொல்லுறே?'' ஜனனிக்கு நடுங்கிற்று.

''வீட்டு செலவுக்கு பணம் போதலேன்னு அ... அந்த நிலத்தை எப்போதோ வித்துட்டேனே!''

''ஐய்யோ... என்ன சொல்லுறே நீ?'' அலறிவிட்டாள்.

''ஏன்டி... உயிர் போகிற மாதிரி அலறுரே? முப்பதாயிரத் துக்கு அதை வித்து ஒன்னரை ஆண்டாகுது.''

''முப்பதாயிரத்துக்கா? போச்சு... எல்லாம் போச்சு... என்னை வாழவே விடமாட்டீங்களா? யாரைக் கேட்டு இப்படியொரு காரியத்தைப் பண்ணினீங்க? என் தலையிலே மண்ணள்ளிப் போட்டுட்டீங்களே!''

''என்னங்க... பார்த்துக்கிட்டுதானே இருக்கீங்க? என்ன பேசுறா பாருங்க? அந்த நிலம் என்பேர்ல வாங்கினது. வாங்குறப்ப பணம் குறைஞ்சதுன்னு என் கழுத்துச் செயினை

அடகு வச்சு பணம் கொடுத்தேன். அது என் நிலம்... வித்துத் தின்ன எனக்கு உரிமையில்லையா?''

''ஜனனி... என்ன நீ? கொஞ்சம்கூட மட்டுமரியாதை இல்லாமப் பேசுறே? அவ உங்கம்மா... அதை ஞாபகம் வச்சுக்க!'' அப்பா சொன்னார்.

''இருக்குப்பா... அந்த ஞாபகம் இருக்கிறதாலதான் முப்பது வயசு வரைக்கும் கல்யாணம் ஆகாம உழைச்சி... உழைச்சி உங்ககிட்டே கொட்டினேன். ஆனா, எனக்கு கிடைத்த தெல்லாம் வெறும் ஏமாற்றம் மட்டும்தானே? என்னை ஒரு பணம் காய்ச்சி எந்திரமா மட்டும்தானே பார்த்தீங்க? வாங்குகிற சம்பளத்தை விடவும் பெரிசா பட்ஜெட் போட்டு, எப்பவும் கழுதை மாதிரிதானே சுமக்க வச்சீங்க?

''நீங்களாக என்னைப் பற்றி எனக்குச் செய்ய வேண்டிய கடமைப் பற்றி சிந்திப்பீங்கன்னு நினைச்சேன். ஆனா, நான் உங்கப் பொண்ணுங்கிறதையே நீங்க மறந்துட்டீங்களே!

''அநாவசியமான செலவுகளால அநியாயமா என் வாழ்க்கையையே சிதறடிக்கிறீங்களே... ஏம்ப்பா... நானும் நீங்க பெத்த பொண்ணுதானே? எனக்கு நிம்மதியைக் கொடுன்னு கடவுள்கிட்டே வேண்டிக்கலாம். ஆனா, பசிக்குது... பால் கொடுன்னு எந்த குழந்தையும் தாய்கிட்டே கேட்காது. அதோட அழுகையைப் புரிஞ்சுக்கிட்டு தாய்தான் பசியைப் போக்கணும்'' என்றாள், கண்ணீர் வழிய, கரைபுரண்ட ஆத்திரத்துடன்.

''உன்னை ஒரு ஆண்பிள்ளை போலதான் நினைச்சு வளர்த்தோம். நாங்க நல்லா இருந்தப்ப மூணு பிள்ளை களையும் பெத்து, வளர்த்து, படிக்க வச்சு கட்டிக் காப்பாத்தலே? தளர்ந்து போன காலத்திலே எங்களைக் காப்பாத்த வேண்டிய கடமை உனக்கில்லையா?''



''இல்லைன்னு சொல்லலியே! கைவிட்டுடுவேனா, என்ன? ஆனா, ஆரம்பத்திலேருந்தே உதயனுக்கும், சுஜாதாவுக்கும் கொடுத்த முக்கியத்துவத்தை, கரிசனத்தை என்னிடம் காட்டினதில்லையே! ஓரடி முன்னேறினா... பத்தடி பின்னுக்குத் தள்ளி விடுறீங்க? அப்பா பென்ஷன் பணமே நம்ம குடும்பத்துக்குப் போதும். ஆனா, உங்களோட தேவையில்லாத ஆடம்பரம், என்னைக் குழியிலே தள்ளிடுச்சு? கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன்னு நானே வெட்கத்தைவிட்டு சொன்ன பிறகும் அதுக்காக எந்த முயற்சியாவது பண்ணி இருப் பீங்களா?''

''இவளுக்கு வேற ஒண்ணுமில்லீங்க... ஆம்பளை சுகம் தேவைப்படுது. அதனாலதான் இந்த ஆர்ப்பாட்டமெல்லாம்?''

''என்னம்மா சொன்னே?'' துடித்துப் போனாள் ஜனனி.

''பெத்தத் தாய் பேசுற பேச்சா இது! ஆம்பளை சுகம்தான் முக்கியம்னு நினைச்சிருந்தா... இந்நேரம் ரெண்டு மூணு குழந்தைக்கு நான் தாயாகி இருப்பேன். உதயனுக்கும், சுஜாதாவுக்கும் என்ன வயசு? என்னைவிட சின்னவங்கதானே? அவங்களுக்கே உடம்பு சுகம் தேவைப்படும்போது, எனக்குத் தேவைப்படாதா?

''சொல்றேன்னு தப்பா நினைக்காதே! இந்த வயசுல உங்க ரெண்டு பேருக்கும் தனி அறை தேவைப்படும்போது, எனக்குத் தேவைப்படாதா? வயசான காலத்திலே பரஸ்பரம் தோள் கொடுக்க உனக்கு நம்ம அப்பாவும், அப்பாவுக்கு நீயும் இருக்கீங்க? இதை நான் தப்புன்னு சொல்லலே!

''எனக்கும் இதேபோல் ஒரு துணை வேண்டாமா? எனக்கும் ஒரு குடும்பம் வேண்டாமாம்மா? வீட்டை காவல் காப்பதற்

காக நாயை வளர்க்கிற மாதிரி என்னை வளர்த்திருக்கீங்க! என் சம்பாத்தியம் மட்டும்தான் உங்களோட இலக்கு. என் எதிர்காலமில்லே. என்னைப்பற்றி கவலைப்படாத உங்களைப் பற்றி இனி நானும் கவலைப்படப் போறதில்லே. நான் இந்த வீட்டை விட்டே போகிறேன்!'' என்றாள், தெளிவாய் - தீர்மானமாய்.

இருவரும் அதிர்ந்து போயினர்.

பூபாலன் கொதித்துப் போனார்.

''திமிர்... சம்பாதிக்கிற திமிர்ல பெத்தவங்களையே கேவலமாப் பேசிட்டுப் போறே! நீ சம்பாதிக்கிறியே... அதுக்கானப் படிப்பு' இந்த அப்பன் போட்ட பிச்சை! அது நினைவிருக்கட்டும்!''

''ஓ...'' என்று சற்று யோசித்த ஜனனி, விறுவிறுவென்று உள்ளே சென்று தன் கோப்புகளை எடுத்து வந்தாள்.

அதிலுள்ள அத்தனை சான்றிதழ்களையும் கிழித்தெறிந்தாள்.

''போதுமா? இதோ நீங்கள் போட்ட பிச்சை! எடுத்துக்குங்க. இனி, இந்தப் படிப்பால கிடைக்கிற எந்த வேலையையும் செய்ய மாட்டேன்.''

கூறிவிட்டு வீட்டை விட்டு புயலாய் வெளியேறினாள், ஜனனி.

## 16

''எனக்குக் கல்யாணமே தேவையில்லைன்னு இவங்களே முடிவு பண்ணுறாங்க, சுதா? பெத்தவங்களை காப்பாத்தறது ஆம்பளைப் பிள்ளையோட கடமைன்னு நான் என்னைக்குமே



சொன்னதில்லை. கல்யாணத்துக்குப் பிறகும் அவங்களுக்கு உதவணும்னு நினைச்சிட்டிருந்தேன்.

''ஆனா, நான் மட்டும் ஆசைப்படக்கூடாதா சுதா? எனக்கென்று குடும்பம், குழந்தைகள் வேண்டாமா? அப்பா இப்போதும் ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடமாட்டார். அம்மாவுக்கு அப்பா இல்லாம பொழுதே விடியாது. அப்பாவுக்கு ஒரு சின்னப் பிரச்சினைன்னாகூட துடிச்சிப் போயிடுவாங்க, அம்மா!''

''...''

''எனக்கும் வயசாகும். நானும் தளர்ந்து போய் உக்காருவேன். அப்ப எனக்காக யாரு உழைச்சிப் போடுவாங்க? உடம்புக்கு முடியலேன்னு படுத்தா ஒரு தம்ளர் தண்ணீர் கொடுக்க யார் வருவா? தம்பியா, தங்கையா? என்னைப் பற்றி கவலைப்பட யாருமே இல்லே சுதா! அதான் மொத்தமா தலை முழுகிட்டு வந்துட்டேன்!'' அழுதழுது முகம் வீங்கிப் போயிருந்தது.

சுதா, அவளின் தலையை வருடிக் கொடுத்தாள்.

ஜனனி, நேரே அவள் வீட்டுக்குத்தான் சென்றிருந்தாள்.

''நான் ஏற்கனவே உன்னை எச்சரிக்கை பண்ணிக்கிட்டே இருந்தேன். பாசம், கண்ணை மறைச்சிடுச்சு. இப்பவாவது உணர்ந்தியே, அதுவே சந்தோஷம். இப்ப என்ன பண்ணப் போறே?''

''முதல்ல இந்த வேலையை விடப் போறேன்!''

''ஜ...ன...னி...''

''ஆமாம் சுதா. எனக்கும் சுயகவுரவம் இருக்கு. அவங்க கொடுத்த படிப்பை வச்சு வாங்கின வேலை இது! இனி எனக்கு வேண்டாம்.''

''சரி... அது வேண்டாம். என் கணவர்கிட்டே சொல்லி கவுரவமா ஒரு வேலை வாங்கித்தரச் சொல்லவா?''

''அடிமட்ட வேலைக்கு சான்றிதழ் அவசியமில்லே. என்னால உங்க யாருக்கும் சிரமம் வேண்டாம் சுதா. இப்படி சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே! கோகுல்கிட்டே கலந்து பேசித்தான் எந்த முடிவையும் எடுக்கிற நிலையிலே நான் இருக்கிறேன்.''

''பணத்துக்கு என்ன பதில் சொல்லப் போற?''

''இன்னும் கொஞ்சம் அவகாசம் கேட்கப் போறேன்.''

இடம் - கடற்கரை.

ஜனனி, கோகுலையே பார்த்துக் கொண்டிருக்க... அவனோ மணலின் முதுகை வருடிக் கொண்டிருந்தான்.

''சீக்கிரமே ஒரு நல்ல வேலையைத் தேடிக்கிறேன். கோகுல் கஷ்டப்பட்டு சம்பாதிக்கப் போறேன். இனி வர்ற ஒவ்வொரு நாளும் நமக்காகவே பாடுபடப் போறேன். எனக்காக தயவுசெய்து இன்னும் ஓராண்டு பொறுத்துக்குங்க... நான் அதுக்குள்ளே எப்படியாவது பணத்தை சேர்த்துடுவேன்... என்ன கோகுல், நான் பாட்டுக்கு பேசிட்டிருக்கிறேன்... நீங்க அமைதியா இருக்கீங்க?''

கோகுல், அவளை நிமிர்ந்து பார்த்து, உதட்டைப் பிதுக்கிப் பெருமூச்சு விட்டான்.

''ரொம்ப அவசரப்பட்டுட்டே ஜனனி!''

''எ... என்ன சொல்லுறீங்க?''

''ஏற்கனவே உன் பக்கம் நிறைய குறைபாடுகள். பெத்தவங்களை பிரிஞ்சு இப்ப தனியே தங்கியிருக்கே! இது



கவுரவமான விஷயமா? எங்க வீட்டுலேருந்து உன்னைப் பெண் பார்க்க, தங்கும் விடுதிக்குக் கூட்டிட்டு வரவா? இதோ பாரு! எங்க வீட்டுக்கு நல்ல குடும்பத்துப் பொண்ணு போதும்... புரட்சிப் பெண் வேண்டாம்.''

''கோ...கு...ல்! நா... நான் வேணும்னா விடுதியை விட்டுட்டு, ஒரு வீடு எடுத்து தங்கிக்கட்டுமா?''

''இது... அதைவிட ரொம்ப கவுரமான விஷயம் இல்லே?''

''நீங்க இப்படியெல்லாம் பேசாதீங்க, கோகுல். எனக்கு பயமாயிருக்கு. எனக்கு நீங்க வேணும்...''

''நான் வேணும்னு நினைச்சிருந்தா, இப்படியெல்லாம் பண்ணி இருப்பியா? எல்லாத்துக்கும் ஒரு அளவு இருக்கு. எனக்கு பொறுமை இருக்கு. ஆனா நீ எல்லாத்தையும் மீற வச்சிட்டே!''

''கோ...கு...ல்...''

''கொஞ்சம் யோசிச்சுப் பாரு, ஜனனி. சினிமா பாணியில் கற்பனையிலே வாழ்ந்திட்டிருக்காதே! இதுல உன்னோட வாழ்க்கை மட்டுமில்லே; இன்னும் ரெண்டு பொண்ணுங்களோட வாழ்வும் அடங்கியிருக்கு. எங்க வீட்டுப் பெரியவங்களுக்கு நான் கட்டுப்பட வேண்டியிருக்கு. வாழ்க்கை என்பது தவணை முறை திட்டமல்ல.''

''...''

''என் தங்கைகளுக்கும் கல்யாணம் நடக்கணும். அதுக்கு முன்னே நான் தனியே தொழில் தொடங்கினாதான் அது சாத்தியம். ஒரு ஆண்டுல உன்னால எப்படி அவ்வளவு சம்பாதிக்க முடியும்? மூணு ஆண்டானாலும் முடியுற

காரியமல்ல. மூணும் வருஷம்னா... உனக்கும் எனக்கும் வயசு கூடிப்போகும்.''

''...''

''எனக்கு லட்சியமும் முக்கியம், வாழ்க்கையும் முக்கியம்!''

''...''

''ஒரு பொறுப்புள்ள ஆண்பிள்ளையாய் என் இடத்தில் இருந்து யோசித்துப் பாரு... என் தரப்பு நியாயங்கள் புரியும். நா... நான் இப்போதைய நிலையில் சுயநலமாய் முடிவெடுத் தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அதனால்...''

''அதனால்?'' ஜனனியின் குரல் நடுங்கிற்று. இதயம் படபடத்தது.

''என்னை மறந்திடு!''

''கோகுல்...''

''இது எனக்கும் கஷ்டமான விஷயம்தான். ஆனா, வேற வழியில்லே ஜனனி. இதுதான் புத்திசாலித்தனமான முடிவாய் இருக்க முடியும். சாரி...''

கோகுல், ஒருவித கோபமும், வேதனையுமாய் தன் உடலில் ஒட்டியிருந்த மணலை தட்டிவிட்டுக் கொண்டு, அவளை திரும்பிப் பார்க்கவும் திராணியற்று வேகமாய் நடந்தான் வண்டியை நோக்கி.

நம்பமுடியாத அதிர்ச்சியோடு வெகுநேரம் அங்கேயே அமர்ந்திருந்தாள், ஜனனி.

புவிஈர்ப்பு சக்தியை விட காதலுக்கு சக்தி அதிகமே! என்னதான் கோகுல் அப்படி சொன்னானேயொழிய அவனால் ஒருகணமும் ஜனனியை மறக்க முடியவில்லை.



எவ்வளவு பாசம் வைத்திருந்தாள், என் மீது மோதும் காற்றைக்கூட பொறாமையாய்ப் பார்க்கும் பெண்ணுக்கு நான் கொடுத்தது பெரிய தண்டனை இது அல்லவா?

பாசமற்ற, பொறுப்பற்ற பெற்றோரால் அவள் ஏமாற்றப் பட்டிருக்கிறாள். நானாவது பொறுப்புள்ள காதலனாய் நடந்தேனா? பணம் பணம் என்று ஒரு வியாபாரியைப் போல் அல்லவா நடந்து கொண்டேன்? எப்போது இதயத்தை என்னிடம் கொடுத்தாளோ, அப்போதே அவள் எனக்குரியவள் அல்லவா?

பெண்ணாய்ப் பிறந்தவள் புகுந்த வீட்டுக்கு பணத்தோடு தான் வரவேண்டும் என்று நானுமல்லவா கேவலமாய் எதிர்பார்த்தேன்? வாழ்க்கை முழுக்க எனக்கு சேவை செய்ய வருபவளுக்கு நானல்லவா சன்மானம் தரவேண்டும்? அன்பு என்ற சன்மானம்!

அள்ளிக் கொடுக்கும் கரங்களைவிட கண்ணீரைத் துடைக்கும் கரங்கள் உயர்வானவை அல்லவா? என்னால் ஜனனியை மறக்க முடியாது. இந்தப் பிறவியில் அவள்தான் என் மனைவி!' திட்டவட்டமாய் முடிவெடுத்தான், கோகுல்.

ஜனனியை சந்திக்கச் சென்றான்.

ஆனால், அடுத்தடுத்து அவள் வாழ்க்கையில் விழுந்த அடி, அவளை நிலைகுலையச் செய்துவிட்டது. அவள், கடவுளைவிட காதலனை நம்பினாள். காதலன் கைவிட்டதும் விரக்தியின் எல்லைக்கே சென்றுவிட்டாள்.

விடுதியிலிருந்தும் வெளியேறிவிட்டாள்.

அவள் எங்கே சென்றாள் என்ற விபரமே கோகுலுக்குத் தெரியவில்லை! சுதாவுக்கும் தெரியவில்லை!

தெரிந்த இடமெல்லாம் கோகுல் தேடினான். அவள் கிடைக்கவேயில்லை.

இரண்டு ஆண்டு ஓடிவிட்டது.

இடையில் தங்கைகள் இருவருக்கும் திருமணத்தை முடித்து விட்டான், தொழில் தொடங்க வைத்திருந்த பணத்தை வைத்து!

என்றாவது ஒருநாள் தன் காதல் தேவதையை சந்தித்து விடுவோம் என்ற தளராத நம்பிக்கையுடன் அவனது ஒவ்வொரு நாளும் விடிந்தது.

'மக்கர்' செய்த வாகனத்தை பழுதுபார்க்க விட்டான். அலுவலகம் செல்ல ஆட்டோ தேடினான்.

அப்போது...

ரத்த சிவப்பில் ஒரு கார், இவனை உரசியபடி வந்து நின்றது.

திடுக்கிட்டு விலகினான்.

வசீகர சிரிப்புடன் காரின் கண்ணாடியை இறக்கினாள் ஷோபா.

"ஷோ...பா!" என்றான், ஆச்சரியமாய்.

"ஷோபாதான்! இங்கே என்ன பண்ணிட்டிருக்கே, கோகுல்?"

சொன்னவன், "நீ எப்ப கனடாவிலேருந்து வந்தே? உன் கணவர் எப்படி இருக்கிறார்?"

"நான் வந்து ரெண்டு நாளாச்சு. அவர் கனடாவிலேதான் இருக்கார். இன்னும் பதினைஞ்சு நாளில் அம்மாவுடன் புறப்படுறேன்!"



"குடும்பமே கனடாவிலே குடியேறுதா?"

"நல்லதுக்காக சில விஷயங்களை இழக்கிறது தப்பில்லே. இப்ப என்னையே எடுத்துக்க... உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு வெறியா அலைஞ்சேன். ஆனா, யோசிச்சுப் பார்த்தா அது முட்டாள்தனம்னு புரிஞ்சுது. அப்பா எனக்காகப் பார்த்து வச்சிருந்த நவீனை கட்டிக்கிட்டேன். அப்பதான் காதல்னா என்னன்னே புரிஞ்சுக்கிட்டேன். எதிலே வேணும் னாலும் தோத்துடலாம். ஆனா, காதலிலும், தாம்பத்தியத்திலும் தோற்கக் கூடாது. அதனால் உண்டாகக் கூடிய வலி ஆறாது."

"தெளிவாப் பேசுறே... சந்தோஷமாயிருக்கு!"

"ஆனா, நீ குழம்பிட்டியே கோகுல்!"

"..."

"கேள்விப்பட்டேன். ஜனனி இப்ப எங்கே இருக்கா?"

"தெரியலே, ஷோபா. நானும் தேடாத இடமில்லை. அவள் சம்பந்தப்பட்ட யாருக்குமே அவளைப் பற்றி தெரியலே. அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி அவளை நோகடிச் சிட்டேன். காதலைவிட லட்சியத்தை முக்கியமாய் நினைத்து அவளைத் தவறவிட்டுட்டேன்."

"..."

"என் ஜனனி என்னையே சுத்திச் சுத்தி வந்தப்ப அவ அருமை தெரியலே. இப்ப... அவ இல்லாம உயிரே போகிற மாதிரி இருக்கு. அவளின் நம்பிக்கைக்கு முழு துரோகம் பண்ணிட்டேன், ஷோபா. அவளைப் பார்க்கணும், மன்னிப்புக் கேட்கணும். அதுவரைக்கும் எனக்கு நிம்மதியான தூக்கம் வராது!"

"நடந்தது போகட்டும்! இனி ஆகவேண்டியதைக் கவனிப் போம். ஜனனி, இப்ப இங்கேதான் இருக்காளா? இல்லே, வெளியூர் எங்காவது?"

"தெரியலே, ஷோபா!"

"நீ இங்கே மட்டும்தான் தேடிக்கிட்டிருக்கே."

"அவளுக்கு வெளியூரில் யாரையும் தெரியாது."

"பெண்கள் வைராக்கியமானவங்க கோகுல். ரொம்ப இறங்கி வந்து கால்ல விழவும் தயங்க மாட்டாங்க. ஆனா, ஒரேயடியா உதாசீனப்படுத்தினா உதறிட்டுப் போகவும் தயங்க மாட்டாங்க. மனசு வெறுத்தா உள்ளூராவது, வெளியூராவது? ஒரு யோசனை சொல்லவா?"

"என்ன!"

"பேசாம பத்திரிகையில் விளம்பரம் கொடேன்!"

"பத்திரிகையிலேயா?"

"ஆமாம்... எனக்கென்னவோ இது நல்ல முயற்சின்னு தோணுது. நீ காத்திட்டிருக்கிறது தெரிஞ்சா, உன்னோட உண்மையான அன்பை, ஜனனி புரிஞ்சுக்குவா. நான், கனடா போறதுக்குள்ளே உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வச்சிடணும்னு நினைக்கிறேன்."

"..."

"எனக்கென்னவோ ஜனனி கூடிய சீக்கிரம் கிடைச்சிடு வான்னு தோணுது. உன் ஆசைக்கிளியை உன் இதய கூண்டுக்குள்ளே சிறை வைக்கிற காலம் நெருங்கிடுச்சு, கோகுல்!"



"உன் மங்கலச் சொல் பலிக்கட்டும். வாயில் மூட்டை மூட்டையாய் சர்க்கரை கொட்டுறேன்" என்றான், மகிழ்ச்சியாய்.

"எதுக்கு? சர்க்கரை நோயாளி ஆகுறதுக்கா? எனக்கு வேண்டாம்ப்பா!" என்று ஷோபா கூற, இருவருமே சிரித்தனர்.

சிக்னலில் கார் நின்றது.

அது மாநகரப் பேருந்து! கூட்டம் நெட்டித் தள்ளியது.

"வாங்க... இங்கே உட்காருங்க!" நின்றிருந்த கர்ப்பிணிப் பெண்ணை அமர வைத்துவிட்டு எழுந்து நின்றாள், ஜனனி.

கைக்குட்டையால் முகத்து வியர்வையை ஒற்றியெடுத்த வளின் கண்ணில்பட்டது, பேருந்தையொட்டி இடதுபக்கம் நின்றிருந்த சிவப்பு கார்.

விழிகள் அதிர்ச்சியில் விரிந்தன.

அடக்கமுடியாத சிரிப்புடன் கோகுல்... அவன் என் கோகுல் அல்ல! இன்னொருத்தியின் கணவன். பக்கத்தில் பளபளக்கும் தாலிசரடும், நெற்றி வகிட்டில் குங்குமமுமாய் அவன் மனைவி!

அந்தக் காட்சி ஜனனியின் நெஞ்சைச் சுட்டது. கண்கள் பொங்கின.

'அழாதே... அழாதே ஜனனி!' தன்னைத்தானே கட்டுப் படுத்தி கண்ணீரை உள்ளிழுத்தவள், வைராக்கியத்துடன் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். சிக்னல் கிடைத்ததும் சர்ரென கார் சீறிப் பாய்ந்தது.

ஜனனி, சென்னையில்தான் இருக்கிறாள்.

யாரைப் பார்க்கக் கூடாதென்று ஓடி ஒளிந்தாளோ, அவனையே பார்த்துவிட்டாள். அதுவும் அவன் மனைவி யுடன்! பழைய நினைவுகள் அவளை அழுத்தின.




வாசலுக்கு வந்து பத்தாவது முறையாக தெருவை நோட்டமிட்டார், பூபாலன்.

கோவிலுக்குச் சென்ற பரிமளம் இன்னும் வீடு திரும்ப வில்லை.

'என்னாச்சு? அஞ்சு மணிக்குப் போனவ... எட்டாகியும் திரும்பலையே. காலையிலேயே தலைசுத்தல் இருக்குன்னு சொல்லிக்கிட்டிருந்தாளே... ஒருவேளை எங்காவது மயக்கம் போட்டு... நினைக்கும்போதே பதறியது.

அதற்கு மேலும் இருப்பு கொள்ளாமல் வீட்டைப் பூட்டி விட்டுத் தெருவில் இறங்கினார். அப்போது தெருமுனையில் பரிமளத்தின் தலை தெரிந்தது.

கதவைத் திறந்து காத்திருந்தவர், கரிசனத்துடன் கோபித்துக் கொண்டார்.

''ஏன் பரிமளம் இவ்வளவு நேரம்? நான் பயந்து போயிட்டேன்... உள்ளே வா முதல்ல!''

''நான் என்ன சின்னக் குழந்தையா? எதுக்குப் பதற்றப் படுறீங்க? பஸ் கிடைக்கலே... பயங்கர கூட்டம்... அதான் நடந்தே வந்துட்டேன்!''

''நடந்து வந்தியா? ஆட்டோவிலே வரவேண்டியது தானே?''

''ரெண்டு கிலோ மீட்டர் தூரம்தானே? முப்பது ரூபாய் கேட்கிறாங்க. பகல் கொள்ளையா இருக்கேன்னு நடந்தே வந்துட்டேன்.''

''உனக்கு நடந்தாலே மயக்கம் வருமே, பரிமளம் உடம்பை விடவா முப்பது ரூபாய் முக்கியம்!''



''பழைய பரிமளமாக இருந்திருந்தா அப்படி செய்திருப்பேன். ஆனா, இன்னைக்கு?'' சொல்லும்போதே குரல் நெகிழ்ந்தது.

''பரிமளம்'' என்றவர் மனைவியின் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

''எதுவுமே அருகில் இருக்கிறப்ப அதன் அருமை தெரியாது. கையைவிட்டுப் போனபிறகுதானே புரியுது. ஜனனி மேலே நான் காட்டின அலட்சியம், கோபம் எல்லாமே எனக்கே தெரியாம நானே போட்டுக்கிட்ட பொய் முகம். அவளிடம் கெஞ்சி வாங்கப் பிடிக்காம அதிகாரம் பண்ணி வாங்கி, என் கவுரவத்தைக் காப்பாத்திக்கிட்டேன்... அன்பை வெளிக் காட்டிக்காம அரக்கத்தனமா நடந்துகிட்டேன். அதுவே என் பெண்ணுக்கும் எனக்குமிடையே ஒரு திரையை விழச் செய்துவிட்டது.''

பூபாலன், மனைவியின் கூற்றை ஆமோதிப்பது போல் தலையாட்டினார்.

''ஜனனி நம்மளை தூக்கி எறிஞ்சிட்டுப்போன போது ரொம்ப ஆத்திரப்பட்டேன். வெறுத்தேன். பெத்தவங்களை அம்போன்னு விட்டுட்டுப் போறாளேன்னு சாபமிட்டேன். ஆனா... ஆனா... ஒருநாள் நள்ளிரவிலே எனக்கு நெஞ்சுவலி வந்து அவதிப்பட்டப்ப... ஆட்டோ கூட்டிட்டு வர நீங்க வெளியே போயிட்டீங்க... அந்த நேரத்தில் நான் பட்ட வேதனை எனக்குத்தான் தெரியும்.

''இவ்வளவு நாளும் நமக்கு ஏதாவது ஒரு பிரச்னைன்னா நம்மை சுத்தி பிள்ளைங்க இருந்தாங்க. அன்னைக்குத்தான் முதன் முதலா தனியா இருந்தேன். எவ்வளவு பெரிய

கொடுமை? நீங்க வர்றவரைக்கும் உலகமே சூன்யமாகத் தெரிஞ்சது. உதயனும், சுஜாதாவும் கல்யாணமாகி போயிட்டாங்க. அவங்களைத் தாங்கிப் பிடிக்க ஆள் இருக்காங்க.

''ஆனா, ஜனனிக்கு? பெண்ணுக்கு துணை எவ்வளவு அவசியம்னு எனக்கு அன்னைக்குத்தான் தெரிஞ்சுது. நம்ம காலம் முடிஞ்சபிறகு, ஜனனி உடம்புக்கு முடியாம படுத்துட்டா... அவளை கவனிச்சுக்க ஈ காக்காகூட இல்லையேன்னு புரிஞ்சது.''

''...''

''குழந்தைங்களை வயிற்று சூட்டுல இறுக்கியணைச்சு வளர்க்கணும்னு சொல்லுவாங்க. நான் என் வயிற்றுப் பாட்டை மட்டும்தானே பெரிசா நினைச்சேன்? செய்த தப்பை உணர்ந்த பிறகும் திருந்தலைன்னா, நாம மனுஷங்களாப் பொறந்து என்ன பயன்? நீங்க வாங்கற பென்ஷனை வச்சே சிக்கனமா குடும்பம் நடத்தியிருக்க முடியும். என் பாழாய்போன வறட்டு கவுரவத்துக்கு ஜனனியோட எதிர்காலத்தை பலி கொடுத்துட்டேன்.''

''ஏன் பரிமளம் அதையே நினைச்சு வருத்தப்படுறே? அதான் மாறிட்டியே! பழைய வீட்டை விட்டு குறைஞ்ச வாடகையிலே, சின்ன வீடாப் பார்த்து குடிவந்துட்டோம். சிக்கனமா செலவு செய்து மாதா மாதம் ஜனனிக்காக ஒரு தொகையை சேமிச்சிட்டு வர்றோம்.''

''ஆமாங்க. மத்த ரெண்டு பிள்ளைகளுக்கும் அளவுக்கு அதிகமாகவே செலவு செய்தோம். ஆனா, இன்னைக்கு வரைக்கும் அம்மா, அப்பா எப்படி இருக்காங்கன்னு அவங்க வந்து எட்டிக்கூடப் பார்க்கலே. நான் என்ன சொன்னாலும் ஜனனி என் காலையே சுத்திச் சுத்தி வந்தா. அவளை பெரிய இழப்புக்கு ஆளாக்கிட்டேன். என் பொண்ணுக்காக இப்ப



கொஞ்சம் கொஞ்சமா சேமிக்கும் போது எவ்வளவு நிம்மதியா இருக்கு தெரியுமா?''

மனைவியை பரிதாபமாய்ப் பார்த்தார் பூபாலன்.

''நம்மை தூக்கியெறிஞ்சிட்டுப் போன ஜனனி, நம்ம தப்பை எல்லாம் மன்னிப்பா, நம்மைத் தேடி வருவாள்னு நம்புறியா பரிமளம்?''

''வருவா... கண்டிப்பா வருவா! ரெயில் சிநேகமா இது? ரத்த பந்தம்ங்க... தொப்புள்கொடி உறவு! நம்ம பொண்ணு கண்டிப்பா ஒருநாள் நம்மைத் தேடி வருவா. அந்த நம்பிக்கை எனக்கு மனசு முழுக்க இருக்கு. இப்பக்கூட கோவிலுக்குப் போய் வேண்டிட்டுதான் வர்றேன்'' என்றவள் அழத் தொடங்கினாள்.

பூபாலன் பரிமாளத்தை தோளோடு சேர்த்தணைத்து ஆறுதலாய் தட்டிக் கொடுத்தார்.

''அழாதே பரிமளம். நம்ம ஜனனி சீக்கிரமே வருவா. அன்புப் படகு. மலை மேலேகூட ஏறும். அன்பைவிட உயர்ந்த சக்தி வேறு இருக்கிறதா என்ன? நம்ம அன்பு, கண்டிப்பா ஜனனியை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிடும்'' என்றார் நம்பிக்கையுடன்.

**அ**து பத்திரிகை அலுவலகம். காரிலிருந்து இறங்கினர் கோகுலும் ஷோபாவும். அவனுக்கு மனசு ஏனோ கும்மாளம் போட்டது.

மழை வருவது மயிலுக்குத் தெரியுமாமே?

மெல்ல நடந்து கதவை நெருங்கினர்.

தான் இருக்கும் வாசலை நோக்கி வசீகரிக்கும் வசந்தம் வந்து கொண்டிருப்பதை அறியாமல் யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள் ஜனனி. குனிந்தபடி குறிப்பெடுத்தாள்.

''இடையூறுக்கு மன்னிக்கணும்'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தவள் அதிர்ச்சியில் ரிசீவரை நழுவவிட்டாள்.

திக்குமுக்காடிப் போனான், கோகுல்.

''ஜ...ன...னி...''

''நீ...ங்...க...ளா?''

நடப்பது கனவா, நனவா எனப் புரியாமல் சிலை போல் நின்றிருந்தாள் ஷோபா.

''நீ இங்கேயா இருக்கே? உன்னை எங்கேயெல்லாம் தேடினேன்?''

''...''

ஜனனி பிரமிப்பிலிருந்து இன்னும் விடுபடவில்லை.

''சொல்லு ஜனனி... என்னைப் பார்க்காம... என்கிட்டே பேசாம எப்படி உன்னால இருக்க முடிஞ்சது?''

''உ... உங்களுக்கு என்ன வேணும், யாரைப் பார்க்கணும்?'' என்றாள், அவன் யாரென்றே அறியாதவள் போல்.

''என் மேலே கோபமா ஜனனி?''

''கோகுல், இதுதான் ஜனனியா? என்ன ஆச்சரியம்? நான் சொல்லலே? நான் ஊருக்குப் போறதுக்குள்ளே ஜனனியும், நீயும் ஒண்ணு சேர்ந்திடுவேன்னு'' காதருகே கிசுகிசுத்தாள்.

'இவன் ஏன் இங்கே வந்தான்? அருகில் மனைவியை வைத்துக் கொண்டு என்னிடம் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?' மனதுக்குள் பொருமினாள் ஜனனி.

யாராவது பார்த்தால் தன்னைத் தவறாக நினைத்து விடுவார்களோ என்ற பயம் வேறு.



''என்ன ஜனனி, ஒண்ணுமே பேசமாட்டேங்கிறே?''

''இங்கே பாருங்க... நீங்க யாருன்னே எனக்குத் தெரியாது! வேலை நேரத்திலே தொந்தரவு பண்ணாதீங்க!''

''ஜ...ன...னி!''

''கொஞ்சம் பொறு, கோகுல். நான் பேசுறேன். அலோ... என் பெயர் ஷோபா. உங்களைப் பற்றி கோகுல், நிறையச் சொல்லி இருக்கிறார். நாங்க உங்களைத்தான்...''

''பாருங்க...'' மேற்கொண்டு பேசவிடாமல் கைநீட்டி தடுத்தாள்.

''எனக்கு நீங்க ரெண்டு பேருமே யாருன்னு தெரியாது. யாரோன்னு நினைச்சு உங்க கணவர் என்னிடம் பேசிக் கொண்டிருக்கிறார். பார்க்கிறவங்க தவறாக நினைக்குமுன் தயவுசெய்து இங்கிருந்து போய்விடுங்க'' என்றவளின் குரல் நசிந்தது. கண்களில் நீர் குளமாய் தேங்கியது.

அவளை ஆழமாய் உற்று நோக்கிய ஷோபா, இதழ்க் கடையில் புன்னகை நெளிய, ஜனனியின் கரம் பற்றி இழுத்தாள்.

''முட்டாள் பெண்ணே... உன்னிடம் நான் அவசியம் பேசியாக வேண்டும்... கிளம்பு.''

''என்னது?'' என்றாள், கனல் பார்வையுடன்.

''ப்ச்... புறப்படு என்கிறேன்.''

''என்ன இது அதிகாரம்?''

''காரணம் இருக்கிறது. கிளம்பு!''

'நாலு வார்த்தை நறுக்கென்று கேட்க வேண்டும். இங்கே நின்று பேசினால் சரியாக இருக்காது' என்று எண்ணியவள் வெளியில் வந்தாள்.

அலுவலகத்தின் பின்புறமிருந்த பூந்தோட்டத்திற்குச் சென்றனர்.

"என்ன பேசணும்? சீக்கிரம் சொல்லுங்க" இருவரையும் பார்க்கப் பிடிக்காமல் எங்கோ வெறித்தபடி கேட்டாள், ஜனனி.

"நீ முதல்ல என்கிட்டே மன்னிப்புக் கேட்கணும்!" என்றாள், ஷோபா.

"மன்னிப்பா? நானா? என்ன உளறுறீங்க?"

"கொஞ்ச முன்னாடி நீ உளறுனியே... இவர் என்னோட கணவர், அப்படி இப்படின்னு... இதை என் வீட்டுக்காரர் கேட்டாருன்னா உன்னைக் கொலையே பண்ணியிருப்பார்!"

"எ... என்ன?" என்றாள், அதிர்வாய்.

"ஆமாம் ஜனனி... நான் கோகுலோட முறைப்பொண்ணு ஷோபா... கேள்விப்பட்டிருப்பியே. கோகுல், இன்னைக்கு வரை கல்யாணமாகாத கட்டைப் பிரமச்சாரி!"

"..."

"உன்னைவிட்டு பிரிஞ்சிட்டதா சொன்னாலும் கோகுலால் உன்னை மறக்க முடியலே. உனக்காக தன் லட்சியத்தையெல்லாம் தூக்கி எறிஞ்சிட்டு உன்னை தேடிக்கிட்டிருந்தார்" என்றவள், நடந்த அத்தனையையும் சொல்லி முடித்தாள்.

"இப்பக்கூட எதுக்காக இங்கே வந்தோம் தெரியுமா? உன்னை காணவில்லைன்னு பத்திரிகையிலே விளம்பரம் கொடுக்கத்தான்."



"ஆமாம் ஜனனி... உன்னைப் பிரிஞ்சி என்னால வாழ முடியாதுங்கிறதை நீ என்னை விட்டுப் போன ரெண்டு நாளிலேயே புரிஞ்சுக்கிட்டேன். பனிநீரால கிணற்றை நிரப்ப முடியாது. நீ இல்லாம என்னால ஒரு வாழ்க்கையை நினைச்சி பார்க்கவே முடியாது!" சட்டென ஜனனியின் கையைப் பற்றிக் கொண்டான், கோகுல்.

"இல்லே... நான்... எனக்கு.. என்கிட்டே பணமில்லே" கையை விடுவித்துக் கொண்டாள்.

"எனக்கு நீ மட்டும் போதும்!"

"எனக்கு வயசாயிடுச்சுங்க... குழந்தை பிறக்குமோ, பிறக்காதோ? எதுக்கு வம்பு? நீங்க புத்திசாலித்தனமா முடிவெடுங்க... என்னை விட்டுருங்க!"

"..."

"எ... என்னால அதை மறக்க முடியலேங்க. நீங்க சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் நெருஞ்சிமுள்ளாய் என் மனதை உறுத்திக்கிட்டே இருக்கு. நீங்க போயிடுங்க."

"ஜ...ன...னி!"

"ஜனனி செத்து ரெண்டு ஆண்டு ஆயிடுச்சுங்க. நீங்க சொன்ன வார்த்தைகள் அஞ்சு ஆண்டு காதலை, ஆழக் குழிதோண்டிப் புதைச்சிடுச்சுங்க... நீங்க போங்க... நான் எல்லாத்தையும் மறந்துட்டேன்!"

"என்னைக்கூடவா?" என்றான், பரிதாபமாய்.

"உங்களைப் பற்றிய நினைவு வரும்போதெல்லாம் நீங்கள் என்னிடம் காட்டிய பாசமோ, நேசமோ நினைவுக்கு வரலீங்க... சுயநலமான உங்க பேச்சுதான் நினைவுக்கு வருது. மனசு இறுகிப் போச்சு. எனக்கு எந்த உறவுமே கை கொடுக்கலே."

"அப்ப... உன் மனசுல எனக்கு இடமில்லையா ஜனனி?"

"இ.. இல்லே!"

கோகுல் பெருமூச்சுவிட்டான்.

"இதுக்கு மேலே உன்னை வற்புறுத்த விரும்பலே. ஆனா, நான் உனக்காகவே காத்துக்கிட்டிருப்பேன். எப்ப நீ என்னைப் புரிஞ்சுக்கிட்டு தேடி வர்றியோ, அதுவரைக்கும் உன்னைத் தொந்தரவு பண்ண மாட்டேன். ஷோபா... வா போகலாம்!"

"கோகுல்! அவசரப்படாதே நான் அவளுக்கு எடுத்துச் சொல்லி..."

"தேவையில்லை ஷோபா! அன்பை வலுக்கட்டாயமா வரவைக்கக் கூடாது... தானாக வரணும். என் அன்பு நிஜம்னா அந்த அன்பே ஜனனியை என்கிட்டே கொண்டுவந்து சேர்க்கும்... நீ வா!" என்று கூறிவிட்டு துளிர்த்த கண்ணீரை விரலால் சுண்டியெறிந்துவிட்டு விறுவிறுவென்று நடந்தான், கோகுல்.

ஷோபா, மனசேயின்றி ஜனனியை ஆதங்கத்துடன் திரும்பிப் பார்த்தபடி நடந்தாள்.

ஜனனி, நெஞ்சம் விம்ம... கண்கள் பனிக்க... அவர்களையே பார்த்தபடி நடந்தாள்.

சில நொடிகள்தான்... அவள் முகம் கலவரமானது.

அடுத்த நொடி...

"கோகுல்..." என்று அலறியபடி ஒரே ஓட்டமாய் ஓடியவள் அவனை இழுத்து கீழே தள்ளினாள். தடுமாறி அவன்மேல் விழுந்தாள்.



பெரிய மரத்தின் கிளையொன்று நீட்டிக் கொண்டிருப்பதை கவனியாமல் கோகுல் போய்க் கொண்டிருக்க... நல்லவேளை ஜனனி காப்பாற்றிவிட்டாள்.

தன்மேல் விழுந்திருந்த ஜனனியை வெகு நெருக்கத்தில் கண்களால் நோக்க... அவளும் அவனையே பார்த்தாள்.

காதலரின் கண்கள் ஆயிரம் கதை பேசின. கோபித்தன. குதூகலித்தன. கெஞ்சின, கொஞ்சின.

கோகுல், அவள் கையைப் பற்றினான். ஜனனியால் இப்போது விலக்க முடியவில்லை.

உண்மைக் காதல் என்றுமே தோற்பதில்லை. எப்பாடு பட்டாவது காதலே, காதலர்களை கரைசேர்த்துவிடும்.

ஷோபாவின் இதழ்களில் புன்னகை அரும்பியது.

"கோகுல்... இப்போதைக்கு நீ எந்திரிக்க மாட்டேன்னு தெரியும். நான் வர்றேன். இந்தா கார் சாவி! ஜனனியை அழைச்சிட்டு வந்துடு. மறக்காம இந்த மரத்துக் கிளையையும் எடுத்துக்கிட்டு வா. மனிதர்களால் முடியாததை இந்த மரக்கிளை சாதிச்சிடுச்சே!" என்று கூறிவிட்டு நடந்தாள்.

காதலர் இருவருமே அதை காதில் வாங்கவில்லை.

கருமேகம் பூசிய வானம், மெல்ல பூமழை பொழிந்தது. காதலில் தோய்ந்த அவர்களை நனைத்தது.

★ ★

★

# காதல் வலையில் விழலாமா!

1



பறவைகள் சோம்பல் முறித்ததில் அவைகளின் சிறகு களைப் போலவே... இலைகளும் படபடத்தன.

சென்னை நகரம் விழித்துக் கொண்டது.

கேரியரிலிருந்து உருவி சர்ரென தினசரியை வீசியெறிந்தான் பேப்பர் காரப் பையன்.

சாலையில் வாக்கிங் போகும் நபர்களை அதிகம் பார்க்க முடிந்தது. அதில் வயதானவர்களை மட்டுமின்றி இளவயதான வர்களையும் நிறையப் பேரை காண முடிந்தது... புருவத்தை உயர வைத்தது.

விசாலமான அந்தத் தெருவில் கால் டாக்ஸியொன்று நுழைந்தது. உறங்கிக் கொண்டிருந்த நாயொன்று பதறி... விருட்டென எழுந்தோடியது.

"இந்தத் தெருதான்! அதோ... மாமரம் இருக்குதே... அதுக்குப் பக்கத்து வீடுதான்!" என்றாள், பாக்யலஷ்மி.

அவள் சொன்ன வீட்டின் முன் டாக்ஸி நின்றது.



சப்தம் கேட்டு அக்கம் பக்கத்து வீடுகளில் தலைகள் முளைத்தன.

பணத்தை எண்ணி டிரைவரிடம் கொடுத்தவள், "இறங்கு தேஜா!" என்றாள்.

பர்தா அணிந்த இளம் பெண்ணொருத்தி இறங்கினாள்.

கண்களால் வீட்டை அளந்தாள்.

வெள்ளை பெயிண்டில் பளிச்சிட்ட அடக்கமான பங்களா. அசோகா மரமும், மாமரங்களும் வீட்டிற்கு காவல் காத்தன.

கேட்டைத் தாண்டி விசாலமாய் இடமிருந்தது.

"பிடிச்சிருக்கா தேஜா?"

"அவுட்சைட் ஓக்கே! உள்ளே எப்படின்னு பார்த்தபிறகு சொல்றேன்."

"உள்ளேயும் பிடிக்கும்!" என்றபடி சாவியை நுழைத்து கதவைத் திறந்தாள்.

இருவரும் உள்ளே சென்றனர்.

உயர்தர கற்களால் பளபளத்த தரை! இரண்டு பெட்ரூம் உட்பட இதர அறைகள். மாடியில் விசாலமாய் ஒரு அறை! ஜன்னலருகே குசலம் விசாரித்த மாமரக்கிளை!

தேஜாவின் முகம் புன்னகையில் விரிந்தது.

"வெரி நைஸ்ம்மா... பிடிச்சிருக்கு.. ரொம்பவே பிடிச்சிருக்கு!" என்றாள் மனப்பூர்வமாய்.

பாக்யலஷ்மி அன்புடன் மகளின் தலையை கோதிவிட்டாள்.

"உனக்குப் பிடிக்காமப் போய்டுமோன்னு பயந்தேன். இப்ப தான் நிம்மதி."

"சரிம்மா... ரொம்ப களைப்பாத் தெரியறே! நீ போய் கொஞ்சம் ரெஸ்ட் எடு! சமையலறையை முதலில் ரெடி பண்ணிட்டு வர்றேன் அதுக்குள்ளே..."

"எல்லாம் போனவாரம் வந்தப்பவே ரெடி பண்ணிட்டேன். நீ போய்த் தூங்கு... நான் குளிச்சிட்டு பால் காய்ச்சிடறேன்!"

தேஜஸ்வினி அம்மாவை கருணை பொங்கப் பார்த்தாள். "இந்த ஆறு மாசத்துல ரொம்பவே கஷ்டப்பட்டுட்டேம்மா! நீ! நாம என்னம்மா பாவம் செஞ்சோம்? ஏன் நம்ம குடும்பத்துல இப்படியெல்லாம் நடந்தது?"

"அதையெல்லாம் மறக்கணும்தானே அகதிகள் மாதிரி இங்கே வந்திருக்கிறோம்? எதுக்குமா அதையே நினைச்சிட்டி ருக்கே. அதெல்லாம் கெட்ட கனவு... மறந்துடு தேஜா... எல்லாத்தையும் மறந்துடு!"

"எப்படிம்மா முடியும்? நடக்கிற காரியமா அது?"

"நடக்கணும். அதில்தான் உன் வெற்றியே அடங்கி இருக்கு. நேரமாகுது... பால் காய்ச்சணும்... நீ போய்..."

"ப்ச்... தூக்கம் வராது. போம்மா... உன் வேலையை கவனி. நான் மாடியறைக்குப் போகிறேன். அந்த ரூமை நான் எடுத்துக்கட்டுமா?"

"இந்த வீடே உனக்குத்தான்! அப்புறமென்ற கேள்வி?" மகளின் குழந்தைத்தனமான கேள்விக்கு சிரித்தபடி நகர்ந்தாள்.

மெல்லப் படியேறிய தேஜஸ்வினியின் உதடுகள் நடுங்கின.



ரமேஷ்... ரமேஷ்... எப்படி மறப்பேன் உன்னை? என்னை நானே பார்த்துக் கொள்ளும் போதெல்லாம் உன் நினைவு அதிகப்படுமே! உனக்காகத்தான், உன் நினைவை மறக்கத்தான் எல்லாவற்றையும் விற்று... இங்கே வந்தாள் அம்மா. பைத்தியக்காரி! மறந்துவிட முடியுமா?

மாடியறையை தனக்கேற்றாற்போல் மெருகேற்றத் தொடங்கி னாள் தேஜஸ்வினி.

மதுரையில் செல்வசெழிப்புள்ள குடும்பங்களில் ஒன்றுதான் பாக்யலஷ்மியின் குடும்பம்.

அங்கிருக்கப் பிடிக்காமல், வீடு, நிலம், தொழிற்சாலை என்று எல்லாவற்றையும் வந்த விலைக்கு விற்று... சென்னையில் முப்பது லட்சத்திற்கு இந்த வீட்டை வாங்கி குடியேறிவிட்டாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த வீட்டிற்கு உயிர் வந்தது. தாயும் மகளும் குளித்து முடித்து பூஜையறையில் கண்மூடி நின்றிருந்தனர். தெய்வப்படங்கள் மாலையிடப்பட்டு, குத்துவிளக்குகள் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

பால் பாயாசமும், கேசரியும் படையலில் இருந்தன.

"இருப்பதோ நாம ரெண்டு பேர்! எதுக்கும்மா இவ்ளோ பாயாசமும் கேசரியும்?"

"அக்கம் பக்கத்துல கொடுக்க வேண்டாமா?"

"அக்கம் பக்கமா?" மிரட்சியுடன் பார்த்தாள்.

"அங்கேதான் யார்கிட்டேயும் ஒட்டாம பழகினோம். அது ரொம்பத் தப்புனு பட்டப்பிறகுதானே புரிஞ்சுது? ஆபத்து அவசரத்துக்கு அடுத்தவங்க உதவுறமாதிரி அண்ணன் தம்பிங்கக்கூட உதவ மாட்டாங்க!"

ஒரு ட்ரேயில் பாயாச கிண்ணங்களையும், கேசரி கிண்ணங்களையும் அடுக்கினாள்.

அவள் சொல்வதிலும் நியாயமிருக்க... மவுனமாய் இருந்தாள் தேஜஸ்வினி.

''கதவை சார்த்திக்க... வந்துடறேன்!'' என்றபடி ட்ரேயுடன் வெளியே சென்றாள்.

பக்கத்து வீட்டில் இவளைப் பார்த்ததும் புன்னகைத்து வரவேற்றனர் கணவனும், மனைவியும்.

''வாங்கம்மா... காலையிலேயே உங்களைப் பார்த்தோம். வெளியூரா?''

''ஆமாங்க.. மதுரை... இந்தாங்க எடுத்துங்க பால் காய்ச்சினோம்.''

''தாங்க்ஸ்... என் பேர் பூரணி. இவர் என் ஹஸ்பண்ட் மாறன். லாயரா இருக்கார்'' என்று நட்புடன் அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

''நல்லது... என் பேர் பாக்யலஷ்மி!''

''பாக்யலஷ்மியா? நீங்க இந்துவா? முஸ்லிம்னுல்ல நினைச்சோம்?'' என்றாள் அவளின் வெறுமையான நெற்றியை ஆச்சர்யமாய் பார்த்து.

பாக்யலஷ்மிக்கு புரிந்தது.

''என் கணவர் பதினஞ்சு வருஷத்துக்கு முன்பே தவறிட் டார்!''

''உங்களோட வந்த பொண்ணு பர்தா போட்டுக்கிட்டு...''



''என் பொண்ணுதான்... பேரு தேஜஸ்வினி... வரட்டுங் களா?'' மேற்கொண்டு பேச்சை வளர விடாமல் விடை பெற்றாள்.

ஒவ்வொரு வீட்டிலும் அவளுக்கு கேள்விகள் காத்திருந்தது.

எதிர்பார்த்ததுதான். ஆனால் பதில் தர மனசு வலித்தது.

அவசரமாய் தயாராகிக் கொண்டிருந்தாள் தேஜஸ்வினி.

''அம்மா டிபன் ரெடியா?''

''இதோ... அஞ்சு நிமிஷம்... ஏம்மா அவசரப்படறே? இன்னும் நேரமிருக்கே?''

''ரொம்ப டென்ஷனாயிருக்கும்மா.''

''ஏன் தேஜா? காலேஜுக்கு போறது புதுசா என்ன? ரெண்டு வருஷம் மதுரையிலே படிச்சே. மூணாவது வருஷம் இங்கே படிக்கப் போகிறே. அவ்வளவு தானே? நீ இப்ப டென்ஷனா கறதைப் பார்த்தா, முத முதலா காலேஜுக்கு போகிறப்ப... ராகிங் பண்ணுவாங்கன்ற பயத்திலேயே ரெண்டு நாள் சாப்பிடாம இருந்தியே... அதுதான் ஞாபகத்துக்கு வருது?'' பழையதை அசைபோட்டு சிரித்தபடி மகளுக்கு வெஜிடபிள் புலாவைப் பரிமாறினாள்.

''ஆமாம்மா... பயம்தான். அப்ப இருந்ததைவிட இப்ப பயம் அதிகம்தான்!''

சட்டென சிரிப்பைத் தொலைத்தாள் பாக்யலஷ்மி.

''வீணாப் பயப்படறே தேஜா. சாப்பிடும்போது பேசக் கூடாது. சாப்பிடு!'' மகள் தலையை அவளின் கரம் மென்மையாய் ஸ்பரிசித்தன.

அமைதியாய் சாப்பிட்டு முடித்து கையைக் கழுவினாள்.

''கிளம்பறேன்ம்மா!''

''பத்திரமா போய் வா தேஜா! நீ பயன்படுத்த ஒரு காரை வாங்கிடலாமா?''

''அதைப்பற்றி பிறகு யோசிக்கலாம். என்னைப்பத்தியே நினைச்சிட்டிருக்காம நிம்மதியா இரு. வரட்டும்மா?''

**ந**கரின் சிறந்த பெண்கள் கல்லூரிதான்!

ஆனாலும், அதனுள் காலடி எடுத்து வைக்கும்போதே நடுங்கிற்று.

''எக்ஸ்க்யூஸ்மீ... பிபிஏ ஃபைனல் இயர் க்ளாஸ் ரூம் எங்கே இருக்கு?'' எதிர்ப்பட்ட மாணவியை நிறுத்திக் கேட்டாள்.

அவளை ஏற இறங்கப் பார்த்தவள், ''நியூ அட்மிஷனா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்!''

''அதோ... அந்த பில்டிங்லே செகண்ட் அப்ஸ்டயர்!''

''தாங்க்யூ...!'' அடுத்த விநாடி வேகமாய் அந்த பில்டிங் நோக்கி நடந்தாள்.

வகுப்பறையின் வாசலில் நின்றாள்.

லெக்சரர் பாடம் நடத்திக் கொண்டிருந்தாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ மேடம்!''

''கம்மின்?''



தேஜஸ்வினி அவளிடம் அட்மிஷன் கடிதத்தைக் கொடுத்தாள்.

''போய் உட்கார். அதற்குமுன் க்ளாஸ் ரூமுக்குள் பர்தா போட்டு வர அனுமதியில்லை'' என்றாள்.

அடுத்த நிமிடம் அந்த கறுப்பு நிற அங்கியை கழற்றி கையில் வைத்துக் கொண்டாள்.

லெக்சரர் உட்பட வகுப்பு மொத்தமும் அவளைப்பார்த்து திகைத்தது.

அந்த சூழ்நிலையை மாற்ற எண்ணிய லெக்சரர் ''டியர் ஸ்டூடண்ட்ஸ்... ஷி இஸ் தேஜஸ்வினி. இனி உங்களில் ஒருத்தி. க்ளாப்ஸ்.''

வகுப்பறையே அதிருமளவிற்கு கரவொலி எழுந்தது.

அதுவரை ஆட்கொண்டிருந்த பயம் விலகி தேஜா புன்னகைத்தாள்.

''தேஜஸ்வினி... ப்ளீஸ் கம்!'' பிரியா எழுந்து நின்று தன் பக்கத்தில் அமர அழைத்தாள்.

## 2



**ம**களின் வருகைக்காக காத்திருந்தாள் பாக்யலஷ்மி.

ஆட்டோவில் வந்திறங்கிய தேஜாவைப் பார்த்ததும் தான் உயிர் வந்தது.

''வா... தேஜா... காலேஜ்ல பிரச்சினை ஒண்ணுமில்லையே!''

பதற்றத்துடன் கேட்ட அம்மாவின் தோளில் கைபோட்டு சிரித்துக் கொண்டே உள்ளே அழைத்து வந்தாள்.

"ஏம்மா பயப்படறே?"

"நீதாண்டி புறப்படும்போதே பயந்து நடுங்கினே?"

"நிஜம்தாம்மா, ஆனா, நான் நினைச்சமாதிரி எதுவும் நடக்கலே. காபி கிடைக்குமா?"

"வந்துட்டேன்!"

கிச்சனுக்குச் சென்றவள் சடுதியில் மணக்க, மணக்க காபியுடன் வந்தாள்.

வாங்கிப் பருகினாள்.

"சொல்லு... அப்புறம்? எல்லாரும் பாசமா பழகினாங்களா?"

"உன் ஆதங்கம் புரியதும்மா! சொல்ல மறந்துட்டேனே! எனக்கு பிரியாங்கிற ஃப்ரண்ட் கிடைச்சிருக்கா. லஞ்ச் அவளோட தான் சாப்பிட்டேன். அவளோட சாப்பாட்டுல எனக்குப் பாதி கொடுத்துட்டு, என் சாப்பாட்டுல அவளே பாதி எடுத்துக்கிட்டா..."

"...."

"அம்மா... உன் கண்ணு கலங்கியிருக்கே... என்னம்மா?"

"ஒண்ணுமில்லே தேஜா... சந்தோஷமாயிருக்கேன்... ரொம்ப நாள் கழிச்சு... வேறொண்ணுமில்லே" நாசூக்காய் முந்தானையில் கண்களை துடைத்துக் கொண்டாள்.

தேஜா நெகிழ்ந்து போனாள்.



தாய் படும் வேதனையை அவளன்றி யார் அறிவார்?

துஷ்யந்த் வேக வேகமாய் நடந்துக் கொண்டிருந்தான். அவள் அவனைவிட வேகமாய் முன்னால் நடந்துக் கொண்டிருந்தாள். சுடிதார் துப்பட்டாவை தலைக்குப் போர்த்தி முகத்தையும் சேர்த்து மறைத்திருந்தாள். அவளும் அவனைத் திரும்பித் திரும்பி பார்த்தபடி நடந்தாள். அவளின் கண்கள் மட்டும்தான் பளிச்சென்று தெரிந்தன.

துஷ்யந்த் நடையை விரைவுப்படுத்தி ஓட... அவள் அவனை விட வேகமாய் ஓடினாள்.

"ஏய்... நில்லு... யார் நீ... நில்லு...!"

"......!" ஓடினாள்.,

"சொல்றேனில்லே? நில்லு...!"

சட்டென ஒரு வளைவில் திரும்பி கணப்பொழுதில் காணாமல் போனாள்.

"சே!" ஏமாற்றத்துடன் நடுத்தெருவில் நின்றான்.

சுற்றிலும் மனித நடமாட்டமேயில்லாத ஏரியா.

"எங்கே போனாள்?" புரியாமல் திகைத்துப் போனான்.

எங்கோ மணியடிக்கும் சப்தம் கேட்டது. இருக்க... இருக்க.. ஓசை மிக அருகில் கேட்டது.

திடுக்கிட்டு கண்விழித்தான்.

ஜன்னல் வழியே கதிரவனின் கதிர்கள் உட்புகத் தயாராகிக் கொண்டிருந்தது.

விடிந்து வெகு நேரமாகிவிட்டது.

பூஜையறையிலிருந்துதான் மணியோசை கேட்டது.

''கனவு! அத்தனையும் கனவு! அதே கனவு!!'

எழுந்து நின்று சோம்பல் முறித்தவனுக்கு ஆச்சர்யமாய் இருந்தது.

கடந்த ஒரு மாதமாய் இதே கனவு அடிக்கடி வந்து கொண்டிருந்தது.

கொஞ்சம்கூட மாற்றமில்லாமல் அதே முக்காடிட்ட பெண், அதே ஓட்டம்!

'ஒரே கனவு திரும்பத் திரும்ப வருமா? எப்படி சாத்தியம்?'

அறையை விட்டு வெளியில் வந்தான்.

பிரியா கையில் பாத்திரத்துடன் கிச்சனை நோக்கிச் சென்றவள் இவனைப் பார்த்ததும் முறுவலித்தாள்.

''குட்மார்னிங்கண்ணா!''

''குட் மார்னிங்... காபி வேணும். பிரஷ் பண்ணிட்டு வந்திடறேன்''

''சரியண்ணா!''

பூஜையறையிலிருந்து கற்பூர வாசனையும், சாம்பிராணி வாசனையும் தவழ்ந்து வந்து மூக்கை ஸ்பரிசித்தது. மெல்லிய குரலில் அம்மா சொன்ன காயத்ரி மந்திரம் மனதை வருடியது.

'அம்மா எப்போதும் இப்படித்தான்! பூஜையறைக்குள் நுழைந்துவிட்டால்... லேசில் வெளியில் வரமாட்டாள். ஆனாலும் கடவுளுக்கு இரக்கமில்லையே! இன்னமும் சோதித்துக் கொண்டுதானே இருக்கிறான்?'



துஷ்யந்த் அம்மாவை எண்ணி கவலைபட்டபடி பாத்ரூமில் நுழைந்து கொண்டான்.

அவன் வருவதற்குள் காபியுடன் தயாராய் இருந்தாள் பிரியா.

''தாங்க்ஸ் பிரியா!'' என்றபடி காபியை பருகியவன் சிந்தனை எங்கோ ஓடியது.

''என்னண்ணா பலமான யோசனை?''

''கனவைப்பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா?''

''எந்தக் கனவைப்பத்தி?''

''பொதுவா கனவுகள் பத்தி!''

''விடியற்காலைல காண்கிற கனவுகள் பலிக்கும்னு சொல்வாங்க. நல்லவிதமான கனவு கண்டா.. அதுக்குப் பிறகு விடியற வரை தூங்கக்கூடாது. கெட்ட கனவுன்னா.. ஒரு டம்ளர் தண்ணீர் குடிச்சிட்டு மறுபடி படுத்திடணும்னு... நான் சொல்லலே... அம்மாதான் சொல்லியிருக்காங்க. பொதுவா நம் ஆழ்மனசுல தங்கியிருக்கிற விஷயங்கள்தான் கனவா வரும்னு படிச்சிருக்கேன்.'' ''ஏண்ணா திடீர்னு கனவைப் பத்தி விசாரிக்கிறீங்க?''

துஷ்யந்த் தனக்கு அடிக்கடி வரும் கனவைப் பற்றிச் சொன்னான்.

பிரியா வியந்தாள்.

''அடிக்கடி வருதா? ஆச்சர்யமாயிருக்கே?''

''அதான் எனக்கும் புரியலே...!''

"நான் நினைக்கிறேன்... கனவுல வர்ற அந்தப் பெண்ணை தான் நீங்க கல்யாணம் பண்ணிக்குவீங்கன்னு..."

"லூஸுமாதிரி உளராதே!"

"இல்லேண்ணா... ஒரு படத்திலேக்கூட விஜய் கனவுல ரம்பா இப்படித்தான்..."

"போதுமே.. உன்கிட்டே கேட்க வந்தேன் பாரு..." என்றபடி தம்ளரை அவள் கையில் கொடுத்துவிட்டு குளிக்கச் சென்றான்.

அவன் குளித்துவிட்டு தலை துவட்டியபடி வந்தபோது எதிரே வந்தாள் அம்மா!

மஞ்சள் பூசிய முகம். குங்குமத்தில் வட்ட வடிவப் பொட்டு, அதற்கு மேல் அம்மன் கோவில் குங்குமத் தீற்றல். வகிட்டு முனையில் சின்ன குங்குமப் பொட்டு.

எவ்வளவு அழகாய் மங்களகரமாய் இருக்கிறாள்?

அம்மாவைப் பார்க்கும் போதெல்லாம் மனசு கசியும் துஷ்யந்துக்கு.

கண்மூடி தெய்வப்படங்களின் முன் அவள் நிற்கும் போதெல்லாம், உதடுகள் முணுமுணுக்கும், கூப்பிய கரங்கள் நடுங்கும், மூடிய கண்களையும் மீறிக் கண்ணீர் வழியும்.

ஏதோ பயம்... அதையும் மீறிய நம்பிக்கை. பிரபாவதியின் ஒவ்வொரு நாட்களும் இப்படித்தான் கழிந்து கொண்டிருந்தன.

"டிரஸ் பண்ணிட்டு வந்துடுப்பா... டிபன் ரெடியாய்டுச்சு!"

"சரிம்மா!"

பத்து நிமிடத்தில் துஷ்யந்த் வந்துவிட, மகனுக்கும், மகளுக்குமாய் பரிமாறினாள் பிரபாவதி.



"அம்மா... ஒரே மாதிரி கனவு திரும்பத் திரும்ப வந்தா என்ன அர்த்தம்?" என்று கேட்டாள் பிரியா.

"ஏய்..." என்று மெல்ல அதட்டினான் துஷ்யந்த்

"அடிக்கடி வந்தா பலிக்கும்னு சொல்வாங்க. ஏன் கேட்கிறே?"

"என் ஃப்ரண்ட் கேட்கச் சொன்னா! சூடா இன்னொரு தோசை வேணும்..."

"கொண்டு வர்றேன்!" என்று பிரபாவதி நகர்ந்ததும் பிரியா அண்ணனைக் குறும்புடன் பார்த்தாள்.

"அம்மாவே சொல்லிட்டாங்க.. கனவுல வர்றது என் அண்ணிதான்!"

"உதைப்படப் போகிறே... வாயை மூடு!"

பிரபாவதி மகன் தட்டிலும் ஒரு தோசையைப் போட்டாள்.

"எதுக்கும்மா... போதும்..."

"சாப்பிடுப்பா... ஒரு தோசைய அதிகமா சாப்பிடறதால என்னாகிடப் போகுது?"

"....!"

"துஷ்யந்த்.." என்றாள் தயக்கத்துடன்.

"என்னம்மா?"

"இன்னைக்கு உங்கப்பாவைப் போய் பார்த்துட்டு வரலாம்னு இருக்கிறேன்!"

"போய் வாம்மா..." என்றான் கனிவுடன்.

''இந்த மாசம் பணம் கட்டனுமேப்பா! போன முறை போனப்பவே கேட்டாங்கப்பா!''

''ரெண்டு நாள்ல எப்படியாவது ஏற்பாடு பண்ணித் தர்றேம்மா!''

''அப்புறம், இன்னொரு விஷயம்!''

''என்னம்மா?''

''நேத்து ஹவுஸ் ஓனர் வந்தாரு!''

''எதுக்கு?'' நாமதான் ஒண்ணாந்தேதியே வாடகைப் பணம் கொடுத்துட்டோமே!''

''அதுக்காக இல்லே... கவர்ன்மெண்ட் உத்தரவு போட்டி ருக்காமே... மழைநீர் சேகரிப்பு குழாய் கட்டனுமாம்! உங்க செலவுல நீங்கதான் கட்டனும்னு சொல்லிட்டுப் போய்ட்டார்!''

''என்னம்மா அநியாயமா இருக்கு? இது அவரோட வீடு. அவர் தானே செலவு பண்ணனும்? அதானே நியாயம்? நான் ஒத்துக்க மாட்டேன்.

''துஷ்யந்த்... அவசரப்படாதே! அந்த மனுஷன் ரொம்ப வீம்பு பிடிச்சவர். மூணு வருஷமா எந்த வரியும் கட்டலையாம். அதனால மழைநீர் தொட்டி வைக்கலேன்னா, சாக்கடை, குடிநீர் எல்லா லைனையும் கார்ப்பரேஷன்காரனே வந்து கட் பண்ணிடு வான். அப்படின்னா பரவாயில்லையான்னு கேட்டுட்டுப் போறார்.''

''இதென்னம்மா பகல் கொள்ளையா இருக்கே? கொஞ்சம் விட்டா வரிப்பணத்தையெல்லாம் நீங்கதான் கட்டனும்னு சொன்னாலும் சொல்லுவார். பேசாம இந்த வீட்டை காலி பண்ணிடலாம்மா!'' என்றான் கோபத்துடன்.



''சரிதான்... ஆனா, இந்த மாதிரி விசாலமான தனி வீடு கிடைக்கிறது கஷ்டம் துஷ்யந்த். காற்று வசதி, தண்ணீர் வசதின்னு இதே மாதிரி கிடைக்காது. இப்பல்லாம் அட்வான்ஸ் பணமே எழுபதாயிரம், எண்பதாயிரம்னு கேட்கிறாங்க. வாடகையும் அதிகம். அந்த தொட்டி கட்ட ஆயிரம் ரூபாதான் செலவாகுமாம். கஷ்டத்தோட கஷ்டமா நாமளே கட்டிட லாம்ப்பா! வீம்பு பண்ணினா... நமக்கு தான் நஷ்டம்!''

துஷ்யந்த் பெருமூச்சு விட்டான்.

''சரிம்மா'' என்றான்.

பிரியா அவனிடம் எதையோ சொல்ல நினைத்துத் தயங்கி அமைதியானாள். கவனித்து விட்டான்.

''என்ன பிரியா... என்னமோ சொல்லனும்னு நினைக்கிறே... என்ன சொல்லு?''

''ஒ... ஒண்ணுமில்லேண்ணா...''

''இந்த வருஷம் ஃபீஸ் கட்டனும்... அதானே?''

''அ..ண்...ணா!'' என்றாள் ஆச்சர்யமாய்.

''எனக்கும் நினைவிருக்கு.. கவலைப்படாதே ரெண்டு நாள்ல தந்துடறேன்!''

''இந்த வீட்டுக்காக ரொம்ப கஷ்டப்படறேண்ணா!'' என்றாள் வருத்தத்துடன்.

''என் குடும்பத்துக்காகன்னு சொல்லு! இது கஷ்டமில்லே... கடமை... புரியுதா?'' என்றபடி ஃகைகழுவ எழுந்தான்.

## 3



யமஹாவில் ஆபீஸ் நோக்கிப் பறந்து கொண்டிருந்தான் துஷ்யந்த்! காற்று அவன் சட்டைக்குள் புகுந்து உப்ப வைத்தது. கேசத்திற்குள் புகுந்து கலைத்தது.

அதுவரை அழுத்திக் கொண்டிருந்த பிரச்சினைகள் காணாமல் போயின. காற்றை நன்றாக உள்ளிழுத்தான். இந்த கணங்களுக்காக ஒவ்வொரு நாளும் காத்திருப்பான் துஷ்யந்த்.

எம்.பி.ஏ. படித்து முடித்த துஷ்யந்த் வீட்டின் மூத்தப் பிள்ளை. அடுத்துப் பிறந்தவள் பிரியா. அம்மா பிரபாவதி. அப்பா சபாபதி என்று சந்தோஷத்திற்கு குறைவில்லாத சின்னஞ்சிறு குடும்பம். சபாபதி ஒரு பிரைவேட் கம்பெனியில் நல்ல வேலையில் இருந்தவர்தான். பெண்ணைப் பெற்று விட்டோமே... கண்ணை மூடித்திறப்பதற்குள் புடலங்காய் போல் வளர்ந்து நிற்பாளே என்ற பயத்தில் அவள் பிறந்தபோதே சேர்க்க ஆரம்பித்த கடமை உணர்வு மிக்க தந்தை.

ஒருநாள் லீவு என்றாலும் குடும்பத்தோடு, கோவில், கடற்கரை, சினிமா என்று அழைத்துச் செல்வார்.

அத்தனை சந்தோஷமும் ஒரு நாள் அட்டாக் போட்டது போல் ஸ்தம்பித்துப் போயின.

அலுவலகம் செல்லும்போது லாரியில் மோதி ஸ்கூட்டர் சிதைந்து, ரத்த சகதியில் சபாபதி தூக்கி எறியப்பட்டார். தவறென்னவோ சபாபதி மீதுதான்.

உயிர் பிழைத்தது அதிசயம். ஆனால், இன்று வரை உணர்வு திரும்பவில்லை. ஒன்றல்ல, இரண்டல்ல பத்து வருடங்கள் ஓடிவிட்டன.



துஷ்யந்திற்கு அப்போது பதினேழு வயது. பிளஸ் டூ படித்துக் கொண்டிருந்தான். கவலையில்லாத பருவம், குரல் உடைந்து, பூனை மீசை அரும்பத் தொடங்கிய இளம் வாலிபப் பருவம், பிரபாவதி தளர்ந்து போய் விடவில்லை. தன்னம்பிக்கையுடன் பிரச்சினைகளை எதிர்கொண்டாள். துஷ்யந்தை படிப்பில் ஈடுபடுத்தினாள். கம்பெனி கொடுத்த பணம் ஆறே மாதத்தில் சபாபதியின் மருத்துவ செலவிற்காக கரைந்து போனது. அதன்பிறகு பிரியாவின் எதிர்காலத்திற்காக சேர்த்து வைத்திருந்த பணத்தைதான் எடுத்து செலவு செய்தாள். பிள்ளைகள் இருவரையும் படிக்க வைத்தாள். விருகம் பாக்கத்தில் வாங்கிப் போட்டிருந்த நிலத்தை விற்று சாப்பாட்டிற்கும், வீட்டு வாடகைக்கும் வட்டிப் பணம் வருமளவிற்கு பேங்கில் போட்டாள்.

சபாபதியின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை. தனியார் ஹாஸ்பிடலின் மருத்துவ செலவை சமாளிக்க முடியவில்லை. அங்குள்ள டாக்டரின் அறிவுரைப்படி கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடலுக்கு கொண்டு போயினர். செலவை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது.

துஷ்யந்த் படிப்பை முடித்து வேலைக்குச் சேர்ந்ததும் குடும்ப பாரத்தை சுமக்க ஆரம்பித்தவன், இன்னும் இறக்கி வைக்கவில்லை. முழுக்கவே அவனை நம்பிதான் குடும்ப வண்டி ஓடிக் கொண்டிருந்தது. மரக்கட்டையாய் அப்பா மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்.

அவனின் சந்தோஷமான தருணங்களை, காளைப் பருவத்தை அதற்குரிய பொழுது போக்குகளில் ஈடுபடுத்தி... உணர்ந்ததில்லை. உழைப்பு.. உழைப்பு... உழைப்பு மட்டுமே அவனின் நேரங்களைத் தின்று கொண்டிருந்தது.

ஒரு தனியார் ஏற்றுமதி கம்பெனியில் கன்ஸல்டன்ட் ஆக பணி புரிகிறான். பத்தாயிரம் சம்பளம். ஆபீஸ் முடிந்து அவன் போகும் இடம் சாய் பிரௌசிங் சென்டருக்குத்தான்! தினமும் கம்ப்யூட்டர் முன்பு உட்கார்ந்தாக வேண்டும் அவனுக்கு. நெட்டில் மேய்ந்தாகணும். நெட்டில் நிறைய ஃப்ரண்ட்ஸ் அவனுக்கு. சென்டர் வைத்து நடத்துபவன் துஷ்யந்தின் நண்பன். துஷ்யந்த் தன் வீட்டுப் பிரச்சினைகளை கொஞ்ச நேரமாவது மறக்கிறான் என்றால்.. அது இங்கே தான்!

''எனக்கென்னமோ இது சரியாப்படலே!'' என்றாள் பாக்யலஷ்மி.

''இதிலே என்னம்மா இருக்கு? எல்லா விஷயங்களையும் தெரிஞ்சு வச்சுக்கறது நல்லதுதானே? அதுவும் என் படிப்பு சம்பந்தமா நிறைய விஷயங்களை தெரிஞ்சுக்கலாம். நான் என்ன சின்னக் குழந்தையா? இதோ இருக்கு பிரௌசிங் சென்டர். போய்ட்டு வந்திடமாட்டேனா?''

''என்னமோ மனசு கேக்கலே... சரி... பத்திரமா போய் வா!''

''தாங்க்ஸ்ம்மா!''

தேஜாவின் முகத்தில் புன்னகை அரும்பியது.

சாய் பிரௌசிங் சென்டர்!

அவள் வீட்டிலிருந்து நான்கு ஸ்டாப்பிங் தாண்டி இருந்தது.

மூன்று மாடி கட்டிடம் அது!

கீழே ரெடிமேட் கடையொன்றும், டிபார்ட்மென்டல் ஸ்டோர் ஒன்றும், முதல் மாடியில் கிளினிக், அதற்கு பக்கத்தில் பிரௌசிங் சென்டரும் இயங்கிக் கொண்டிருந்தது.



தேஜஸ்வினிக்கு இங்கு வந்துபோவது மனதிற்கு ஒருவித நிம்மதியைத் தந்தது. அங்கு நிறைய ஆண்களும், பெண்களும் வந்து போயினர்!

அன்று!

சென்டரையொட்டிய பால்கனியில் நான்கைந்து இளைஞர்கள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

தேஜஸ்வினி கம்ப்யூட்டரை ஆஃப் பண்ணிவிட்டு, சேரை விட்டு எழுந்தாள்.

''யார்டா அது பர்தா போட்டுக்கிட்டு? ஃபிகர் எப்படி? நால்வரில் ஒருவன் அவளை சற்று தூரத்தில் பார்த்து விட்டு கேட்டான்.

குமார் அதட்டினான்.

''இதோ பார் மோகன். இந்த சைட் அடிக்கிற வேலை எல்லாம் என் சென்டருக்குள்ளே வச்சுக்காதே! ப்ளீஸ்...!''

''ஸாரி... ஸாரிடா!'' உடனடியாக மன்னிப்புக் கேட்டு வேறு பக்கம் முகத்தை திரும்பிக் கொண்டான்.

''கோபியை பத்தி ஏதோ சொல்லணும்னியே... சொல்லு!'' மோகன் பேச்சை மாற்றிய துஷ்யந்தின் தோளில் கையைப் போட்டான்.

''அதைக் கேக்கறியா? விக்னேஷோட ஐ.டி.யைக் குடுத்து... இது உன் கேர்ள் ஃப்ரெண்டோட ஐ.டி.! உன்னைப் பத்தி ஏற்கனவே சொல்லி வச்சிருக்கேன். அவளோட ஃப்ரண்ட்ஷிப் வச்சிக்கறியான்னு கேட்டேன். பையன் அம்பேல்! இ.மெயில்ல லாரி லாரியா ஜொள்ளு விட்டுக்கிட்டு இருக்கிறானாம்.

விக்னேஷ் சொல்லிச் சொல்லி சிரிச்சுக்கிட்டு இருக்கான். லேடீஸ்னா எப்படி அலையறான்ப்பா!'' அடக்க முடியாமல் சிரித்தான் துஷ்யந்த்.

கேஷ் கவுண்ட்டரில் பணத்தை செலுத்திக் கொண்டிருந்த தேஜஸ்வினியின் காதில் இந்தப் பேச்சு விழ... சட்டென அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''போட்டோ பார்க்கணும்னு சொல்லியிருப்பானே கோபி?''

''சொல்லாம இருப்பானா? பயங்கர நச்சரிப்பு! கிட்டத்தட்ட மூணு மாசம் தண்ணி காட்டிட்டு, அவனுக்குத் தெரிஞ்ச சினிமா போட்டோகிராபர்கிட்டே அழகான ஒரு சைடு ஆர்ட்டிஸ்டோட போட்டோவை வாங்கி கோபியை கிறுகிறுக்க வச்சிட்டான்.''

அவர்கள் பேச்சுத் தொடர்ந்தது.

தேஜஸ்வினி பர்தாவின் வழியே அவனையே பார்த்தபடி நடந்தாள்.

பாக்யலஷ்மி மகளை கவனிக்கத் தவறவில்லை.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

''என்ன தேஜா.. பயங்கர யோசனையா?''

''இ...இல்லேம்மா!''

''முகமே சரியில்லையே!''

''புதுசா சொல்றியே...''

அவள் சொன்னதன் அர்த்தம் புரிந்து துடித்துப் போய் விட்டாள்.

''தேஜா... என்ன பேசறே நீ?''



''சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். அதுக்கேன் டென்ஷனாகறே? சரி... டைமாய்டுச்சு... பால் எடுத்துட்டு வாயேன்.... படுக்கப் போகிறேன்!''

பாக்யலஷ்மி அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

தேஜஸ்வினி டிரஸ்ஸிங் டேபிள் மீதிருந்த அவளின் போட்டோவை கையில் எடுத்தா.

மாசு மருவில்லாத அழகான, மென்மையான சருமத்தில் ஆழத்துளைக்கும் காந்த விழிகள், நேர்த்தியான மூக்கு, வடிவான இதழ்கள், ஷாம்பூவில் பளபளத்த கேசம்... மொத்தத்தில் அழகின் மொத்த வடிவமாய் அவள்!

தேஜஸ்வினி தன் உருவத்தை கண்ணாடியில் பார்த்தாள்.

பார்க்கும்போதே 'ஐயோ' என்று பதற்றத்தை எப்போதும் போல் இப்போதும் ஏற்படுத்தியது.

''நானா இது?''

இடதுபக்கக் கன்னப்பகுதி முழுவதும் தீக்காயம் பட்டு கோரமாய் காட்சியளித்தது.

கண்களில் வெள்ளம் பொங்கியது. இதயம் துடித்தது.

'எதற்காக... ஏன் இந்த தண்டனை? என்ன தவறு செய்தேன்?' விசும்பினாள்.

பாலுடன் அறைக்குள் வந்த பாக்யலஷ்மி பதறிப் போய்விட்டாள்.

''தேஜா... என் கண்ணே... என்னடா... ஏன்டா அழறே?''

''பாரும்மா... என் முகத்தைப் பாரும்மா... முடியலேம்மா... என் முகத்தை என்னாலேயே பார்க்க முடியலேம்மா... இந்த

அலங்கோலம், வேதனை, துடிப்பு எல்லாமே சாகும் வரை இருக்குமேம்மா... என்ன பண்ணுவேன் நான்?''

''என் ராஜாத்தி... அழாதேடி, கடவுள் நம்மை கை விட்டுட மாட்டான். எந்த வகையிலாவது உன் மனசு சந்தோஷப்படற மாதிரி ஒரு வழி காட்டுவான். கவலைப்படாதே!'' மகளை தன் தோளில் சாய்த்து விம்மினாள்.

''தேஜா... நான் ஒண்ணு சொன்னா கேப்பியா?''

''ம்...''

''எதுக்காக பர்தா போட்டுக்கிட்டு முகத்தை மூடிக்கணும்? பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணலாம். நம்மக்கிட்டே பணத்துக்குப் பஞ்சமில்லே.. எவ்வளவு ஆனாலும் பிரச்சனையில்லே... என்ன சொல்றே?''

''கொஞ்ச நாள் போகட்டும்... இப்ப வேண்டாம்!''

மகளை ஆச்சர்யமாய் பார்த்தாள் அம்மா.

''உன்னைப் பார்த்தா வியப்பாயிருக்கு தேஜா. முகம் விகாரமாயிருக்குன்னு கண்ணாடியிலே பார்க்கும் போதெல்லாம் துடிச்சுப் போய்டறே. எந்த பொண்ணுமே தான் அழகா இருக்கணும்னு நினைக்கறது இயற்கை. ஒரு பரு வந்தாக்கூட டாக்டரைத் தேடிப்போகிற பொண்ணுங்க நிறையப் பேர் இருக்காங்க. அப்படியிருக்க... உன்னை எத்தனையோ முறை கெஞ்சிக் கூட பார்த்துட்டேன் பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக்கன்னு. எதையாவது சொல்லிச் சமாளிக்கறே... ஏன் தேஜா?''

''காரணம்னு எதுவுமில்லேம்மா... கொஞ்ச நாள் போகட்டும்னு நினைக்கிறேன்... அவ்வளவுதான்!''



''பாக்யலஷ்மின்னு நீங்க பேரை வச்சுக்கிட்டு, உங்க பொண்ணு ஏன் முஸ்லிம் மாதிரி பர்தா போட்டுக்கிட்டு போகணும்னு தெருவிலே உள்ளவங்க எல்லாரும் கேக்கிறாங்க. அவங்க வாயை அடைக்கவாவது...''

''தப்பும்மா.. மத்தவங்களை திருப்திப்படுத்தனும்னு நாம வாழக்கூடாது. ஒரு குறிக்கோளை அடைய நினைக்கிறப்ப... எதிரே வர்ற எதைப் பத்தியும் கவலைப்படக்கூடாது. இப்ப என்ன? கறுப்பு பர்தாவுக்குள்ளே இருக்கிற பொண்ணு எப்படி இருப்பாள்னு தெருவிலே உள்ளவங்களுக்குத் தெரியணும்... அவ்வளவுதானே? நாளைக்கு நான் யார்னு காட்டிடறேன். எத்தனை நாள் தான் மூடி மறைக்க முடியும்?''

''உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலே தேஜா. ஒரே மாதிரி பேசறதில்லே! நீ யாரும் பார்த்திடக்கூடாதுன்னு போர்த்திக் கிட்டவ... இப்ப மட்டும் ஏன் முகத்தைக் காட்டணும்?''

''இப்ப எனக்கு சொல்லத் தெரியலே... போம்மா... போய்ப் படு! என்றாள்... குழப்பமாக.

4



''ஒருநாள் நீ எங்க வீட்டுக்கு வரணும் தேஜா!'' சாப்பிட்டுக் கொண்டே சொன்னாள் பிரியா.

''....!''

''ஹலோ.. நான் உன்கிட்டேதான் பேசிட்டிருக்கேன்!''

அமைதியாய் இருந்தவளை உசுப்பினாள்.

''ஸாரி பிரியா.. நான் யார் வீட்டுக்கும் போறதில்லை. தேவையில்லாத கேள்விகள் வந்து விழும். சங்கடப்பட வேண்டியிருக்கும்... அதனாலதான்... தப்பா நினைச்சுக்காதே! யாரும் என்னைப் பார்த்து பரிதாபப்படக்கூடாது. செத்துப் போய்டுவேன்...'' குரல் உடைந்துபோனது.

''ஹேய்... ஹேய்... என்ன தேஜா இது? ப்ச். கண்ணைத் துடை! நீ இந்த காலேஜுக்கு வந்து சேர்ந்து மூணு மாசமாகுது. நாம க்ளோசாப் பழகறோம். ஆனா, ஒரு நாளாவது ஏன் இப்படி ஆச்சுன்னு? கேட்டிருப்பேனா? உன் மனசைப் புரியாதவளா நான்? அப்புறம் நாம பழகறதுக்கு அர்த்தமே இல்லையே! சொல்லக்கூடிய விஷயமா இருந்தா நீயே சொல்லியிருப்பியே! வேதனைகளை மறக்கத்தானே ஊரைவிட்டு இங்கே வந்திருக்கே? புரிஞ்சுக்க மாட்டேனா தேஜா? இப்ப மட்டுமில்லே எப்பவும் கேட்க மாட்டேன். எங்க வீட்லேயும் யாரும் கேட்க மாட்டாங்க. அவங்க என்னைவிட நல்லவங்க...''

''ஸாரி பிரியா... உன்னைத் தப்பா புரிஞ்சுக்கிட்டதுக்கு...!''

''ஸாரி கேட்கறதுக்கு பதில் எங்க வீட்டுக்கு வந்தா ரொம்ப சந்தோஷப்படுவேன்.''

''சரி... ஆனா. இப்பயில்லே... கொஞ்சநாள் போகட்டும்.. கண்டிப்பாக வர்றேன்.''

''தாங்க்ஸ் தேஜா!'' இடக்கையால் அவள் தோளை மென்மையாய் அழுத்தினாள்.

அம்மாவைப் பார்த்ததும் துணுக்குற்றாள் தேஜா.

முகமும், கண்களும் அழுதழுது சிவந்துப் போயிருந்தது.

''அம்மா!''



''இந்தா காபி!'' எதுவும் பேசாமல் இயந்திரம்போல் கோப்பையை நீட்டினாள்.

''காபி இருக்கட்டும். என்னாச்சு உனக்கு? உடம்பு சரியில்லையா?''

''....''

''ஏம்மா உன் கண்ணெல்லாம் கலங்குது?''

''முடியலேடி... எல்லாத்தையும் மறக்கணும்னு இங்கே வந்தோம்... ஆனா முடியலே..''

''என்னாச்சும்மா?''

''இன்னைக்கு நீ பர்தா போடாம போனேயில்லையா? நீ போனதுக்கப்புறம் தெருவிலே உள்ளவங்களெல்லாம் துக்கம் விசாரிக்கிற மாதிரி.. .என்கிட்டே வந்து...''

''புரியுதும்மா.. நான் எதிர்பார்த்ததுதான். அதுக்கேன் உடைஞ்சு போகிறே?''

''மனசு உடைஞ்சு போகுது தேஜா! என்னால காரணத்தைச் சொல்ல முடியலே. சொல்லாததால் இவங்கள்லாம் பலவிதமா கற்பனை பண்ணிக்க வாய்ப்பிருக்கு இல்லையா?''

''.....''

''இதுக்குதாண்டி சொன்னேன்... பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக்கன்னு...''

''அம்மா... என் படிப்பு முடியட்டும். அதுக்குப்பிறகு கண்டிப்பா பண்ணிக்கறேன். பண்ணிக்கிட்டபிறகு இந்த வீட்டை வாடகைக்கு விட்டுட்டு வேற வீட்டுக்குப் போய்டலாம். சரியா?''

''அதென்ன படிப்பு முடியறவரை?''

''ஒழுங்கா படிச்சு பாஸாக வேண்டாமா? ஒரு பெரிய லட்சியமே வச்சிருக்கேன். அதிலே ஜெயிக்கணும்... அதுக்கு தான்!'' விகாரமான கன்னத் தசைகள் துடித்தன.

''அட... துஷ்யந்த்.. நீ எங்கே இங்கே?'' மாடிப்படியில் இறங்கிக் கொண்டிருந்த துஷ்யந்தை எதிர்ப்பட்ட வெங்கட் ஆச்சர்யமாய் கேட்டான்.

இருவரும் ஒரே க்ளாஸ்மேட்!

''ஹாய் வெங்கட்... வாட் எ சர்ப்பரைஸ்? எத்தனை வருஷமாச்சுல்ல பார்த்து? நீ இங்கே எப்படி?''

''ஒரு விஷயமா டாக்டரைப் பார்க்க வந்தேன்! நீ!''

''பிரௌஸிங் சென்டருக்கு வந்தேன்! டெய்லி வருவேன். எங்கே ஓர்க் பண்றே? இல்லே பிஸினஸா?''

இருவரும் பரஸ்பரம் தங்கள் வேலை, குடும்பம் என்று பேசி முடித்து, துஷ்யந்த் தன் பர்ஸைத் திறந்து விசிட்டிங் கார்டு எடுத்தான்.

''இதுதான் என் வீட்டு அட்ரஸ், அவசியம் ஒருநாள் கால் பண்ணிட்டு வீட்டுக்கு வா வெங்கட்!''

''ஷ்யூர்.. டாக்டர் வெய்ட் பண்ணிட்டிருப்பார்.''

''ஓக்கேடா.. எனக்கும் வெளியிலே முக்கியமான வேலையிருக்கு... பை... ஸீ யூ!''

வெங்கட் மேலேற, துஷ்யந்த் கீழிறங்கிப் போய் விட...

மெல்லப் படியேறிக் கொண்டிருந்த தேஜஸ்வினி கீழே குனிந்து அதை எடுத்தாள்.



வெங்கட்டிற்குக் கொடுப்பதற்காக உருவியபோது நழுவிக் கீழே விழுந்த விசிட்டிங் கார்டு!

தேஜாவின் உதடுகள் புன்னகையில் விரிந்தன.

துஷ்யந்த் கண்விழித்தபோது கிச்சனில் பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்டது.

படுக்கையை விட்டு எழுந்து தினசரி காலண்டரில் ஒரு தாளை கிழித்தெறிந்தான்.

வெள்ளிக்கிழமை! பிரியாவிடம் காபிக்காகச் சென்றவன் ஆச்சர்யமாய் பார்த்தான்.

இந்த நேரத்தில் பூஜையறை ஊதுபத்தி, சாம்பிராணி மணம் கமழ, ஜெகஜோதியாய் இருக்கும். ஆனால் விளக்குக்கூட ஏற்றப்படாமல் வெறுமையாய் இருந்தது.

''பிரியா?''

''என்னண்ணா? எந்திரிச்சிட்டியா? பிரஷ் பண்ணிட்டு வந்திடு, காபி தர்றேன்!''

''அம்மா எங்கே?''

''தூங்கறாங்க!''

''இன்னுமா எந்திரிக்கலே?'' என்றான் வியப்பாய்.

''அம்மா நைட்டெல்லாம் தூங்கவேயில்லேண்ணா! வீஸிங் ப்ராப்ளம், போதாதுக்கு ஃபீவர் வேற!''

''என்னது? ஏன் என்கிட்டே சொல்லலே?''

''அம்மாதான் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு தடுத்திட் டாங்க!''

''அதுக்காக நீயும் சும்மா இருந்திட்டியா?'' தங்கையை கோபமாய் முறைத்துவிட்டு அம்மாவின் அறையை நோக்கிச் சென்றான்.

போர்த்திக் கொண்டு படுத்திருந்தாள் பிரபாவதி.

தொட்டுப் பார்த்தான். அனலாய் கொதித்தது.

மகனின் ஸ்பரிசத்தில் கண்விழித்தாள்.

''என்னம்மா? நீ உடம்புக்கு முடியாதப்ப என்கிட்டே சொல்றதுக்கென்ன? உடம்பு எப்படி கொதிக்குது பாரு!''

''நீ ரெஸ்ட் எடுக்கறதே நைட்லதானே? எழுப்ப மனசு வரலேப்பா! எனக்கொன்னுமில்லே... மெடிக்கல் ஷாப்ல இரண்டு வேளை மாத்திரை வாங்கிப் போட்டுக்கிட்டா சரியாப் போய்டும்!''

''அந்தக் கதையெல்லாம் வேண்டாம். நீங்க ரெடியா இருங்க. நான் குளிச்சிட்டு வந்திடறேன். ஹாஸ்பிடலுக்குப் போகலாம்!''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் துஷ்யந்த்... நான் சொல்றதை...

''இதை சொல்றதுக்கே எப்படி மூச்சு வாங்குது பாரு! உன் பேச்சைக் கேட்கறதாயில்லே... கிளம்பு!'' என்றவன் விரைந்து செயல்பட்டான்.

''பிரியா.. இன்னைக்கு ஒரு நாள் காலேஜுக்கு லீவு போட்டுடேன்! அம்மாகூட இரு!''

''டெஸ்ட் இருக்குதுண்ணா... வேனும்னா ஆஃப்டே லீவுப் போட்டுட்டு வந்திடறேன்!''



''அப்படியா?'' என்று யோசித்தவன், ''சரி, நீ லீவுப் போட வேணாம். படிப்பும் முக்கியம். எனக்கு ஆபீஸ்லே முக்கிய மான வேலையிருக்கு. அதை முடிச்சிட்டு வீட்டுக்கு வந்திட றேன். ஆமா... கையிலே பையோட நீ எங்கே கிளம்பறே?''

''சமையலுக்கு கொஞ்சம் காய்கறி வாங்க வேண்டியிருக்கு... வாங்கிட்டு வந்திடறேன்!''

''அதுக்காக மார்க்கெட்டுக்கு நீ கிளம்பிட்டியா? கொடு இப்படி?''

''அண்ணா...''

''ப்ச்... கொடு! அந்த ஆட்டோமொபைல் வொர்க் ஷாப் தாண்டிதான் மார்க்கெட்டுக்குப் போயாகணும். பொறுக்கிப் பசங்க வேற வேலையில்லாம போற வர்றப் பொண்ணுங்களை கிண்டல் பண்ணிக்கிட்டிருக்கானுங்க. சரிப்பட்டு வராது... நானே போய்ட்டு வந்திடறேன்'' அவளிடமிருந்து பையை பிடுங்கிக் கொண்டு... அடுத்த நிமிடம் பைக்கில் பறந்தான்.

பிரியா அண்ணனை பெருமிதமாய் பார்த்துக் கொண்டி ருந்தாள்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் காய்கறிகளோடு வந்தான்.

அவனே காய்கறிகளை நறுக்கித்தர மதியத்திற்கு பிரியா சமைத்து முடித்தாள்.

''இப்ப என்ன டிபன்?''

''சப்பாத்திப் பண்ணட்டும்மாண்ணா?''

''உனக்கு டைமாய்டுச்சு... நீ போய் குளிச்சிட்டு ரெடியாகு. நான் டிபன் பண்றேன்!''

''நீங்களா?'' என்றாள் விழிகள் விரிய.

''ஏன்... நம்பிக்கையில்லையா? நீ போ முதல்ல... சாப்பிட்டுட்டு பிறகு சொல்லு!''

அவளை அனுப்பிவிட்டு கிச்சனில் பாத்திரங்களைப் போட்டு உருட்டினான்.

அவனும் குளித்து முடித்து அம்மாவை ஆட்டோவில் டாக்டரிடம் அழைத்துச் சென்றான்.

போய் வந்து அம்மாவை சாப்பிட வைத்து அவனே மாத்திரைகளைப் புகட்டிவிட்டு நிமிர்ந்த போது மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்து.

''மதியம் வந்திடறேன்ம்மா! அவசரம்ன்னா உடனே போன் பண்ணு... நான் புறப்படறேன்!''

''சரிப்பா... நீ சாப்பிடலே?''

''நேரமில்லேம்மா... வர்றேன்!'' அவசர அவசரமாய் புறப்பட்டான்.

பிரபாவதி நெகிழ்ந்து போனாள்.

'என் பிள்ளைய நானும் கஷ்டப்படுத்தறேனே!'

டிபன் பாக்ஸை திறந்து மூடியில் நூடுல்ஸை வைத்து தேஜாவிடம் தந்தாள் பிரியா.

''எனக்கு நூடுல்ஸ் பிடிக்காதே!''

''எனக்காக கொஞ்சம் சாப்பிடேன்!''



அவள் வற்புறுத்தலுக்காக ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் வைத்தவள் முகம் மாறினாள்.

''டேஸ்ட்டி...'' என்றபடி ஆவலாய் எடுத்தெடுத்து சாப்பிட்டாள்.

''எனக்கு நூடுல்ஸே பிடிக்காது... இது ரொம்ப நல்லா யிருக்கே... உங்கம்மா நல்லா சமைக்கிறாங்க.''

''இது எங்கம்மா சமைக்கலே!''

''பின்னே? நீயா?''

''எங்கண்ணன்!''

''உங்கண்ணனா?''

''ஆமாம்! எங்கண்ணனுக்கு நான்னா உயிர். அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னதும் எல்லா வேலையும் இழுத்துப் போட்டு செஞ்சதுமில்லாம எனக்காக இந்த டிபனும் செஞ்சிக் கொடுத்தார். அவரோட அன்பும் கலந்திருக்கிறதாலதான் இது அவ்வளவு டேஸ்ட்டாயிருக்கு. இப்படியொரு அண்ணன் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும் தேஜா!''

தேஜஸ்வினியின் முகம் களையிழந்தது.

## 5



தேஜஸ்வினி வியர்வையில் குளித்திருந்தாள். கைகளெல்லாம் மண் அப்பியிருந்தது.

தொட்டியை நகர்த்துவதும், வேறு தொட்டியில் செடியை மாற்றி வைப்பதும் என்று பிஸியாக இருந்தாள்.

பாக்யலஷ்மி கன்னத்தில் கையை வைத்தபடி மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வெள்ளை ரோஜாச் செடியை பெரிய தொட்டியில் வைத்து, உரம்போட்டு சுவரோரமாய் நகர்த்தியவள் அம்மாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''என்னம்மா என்னையே பார்த்துக்கிட்டிருக்கே?''

''எதுக்கு உனக்கு இந்த வேண்டாத வேலை? லீவு நாள் தானே... நல்லா ரெஸ்ட் எடு. இல்லேன்னா எங்கேயாவது போய் வா!''

''ப்ச்! பர்தாவை மாட்டிக்கிட்டு அலையறது அவஸ்தையா இருக்கும்மா! இந்த வேலையாவது உருப்படியா செய்யலாம்னு தான். ஆமா, உனக்குதான் கார்டனிங்னா ரொம்பப் பிடிக்கும்! மதுரையிலே நம் பங்களாவுல ரெண்டு தோட்டக்காரனைப் போட்டு பராமரிச்சியே! ரோஜாப்பூ என்ன பெரிய அழகு? என் பொண்ணு அழகுக்கு ஈடாகுமான்னு சொல்வியே அடிக்கடி? இப்ப என்ன சலிச்சுக்கறே?''

''...''

''எனக்குப் புரிஞ்சு போச்சு, ''

''என்ன?''

''உன் பொண்ணு இப்ப கோரமாய்ட்டா! ரோஜாவோட அழகைப் பார்க்கிறப்ப... உன்னால ஜீரணிக்க முடியலே... அப்படித்தானே?

''என்ன தேஜா? நானும் பார்த்துக்கிட்டுதான் இருக்கேன். இப்பல்லாம் நீ பேசறதே சரியில்லையே! பேச்சல்லாம் குதர்க்கமா வருது. என் பொண்ணு எப்பவுமே அழகுதான்.



பிரச்சனைகளை பெரிசா கற்பனை பண்ணி உனக்கு நீயே மருகிட்டிருக்காதே! எல்லாப் பிரச்னைக்கும் தீர்வு இருக்கு. உன் சந்தோஷத்தைப் பார்த்து நான் சந்தோஷப்படணும்னுதான் இங்கே வந்ததே! உன்கிட்டே ஏதோ ஒரு மாறுதல் தெரியுது தேஜா! வெறும் ரோஜாச் செடியா வாங்கி வந்திருக்கே! ஒரு ஆளைப்போட்டா அவன் செய்ய மாட்டானா? ரோஜா முள் உன் கை கால்ல குத்தி கிழிச்சிடப் போகுதேன்ங்கற ஆதங்கத்துல சொன்னா, அதுக்கு ஆயிரம் விளக்கம் சொல்றே!'' சொல்லி விட்டு பெருமூச்சுடன் உள்ளே எழுந்து சென்றாள்.

தேஜா தடுக்கவில்லை என்றாலும் வருத்தப்பட்டாள்.

'ஸாரிம்மா... உன் மனசை புண்படுத்தறேன்னு நல்லாவே தெரியுது. கொஞ்ச நாளைக்கு இதை நீ பொறுத்துதான் ஆகணும். நான் பழைய தேஜா இல்லே. எனக்குள்ளே பழிவாங்கற குணம் வந்திருக்கு. இதழ்கள் உதிர்ந்த ரோஜாவை யாரும் விரும்பற தில்லே. அதே போலதாம்மா நானும் இந்த தேஜாவை யாரும் விரும்ப மாட்டாங்க. 'அதோ பூச்சாண்டி வருதுன்னு' குழந்தையை பயமுறுத்தி சாப்பாடு ஊட்ட நான் பயன்படு வேன். காரணம் யார்? விடமாட்டேன்ம்மா! நம்ம வீட்லே நடந்த அநியாயம் இன்னொரு வீட்லே நடக்கணும். அது யார் வீட்லேங்கறதை நான் முடிவு பண்ணிட்டேன்' சுண்டு விரலில் முள்குத்தி ரத்தம் கசிந்ததுகூட உறைக்கவில்லை தேஜாவுக்கு.

பார்க்கிங் பகுதியில் தன் பைக்கை செருகிவிட்டு மூன்றாவது மாடி நோக்கிச் சென்றான் துஷ்யந்த்.

பரிச்சயமான நர்ஸ் ஒருத்தி புன்னகைத்து விட்டு ஒரு வார்டுக்குள் புகுந்து கொண்டாள்.

டெட்டால் வாசத்தையும் மீறி ஒருவித வீச்சம் மூக்கைப் பொத்திக் கொள்ளச் செய்தது.

துஷ்யந்த் எட்டாம் வார்டுக்குள் நுழைந்தான்.

''வாங்க சார்... பார்த்து நாளாச்சு!'' ட்ரேயில் மருந்து பாட்டில்களை அடுக்கியபடி கேட்டாள் இளம் நர்ஸ் ஒருத்தி.

''போன வாரம் வந்தேனே... நீங்க நைட் ட்யூட்டியிலே இருக்கீங்கன்னு சொன்னாங்க. மேரி சிஸ்டர் எங்கே?''

''இங்கேதான் இருக்கேன்... வாப்பா! வார்டுக்குள் நுழைந்துக் கொண்டிருந்த மேரிக்கும் நாற்பத்தைந்து வயது இருக்கும். பருமனாய் இருந்தாள். முகத்தில் எந்நேரமும் சிரிப்பு ஒட்டிக் கொண்டிருந்தது.

''குட் ஈவ்னிங் சிஸ்டர்!''

''குட் ஈவ்னிங்... எப்படிப் போய்ட்டிருக்கு உன் ஜாப்?''

''வெரி நைஸ்!''

''அம்மா எப்படியிருக்காங்க துஷ்யந்த்?''

''ஒரு வாரமா உடம்பு சரியில்லே!''

''அவங்களை அடிக்கடி வரவிடாதே துஷ்யந்த்!''

''ஏன் சிஸ்டர்?'' துணுக்குற்றான்.

''ரொம்ப உடைஞ்சு போய்டறாங்க துஷ்யந்த். உங்கப்பாவை பார்த்துட்டு அழறாங்க. எந்த மனைவியாலும் தாங்கிக்க முடியாத விஷயம்தான். ஆனா, அவங்களும் பலகீனமா கிட்டே வர்றாங்க. அதுக்காகத்தான் சொல்றேன்.''



''அப்பாவை பார்க்கப் போகாதேம்மான்னு நான் எப்படி சிஸ்டர்... சொல்ல முடியும்? சிஸ்டர்... அப்பாவைப் பார்க்கணும்!''

''வாப்பா... அதுக்குத் தானே வந்திருக்கே?'' அவனை ஒரு தனியறைக்கு அழைத்துச் சென்றாள்.

நீண்ட நெடியதொரு உருவம் குச்சிப்போல் மெலிந்து படுத்திருக்க... உடம்பெங்கும் ஏதேதோ ட்யூப்கள் செருகப் பட்டு... சுவாசம் சீராக இயங்கிக் கொண்டிருப்பதற்கு அடையாளமாய் மார்புக்கூடு மெல்ல ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

பத்து வருடத்திற்கு முன்பு ஆஜானுபாகுவான கம்பீரமாய் வளைய வந்த அப்பாவா இவர்? நம்ப முடியவில்லை.

கண்கள் கலங்கின.

''சிஸ்டர்.. அப்பாவுக்கு இப்ப எப்படி இருக்கு?''

''எந்த முன்னேற்றமும் இல்லேன்னு சொல்லவே கஷ்டமா இருக்குப்பா!''

''அப்பா பழையபடி எங்களுக்கு கிடைக்க மாட்டாரா?''

''வாய்ப்பில்லேன்னுதான் சொல்வேன்! அவர் மூச்சு விடறதுகூட இந்த ட்யூப்பாலதான்! அவர் இன்னும் அவஸ்தைப்படணுமா துஷ்யந்த்?''

''என்ன சொல்றீங்க சிஸ்டர்?''

''ஒரு ஆடோ, கோழியோ வண்டியிலே அடிபட்டு துடிதுடிச்சா நம்ம மனசு பதறலே? அதைவிட மோசமான நிலைமையிலே உங்கப்பாயிருக்கார். இதுவும் உயிர் வதை தான். அதைவிட பெஸ்ட், கருணை அடிப்படையிலே...''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குப் புரியது சிஸ்டர்., தயவு செய்து உங்க வாயால் அப்படி சொல்லாதீங்க. அப்பா உயிரோடு இருக்கிறார் என்கிற உண்மைதான் அம்மாவை நடமாடவிட்டிருக்குது. அவங்களை விதவையாப் பார்க்கிற தைரியம் எனக்கில்லே சிஸ்டர். நூறு வயசானாக்கூடப் பரவாயில்லை. எங்கம்மாவோட பூவும் பொட்டும் அழியக் கூடாது. அப்பா இப்படியாவது இருக்கிறாரே என்கிற சந்தோஷம் போதும் சிஸ்டர்!''

மேரி அவனையே நெகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந் தாள்.

சிகரெட் புகைத்தபடி பால்கனியில் நின்றுக் கொண்டிருந்த துஷ்யந்தை பார்த்துவிட்டு கவுண்ட்டரிலிருந்து எழுந்து வந்தான். குமார்.

''என்ன துஷ்யந்த் ஏதாவது ப்ராப்ளமா?''

''சேச்சே!''

''பார்த்தா அப்படித் தெரியலியே! நீ டென்ஷனாயிருக்கும் போதுதானே ஸ்மோக் பண்ணுவே?''

''....!''

''உங்கப்பாவை பார்த்துட்டு வர்றியா?''

சடக்கென நிமிர்ந்து குமாரைப் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கறே? உன்னைப்பத்தி எனக்குத் தெரியாதா? எதெல்லாம் உன்னை பாதிக்கும்? எதெல்லாம் உன்னை சந்தோஷப்படுத்தும்னு எனக்கு நல்லாவே தெரியும். ரிலாக்ஸ் பண்ணிக்க துஷ்யந்த். இதைக் கீழே போடு.'' அவன்



கையிலிருந்து சிகரெட்டைப் பிடுங்கி காலில் போட்டு நசுக்கினான்.

''உள்ளே வா!''

''ப்ச்... நான் வரலே குமார்... மூடு இல்லே!''

''அதை மாத்தத்தானே கூப்பிடறேன்... வா!'' அவன் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான்.

ஒரு கம்ப்யூட்டர் முன்பு அமர்த்தினான்.

''கேரி ஆன்!'' அவன் தோளில் தட்டிக் கொடுத்து விட்டு நகர்ந்தான் குமார்.

கம்ப்யூட்டரையே சிறிது நேரம் வெறித்துப் பார்த்தான்.

சலனமற்ற அப்பாவின் உருவம்தான் தெரிந்தது. அடுத்து அம்மாவின் குங்குமம் இல்லாத முகம்!

தலையை உதறிக் கொண்டான்.

கம்ப்யூட்டரை ஆன் செய்தான்.

கொஞ்ச நேரம் நெட்டில் மேய்ந்தான். கேம் விளையாடி னான்.

கடைசியாய் தனக்கு எதுவும் இ-மெயில் வந்திருக்கிறதா என்று பார்த்தான்.

ஒரே ஒரு மெயில், அதுவும் புதிய நபரிடமிருந்து வந்திருந்தது.

துஷ்யந்த் ஆச்சர்யமாய் பார்த்தான்.

''ஹலோ... என் பெயர் அஸ்வினி.. உங்களுடன் நட்புக் கொள்ள விரும்புகிறேன். விருப்பப்பட்டால் தொடர்புக் கொள்ளுங்கள். என் வெப்சைட் முகவரி...'' என்று ஒரு முகவரியைக் கொடுத்திருந்தாள்.

''யாரிது! அஸ்வினி? புதிய பெயராய் இருக்கிறதே! என் வெப்சைட் அட்ரஸ் இவளுக்கு எப்படிக் கிடைத்தது? இவள் என்று நினைப்பது கூடத் தவறு. இது ஆணாய்கூட இருக்கலாம். எத்தனையோ ஆண்கள் மற்றவர்களை முட்டாளாக்க பெண் பெயரில் மெயில் அனுப்புகிறார்கள். என் கோபியை முட்டாளாக்கவில்லையா?

பதில் அனுப்பலாமா வேண்டாமா?

'இதிலென்ன தயக்கம்? நீயும் விளையாடு, உன்னை முட்டாளாக்க நினைத்தால் நீ அவர்களை முட்டாளாக்கு!'

அதுவரை இருந்த சோர்வெல்லாம் காணாமல் போக... புதிய உத்வேகத்துடன் பட்டனைத் தட்ட ஆரம்பித்தான்.

இனிய புதிய தோழியே!

உங்களுடன் நட்புக் கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், ஒரு கேள்வி, 'என் வெப்சைட் அட்ரஸ் உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று பதில் அனுப்பினான்.

**ம**றுநாளே அவனுக்குப் பதில் கிடைத்தது.

''என்னை உங்கள் தோழியாக ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. நண்பா. நம் நட்பு சற்று வித்தியாசமாய் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எதிர்பாராவிதமாகத்தான் உங்கள் வெப்சைட் அட்ரஸ் கிடைத்தது. எப்படி என்பது சஸ்பென்சாக இருக்கட்டுமே!'' அஸ்வினி.



பதிலைப் பார்த்த துஷ்யந்த் மலர்ந்தான். சந்தேகமேயில்லை. நண்பர்களில் எவனோ ஒருவன்தான் என்னை இப்படி வேண்டுமென்றே கலாய்க்கிறான்.

உடனே பதில் அனுப்பினான்.

டியர் அஸ்வினி!

'நீங்கள் சொல்ல விரும்பாவிட்டாலும் பரவாயில்லை. நானே தெரிந்து கொள்கிறேன். உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன். என்ன செய்கிறீர்கள்? மிஸ்ஸா? மிஸ்ஸஸ்ஸா? உங்களிடம் போனில் பேச ஆசைப்படுகிறேன். இயலுமா?'

அனுப்பியவன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்.

'டேய்.. என்னிடமே விளையாடுகிறாயா? உன்னை யாரென்று கண்டுபிடிக்கவில்லை என்றால் பெயரையே மாற்றிக் கொள்கிறேன்.'

ஆனால், அஸ்வினிடமிருந்து அடுத்த மூன்றாவது நிமிடமே பதில் வந்ததுதான் பெரும் ஆச்சர்யத்தைத் தந்தது.

## 6



டியர் துஷ்யந்த்!

பதில் கிடைத்தது. நன்றி!

நான் மதுரையில் படித்துக் கொண்டிருக்கும் கல்லூரி மாணவி. எனக்கு சில லட்சியங்கள் உண்டு. அது வெற்றி பெறும் வரை திருமணம் செய்து கொள்ளமாட்டேன். நான் மிஸ்ஸா, மிஸஸா என்பதற்கான பதில் இதிலிருந்து கிடைத்திருக்கும். நான் விரைவில் சென்னை வருவேன்.

அப்போது நீங்களே எதிர்பாராதவிதமாய் உங்களிடம் போனில் பேசுவேன். உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்."

- அஸ்வினி.

அதைப் பார்த்ததும் உற்சாகம் தொற்றிக் கொண்டது.

அப்படியானால், இப்போதும் அவளும், அல்லது அவனும் 'சாட்' பண்ணிக் கொண்டிருக்கிறான்.

துஷ்யந்தனும் ரீல் விட்டு பதில் அனுப்பினான்.

பாடப்புத்தகத்தை பிரித்தவளுக்கு மனம் அதில் பதிய மறுத்தது. துஷ்யந்தின் நினைவு வந்தது. வாய் விட்டுச் சிரித்தாள்.

'பைத்தியக்காரன். ஒரே சென்டரில் அவனுக்கு இருபதடி தொலைவிலேயே அமர்ந்து சாட் பண்ணிக் கொண்டிருக்கிறேன். அதையே கண்டுபிடிக்க முடியாதவன் வேறென்ன கண்டு பிடித்து விடுவான்? டேய் துஷ்யந்த். உன்னை விடமாட்டேன். என் வலையில் விழவைப்பேன். நானின்றி வாழவே முடியாது என்ற நிலைமைக்குக் கொண்டு வருவேன். நான் ரொம்ப அழகாக இருப்பேன் என்ற நம்பிக்கையை உருவாக்குவேன். கடைசியாய் என் முகத்தை நேரில் காட்டுவேன். இடிவிழுந்தது போல் இருக்கும் அல்லவா? காதலித்து ஏமாந்தால்... அந்த வலி எப்படி இருக்கும் தெரியுமா? உணர்த்துகிறேன். எந்த ஆணுமே தன் காதலியின் முகம் கோரமாய் இருப்பதை விரும்ப மாட்டான். ஒரு சாதாரண பியூன் வேலை செய்பவன் கூட பத்து பெண் பார்க்கும் படலத்தில் கலந்து கொண்டு அதில் அழகான பெண்ணாய் பார்த்துதான் தேர்ந்தெடுப்பான். நீ சென்சிடிவ் கேரக்டர். சிறு துக்கமும் உன்னைப் பாதிக்கும் என்பதைப் புரிந்து கொண்டேன். என்னால் கிடைக்கப் போகிற அடி... மரண



வலி! அது மட்டும் நிச்சயம். ஏமாற்றியே பழக்கப்பட்டவனுக்கு ஏமாறும்போது கிடைக்கிற வேதனை காலத்துக்கும் மறக்கா தல்லவா?' எதையோ சாதிக்கப் போகிற சந்தோஷம் உடம்பெங்கும் ஓடியது.

துஷ்யந்த் தங்கையிடம் ஒரு பார்சலை நீட்டினான்.

"என்னண்ணா?"

"பிரிச்சுப் பார்."

பார்த்தவளின் கண்கள் விரிந்தன.

"வாவ்... சல்வார்! ரொம்ப அழகாயிருக்கு. தாங்க்ஸ்ண்ணா!"

பிரபாவதி அங்கு வந்தாள்.

"எதுக்குப்பா இதெல்லாம் வாங்கி வர்றே? ஏற்கனவே நிறைய செலவுகள் வேற!"

"அதுக்கென்னம்மா பண்றது? வருஷத்துக்கு ஒருமுறை தானே பிறந்தநாள் வருது? நாளன்னிக்கு இவளுக்கு பர்த் டே அப்பா நல்லாயிருந்தார்னா... இதைவிட கிராண்டா செலபிரேட் பண்ணியிருப்பார். பிரியாவுக்கு அந்தக் குறையே தெரியக் கூடாது. காலேஜ் லைஃப்ங்கிறது கவலையே படக்கூடாத பருவம். நான்தான் அனுபவிக்கலை. என் தங்கையாவது சந்தோஷமா இருக்கட்டுமே. அவளை சந்தோஷமா வச்சுக்கறது என் கடமை இல்லையா? இனிமேல் வரப்போகிற ஒவ்வொரு பர்த் டேயையும் நம்மவரைக்குமாவது ஹாப்பியா கொண்டாடணும்."

"அண்ணா!" நெக்குருக அவனின் மார்பில் சாய்ந்து விம்மினாள் பிரியா.

பிரபாவதியும் கண்களை நாசூக்காய்த் துடைத்துக் கொண்டாள்.

''ஏய்... எதுக்கிப்ப அழறே?''

''அதிர்ஷ்டம் பண்ணியிருக்கேண்ணா... நீ குடியிருந்த வயித்திலே, நானும் குடியிருக்க ரொம்பவே அதிர்ஷ்டம் பண்ணியிருக்கேன்.''

''டைமாய்டுச்சு... காலேஜுக்கு கிளம்பலே?'' பேச்சை மாற்றினான்.

''இதோ... கிளம்பணும்... அப்புறம்... அண்ணா ஒரு ஸ்மால் ரிக்வெஸ்ட்.''

''சொல்லு!''

''என்னோட க்ளோஸ் ஃப்ரண்ட் ஒருத்தி இருக்கா. தேஜான்னு பேரு. அவளை... அவளை என் பர்த்டேக்கு இன்வைட் பண்ணட்டுமா?''

''எதுக்குடி அதெல்லாம்?'' என்றாள் அம்மா.

''விடும்மா... இதென்ன பெரிய விஷயமா? பிரியாவோட சந்தோஷம்தான் முக்கியம். ஒரு ஃப்ரெண்டென்ன பத்து பேரைக்கூட அழைச்சிட்டு வா!''

''தாங்க்ஸ்ண்ணா... ஆனா, அவ ஒருத்தியை மட்டும் தான் அழைச்சிட்டு வருவேன்.''

''ஜமாய்.''

''அவ ரொம்ப பாவம்ண்ணா! பார்க்கும்போதே உங்களுக்குத் தெரியும். ஆனா, அவளைப் பார்த்து யாரும் பரிதாபப் படறதை விரும்பமாட்டா, ஒரு ஆக்ஸிடன்ட்ல முகத்துல



ஒருபக்கம் டேமேஜ் ஆகியிருக்கும். அதனால, அதுபத்தி யாரும் அவகிட்டே பரிதாபப்பட்டு விசாரிக்காதீங்க...''

''உன் ஃப்ரெண்டை நான் பார்க்கவே மாட்டேன் போதுமா? பார்த்தாதானே அவங்களுக்குச் சங்கடம். உன் கோரிக்கையை அம்மாகிட்டே சொல்லி வை...'' என்று தன்னறை நோக்கிச் சென்றான்.

''என்னாச்சாம் அந்தப் பொண்ணுக்கு?'' ஆர்வமாய் விசாரித்தாள் அம்மா.

''எனக்கே தெரியாதும்மா. நானே கேட்டதில்லை. ஃபயர் ஆக்ஸிடன்ட், அதனால அவமனசு உடைஞ்சு போயிருக்கா. சும்மா வெளிப்பார்வைக்கு சிரிச்சு வளைய வர்றா.''

''ரொம்ப கோரமாயிருப்பாளோ?''

''என்கிட்டே ரொம்ப அன்பாயிருப்பா!'' அம்மாவின் அந்தக் கேள்வியை ரசிக்கப் பிடிக்காமல் அமர்த்தலாய் பதில் கூறிவிட்டு நகர்ந்தாள் பிரியா.

சங்கடமாய் பார்த்தாள் தேஜா.

''இல்லே... வந்து... நான் எப்படி உங்க வீட்டுக்கு...''

''நீ எந்தக் காரணத்தைச் சொன்னாலும் நான் ஏத்துக்கப் போறதில்லை.''

''ப்ளீஸ் பிரியா... நான் சொல்றதை...''

''கேக்கவே போறதில்லை. உன்னை நான் என் குடும்பத்துல ஒருத்தியா நினைக்கிறேன். உன்னைத் தவிர வேற யாரையும் இன்வைட் பண்ணலே. என் பர்த்டே அன்னைக்கு என்னைச் சுத்தி என்னை நேசிக்கிறவங்க இருக்கணும்னு ஆசைப்படறேன். தப்பா தேஜா? நீயும் என்னை நேசிக்கிறவதானே?''

அதற்கு மேலும் தேஜாவினால் மறுக்க முடியவில்லை.

''சரி.. கண்டிப்பா வர்றேன்'' என்றாள்.

பாக்யலஷ்மி சந்தோஷப்பட்டாள்.

ரொம்ப நாள் கழிச்சு மகள் தோழியின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் செல்கிறாளே!

''எனக்குப் போறதுக்கே பிடிக்கலேம்மா. பிரியா ரொம்ப வற்புறுத்தினா.... அதுக்காகத்தான் போறேன்.''

''நீயும் இப்படி எத்தனை நாள் தான் அடைஞ்சுகிடப்பே? இந்த மாதிரி சந்தோஷமா நாலு நிகழ்ச்சியிலே கலந்துக் கிட்டாதான் நல்லது... ஒரு மாறுதலாயிருக்கும்.''

''....''

''போறப்ப. நல்ல ப்ரசென்டேஷன் வாங்கிட்டுப்போ! ஒரு நாளைக்கு அவளை நம்ம வீட்டுக்கு அழைச்சிட்டு வா!''

'ஏன்... உன் பெண்ணிடம் எந்த அசூயையும் இல்லாம பழகறாங்கறதால அவமேலே பாசம் வந்துட்டுதா?' கேட்க நினைத்ததை விழுங்கிக் கொண்டு 'சரிம்மா' என்றாள்.

'ஏனிப்படி. எதற்கும் ஒரு அர்த்தத்தை உருவாக்கிக் கொண்டு அம்மாவிற்கு பதிலடி கொடுத்து வேதனைப் படுத்துகிறேன் அவளுக்கு என் மகிழ்ச்சிதானே சுவாசம்? என் கோபத்தை. இயலாமையை அம்மாவிடம் ஏன் வெளிப்படுத்து கிறேன்? பாவம் அவள்!''

தன்னையே புரிந்து கொள்ள முடியாமல் தவித்தாள் தேஜா.

மிக வேகமாக பைக்கை ஓட்டிச் சென்றான், துஷ்யந்த். காற்றின் அதிவேகத்தில் தலைமுடிகள் எல்லாம் பிய்த்துக்



கொண்டு போய் விடுமோ என்பதுபோல் நெற்கதிர்போல் பின்னோக்கி சாய்ந்திருந்தன.

அப்போதுதான்...

எதிரே அவள் வந்து கொண்டிருந்தாள். நடுரோடில் துப்பட்டாவால் முக்காடிட்டு...

தடுமாறினான் துஷ்யந்த்...

'இவளா? ஐயோ... நடுரோட்டில் வருகிறாளே...!' பதறினான்.

அவளோ கொஞ்சமும் கவலைப்படாமல் வந்து கொண்டிருந்தாள்.

டென்ஷன் கூடியது. பிரேக்கை அழுத்த நினைப்பதற்குள் கீழே இருந்த பெரிய கல்லை கவனியாமல் அதன்மீது மோதி... துஷ்யந்த் அருகிலுள்ள பள்ளத்தினுள் விழுந்தான்.

நல்லவேளை சிராய்ப்புத்தவிர... பெரியதாய் அடிகிடி பட வில்லை.

ஆனால், எரிச்சல் மண்டியது.

'யாரவள்... கொஞ்சம் கூட விவஸ்தையேயன்றி... வண்டி வருவதைப் பற்றிக் கூட கவலைப்படாமல் எதிரே வந்து என் உயிரை வாங்க வந்தாளே! அவளைச் சும்மா விடக்கூடாது!' ஆத்திரத்துடன் எழ முயன்றவனின் முன்னே அழகிய மென்மையான மலர்க்கரமொன்று நீண்டது.

க்யூடெக்ஸ் பளபளத்த நீளமான விரல்கள் துஷ்யந்த் திகைப்புடன் நிமிர்ந்தான்.

துப்பட்டா விலகி ஒரு பக்கம் முகம் தெரிந்தது.

எதிர்பார்க்கவில்லை.

'இப்படியொரு அழகா? தங்கத்தில் வெட்டியெடுத்து செய்யப்பட்ட முகமும், இரண்டு பட்டாம்பூச்சிகளை ஒட்ட வைத்த கண்களுமாய்...' வாயைப் பிளந்தான்.

அவளின் கரத்தைப் பற்றியெழ முற்பட்டபோது உடம் பெங்கும் மின்சாரம் பாய்ந்தது.

தூக்கி வாரிப்போட்டதுபோல் திடுக்கிட்டு விழித்தான் துஷ்யந்த்.

கனவு! மறுபடியும் அவள், ஆனால் இம்முறை சற்று முன்னேற்றம். கொஞ்சமாய் அவளின் முகத்தைக் காட்டி விட்டாள்.

வியப்பாய் இருந்தது.

'நிஜமாகவே ஒரு பெண் இவ்வளவு அழகாய் இருக்க முடியுமா? யாரந்தப் பெண்? எதற்காக என் கனவில் அடிக்கடி வருகிறாள்?' அதன்பிறகு அவனால் உறங்க முடியவில்லை.

கேக்கை வைத்து அதன்மீது ஒரு மெழுகுவர்த்தியை வைத்தாள்.

''துஷ்யந்த், நான் ஒண்ணை சொன்னாக் கேப்பியா?'' என்றபடி வந்தாள் பிரபாவதி.

''என்னம்மா?''

''எதுக்காக இந்த மெழுகுவர்த்தி?''

''ஊதி அணைக்கத்தான்!''



''நல்லநாளில் நல்ல நிகழ்ச்சியில் விளக்கை அணைப்பது நம்ம கலாச்சாரத்துக்கு தேவையில்லாத விஷயம். அதற்கு பதிலாக விளக்கை ஏற்றிவைத்து கேக்கை வெட்டலாமே!''

''நல்ல விஷயம்... அப்படியே பண்ணிடலாம். பிரியா ரெடியா? கேக் வெட்டிடலாமா?''

''கொஞ்ச நேரம் வெய்ட் பண்ணுவோம்ண்ணா... தேஜாவும் வந்திடட்டும்!''

அவள் சொல்லி முடிக்கவில்லை... காலிங்பெல் அலறியது.

## 7



''தேஜாவாகதான் இருக்கும்!'' மாடிப்படியிலிருந்து விரைந்திறங்கி வந்தாள் பிரியா.

''விழப்போகிறே... என்ன அவசரம் உனக்கு? இரு...நான் திறக்கிறேன்'' துஷ்யந்த் வாசல் நோக்கிச் சென்றான்.

கதவைத் திறந்தான்.

கேட்டை ஒட்டிப் படர்ந்திருந்த வெற்றிலைக் கொடியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த தேஜஸ்வினியின் வலப்பக்க முகம் துஷ்யந்தின் கண்களை அறைந்தது.

பயங்கர அதிர்ச்சியில் தாக்குண்டவனாய் ஸ்தம்பித்து போனான்.

''இவள்... இவள்.. இவள் தானே என் கனவில் வந்த பெண்?'' அவனால் நம்ப முடியவில்லை.

''ஹாய் தேஜா!''

வெற்றிலைக் கொடியிலிருந்து பார்வையை மீட்டவள் இவர்கள் பக்கம் திரும்பினாள்.

"வெல்கம் தேஜா!"

அவளை முழுக்கப் பார்த்தவன் மறுபடி தாக்குண்டான்.

வலப்பக்க கன்னம் தீக்காயத்தால்... கோரமாய் காட்சியளித்தது.

அப்போதுதான் தேஜஸ்வினியும் அவனைப் பார்த்தாள். அதிர்ந்தாள்.

'இவன்... இவன்... இங்கே எப்படி?'

"உள்ளேவா!" அவள் கைப்பற்றி அழைத்துச் சென்றாள் பிரியா.

"அம்மா... இவ தான் தேஜா! இவங்கதான் எங்கம்மா!"

"வணக்கம்!"

"நல்லாரும்மா! உன்னைப்பத்தி பிரியா அடிக்கடி சொல்லிக் கிட்டிருப்பா!" பரிதாபமாய் பார்த்தாள். அவளை.

"இவர் எங்கண்ணன்... துஷ்யந்த்!"

"அண்ணனா?'

கைகூப்பி வணங்கியவள் தடுமாறினாள்.

அவனோ இவள் முகத்தை விட்டு விழிகளை எடுக்கவில்லை.

'என் கனவில் விடாமல் துரத்தி வந்தவள் நீதானா? முன்பின் பார்த்திராத நீ எப்படி என் கனவில் வந்தாய்? எதற்காக முகத்தை மறைத்து கண்ணாமூச்சி விளையாடினாய்? கனவில் வந்த



உன்னை ஏன் நேரில் சந்திக்க வைத்தான்? ஒருபக்க அழகை மட்டும் காட்டினாயே! இன்னொரு பக்கத்தை மறைத்து வைத்தது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கவா?'

"அண்ணா..." அவனைப்பற்றி உலுக்கினாள் பிரியா.

"அ... என்ன பிரியா?"

"இவதான் என் ஃப்ரண்ட் தேஜா!"

"வணக்கம்ங்க!"

"சரி... ஆரம்பிக்கலாமா?"

கேக்கை நோக்கிச் சென்றாள் பிரியா.

புரண்டு புரண்டு படுத்தாள் தேஜா.

உறக்கம் வருவேனா பார் என்று முரண்டுப் பிடித்தது.

'சே... துஷ்யந்த் பிரியாவின் அண்ணனாமே! என்ன பண்ணலாம்? அவன் ஏன் என்னை அப்படிப் பார்த்தான்? அவன் பார்வையில் ஒரு வித்தியாசம் இருந்ததே! என்ன அது? என்னைப் புதிதாய் பார்ப்பது போல் இல்லையே! முன்னே சந்தித்து... வெகு நாட்கள் கழித்து சந்தித்துக் கொள்ளும்போது வெளிப்படுத்தும் உணர்வையல்லவா அவன் கண்கள் பிரதிபலித்தது? பிரியா நல்லவள். அவளுக்குப் போய் இப்படியொரு அண்ணனா? பிரியா அவனைப் பற்றி நிறையவே சொல்லியிருக்கிறாள். ரொம்ப பாசமாய் இருப்பானாம். மார்க்கெட்டிற்கு கூட அனுப்பமாட்டானாம். ஆனால், அடுத்தவர்கள் வாழ்க்கையை கெடுப்பவனை சும்மா விடலாமா? நட்பு வேறு, லட்சியம் வேறு. பிரியாவிடம் நான் கொண்டிருப்பது நல்ல ஃப்ரண்ட்ஷிப். அதைவிட முக்கியம் என் லட்சியம். விடமாட்டேன். இதுவும் கூட நல்லதுதான்.

உன்னைப் பைத்தியக்காரனாக்குவது... இனி எனக்கு எளிதான காரியம்.

"தேஜாவோட போட்டோவை நீ முன்பு எப்போதாவது என்னிடம் காட்டியிருக்கியா?" சட்டை பட்டனைப் போட்டுக் கொண்டே கேட்டான்.

"இல்லையே... ஏன் கேக்கறே? நானே அவளை போட்டோ வில் பார்த்ததில்லையே!"

"நான் அவளை இதற்கு முன் எங்கோ பார்த்தது போல் இருக்கிறது!" கனவில் வந்தவள் அவள்தான் என்பதை மறைத்தான்.

"சான்ஸே இல்லை. காலேஜ் விட்டால் நேரே வீட்டுக்குத் தான் போவாள்!"

"அவளுக்கு எப்படி ஆக்ஸிடன்ட் ஆச்சு?"

"தெரியலேண்ணா... அவளும் சொல்லலை... நானும் கேக்கலே. தனக்கு இப்படியாய்டுச்சேன்னு இம்ப்ரியாரிட்டி காம்ப்ளக்ஸ் இருக்கு. கூட நானும் அதைப்பத்திக் கேட்டா ரொம்ப வேதனைப் படுவா! பாவம்ண்ணா.. அவளோட... ஒருபக்க முகத்தைப் பார்த்தீங்கன்னா... எவ்வளவு அழகா யிருந்திருக்கான்னு தெரியும். தன் அழகு கெட்டுப் போகறதை எந்தப் பெண்ணாலேயும் ஜீரணிக்க முடியாது. தேஜா எப்படித்தான் தாங்கிக்கிட்டாளோ?"

அன்று முழுக்க துஷ்யந்துக்கு அவளைப் பற்றிய சிந்தனையே ஆட் கொண்டிருந்தது.

துஷ்யந்துக்கு டைரி எழுதும் பழக்கம் உண்டு.



தினமும் இல்லாவிட்டாலும் தன் வாழ்க்கையில் நடக்கும் எதிர்பாராத திருப்பங்களையும், ஆச்சர்யமான விஷயங் களையும் டைரியில் பகிர்ந்துக் கொள்வான்.

இன்று!

என் கனவில் மட்டுமே வந்துக் கொண்டிருந்த பெண்ணை நேரில் சந்தித்தேன். முன்பின் பார்த்திராத ஒரு பெண் கனவில் வருவது ஆச்சர்யம். அவளையே நேரில் சந்திப்பது அதிசயம். அவள் பெயர் தேஜா! அவளைப் பார்த்ததும் பரிதாப உணர்வுதான் ஏற்பட்டது. நிலவின் அழகை அவளின் ஒருபக்க முகத்தில் பார்த்தேன்.

"நான் உங்க வீட்டுக்கு வந்தப்ப உங்கப்பாவைப் பார்க்கவே இல்லையே! உங்கப்பா என்ன பண்றார்?"

திடுமென தேஜா அப்படிக்கேட்டதும் பதில் சொல்ல முடியாமல் திகைத்தாள் பிரியா.

"அது... அது... வந்து அப்பா இங்கே இல்லே!"

"பின்னே?"

"அ... அபுதாபியிலே வேலை பார்க்கிறார். ரெண்டு வருஷத்துக்கு ஒரு முறைதான் இன்டியா வருவார்!" ஏனோ, உண்மையைச் சொல்ல மனசு வரவில்லை.

"அ... சொல்ல மறந்துட்டேனே... எங்கண்ணனுக்கு உன்னை இதுக்கு முன்னாடியே பார்த்த மாதிரி இருக்குதாம்."

"சான்ஸே இல்லை!"

"நானும் இதையேதான் சொன்னேன்! அவ காலேஜ் விட்டா நேரா வீட்டுக்குதான் போவா. வெளியே எங்கேயும், போகமாட்டாள்!"

"ஒருவேளை... உன்னைப் பார்க்க என்னைக்காவது இந்த காலேஜுக்கு வந்திருக்கலாம். அப்ப என்னைப் பார்த்திருக்க லாம்!"

"ம்ஹூம்... எங்கண்ணன் காலேஜ் பக்கமெல்லாம் வரமாட்டார். பிடிக்காது. யாராவது தப்பா ஒரு வார்த்தை சொல்லிடக் கூடாதுங்கறதுல ரொம்ப கவனமாயிருப்பார்."

"ஓஹோ... அவ்ளோ நல்லவரா?" என்றாள் கிண்டலாய்.

"கேலி பண்ணாதே! எங்கண்ணன் மாதிரி ஒரு ஜென்டில்மேனைப் பார்க்கவே முடியாது. எனக்குத் தெரிஞ்சு அவரை மூணு நாலு பொண்ணுங்க லவ் பண்ணாங்க. ஆனா, யாரையும் அவர் ஏறெடுத்தும் பார்க்கலை. குடும்பம் தான் அவருக்கு உலகமே!"

'யாரையும் லவ் பண்ணாத உங்கண்ணன் நிச்சயம் லவ் பண்ணுவான். பைத்தியம் பிடிச்சு அலைவான். அலைய வைக்கிறேன். உங்கண்ணன் எவ்ளோ மோசமானவன்னு புரிய வைக்கிறேன்.'

"என்ன அமைதியாய்ட்டே?"

"நத்திங்!"

"உங்களுக்கு காதல் அனுபவம் உண்டா ஃப்ரண்ட்?"

இ மெயிலில் வந்த அஸ்வினியின் கேள்விக்கு அசந்து போனான். அவனால் இன்னமும் அது பெண்தான் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை.

"அந்த அனுபவமே இதுவரை ஏற்படவில்லை" என்று பதில் தந்தான்.



"நான் நம்பமாட்டேன். ஒவ்வொரு ஆணுக்கும் வாழ்க்கையில் நான்கைந்து காதலிகளாவது இருக்கும். உங்களை தனித்துவம் மிக்க மனிதராக காட்டிக் கொள்ள ஆசைப்படுகிறீர்கள்."

"நீங்கள் நம்பாவிட்டால் எனக்கொன்றும் பாதகமில்லை. நான் தனித்துவம் மிக்கவன்தான். எனக்கென்று சில கொள்கைகள் உண்டு. அதெல்லாம் தெரிந்தால் என்னை இப்படி கிண்டல் பண்ணமாட்டீர்கள்."

"என்ன கொள்கைகள்?"

"என்னை நீங்கள் நல்ல நண்பனாக நினைத்தால்... முதலில் நாம் சந்திக்க வேண்டும். அதன்பிறகு மனசுவிட்டு எல்லாம் சொல்கிறேன்."

"விரைவில் சென்னை வருகிறேன். நானே உங்களைத் தொடர்பு கொள்கிறேன்."

துஷ்யந்த் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான்.

'நிஜமாகவே அவள் பெண்ணென்றால் கண்டிப்பாய் என்னைத் தொடர்பு கொள்வாள். இல்லாவிட்டால் இப்படியே ஏதாவது காரணம் சொல்லி சந்திப்பை தவிர்ப்பாள்(ன்) பார்ப்போம்...!'

தலைமுழுக்க ஓங்கி சம்மட்டியால் அடிப்பதுபோல் பயங்கர வலி. உடல் முழுக்க ஒருவித அவஸ்தை.

அதிகமாய் யோசனையில் ஆழ்ந்தால்... இப்படித்தான் ஆகிவிடுகிறது அடிக்கடி. தன் உடம்பு தன்னுடைய கண்ட்ரோலில் இல்லை என்பது மட்டும் அவளுக்கே புரிந்தது.

எங்காவது வெளியில் சென்று வந்தால் தேவலை என்பது போலத் தோன்ற... உடைமாற்றிக் கொண்டு கிளம்பினாள்.

"எங்கே போகிறே தேஜா?" ஆச்சர்யமாய் கேட்டாள், பாக்யலஷ்மி.

"சும்மா வெளியிலே போய்ட்டு வரலாம்னு... போர் அடிக்குதும்மா!"

"ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் மட்டும்தான் லீவு! இன்னைக்குக் கூட வீட்லே இருக்கப் பிடிக்கலையா?"

"உடனே வந்திடறேன்ம்மா!"

"நீ முன்னே மாதிரி இல்லேடி! ரொம்ப மாறிப் போய்ட்டே. அதுவும் மூணுமாசமா ரொம்பவே மாறிட்டே. என்கிட்டே பேசறது குறைஞ்சு போச்சு. சதா எதையாவது யோசனை பண்ணிட்டிருக்கே. எனக்கு பயமாயிருக்கு தேஜா!"

"நீ நினைக்கிறமாதிரி எதுவுமில்லே. கொஞ்சம் டிஸ்டர்பாயிருக்கேன். புரிஞ்சுக்கம்மா ப்ளீஸ்!" என்று கூறிவிட்டு இறங்கி நடந்தாள்.

இப்போதெல்லாம் அவள் பர்தாயின்றியே வெளியே செல்கிறாள். பிரௌஸிங் சென்டருக்கு மட்டும்தான். துஷ்யந்த் தன்னைக் கண்டு கொள்ளக்கூடாது என்பதற்காக, அணிந்து செல்கிறாள்.

கடற்கரைக்குச் செல்ல வேண்டும் போல் தோன்ற ஆட்டோவில் ஏறிச் சென்றாள்.

ஐந்து நிமிடம் கடந்திருக்கும்.



ஓரிடத்தில் கூட்டம் கூடியிருக்க... முகத்தில் பதற்றம். தேஜா இறங்கி கூட்டத்தை விலக்கிப் பார்த்தாள். அதிர்ந்தாள்.

பிரபாவதி ரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தாள்.

## 8



இப்போது நினைத்தாலும் பகீரென்றிருந்தது. துஷ்யந்துக்கு. அரை மணி நேரம் தாமதித்திருந்தாலும் அம்மாவை உயிரோடு பார்த்திருக்க முடியாது. தேஜா மட்டும் இல்லாவிட்டால்... அம்மா போன இடம் புல் முளைத்திருக்கும். கோவிலுக்குச் சென்ற பிரபாவதியின் மீது லாரி மோதி... ரத்தம் அதிகமாய் வெளியேறிவிட்டதால்... அவசரத்திற்கு தேஜாதான் ரத்தமும் கொடுத்தாள்.

பிரபாவதியின் மனதில் மட்டுமல்ல துஷ்யந்தின் மனதிலும் தேஜா ஆழமாய் பதிந்து போனாள். அவளுடன் பேச வேண்டும் போலிருந்தது. ஏதோ தயக்கம் தடுத்தது. ஆனால், அதையெல்லாம் டைரியில் கொட்டி எழுதினான்.

பிரியா தேஜாவின் கைகளைப் பற்றி கண்களில் வைத்து அழுதபடி நன்றி கூறினாள்.

"எதற்கு பிரியா நன்றி? அவங்க எனக்கும் அம்மா மாதிரி தான்" என்றாள்.

"நீ செய்தது மிகப்பெரிய காரியம் தேஜா!" என்றாள் நெகிழ்ச்சியுடன்.

துஷ்யந்திற்கு இருப்புக் கொள்ளவில்லை. தேஜாவிற்கு நன்றி சொல்லியே ஆக வேண்டும் போலிருந்தது.

முதன்முறையாக கல்லூரி வாசலில் வந்து நின்றான். பிரியா அன்றைக்கு கல்லூரிக்கு வரவில்லை.

தேஜா அவனைப் பார்த்துவிட்டாள்.

உள்ளுக்குள் சிரிப்பு பொங்கியது.

'தன் அண்ணன் ஏக பத்தினி விரதன் என்றாளே, இதோ... இங்கே வந்து தேவுடு காக்கிறானே. இதற்கென்ன பெயராம்?'

அதுவரை இருந்த தைரியமெல்லாம் அவளைப் பார்த்ததும் காணாமல் போனது துஷ்யந்திற்கு. வார்த்தைகள் எச்சிலாய் தொண்டைக்குள் இறங்கியது.

'ஏன்... ஏன்... அவளருகே என்னால் நெருங்க முடியவில்லை? எது என்னைத் தடுக்கிறது?'

அவனைக் கண்டும் காணாதது போல் கூட்டத்தோடு கூட்டமாய் மறைந்து போனாள் தேஜா.

'நண்பனே... நான் சென்னை வந்துவிட்டேன். ஒரிரு மாதங்கள் இங்குதான் இருப்பேன். இன்று நான் உங்களை போனில் தொடர்பு கொள்கிறேன்.

- அஸ்வினி.

மெயிலைப் பார்த்ததும் ஆச்சர்யப்பட்டான்.

'என் போன் நம்பர் உங்களுக்குத் தெரியாதே! பிறகெப்படி என்னிடம் பேசுவீர்கள்?''

- துஷ்யந்.



'என் நம்பரைக் கேட்டீர்கள். தரமாட்டேன் என்றதும், நீங்கள் தரமறுத்தீர்கள். ஆனால், இந்த அஸ்வினி நினைத்ததை சாதிப்பவள். என்னால் உங்கள் நம்பரை கண்டுபிடிக்க முடியும். என் போனுக்காக வெய்ட் பண்ணுங்கள்.'

- அஸ்வினி.

அதன்பிறகு அவளிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. துஷ்யந்த் குழம்பிப் போனான்.

'எப்படி என் நம்பரை கண்டுபிடிப்பாள்? எப்படி சாத்தியம்? பார்ப்போம்!'

சொன்னது போலவே அன்றிரவு ஒன்பது மணிக்கு துஷ்யந்திற்கு போன் வந்தது.

''ஹலோ... கேன் ஐ ஸ்பீக் டு மிஸ்டர் துஷ்யந்த்!'' மிக இனிமையான குரலொன்று பேசியது.

''யெஸ்... ஸ்பீக்கிங்!''

''நலம்... நலமா?''

''நீங்கள்?''

''அஸ்வினி!''

''அ... ஸ்...வி...னி? மை காட்! நம்பவே முடியலை. எப்படிங்க... எப்படி என் நம்பர் கிடைச்சது?'' திகைத்து விட்டான்.

''அதுதான் அஸ்வினி. சொல்லப்போனா உங்களுக்காகவே நான் சென்னை வந்தேன்.''

''தாங்க்ஸ். எப்படி நம்பர் கிடைச்சதுன்னு சொல்லவே இல்லையே!''

''அது சஸ்பென்ஸ். உங்கள் நம்பர் மட்டுமல்ல... உங்களைப் பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்கே தெரியாமல் உங்களை நான் பார்த்தேன்.''

''எ...எப்ப...எப்படி?''

''அதுவும் சஸ்பென்ஸ்!''

''நான் உங்களைப் பார்க்கணுமே!''

''கொஞ்ச நாள் போகட்டுமே!''

பட்டென ரிசீவரை வைத்து விட்டாள்.

துஷ்யந்திற்கு ஆச்சர்யமாக இருந்தது.

'அஸ்வினி... ஆணல்ல, பெண்தான்! எனக்காகவே சென்னை வந்து, நம்பரை கண்டுபிடித்து, எனக்கே தெரியாமல் என்னைப் பார்த்து... எதற்காக இவ்வளவும்? ஒரு பெண் ஆணைப் பற்றி இந்தளவு சிரத்தை எடுத்துக் கொள்கிறாள் என்றால்? இயல்பான நட்பாய்த் தெரியவில்லையே!' யோசித்து... யோசித்து தலைதான் வலித்தது.

அடுத்து... தினமும் அவளிடமிருந்து போன் வந்தது. அவனைப்பற்றி ஒவ்வொரு விஷயமும் குறிப்பிட்டு ஆச்சர்யப் படுத்தினாள். அன்று அவன் அணிந்திருந்த உடையின் நிறத்தையும் சொல்லி அசரவைத்தாள்.

''என்னைப்பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வப்படுகிறீர்களே... ஏன் அஸ்வினி?''

''கால் மீ அஸ்வினி. வாங்க போங்க வேண்டாமே!''

''சரி.. சொல்லுங்க!''



''திரும்பவும் ''.

''ஓ... சாரி... எனக்கு எல்லோரையும் மரியாதையோடு பேசி தான் பழக்கம். சரி... சொல்லு...''

''உங்களைப் பிடிச்சிருக்கு!''

''....!''

''என்ன பேச்சே காணோம்?''

''வீட்டிற்கு வாயேன் அஸ்வினி, எங்க குடும்பத்தை அறிமுகம் செய்து வைக்கிறேன்'' பேச்சை மாற்றினான்.

'தவறுகள் இப்படித்தான் ஆரம்பிக்கிறது' நினைத்தவள் சிரித்துக் கொண்டாள்.

''ஏன் சிரிக்கிறே?''

''சும்மாதான்! அடுத்தமுறை சென்னை வரும்போது வீட்டிற்கு வருகிறேன். பட், இன்னும் இரண்டு நாளில் நாம் சந்திக்கிறோம்.''

''நிஜமாகவா?''

''ம்...''

துஷ்யந்த் ஆர்வமாய் காதிருந்தான்.

''துஷ்யந்த்''

''என்னம்மா?''

''காலையிலே தரகர் வந்து இந்த வரன்களைக் கொடுத்துட்டுப் போனார். பார்த்து எது பிடிச்சிருக்குன்னு சொல்லு!'' பிரபாவதி போட்டோக்கள் அடங்கிய கவரை நீட்டினாள்.

அம்மாவையே பார்த்தான்... கவரை வாங்காமல்.

''உனக்கு எத்தனைமுறைதான் சொல்வேன்? பிரியாவுக்கு ஆன பிறகுதான் நான் பண்ணிப்பேன்னு!''

''உனக்கும் வயசாகுதேப்பா.. அவளுக்கு எப்படியும் இன்னும் ரெண்டு வருஷமாகும். ஆக்ஸிடெண்ட் ஆனதி லேர்ந்து என் உடம்பு இன்னும் பலகீனமாகிடுச்சு துஷ்யந்த். உன்னைப் பார்த்துக்க ஒரு ஆள் வேணாமா?''

''அதுக்காக? உடனே கல்யாணம் பண்ணிடணுமா? பிரியாவுக்கு முடியட்டும் பிறகு பார்க்கலாம்.''

''சரி, பிரியாவுக்கு வரன் தேடுவோம். இந்த போட்டோ வெல்லாம் பாரேன். பிடிச்சிருந்தா பேசி வைப்போம்!''

அவனுக்கு அதைப் பார்க்க மனம் வரவில்லை. சங்கடத் துடன் அம்மாவைப் பார்த்தான்.

''என்னப்பா...?''

''அ...அம்மா... நான்... என் மனசுல ஒரு ஐடியா இருக்கு. சொன்னா தப்பா நினைச்சுக்க மாட்டியே!''

''என்னப்பா... சொல்லு?!''

''தேஜாவைப் பத்தி என்ன நினைக்கிறே?''

''யாரு... பிரியாவோட ஃப்ரண்டா?

''ம்...''

''ரொம்ப நல்ல பொண்ணு. எனக்கு உயிர் கொடுத்தவ.''

''அவ இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்னு நினைக்கி றேன்ம்மா!''



''து...ஷ்...ய...ந்...த்! எ...என்னப்பா சொல்றே? அவளையா?''

''ஏம்மா பதர்றே? இப்பதானே சொன்னே? ரொம்ப நல்ல பொண்ணு... என் உயிரைக் காப்பாத்தினவன்னு...''

''அதுக்காக? வாழ்க்கைங்கறது விளையாட்டில்லே... குருடன் கூட் இப்படியொரு முடிவை...''

''ப்ளீஸ்ம்மா... அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி டாதே! உனக்கு உயிரைக் கொடுத்தவளுக்கு நான் வாழ்க்கை தர நினைக்கிறேன். நம்ம பிரியாவோட வயசுதான் அவளுக் கும். பாவம்...அவ மனசுல என்னென்ன ஆசைகளோ? ஒரு பேச்சுக்குச் சொல்றேன். இதுவே நம்ம பிரியாவுக்கு அதே மாதிரி ஆகியிருந்தா எவ்வளவு வருத்தப்பட்டிருப்போம். அவளுக்கு வாழ்க்கை தர முன் வருபவனை எப்படிக் கொண்டாடியிருப்பே? ஏன் நாளைக்கே நமக்கும் இதுபோல் நடந்து முகம் சேதப்படாதுன்னு என்ன நிச்சயம்?''

''....?!''

''எனக்கும் அவளைப் பிடிச்சிருக்கும்மா! சேதமான முகத்தை பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் சரிப்பண்ணிடலாம். அது பெரிய விஷயமல்ல. அவளோட வாழ்ந்தா சந்தோஷமா இருப்பேன்னு நம்பறேன். நீ என்னம்மா சொல்றே?''

''எனக்கு யோசிக்கணும்.''

''ஆனா, சாதகமான பதிலாச் சொல்லும்மா... ப்ளீஸ்..'' கெஞ்சினான்.

பொறுமையிழக்க ஆரம்பித்தான் துஷ்யந்த்.

''ஸ்பென்சர் பிளாசா வாசலில் நில்லுங்கள். நான் வருகிறேன்'' என்று அஸ்வினி, போன் பண்ணி சொல்லி இருந்தாள்.

அவளைப் பார்க்கும் ஆவலுடன் மூன்று மணி நேரமாக காத்திருந்தும்... வரவில்லை.

'வருகிறேன் என்று கூறிவிட்டு ஏன் தவிர்க்கிறாள்? ம்ஹூம்... பொறுமையை சோதிக்கிறாள். என் நேரத்தை வீணாக்குகிறாள். 'என்னிடம் இந்த விளையாட்டை எல்லாம் வைத்துக் கொள்ளாதே!' என்று வார்ன் பண்ண வேண்டும்!' கோபம் சுருசுருவென ஏற... தன் பைக்கை நோக்கிச் சென்றான்.

அப்போது... ஆட்டோவில் ஏறிக் கொண்டிருந்த தேஜாவைப் பார்த்து விட்டான்.

அவளிடம் ஒரு வார்த்தையாவது பேசியே ஆக வேண்டும் என்கிற முடிவுக்கு இரண்டடி எடுத்து வைத்தவன் அப்படியே நின்றான்.

தேஜாவைத் தொடர்ந்து வயதான பெண்மணி ஒருத்தியும் ஆட்டோவில் ஏறினாள்.

தேஜா அவனை ஓரக்கண்ணால் பார்த்து கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

'முட்டாள்... இது ஆரம்பம்தான்! இனிதான் எல்லாமே...'

## 9



அஸ்வினியின் குரலைக் கேட்டதும் வெடித்தான்.

"பாரு அஸ்வினி. எனக்கு நிறைய வேலையிருக்கு. நீ விளையாடறதுக்கு என் நேரங்களை எடுத்துக் கொள்ளாதே! வரச் சொல்லி விட்டு ஏன் வரலே?"



"கோபப்படாதீங்க... நான் வந்தேன்!"

"வந்தாயா?"

"ம்.. ஒரு ஓரமாய் நின்று உங்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். யூ ஆர் லுக்கிங் வெரி ஸ்மார்ட் துஷ்யந்த்!"

"..."

"க்ரீம் கலர் ஷர்ட்டும், பிளாக் கலர் பேண்ட்டும்தானே போட்டிருந்தீர்கள்? அந்த கலர் காம்பினேஷன் உங்களுக்கு ரொம்ப அழகாயிருந்துச்சு."

"...."

"கோபமா? சும்மா ஒரு விளையாட்டுக்காகத்தான் உங்களிடம் என்னை அறிமுகப்படுத்திக்கலை. ஆனால், அடுத்த முறை கண்டிப்பாய் நாம் சந்திக்கிறோம்."

"...."

"உங்களைப் பார்த்ததும் என் மனசுக்குள்ளே ஒரு கவிதை ஓடுச்சு. நாளைக்கு மெயில்ல அனுப்பறேன் படியுங்க. குட் நைட்!"

ஏனோ, அவள் பேசிய விதம், பிரயோகித்த வார்த்தைகள் அவனுக்குப் பிடிக்கவில்லை.

'அவள் போகும் பாதை சரியில்லையே!'

**ம**றுநாள்!

முதல் வேலையாய் தனக்கு மெயில் வந்திருக்கிறதா என்று பார்த்தான்.

அஸ்வினி அனுப்பியிருந்த கவிதை வந்திருந்தது.

விஞ்ஞானத்தின் விபரீதம்

பருவத்தின் மயக்கம் - மனித

மனங்களின் சுருக்கம்

என்...

காதல் வலை

உந்தன்

இதயத்தை திருடும்

ஒளிவலை!

நான்...

கானல் நீரில்

காதலைத் தேடும் - மீனல்ல...

நீ

விரிக்கும் வலையை

இரையாக்கும் மான்!

வலை விரித்தாய்

சிக்கிக் கொண்டது

நீதான்...!

உன்னைச் சுற்றி

என் சுவடுகள்

தொடரும்...!



கவிதைப் படித்தவனுக்கு அஸ்வினியின் மனது தெளிவாகப் புரிந்தது.

'காதலிக்கிறாளா? என்னையா? பைத்தியக்காரி! என்னைப் பற்றி என்ன தெரியும் இவளுக்கு? பழகியவரையில் அவளிடம் தெளிவான மனோபாவம் இல்லை. பதட்டத்துடனே பேச்சு வெளிப்படுகிறது. வாழ்க்கையை விளையாட்டாய் நினைக்கிற நாகரீகப் பெண்! அவள் மனசில் என்னைப்பற்றி இப்படியொரு அபிப்ராயம் எப்போது வந்ததோ, அப்போதே அவளுடனான நட்பை துண்டித்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். பிரௌஸிங் சென்டர் பக்கமே இனி போகக்கூடாது. அஸ்வினியிடமிருந்து போன் வந்தால் சொல்லிவிட வேண்டியதுதான்! 'நீ நினைக்கிற மாதிரியான ஆள் நானில்லை. நீ பேரழகியாய் இருந்தாலும் கூட என் மனசு மாறாது. ஏனென்றால் ஏற்கனவே தேஜா என்கிற தேவதைக்கு என் இதயத்தில் இடம் கொடுத்து விட்டேன் என்று.'

அஸ்வினியிடமிருந்து வரும் போனுக்காக காத்திருந்தான். ஆனால் மூன்று நாட்களாய் அவளிடமிருந்து போனே வரவில்லை.

இ-மெயில் அனுப்பியிருப்பாள். ஆனாலும் அதைப் பார்க்கக் கூடாது என்ற உறுதியுடன் இருந்தான்.

ஆனால், காய்ச்சல் வந்து படுக்கையில் இருந்தாள் தேஜா. அதைக் கேள்விப்பட்டு வீட்டிற்கு பார்க்கச் சென்றாள் பிரியா.

கல்லூரியில் கொடுத்த நோட்ஸை அவளே தேஜாவிற்காக எழுதிக் கொடுத்தாள். என்றாலும் முழுக்க எழுதிக் கொடுக்க முடியவில்லை. மீதியை எழுதித் தர அவளுடைய சில நோட்டுக்களை தன் வீட்டிற்கே எடுத்து வந்தாள்.

மும்முரமாய் நோட்ஸை எழுதிக் கொண்டிருந்தாள்.

டி.வி.பார்த்துக் கொண்டிருந்த துஷ்யந்த் தங்கையின் அறைக்கு வந்தான்.

"அம்மா எங்கே பிரியா?"

"கோவிலுக்குப் போயிருக்காங்கண்ணா!"

"தலைவலிக்குது... ஒரு காபி வேணும்!"

"போட்டுத்தர்றேண்ணா!"

"டிஸ்டர்ப் பண்றேனா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே... இதுகூட தேஜாவுக்காகத் தான் நோட்ஸ் எழுதிக்கிட்டிருக்கேன். அவளுக்கு மூணுநாளா ஃபீவர். காலேஜுக்கே வரலே. அதனால நானே எழுதிட்டிருக்கேன்."

"ஓ...தேஜா உன் மனசை அந்தளவு கவர்ந்துட்டாளா?"

"உங்களையே கவர்ந்துட்டாளே... அதானே ஆச்சர்யம்!" என்றாள் குறும்புடன்.

"ஏய்..." செல்லமாய் தோளில் தட்டினான்.

"எனக்கும் தெரியும்ண்ணா! அம்மா சொன்னாங்க. ஐயம் ஃப்ரவுட் ஆஃப் யூ! இதுதாண்ணா உண்மையான காதல்!"

"சரி... நீ பாட்டுக்கு தேஜாகிட்டே உளறிடாதே! அதுக் கெல்லாம் நேரம் காலமிருக்கு!"

"சொல்ல மாட்டேன். காபி எடுத்துட்டு வர்றேன்!"

பிரியா அறையை விட்டு வெளியே சென்றதும் தேஜாவின் நோட்டை எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். அதற்கொரு முத்தம் கொடுத்துவிட்டு நோட்டைப் பிரித்தான்.



முத்து முத்தான கையெழுத்து!

ஒவ்வொரு பக்கமாய் புரட்டிக் கொண்டே வந்தவனின் விழிகள் ஓரிடத்தில் நிலைகுத்தின.

விஞ்ஞானத்தில் விபரீதம்

பருவத்தின் மயக்கம் - மனித

மனங்களின் சுருக்கம்...

என்று கவிதை எழுதப்பட்டிருந்தது.

எப்படி... எப்படி? இது அஸ்வினி எனக்கனுப்பிய கவிதையாயிற்றே? தேஜாவிடம் எப்படி வந்தது?

சட்டென புரட்டி முதல் பக்கம் எழுதப்பட்டிருந்த பெயரைப் பார்த்தான்.

"தேஜஸ்வினி" என்று எழுதியிருந்தாள்.

தேஜஸ்வினி. தேஜா, அஸ்வினி...

லேசாய் புரிபட... இன்னும் குழப்பம் சூழ்ந்தது.

'என்னிடம் எதற்காக அஸ்வினி என்கிற பெயரில் இ-மெயில் அனுப்பினாள்? தேஜாதான் அஸ்வினியா? இல்லை வேறு யாரோவா?' தலைவலி அதிகரித்தது.

காபியுடன் வந்த பிரியா திகைத்தாள்.

துஷ்யந்தையும் காணோம். தேஜாவின் நோட்டையும் காணோம்.

காலிங்பெல் அலறும் சப்தம் கேட்டு கிச்சனிலிருந்து வெளியில் வந்தாள் பாக்யலஷ்மி.

''நீ.. இரும்மா.. நான் திறக்கிறேன்'' என்று வாசல் கதவை நோக்கிச் சென்றாள் தேஜா.

திறந்தவள்.. நின்றிருந்தவனைப் பார்த்துத் திகைத்தாள்.

''வா... வாங்க!''

எதற்காக வந்திருக்கிறான்?

''தேஜா... யாரும்மா வந்திருக்கிறது?'' குரல் வந்தது.

''பிரியாவோட அண்ணன்ம்மா!''

பாக்யலஷ்மி வாசலுக்கு வந்து கைக்கூப்பினாள்.

''வணக்கம்... உள்ளே வாங்க தம்பி!''

வந்தான்.

''உட்காருங்க... தேஜா ஜூஸ் எடுத்துட்டு வாம்மா!''

''இல்லே... வேணாம் அஸ்வினி!''

நடந்தவள்... அதிர்ச்சியுடன் திரும்பினாள்.

மருண்ட அவளின் விழிகள் அவனுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகத்தையும் தீர்த்துவிட்டது.

''என்ன தம்பி... அவளைப் போய் அஸ்வினின்னு சொல்றீங்க...'' என்றாள் சிரித்தபடி.

''என்கிட்டே அப்படித்தானே அறிமுகப்படுத்திக்கிட்டாங்க? இல்லையா அஸ்வினி?''

''....?!''

'எப்படிக் கண்டுபிடித்தான்?'



''எப்படிக் கண்டுபிடிச்சேன்னு குழப்பமாயிருக்கா? இதோ...'' பிரித்து கவிதையைக் காட்டினான்.

பாக்யலஷ்மி ஒன்றும் புரியாமல் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''எதற்காக அஸ்வினி! ஏனிப்படி என்னிடம் நடந்து கொண்டீர்கள்? எதற்காக கண்ணாமூச்சி விளையாட்டு? அத்தனைப் பொய்கள்? என்னை வரச்சொல்லி காத்திருக்க வைத்து ஏமாற்றினீர்கள். அங்கு உங்களைப் பார்த்தேன். ஆனால் அஸ்வினியாக அல்ல. என்னை அலைக்கழித்தது எதற்காக?''

''தேஜா... இவர் என்னென்னவோ சொல்றாரே! என்னடி பிரச்சினை?'' பயந்தாள் அம்மா.

''நீ சும்மாயிரும்மா! சொல்லுங்க... என்ன தெரியணும் உங்களுக்கு?'' முகம் இறுகிப் போயிருந்தது.

''ஏன் அஸ்வினிங்கற பேர்ல என்னிடம்...''

முழுதாய் சொல்லி முடிக்குமுன் கைநீட்டித் தடுத்தாள்.

''ஆமாம்... நடித்தேன்... உங்களை பைத்தியக்காரனாக்கி தற்கொலை பண்ணிக்கிற அளவுக்கு கொண்டு போகணும்னு நடிச்சேன்.''

''நடிச்சியா? நான் சாகணும்னா?'' அதிர்ந்தான்.

''ஆமாம்... நீ சாகணும். அடுத்தவன் வேதனையை விளையாட்டாக்கி... அதுலே குளிர்காய்ந்து சந்தோஷப்படற உன்னை மாதிரியான ஆட்களை விட்டு வைக்கவே கூடாது... நீசாகணும்'' ஹிஸ்டீரியா பேஷண்ட் போல் கத்தியவள் அவன் சட்டையை கொத்தாய் பற்றி உலுக்கினாள்.

"தேஜா... என்ன பண்றே நீ" அவனை இழுத்து கன்னத்தில் பளாரென அறைந்தாள் பாக்யலஷ்மி.

10



துஷ்யந்த் அதிர்ச்சியின் எல்லையில் இருந்தான்.

தேஜா என்னை விரோதியாய் நினைக்கு மளவிற்கு, பழிவாங்குமளவிற்கு நான் அவளை எந்த விதத்தில் பாதித்தேன்?

"என்னடி ஆச்சு உனக்கு? ஏன் இப்படி யெல்லாம் நடந்துக்கறே?"

"முடியலேம்மா... என் முகத்தைப் பார்க்கிறப்பவெல்லாம் ரமேஷோட மரணம்தான்ம்மா ஞாபகம் வருது. இதுக்கெல்லாம் யார் காரணம்? அந்த சக்திவேல்தானே? இதோ... இங்கே துஷ்யந்த்ங்கற பேர்ல இன்னொரு சக்திவேல். விடலாமா? விடுவேனா? அதான்... நான் இவனை ஏமாத்தினேன். என்னைக் காதலிக்க வச்சி ஏமாத்தணும்னு நினைச்சேன். பாதியிலேயே டிராமா முடிஞ்சு போச்சு. ஆனா, இவனை சும்மா விடப்போவதில்லை. இவனை மாதிரி நாலஞ்சு பேரையாவது தண்டிச்சாதான் ரமேஷோட ஆத்மா சாந்தியடையும்... இவனை... இவனை... சுற்று முற்றும் பார்த்தவள் ஆக்ரோஷத்துடன் அங்கிருந்த ஃப்ளவர் வாஸை எடுத்து அவனை நோக்கி வீசினாள்.

சரியாய் அவன் தலையை பதம் பார்க்க... குபு குபுவென்று ரத்தம் பொங்கியது.



"ஐயோ... என்ன காரியம் பண்ணிட்டே?" பதறிக் கொண்டு ஓடிவந்த பாக்யலஷ்மி துணியால் அவன் தலையை அழுத்திப் பிடித்தாள்.

அவ்வளவு ரத்தத்தையும் பார்த்த தேஜாவும் மரம் போல் மயங்கி விழுந்தாள்.

ஹாஸ்பிடல்!

தலையில் கட்டுடன் அமர்ந்திருந்த துஷ்யந்தின் முன்பு கைகூப்பி நின்றாள் பாக்யலஷ்மி.

"மன்னிச்சிடுங்க தம்பி... என் பெண்ணால ஏற்பட்ட பாதகத்துக்கு தயவு செய்து மன்னிச்சிடுங்க."

"தேஜா இப்போ எப்படியிருக்காங்க?"

"ஸ்லீப்பிங் டோஸ் குடுத்திருக்காங்க. நாளை காலைதான் கண் விழிப்பா."

அவங்க நார்மலா இல்லேன்னு புரியது. மனசளவிலே ரொம்ப பாதிக்கப்பட்டிருக்காங்க."

"ஆமாம் தம்பி! எங்க குடும்பத்துக்கு ஏற்பட்ட அநியாயம் வேற யாருக்கும் வந்திடக்கூடாது. உங்க தங்கை பிரியா மேலே உயிரையே வச்சிருக்கா தேஜா. அப்படிப்பட்டவ அவளோட அண்ணன்னு தெரிஞ்சும் உங்களைப் பழிவாங்க நினைச்சிருக்காள்னா... அது தனிப்பட்ட விரோதம் இல்லே தம்பி. அவளோட மனக்காயங்கள் ஆறணும்னுதான் ஊரைவிட்டு இங்கே வந்தோம். ஆனா, அவளே அதை கிண்டிக் கிளறி பெரிசாக்கிட்டா. இது மனநோயின் ஆரம்பம்னு டாக்டர் சொல்ற அளவுக்கு மோசமாய்ட்டா என் பொண்ணு!" விம்மினாள்.

''அம்மா... அழாதீங்க! தேஜா இந்தளவு பாதிக்கப்படற அளவுக்கு என்ன நடந்தது?''

கண்களை துடைத்துக் கொண்ட பாக்யலஷ்மி சொல்ல ஆரம்பித்தாள்.

விஸ்தாரமான பங்களா!

பல ஏக்கர் பரப்பில்... அழகிய நந்தவனத்தின் நடுவே கம்பீரமாய் அகன்று உயர்ந்திருந்த அந்த பங்களாவை ரோடில் போவோர் ஒருமுறையாவது திரும்பிப் பார்த்து பெருமூச் செறியாமல் போனதில்லை.

முகப்பில் பெரிய கேட்! அதன் இடது பக்க கிரானைட்டில் பளபளத்த சுவற்றில் 'தேஜஸ்வினி பேலஸ்'' என்று பொறிக்கப்பட்டிருந்தது.

நான்கைந்து உயர்வகை ஜாதி நாய்கள் இங்குமங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருக்க... அதன் பின்னேயே ஓடிக் கொண்டு மூச்சு வாங்கினான் தோட்டக்காரன் கந்தசாமி.

போர்ட்டிகோவில் விதவிதமாய் மூன்று கார்கள் எஜமானன் வரவிற்காக காத்திருந்தன.

நாய்கள் விடாமல் குரைத்துக் கொண்டிருக்க... உறக்கம் கலைந்த எரிச்சலோடு பால்கனியில் வந்து நின்றான் ரமேஷ்.

''கந்தா... என்ன சத்தம்? கட்டிப்போடாம வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கியா?''

''இதோ.. கட்டிப்போட்டுடறேன்யா!''

''மட்டன் போட்டுட்டியா?''

''சாமியப்பன் வாங்கிட்டு வரப்போயிருக்கான்யா!''



ரமேஷ் உள்ளே சென்றான்.

அம்மா பாக்யலஷ்மி காபியுடன் அவனை நோக்கி வந்தாள்.

''எந்திரிச்சிட்டியாப்பா? நைட் லேட்டாதானே படுத்தே? மெல்ல எந்திரிச்சிருக்கலாமே?''

''ஆமாம்மா... முக்கியமான பிஸினஸ் டீலிங் முடிச்சிட்டு வர லேட்டாயிடுச்சு. நல்ல தூக்கம். டாக்ஸ் கத்தி எழுப்பி விட்டுருச்சு.''

காபியை பருகிய ரமேஷ் பாக்யலஷ்மியின் மூத்த மகன். முப்பதை நெருங்கிக் கொண்டிருக்கும் இளங்காளை. கறுப்பாய்.. களையாய் இருப்பான். அப்பா விட்டுட்டுப் போன பிஸினஸை தனியாளாய் நிர்வகித்து பிஸினஸ் மேக்னட் என்ற பெயரையும் எடுத்து விட்ட ரமேஷுக்கு ஒரே ஒருகுறை. தான் நிறம் கம்மியாய் இருப்பதுதான். அவ்வளவு பெரிய புத்திசாலிக்கு நிறமெல்லாம் ஒரு குறையே அல்ல என்று உணராததுதான் ஆச்சர்யம்.

சென்ஸிடிவ் டைப்பான ரமேஷ் சிறுசிறு விஷயங்களுக்கு கூட உணர்ச்சி வசப்படுபவன். அவன் உலகிலேயே மிக அதிகமாய் நேசிப்பது இரண்டுதான். ஒன்று அம்மா. இரண்டாவது தங்கை தேஜா.

அவள் ஆசைப்படுவது... எவ்வளவு விலையானாலும் வாங்கி கொடுத்து சந்தோஷப்படுத்துவான்.

''தேஜா எந்திரிச்சிட்டாளாம்மா?''

''எந்திரிக்கிறதா? தூங்கினாதானே எந்திரிக்கறதுக்கு?''

''ஏம்மா? என்னாச்சு, உடம்பு கிடம்பு சரியில்லையா?''

அலுவலகம் 16 பிப் 2015

பதறினான்.

''ஏன்ப்பா பதர்றே? அதெல்லாம் ஒண்ணுமில்லே. இன்னைக்கு அவ படிக்கிற காலேஜிலே அழகிப்போட்டி நடத்துறாங்களாம். இவளும் கலந்துக்கறா. அந்த டென்ஷன்தான்!''

''அதுக்கேன் பயப்படணும்? என் தங்கச்சிக்கிட்டே உலக அழகிகளெல்லாம் பிச்சை வாங்கணும்! எங்கே தேஜா?'' தங்கையின் அறை நோக்கிச் சென்றான்.

''குட்மார்னிங் தேஜா.''

டிரஸ்ஸிங் டேபிள் முன் நின்றிருந்த தேஜா திரும்பினாள்.

''குட்மார்னிங்கண்ணா!''

அசந்துப் போனான் ரமேஷ். அவ்வளவு அழகாய்... ஒரே வார்த்தையில் சொல்வதானால்... தேவதையைப் போல் ஜொலித்தாள் தேஜஸ்வினி.

''என் கண்ணே பட்டுடும் போலிருக்கே தேஜா! ஃபர்ஸ்ட் பிரைஸ் உனக்குத்தான்.''

''தாங்க்ஸ்ண்ணா.''

''நீ ஃபர்ஸ்ட் பிரைஸோட வரும்போது.. இந்த அண்ணனோட பிரஸென்டேஷனும் ரெடியா இருக்கும்!''

அப்போது... தேஜாவின் செல்போன் அலறியது.

முரளியிடமிருந்து...

''ஹாய்... குட்மார்னிங்!'' எனும்போதே தேஜாவின் ரோஜா நிறக் கன்னங்கள் சிவந்தன... வெட்கத்தில்.



ரமேஷ் நாசூக்காய் வெளியேறினான்.

''என் அழகு தேவதையே... காலேஜுக்கு கிளம்பிட்டியா?''

''ரெடியாய்ட்டே இருக்கிறேன். ஒரே டென்ஷனா இருக்கு முரளி.''

''என் தேஜா ஜெயிக்கலேன்னா... யாருமே ஜெயிக்க முடியாது, வெற்றி உனக்குத்தான்!''

''சரி.. ஜெயிச்சா.. நீங்க எனக்கு என்னத் தருவீங்க?''

''சொல்லவா?''

''ம்...''

''என்ன கொடுத்தாலும் வாங்கிப்பியா?''

''என் முரளி தர்றதாச்சே? சம்திங் ஸ்பெஷலாச்சே? சொல்லுங்க... என்ன தருவீங்க?''

''தலைமுதல் கால் வரை இன்ச் பை இன்ச்சாக முத்தங்கள்!''

''யூ... டர்ட்டி ராஸ்கல்!'' செல்லமாய் அதட்டிவிட்டு செல்லை அணைத்தாள்.

ஆனால், மனசு கும்மாளம் போட்டது.

முரளி-தேஜாவிற்காக நிச்சயிக்கப்பட்ட ராஜகுமாரன். சொந்த மாமா பிள்ளை. அழகாலும், கம்பீரத்தாலும், அந்தஸ்தாலும் தேஜாவிற்கு சளைத்தவனில்லை.

**த**ன் அலுவலக அறையில் பரப்பரப்பாய் செயல்பட்டுக் கொண்டிருந்தவன் இடையில் கொஞ்சம் நேரம் கிடைத்ததும் கம்ப்யூட்டர் முன்பு அமர்ந்து விட்டான்.

ரமேஷிற்கு பிஸினஸ் முதல் மனைவி என்றால் கம்ப்யூட்டர் இரண்டாவது மனைவி, சிறிது நேரம் கிடைத்தாலும் நெட்டில் மேய்வான்.

போன் அலறியது. ரிசப்ஷினிஸ்ட் இனிய குரலில் பேசினாள்.

''உங்களைப் பார்க்க சக்திவேல் என்பவர் வந்திருக்கிறார் சார்!''

''அனுப்பு!''

அடுத்த நிமிடம் அவன் எதிரே வந்தமர்ந்த சக்திவேல் ரமேஷுடன் படித்தவன். கார்மெண்ட்ஸ் பிஸினஸ் செய்து பெருத்த நஷ்டம் அடைந்தவன்.

''வா... சக்தி... எப்படியிருக்கே?''

''ம்... நீ எப்படியிருக்கே?''

''ரொம்ப ஹாப்பியா... ஒரு நிமிஷம், இந்தா ஸ்வீட் எடுத்துக்க!

''என்ன விசேஷம்?''

''என் தங்கை தேஜா காலேஜ்ல மிஸ் குயினா செலக்ட் பண்ணியிருக்காங்க. இப்பத்தான் தகவல் கிடைச்சது. அவளுக்கு ஒரு கார் ப்ரரெசண்ட் பண்ணப் போறேன்.... ஒன் அவர்ல வெளியே கிளம்பிடுவேன்.''

அவன் சொல்லச் சொல்ல சக்திவேலின் மனசு எரிந்தது.

'பணத்திமிர்... அழிக்கிறேன்டா உன்னை! பிஸினஸ்ல நஷ்டம்... ஒரு பத்து லட்சம் கடனாக் கொடுன்னு கெஞ்சினப்ப 'கடன் அன்பை முறிக்கும். ஃபிரண்ட்ஷிப்க்குள்ளே மணி டீலிங் வச்சுக்கிறவன் புத்திசாலியில்லே... நான் புத்திசாலின்னு'



டயலாக் பேசினியே... மறக்க மாட்டேன்டா! என் வீடெல்லாம் போச்சு. குழியிலே விழுந்துட்டேன். மகா புத்திசாலிங்கற கர்வம் உனக்கு நிறையவே இருக்கு. முட்டாளாக்கறேன்டா உன்னை. நீ மட்டும் மனசு வச்சிருந்தா... நான் மேலே வந்திருப் பேன். யானைக்கும் அடி சறுக்கும்ங்கறதை காட்டறேன்டா!'

''என்னடா என்னையே பார்த்துக்கிட்டிருக்கே?''

''ஒ..ஒண்ணுமில்லையே!''

''இப்ப என்ன பண்ணிட்டிருக்கே?''

''மாச சம்பளத்துக்கு ஒரு கம்பெனியிலே வேலை செய்துக்கிட்டிருக்கேன்!''

''அகலக் கால் வச்சிருக்க வேணாம். சரி... விடு, பழ செல்லாம் எதுக்கு? ஆமாம்... என்ன திடீர்னு என்னைப் பார்க்க வந்திருக்கே?''

''காரணமாகத்தான்!'' என்றான் சக்திவேல்.

## 11



''என்ன விஷயம் சக்தி? பண விஷயம்னா ஸாரி...!''

''அவசரப்படாதே ரமேஷ். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. வலியை அனுபவிச்சவன் மறுபடி சூடுபட விரும்பமாட்டான். நான் வந்தது வேறு விஷயத்துக்காக!''

''சீக்கிரம் சொல்லு... நான் வெளியே போகணும்!''

''இதைப் பாரு!'' பாக்கெட்டிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து நீட்டினான் சக்தி.

வாங்கிப் பார்த்தவனின் விழிகள் தெறித்து விழுந்து விடும் போல் அகன்றது.

"ஹேய்... யார் இது."

"எப்படியிருக்கா?"

"தேவதை மாதிரியிருக்கா! யாரிவ சக்தி? எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு! ப்பா... என்ன கலர்?" அவனுக்குள் ஒரு வைப்ரேஷன் ஓடியது.

"பேரு லீனா... மாடலிங் கேர்ள். டி.வி.யிலே பத்திரிகை யிலே இவ நடிச்ச விளம்பரமெல்லாம் வந்திருக்கு!"

"ஓ...யெஸ்...யெஸ்... பார்த்திருக்கேன்!" அந்த போட் டோவை விட்டு கண்களை எடுக்க முடியவில்லை.

ரமேஷிற்கு ஒரு கனவு உண்டு. தன் மனைவியாக வரப்போகிறவள் செக்கச்சிவந்த நிறத்தில் கொடியிடை உடலோடு வசீகரமானவளாய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பெண்ணைதான் மணப்பேன் என்று தீவிரமாய் இருப்பவன். இது அவனை நன்கறிந்தவர்களுக்கு தெரிந்த விஷயம்.

"சரி... இவ போட்டோவை எதுக்கு என்கிட்டே கொண்டு வந்தே?"

"இவ... என்னோட ஃப்ரண்ட்!"

"என்னது?"

"என்னோட சாட்டிங் ஃப்ரண்ட்!"

"சக்தி... நிஜமாகவா சொல்றே?"

"ஏன் நம்பிக்கை வரலியா?"



"அ.... அதுக்கில்லே..."

"பிஸினஸ் பண்றதுக்குதான் பணம் வேணும். ஃப்ரண்ட் ஷிப் வச்சுக்கறதுக்கு பணம் தேவையில்லே" என்றான் சூடாக.

"கோபப்படறே பார்த்தியா? அவ மாடலிங் கேர்ள். உனக்கெப்படி பழக்கம்னுதானே கேட்டேன்?"

"இப்ப நான் எதுக்காக வந்தேன் தெரியுமா? அவளுக்கு உன்னை அறிமுகப்படுத்தி வைக்கத்தான்!"

"நிஜமாகவா சொல்றே?" சந்தோஷத்தில் உடல் அதிர்ந்தது.

"ஆமாம்... ஆனா நேரடியாயில்லே. அவளோட வெப்சைட் அட்ரஸ் தர்றேன். உன்னைப் பத்தி ஏற்கனவே அவகிட்டே சொல்லியிருக்கேன்."

"என்ன சொன்னே?"

"அவசரப்படாதே! முதல்ல நான் சொல்றதைக் கேட்டுக்க. அவகிட்டே பழகினதிலேர்ந்து அவளோடு எதிர்பார்ப்பெல் லாம் நல்லா புரிஞ்சுக்கிட்டேன். முதல்ல ஒரு கேள்வி. லீனாவை உனக்குப் பிடிச்சிருக்கா?"

"ஏன் கேட்கறே?"

"ப்ச்... கேட்டதுக்கு பதில்!"

"ரொம்ப பிடிச்சிருக்கு."

"அவ உனக்கு கிடைச்சா சந்தோஷப்படுவியா?"

"வாட். டு யூ மீன்?"

"மிஸ் லீனா, மிஸஸ் லீனா ரமேஷா வந்தா சந்தோஷப் படுவியா?"

"நடக்குமா?" வாயைப் பிளந்தான்.

"சக்தியால முடியாதது எதுவுமில்லே!"

"இது நடக்கணும் சக்தி.. ப்ளீஸ்!"

"கண்டிப்பா நடக்கும். லீனாவுக்கும் பெரிய பணக்காரனை கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசையிருக்கு. இன்னொரு முக்கியமான விஷயம் பிளாக் கலர்னா அவளுக்கு ரொம்பப் பிடிக்கும். ஜென்ட்ஸ் கறுப்பா இருக்கிறதுதான் கம்பீரம்னு சொல்லுவா. அதேசமயம் ஜொள்ளுவிடற ஆண்களை அவளுக்குப் பிடிக்காது. பொண்ணுங்க பின்னாடி அலையற வன் ஆம்பளையில்லே. பொண்ணுங்களை பின்னாடி வர வைக்கிறவன்தான் ஜென்டில்மேன்னு சொல்லுவா! அவளை உரிமையாக்கிக்கிற எல்லா தகுதியும் உனக்கு மட்டும்தான் இருக்கு ரமேஷ். உன் டேஸ்ட்க்கு ஏத்த கேரக்டர் லீனா. அவ உனக்கு கிடைச்சாள்னா என்னை விட அதிகமா யாரும் சந்தோஷப்பட முடியாது!"

ரமேஷ் நன்றி பொங்க சக்திவேலின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"நான் உன்னை சரியாப் புரிஞ்சுக்கலே சக்தி. சமயத்துக்கு உனக்கு நான் கைகொடுக்காததைக் கூட பொருட்படுத்தாம எனக்காக நீ..."

"என்ன ரமேஷ் பெரிய வார்த்தையெல்லாம் பேசிக்கிட்டு... இனி நடப்பதை பார்ப்போம். இந்தா.. இதுதான் லீனாவோட வெப்சைட் அட்ரஸ். கொஞ்சம் அடக்கியே வாசி. உடனே போட்டோ அனுப்பு. நேர்ல பார்க்கணும்னு ஜொள்ளு விட்ராதே. உன்னைப் பத்தி ரொம்ப பெருமையா சொல்லி வச்சிருக்கிறேன்..."



"தாங்க்ஸ்டா... மத்ததை நான் பார்த்துக்கறேன்!" பொக்கிஷம் போல் அவள் அட்ரஸை வாங்கிக் கொண்டான்.

நாட்கள் கடந்தன.

லீனாவுடனான நட்பு இன்டர்நெட் உதவியுடன் வளர்கிறது. தன்னுடைய மாடலிங் அனுபவங்கள், எதிர்கால லட்சியங்கள் என்று எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்கிறாள். தன் நட்பு வட்டத்திலேயே ரமேஷ் ஒரு வித்தியாசமான, சிறந்த ஆண்மகன் என்று பாராட்டுகிறாள்.

அவளுடன் போனில் பேச வேண்டும் என்கிற ஆசை நெஞ்சம் முழுக்க வியாபித்திருந்தது. ஆனால், சக்தி ஏற்கனவே எச்சரித்திருந்ததால் அடக்கி வாசித்தான். ஆனால், தனக்கு நெருக்கமான நண்பர்களிடம் லீனா போன்ற பிரபலமான பெண் தோழியாக இருக்கிறாள் என்று பெருமையாக கூறிக் கொண்டான்.

"என்னடா மந்திரம் போட்டே? லீனா எப்பப் பார்த்தாலும் உன்னைப் பத்தியே பெருமையாகப் பேசிக்கிட்டிருக்கா. உன்னை அவளுக்கு பிடிச்சிருக்குன்னு நினைக்கிறேன்." என்று சக்தி தூபம் போட்டான்.

காற்றில் மிதந்தான் ரமேஷ்.

"சக்தி... எனக்கு அவளோட, போன்லயாவது பேசணும். அவளோட நம்பரைக் குடேன்!" என்றான் கெஞ்சலுடன்.

"அவசரப்படாதே ரமேஷ்! லீனா உன்மேலே மரியாதை வச்சிருக்கிறதே... உன்னோட டீஸன்ஸிக்காகத்தான். அதை கெடுத்துக்காதே! போன்ல எதுக்கு? நேர்லயே பார்க்க ஏற்பாடு பண்றேன்."

"ச..க்.தி...நி.. நிஜமாகவா சொல்றே?"

"சத்தியமா..."

"எப்ப?"

"நானே சொல்றேன். அவகிட்டே கேட்டுடாதே! அவளுக்கே சர்ப்ரைஸா இருக்கட்டும். அவளுக்கும் உன்னைப் பார்க்கும் ஆவல் இருக்காதா என்ன?"

"தாங்க்ஸ்டா...!"

"இன்னும் நிறைய இருக்கும். உனக்கும் லீனாவுக்கும் கல்யாணம் ஆய்ட்டபிறகு மொத்தமாக சொல்லு!"

"என்னண்ணா... எப்பப் பார்த்தாலும் கம்ப்யூட்டரே கதின்னு உட்கார்ந்திடறே? இதையெல்லாம் ஆபீஸோட வச்சுக்க. வீட்லேயும் வந்து பிஸினஸைபார்க்காதே! என்கிட்டே ஃப்ரியா உட்கார்ந்து பேசி மாசக்கணக்கு ஆயிடுச்சு!" என்று வருத்தப்பட்டாள் தேஜஸ்வினி.

உடனே கம்ப்யூட்டரை ஆஃப் பண்ணினான்.

"ஸாரிடா... ஒரு முக்கியமான வேலை இருந்துச்சு அதான்!"

"அண்ணா... நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டியே?"

"என் தேஜாவையா? என்னடா பேசறே? எதுவா யிருந்தாலும் கேளு!"

"நீ யாரையாவது லவ் பண்றியாண்ணா?"

"தேஜா... என்ன சொல்றே நீ?" அதிர்ந்தான்.

"கொஞ்சநாளா! உன் ஆக்டிவிட்டீஸ்ல சில மாற்றம் தெரியுது. தனிமையிலே சிரிக்கிறே. முகத்திலே ஒரு இணக்கம்.



எப்பவும் சீரியஸா இருக்கிற பிஸினஸ் புலியான என் அண்ணன் இப்படி இருக்கார்னா... அதானே காரணமா யிருக்கும்."

"திருடி!" தங்கையின் கன்னத்தை செல்லமாய் கிள்ளினான்.

"ஸோ... என் அண்ணன் ஒரு மான் விரித்த வலையில் விழுந்துட்டார்!"

"ஏய்... சத்தமாப் பேசாதே... அம்மா காதிலே விழுந்துடப் போகுது!"

"தோடா.. எங்கண்ணன் பயப்படவும் ஆரம்பிச்சிட்டாரா? சரி... சொல்லுண்ணா... யாரந்த லக்கி வுமன்?"

"நான்தான் லக்கி ஃபெல்லோ!"

"இப்பவே பொண்டாட்டி தாசனா மாறிட்டீங்களா? சரி... சொல்லுண்ணா... என் அண்ணி யாரு?"

ரமேஷ் சுருக்கமாய் லீனாவைப் பற்றி சொன்னான்.

"இன்னும் நேர்ல சந்திச்சதேயில்லேன்னு சொல்றீங்க. அப்புறம் எப்படி?"

"ஒரு காதல் வயப்பட்ட மனசாலதான் இன்னொரு காதல் மனசை புரிஞ்சுக்க முடியும். இப்போதைக்கு இது அம்மா வுக்குத் தெரிய வேணாம். உனக்கும் முரளிக்கும் கல்யாணம் நடத்திட்டபிறகு சொல்லிக்கறேன்."

"ஆல் தி பெஸ்ட்ண்ணா! உன் மனசுப்படியே எல்லாம் நடக்கும்" மனப்பூர்வமாய் வாழ்த்தினாள் தேஜா.

நெஞ்சம்... திம்... திம் என ட்ரம்ஸ் வாசித்தது ரமேஷிற்கு. அரங்கம் முழுக்க மக்கள். அதில் பெரும்பாலும் இளைஞர் பட்டாளம்.

தோலிலான ஆடை கண்காட்சி! அதில் ஒரு மாடலாக லீனாவும் கலந்து கொள்கிறாள்.

சக்திதான் அவனை இந்த ஷோவிற்கு அனுப்பி வைத்தான்.

கண்ணை கூசவைக்கும் வண்ண விளக்குகளின் வெளிச்சம் அரங்கத்தை நிரப்பியிருக்கிறது.

ஒவ்வொரு மாடலாக மேடையில் நடைபோட்டு வர.. ஆறாவது மாடலாக லீனா வந்தாள். டி.வி.யில் பார்த்திருந்ததால் அடையாளம் காண சிரமப்படவில்லை. இப்போதுதான் முதன் முதலாக நேரில் பார்க்கிறான். போட்டோவில் பார்த்ததை விடவும் மிக அழகாக இருந்தாள்.

'என் லீனா...' பரவசமாய் உணர்ந்தான்.

'நான் தான் ரமேஷ்' என்று கத்த வேண்டும் போலிருந்தது.

எப்படியாவது அவளிடம் பேச வேண்டும் என்று முடிவு செய்தவன், வாய்ப்புக்காக காத்திருந்தான். ஆனால் மேக்கப் ரூமில் அனைத்து மாடல்களும் இருந்ததால் முடியவில்லை.

ஷோ முடிந்து லீனா காரில் ஏறச் சென்றபோது அவள் பின்னே ஓடினான்.

அங்கும் ஒரு கும்பல் அவளை சூழ்ந்து கொண்டது. பொக்கே கொடுத்தனர். ஆட்டோகிராப் வாங்கினர்.

'என் லீனாவுக்குதான் எவ்வளவு ரசிகர்கள்?' பெருமிதமாய் இருந்தது?

அவளை நெருங்கி... ''ஹலோ!'' என்றான்.

''யெஸ்!''



''ஐயம் ரமேஷ்... தேஜா குரூப் ஆஃப் கம்பெனியோட எம்.டி.!'' என்றான்.

''ஓ...க்ளாட் டு மீட் யூ!'' மாடலிங் பெண்களுக்கே உரிய ஆச்சர்யத்தோடு கண்களை விரித்து அவன் கைப்பற்றி குலுக்கினாள் லீனா.

மேகத்தினூடே பறந்தான் ரமேஷ்.

''ஸீ...யூ... லேட்டர்!'' வசீகரமான புன்னகையொன்றை வீசி விட்டு காரில் ஏறிப் புறப்பட்டாள்.

அவள் ஸ்பரிசித்த தன் கரத்தை உயர்த்தி முத்தமிட்டான்.



12

''நான் அவ்வளவு சொல்லியும் ஏன் பேசினே ரமேஷ்?'' பதட்டத்துடன் கேட்டான் சக்திவேல்.

''ஸாரி சக்தி. அவளை நேரில் பார்த்தப் பிறகும் என்னால பேசாம இருக்க முடியலே. ஆனா, என்னை நான் அறிமுகப் படுத்திக் கிட்டதும் ஆச்சர்யமாப் பார்த்தா!''

''என்ன பேசினா?''

சொன்னான்.

''இதுக்கு மேலே பொறுமையா இருக்கிறதுல அர்த்தமே இல்லே சக்தி. சீக்கிரமே மனசுவிட்டு பேசப் போகிறேன்.''

''ஓக்கே... ஆல் தி பெஸ்ட்!'' என்று நண்பனைத் தட்டிக் கொடுத்தான்.

ஆனால் அடுத்த நாளே அந்த அதிசயம் நிகழ்ந்தது.

அவன் ஆபீஸிற்கு லீனாவே போன் பண்ணினாள்.

அவனால் நம்பவே முடியவில்லை.

"ஐ கான்ட் பிலீவ்! பேசுவது லீனாதானா?"

"யெஸ்... லீனாவேதான்!" இனிமையாய் ஒலித்தது அவள் குரல்.

"என் நம்பர் எப்படித் தெரியும்?"

"சக்தியிடம் வாங்கினேன்!"

"ஐயம் ஸோ ஹாப்பி லீனா. நான் எதிர்பார்க்கலே."

"உங்கக்கிட்டே பேசணும்னு ரொம்ப நாளாகவே நினைச்சிட்டிருந்தேன். ஏதோ தயக்கம். பட். நீங்களாகவே பேசுவீங்கன்னு எதிர்பார்த்தேன்."

ரமேஷிற்கு தாங்க முடியவில்லை.

"எனக்கும் அதே தயக்கம் தான் லீனா!"

"இதுநாள் வரை சாட்டில் மட்டுமே பேசிக் கொண்டிருந்தோம். நான் கற்பனை பண்ணி வைத்திருந்ததைவிடவும் நேரில் இன்னும் ஸ்மார்ட்டாக இருந்தீர்கள். ஐ லைக் இட்!"

ரமேஷிற்கு சிறகுகள் முளைத்தன. தன்னிலை மறந்தான். உணர்வலைகள் அவனைப் புரட்டிப் போட்டன.

"ஐ லவ் யூ லீனா!" என்றான் மயக்கத்துடன்.

ஏற்றுக் கொண்ட விதமாய் லீனா சிரித்தாள்.

"இதை போனில்தான் சொல்ல வேண்டுமா?"

"புரியவில்லை."



"நேரில் சொன்னால் உங்கள் லீனா ரொம்ப சந்தோஷப் படுவாள்"

"நிஜமாகத்தான் சொல்கிறாயா?"

"யெஸ்... நாளை ஈவ்னிங் நேரில் சந்திக்கிறோம்."

"எங்கே... எந்த இடத்தில்?" பரபரத்தான்.

"என் வீட்டில்! நான் தனியாகத்தான் இருப்பேன். உங்களுக்காக காத்திருப்பேன். ஸீ... யூ!" அவள் அழைப்பில் போதை இருந்தது.

ஊருக்கே ராஜாவாகிவிட்டது போல் பரவசம் ரமேஷிற்கு.

ரமேஷ் தன்னை சிரத்தையாய் அலங்கரித்துக் கொண்டான். அவளுக்குப் பரிசளிக்க வைர மோதிரம் வாங்கிக் கொண்டான். பல வண்ண ரோஜாக்களுடன் கூடிய அதி அழகான போக்கேயுடன்... லீனாவின் வீட்டின் முன் தன் வெளிநாட்டுக் காரை நிறுத்தினான்.

வாட்ச்மேன் அவனை விசாரித்தான்.

சொன்னான். தன் விசிட்டிங் கார்டை தந்தான்.

ரமேஷின் கம்பீரமும், காரும், ஆங்கிலமும் மறுபேச்சு பேசாமல் கேட்டை திறந்து விட வைத்தது.

போர்டிகோ தாண்டி வாசல்படி ஏறினான். கதவு திறந்து தான் இருந்தது. காலிங்பெல்லை அலற விட்டான்.

அடுத்த நிமிடம் ஒரு அறைக்குள்ளிலிருந்து லீனா வெளிப்பட்டாள்.

மேக்கப்பில்லாத பளிச் முகம். தோள்வரை புரண்ட தங்க நிறத்தில் ஜொலித்த கூந்தல், வேலைப்பாடுடன் கூடிய கையில்லாத நைட்டி.

அசந்து போனான்.

அவனை அடையாளம் புரிந்து புன்னகைத்தாள்.

பொக்கேயை நீட்டினான்.

வாங்கிக் கொண்டவள் "உள்ளே வாங்க" என்றழைத்தாள்.

அமர்ந்தனர். அவளையே பார்த்தான்.

"சொல்லுங்க..." என்றாள் லீனா.

அவளை மிக அருகில் பார்த்ததில் உணர்ச்சிகள் கொழுந்து விட்டு எரிந்தது.

"ஐ... லவ்...யூ!"

லீனாவின் முகம் அதிர்ச்சியை பூசிக் கொண்டது.

"ஐ...லவ்...யூ லீனா!" சட்டென அவளை இழுத்தணைத்து இதழில் முத்தமிட்டான்.

அடுத்த கணம் ரமேஷ் தரையில் விழுந்தான். அந்தளவிற்கு வேகமாய் தள்ளி விட்டிருந்தாள் லீனா.

"லீ...னா!" ரமேஷிற்கு அதிர்ச்சி.

"யூ...ராஸ்கல்... எவ்வளவு திமிர் இருந்தா என்னைப் போய்... உன்னை சும்மா விடக்கூடாது." சட்டென காலிருந்த செருப்பை கழற்றி அவன் கன்னத்தில் அறைந்தாள்.

அவமானத்தில் கூனிக்குறுகிப் போனான் ரமேஷ்.

"கெட் அவுட்! என் ஹஸ்பண்டுக்குத் தெரிஞ்சா... அவ்வளவு தான். மரியாதையா எழுந்து போய்டு..."

'ஹஸ்பெண்டா?' குழம்பினான்.



எப்படி வெளியே வந்தான்? எப்படி காரை ஓட்டிக் கொண்டு வந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை.

நேரே ஆபீஸுக்கு தன்னறைக்குச் சென்று டேபிளில் முகம் கவிழ்த்து அழுதான்.

'என்ன நடந்தது? என்ன நடக்கிறது? அவளாகவே அழைத்து, அவமதித்து... ஒன்றுமே புரியவில்லையே! செருப்பால் என்னை...' குமுறிக் குமுறி மனசு கருகியது.

'திருமணமானவள். பிறகெப்படி என்னை?' அவனின் விசுபலான வினாக்களுக்கு அடுத்து வந்த போன்கால் பதில் தந்தது.

சக்திவேலிடமிருந்து...

இடியோசைப் போல் சிரித்தான்.

"டேய் புத்திசாலி பணக்காரனே! இப்ப எங்கே போச்சு உன் புத்திசாலித்தனம்? நீ மட்டும் மனசு வச்சிருந்தால் பிஸினஸில் விட்டதையெல்லாம் பிடிச்சிருப்பேன். பணமிருந்தும் மனசு வரவில்லை. கடன் அன்பை முறிக்கும்னு டயலாக் வேற! என் வாழ்க்கையை, கவுரவத்தை முறிச்சுப் போட்டுட்டியே! பிஸினஸில் உயர்ந்த நிலைக்கு வரணும்னு ஆசைப்பட்டேன். இப்ப மாத சம்பளம் வாங்கிட்டு இருக்கேன். ஆசைப்பட்டது கிடைக்கலேன்னா... அந்த வலி எப்படியிருக்கும் தெரியுமா? நீ தெரிஞ்சுக்கணுமே! அதுக்குதான் லீனாவோடதுன்னு சொல்லி என்னோட வெப்சைட் அட்ரஸ் கொடுத்தேன். காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதைதான். நீ லீனாவை ஷோவில் சந்தித்து பேசியதும் அப்படித்தான். போனில் உன்னிடம் பேசியது லீனா அல்ல. என்னுடைய தோஷி ஜபீன். லீனா திருமணமானவள். அவளிடம் ஐ லவ் யூ சொன்னால் சும்மா விட்டுருவாளா?

அவள் விட்டாலும் அவளோட புருஷன் விட்ருவானா? அவமானப்படப் போகிறே ராஜா. உன்னைத் தேடி வீட்டுக்கே வருவான். போலீசுக்குப் போவான். நாளைக்கு பேப்பர்ல உன்னைப் பத்தி கவுரமா நியூஸ் போடுவான். சக்திவேல் என்னைக்கும் சக்திவேல்தான். குட்பை!'' போனை வைத்து விட்டான்.

நிலைகுலைந்து போனான் ரமேஷ்.

'கேவலம்... ஒரு பெண்ணைக்காட்டி என்னை பழிவாங்கிட் டானே! கம்ப்யூட்டரையே கரைத்துக் குடித்த என்னையே ஏமாத்திட்டானே! அவன் சொன்னது போல லீனாவின் ஹஸ்பண்ட் என்னைத் தேடி வீட்டுக்குப் போவானோ? ஏன் இங்கே கூட வரலாம்.

அவளை கட்டிப்பிடிச்சு கிஸ் வேற பண்ணித் தொலைச் சிட்டேன். இப்ப என்ன பண்றது?' பயத்தில் வியர்த்தான். அவமானத்திற்காக அஞ்சினான். ஆபீஸில் வாட்ச்மேனைத் தவிர யாருமில்லை. உள்பக்கமாய் பூட்டிவிட்டு தன்னறைக் குள்ளேயே அடைந்து கிடந்தான்.

லீனா எவ்வளவோ சொல்லியும் அவள் கணவன் ஜார்ஜ் கேட்கவேயில்லை.

''நாம் போலீஸில் கம்ப்ளைன்ட் பண்ணலாம். அவர்கள் ஆக்ஷன் எடுத்துக் கொள்ளட்டும் ஜார்ஜ்.''

''நீ சும்மாயிரு... அவன் சட்டத்தை பணம் கொடுத்து விலைக்கு வாங்கிடுவான். அவன் பொண்டாட்டியை நான் கட்டிப்பிடிச்சு கிஸ் பண்ணினா சும்மா விட்ருவானா? பணமும், பர்ஸனாலிட்டியும் இருக்கிற தைரியம் தானே வீடு வந்து உன்னை... விடு... இனி இதில் நீ தலையிடாதே... நான் பார்த்துக்கறேன்!'' அடிபட்ட புலியானான் ஜார்ஜ்.



பணத்திற்காக எதையும் செய்யும் கூலிப்படையை நாடினான்.

''ரமேஷ் முகத்தில் ஆசிட் ஊற்று. அவன் கிடைக்க லேன்னா... அவன் வீட்ல யாரு இருந்தாலும்... ஊற்று...'' கோபத்தில் உத்தரவுகளை பிறப்பித்தான்.

கூலிப்படைகள் முதலில் ஆபீஸிற்குதான் சென்றது. பூட்டியிருந்ததால்.. நேரே அவன் வீட்டிற்குச் சென்றது.

அராஜகமாய் வீட்டிற்குள் நுழைந்து... எதிர்ப்பட்ட தேஜாவின் முகத்தில்...

செல்போனை ஆஃப் பண்ணி, மற்ற போன்களின் ரிசீவரை எடுத்து வைத்துவிட்டு, மறுநாள் காலை வரை ஆபீஸிலேயே இருந்தான் ரமேஷ்.

காலை ஆறு மணிக்குதான் தடதடக்கும் இதயத்துடன் வீட்டிற்குச் சென்றான்.

அப்போதுதான் தேஜாவின் முகத்தில் ஆசிட் ஊற்றப்பட்ட செய்தியறிந்து துடிதுடித்தபடி ஹாஸ்பிடலுக்கு ஓடினான்.

பாக்யலஷ்மி அழுதழுது மயங்கிப் போயிருந்தாள். ஒருபக்க முகம் கருகிப்போய் உணர்விழந்து படுத்திருந்த தேஜாவைப் பார்த்து அலறிவிட்டான்.

ரோஜாவை தீயில் போட்டால் என்னாகும்?

'என் அழகுத் தங்கையா இது? காலேஜ்லேயே அழகு ராணியாக தேர்ந்தெடுக்கப்பட்ட என் தேஜாவா இது? ஐயோ... எல்லாமே என்னால்தானே? தாங்கிக் கொள்ள முடிய வில்லையே.'

அவன் வாழ்க்கையில் சந்தித்த பெரும் துயரம் அது. தான் செருப்பால் அடிப்பட்ட வலியைவிட, தான் நேசித்த ஒரு உயிருக்கு நேர்ந்த கொடூரம்...

அதுவும் தன்னால் நேர்ந்த கொடூரம் எனும் போது... உண்மையாக நேசித்த அன்பு மனம் தாங்குமா?

லீனாவுக்காக வாங்கிய வைரை மோதிரத்தை எடுத்தான். தன் வாழ்க்கையில் துவக்க விழாவிற்காக தேர்ந்தெடுத்து வாங்கியவன்... வாழ்க்கையில் முடிவுரை எழுத பயன்படுத்திக் கொண்டான்.

## 13



ஸ்தம்பித்துப் போயிருந்தான் துஷ்யந்த்.

பாக்யலஷ்மி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''தேஜாவுக்காக நிச்சயம் பண்ணியிருந்த மாப்பிள்ளை முரளி அவளோட கருகிப்போன முகத்தைப் பார்த்துட்டு கல்யாணத்தை நிறுத்திட்டார். எல்லா வகையிலும் மனசுல அடிபட்டோம். சக்திவேல் ஊரைவிட்டே ஓடிப் போய்ட்டான். நடந்த சம்பவங்களை போலீசுக்கு ஒரு லெட்டர் எழுதி வச்சிட்டுதான் செத்துப்போனான் என் பிள்ளை! தேஜா பித்துப் பிடிச்சவப் போலிருந்தா. அந்த ஊர்ல இருக்கவே பிடிக்கலே. எல்லா சொத்தையும் வித்துட்டு இங்கே வந்துட்டோம்!'' பெருமூச்சு விட்டாள்.

''ஆனா, தேஜா இப்படியொரு காரியத்துல இறங்கி இருப்பான்னு நான் நினைக்கலே. சிரிச்சு பேசிக்கிட்டிருக்காளே... பழசெல்லாம் மறந்துட்டான்னு நிம்மதியா இருந்தேன்.



ஆனா, தன்னைத் தானே கரையான் மாதிரி அரிச்சுக்கிட்டு, மனநிலை சிதிலமடையற அளவுக்கு தன்னை வருத்திக்குவான்னு நான் கற்பனையிலே கூட எண்ணியதில்லே.''

''உங்க பொண்ணை குறை சொல்ல முடியாது. அந்தளவு பாதிக்கப்பட்டிருக்காங்க. அவங்களோடு இழப்புக்கள் சாதாரணமானதல்ல. என்னால அவங்க மனக்கொதிப்பை உணர முடியுது.''

''தம்பி.. என் பொண்ணு உங்களை இவ்வளவு அவமானப் படுத்திய பிறகும் கூடவா... அவளுக்காக சப்போர்ட் பண்ணிப் பேசறீங்க?'' என்றாள் அந்த துக்கத்திலும் வியப்புடன்.

''என் பேர்லேயும் தப்பிருக்கே? ஒரு சின்ன விளையாட்டுக் கூட விபரீதமாகும் வாய்ப்பிருக்கு. அதைப்பத்தி நினைச்சுப் பார்க்காம நானும் கோபியை முட்டாளாக்கி கிட்டிருக்கேன். சொல்லப்போனா ஒரு பெரிய ஆபத்திலிருந்து, பழியிலிருந்து என்னை காப்பாத்தினது உங்கப் பொண்ணுதான்!''

''.....?''

''ஆனா... நான் இதை ஒரு பொழுதுபோக்குக்காக, என் பிரச்சினைகளை தற்காலிகமாக மறக்கறதுக்காகத்தான் விளையாட்டா செய்தேன். என்னம்மா அப்படிப் பார்க்கறீங்க? என் பிரச்சனை என்னன்னா? காரணம் எங்கப்பா. நாங்க உயிருக்குயிரா நேசிக்கிற அப்பா எங்களோட இல்லே. பத்து வருஷமா ஹாஸ்பிடல்ல கோமாவுல இருக்கார்!'' சுருக்கமாய் தன் குடும்பத்தைப் பற்றி சொல்லி முடித்தான்.

பாக்யலஷ்மி இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

ஒவ்வொரு மனசுக்குள்ளேயும் ஒரு சோகம் உண்டு. மனிதனைப் படைக்கும் போதே... கண், காது, மூக்கு போன்ற

அவயங்களுடன் பிரச்சினைகளையும் சேர்த்து வைத்தே உருவாக்குகிறான் பிரம்மா.

பெருமூச்சு விட்டாள் பாக்யலஷ்மி.

மன அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த தேஜாவுக்கு கவுன்சிலிங் கொடுக்கப்பட்டு தேறி வந்தாள்.

துஷ்யந்தின் அப்பாவைப்பற்றி தன் அம்மா மூலம் அறிந்த தேஜா... வருத்தப்பட்டாள்.

'அவனை என் இலக்காக்கி மேலும் வேதனைப்படுத்தி விட்டோமே' என்று.

அவனிடம் மன்னிப்பு கேட்க விரும்பினாள்.

அவனைத் தேடி அவன் வீட்டிற்கே சென்றாள்.

அவளை எதிர்பார்க்காத பிரியா அன்புடன் வரவேற்றாள்.

''வா தேஜா! உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாய்டுச்சு. ட்ரீட்மென்டுக்காக நீயும் அம்மாவும் பெங்களூர் போய்ட்டதால என்னால வந்து பார்க்க முடியலே. அண்ணன் எல்லாமே சொன்னார். பெங்களூரிலிருந்து எப்ப வந்தே தேஜா?''

''இன்னைக்கு காலைலதான்!''

''காலேஜுக்கு எப்ப வருவே? நீயில்லாம எனக்கு போரடிக்குது!''

பதில் கூறாமல் சிரித்தாள்.

கோவிலுக்கு சென்றுவிட்டு அப்போதுதான் உள்ளே வந்த பிரபாவதி அவளைப் பார்த்ததும் முகம் மலர்ந்தாள்.

''வாம்மா தேஜா... எப்படியிருக்கே?'' என்றபடி நெற்றியில் குங்குமம் இட்டாள்.



''நல்லாயிருக்கேன்ம்மா!''

'இந்த வீட்டில் நான் செய்த தவறை பொருட்படுத்தாமல் எவ்வளவு அன்பாய் பழகுகிறார்கள்? இந்த அன்பிற்கு நான் தகுதியுள்ளவள்தானா? என்னால் நேரடியாக பாதிக்கப்பட்ட துஷ்யந்த் இவர்களைப் போலவே மனப்பூர்வமாய் என்னை மன்னிப்பாரா?'

''ஏன் நெர்வலஸா இருக்கிறே தேஜா? ரிலாக்ஸ்.''

''உ... உங்கண்ணன் எங்கே?''

''வர்ற நேரம்தான். வா... மேலே போகலாம்!''

அவளை துஷ்யந்தின் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

அந்த அறைக்குள் நுழைந்ததும் ஏதோ ஒருவிதமான உணர்வு அவளை ஆட்கொண்டது.

''உட்காரு தேஜா... விஷயமெல்லாம் கேள்விப்பட்டு ரொம்ப வருத்தப்பட்டேன்.''

''நான் தான் அவசரப்பட்டு உங்கண்ணன்...''

''அந்தளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கியே... அதனால அதை நாங்க பெரிய விஷயமாக நினைக்கலே. எப்படியோ நல்லபடி திரும்பி வந்தியே அதுவே போதும். இனிதான் உனக்கு நல்ல காலம் ஆரம்பம்.''

''எனக்கா? நல்ல காலமா? அதெல்லாம் கனவு!'' என்றாள் விரக்தியுடன்.

''கண்டிப்பாக உனக்கு நல்ல காலம் காத்துக்கிட்டிருக்கு. நேரம் வர்றப்ப அது உனக்கே தெரிய வரும். சரி... நாளைலேர்ந்து காலேஜுக்கு வருவேயில்லே?''

"இல்லே பிரியா... அதைப்பற்றி சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். நானும் அம்மாவும் இந்த ஊரை விட்டே போகிறோம். மதுரைக்கே போகிறோம். உங்களை எல்லாம் பார்த்துட்டு உங்கண்ணன் கிட்டே மன்னிப்புக் கேட்டுட்டுப் போகலாம்னுதான் வந்தேன்."

"எ...என்னது?" மின்சாரம் தொட்ட அதிர்ச்சி.

"ஆமாம் பிரியா. பெரிய தப்பு செஞ்சிட்ட மாதிரி ஃபீலிங். இன்டர்நெட்ங்கறது மனிதனோட கண்டுபிடிப்புகளின் மகுடம். அதை நிறைய யங்கர்ஸ் ஆக்கப்பூர்வமா பயன்படுத்தறதில்லே. அதனால கண்ணுக்குத் தெரியாத, காதுக்கு எட்டாத எத்தனையோ அழிவுகள் பலர் வாழ்க்கையிலும் நடந்துக் கிட்டுதான் இருக்கு. சக்திவேல் சுயநலத்துக்காக அதை வச்சு என் அண்ணனை பழிவாங்கினான். நான் உங்கண்ணனை பழிவாங்க பயன்படுத்தினேன். உலகத்திலே நிறைய சக்திவேலும், தேஜாவும் இருக்காங்க. என் செயலுக்காக நான் வெட்கப்படறேன். வேதனைப்படறேன். உங்கண்ணன் ஸ்டெடியா இருந்த மாதிரி எங்கண்ணனும் ஸ்டெடியா இருந்திருந்தா லீனாவை லவ் பண்ணியிருக்கமாட்டார். இப்படியொரு காரியம் பண்ணிட்டோமேன்னு ஒவ்வொரு நிமிஷமும் துடிக்கிறேன். உன் முகத்தைப் பார்த்துப் பேசக்கூட எனக்குத் தகுதியில்லே பிரியா. அதான்... இந்த ஊரைவிட்டே போகணும்னு முடிவு பண்ணினேன்."

"அவசரப்படாதே தேஜா. உன்னை எங்க குடும்பத்திலே ஒருத்தியாதான் நினைக்கிறேன். நீ வருத்தப்படற அளவுக்கு எதுவும் நடந்திடலே."

"நீ என்ன சமாதானம் சொன்னாலும் என்னால ஏத்துக்க முடியாது. மழை வர்ற மாதிரி இருக்கு. நான் புறப்படறேன்.



உங்கண்ணன்கிட்டே நான் மன்னிப்புக் கேட்டேன்னு சொல்லு!" அதன்பின் ஒரு நொடிகூட நிற்கவில்லை. புயல்போல் வெளியேறிவிட்டாள்.

காலிங்பெல் அழைத்தது.

டிராவல்ஸ் ஏஜென்சி வரை போயிருந்த அம்மாதான் வந்து விட்டாள் என்றெண்ணி கதவைத் திறந்த தேஜாவுக்கு அதிர்ச்சி.

மழையில் முழுக்க நனைந்தபடி துஷ்யந்த் நின்றிருந்தான். தேஜா எதிர்பார்க்கவில்லை.

"வா... வாங்க!" அவன் முகம் பார்க்க திராணியற்று தலை கவிழ்ந்தாள்.

"தேஜா... நான் கேள்விப்பட்டது நிஜமா?"

"எது?"

"இந்த ஊரைவிட்டே போகப்போறியா?"

"ம்.."

"நான் ஒண்ணு சொன்னா நம்புவியா தேஜா?"

"என்ன?"

"நான் உன்னை... பார்க்கறதுக்கு முன்னாடியே காதலிக்க ஆரம்பிச்சிட்டேன்."

"என்னது?" என்றாள் திகைப்பாய்.

"ஆமாம் தேஜா. நான் அஸ்வினியை காதலிக்கலே. தேஜாவைதான் மனப்பூர்வமா நேசிச்சேன். இந்த டைரியப்படி... எல்லாம் புரியும்!"

திகைப்பு மாறாமல் வாங்கிப் படித்தாள்.

படிக்கப் படிக்க... வியப்பு கூடிக் கொண்டே போனது.

ஒவ்வொரு வார்த்தையிலும் அவன் நேசத்தின் வீரியம் பட்டவர்த்தனமாய் வெளிப்பட்டிருக்க... அந்த அன்பை தாங்கிக் கொள்ள முடியாமல் அழ ஆரம்பித்தாள்.

''தேஜா... என்னம்மா... ஏன் அழறே?''

''முடியலீங்க... இந்த அன்பை என்னால தாங்கிக்க முடியலே. உங்க அன்புக்கு நான் தகுதியானவள் இல்லே துஷ்யந்த்!'

''இது கடவுள் போட்ட முடிச்சு தேஜா. உன்னைப் பார்க்கறதுக்கு முன்பே கனவிலே அறிமுகப்படுத்தி வச்சது கடவுள்தானே.''

''இல்லீங்க...உங்களுக்கு நான் பொருத்தமானவள் இல்லே. என் முகத்தைப் பார்த்தா எனக்கே பயமாயிருக்கு.''

''எனக்கு அப்படியெல்லாம் தோணலே தேஜா. உன் மனசை நான் நேசிக்கிறேன். என்னை வெறுத்த சமயத்திலும் அம்மாவை காப்பாத்தி உயிர் கொடுத்தியே... அந்த மனிதாபிமானத்தை நேசிக்கிறேன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்க எங்கம்மா கூடச் சம்மதிச்சிட்டாங்க. நிலையில்லா அழகுக்காக... நிலையான அன்பை நிராகரிக்க நான் முட்டாளில்லை.''

''என்னைப் பார்த்தா உங்களுக்குக் கொஞ்சம் கூட அருவறுப்பாயில்லையா துஷ்யந்த்?''

''இல்லை!'' என்றான் உறுதியாக.

தேஜாவிற்கு அழுகை பொங்கியது. கண்ணீர் வழிந்தது.

''அழுது தீர்த்து விடு தேஜா. உன் கண்லேர்ந்து வர்ற கடைசி கண்ணீர் துளி... இதுவாகத்தான் இருக்கணும். தயவு செய்து



என்னை விட்டுப் போய்டாதே தேஜா!'' அவள் கண்ணீரை துடைத்தான்.

துடைத்த கையை கெட்டியாய்ப் பற்றி விசும்பினாள்.

''கடவுள் இருக்கிறார் துஷ்யந்த். உங்க மூலமா கடவுளைப் பார்க்கிறேன்.''

அவள் தலையை தன் நெஞ்சில் சாய்த்த துஷ்யந்தின் விழிகளும் கசிந்தன. அது ஆனந்தக்கண்ணீர்.

அவளின் கருகிப் போன கன்னப் பகுதியில் அன்புடன் வருடினான்.

இதுவரை உணராத நிம்மதியுணர்வு இப்போது அவனின் நெஞ்சத்தில் உணர்ந்தாள் தேஜா.

அப்போது..

வீட்டிற்குள் நுழைய முற்பட்ட பாக்யலஷ்மி அந்தக் காட்சியால் தாக்குண்டாள்.

அவர்களின் மோனநிலை புரிந்தது.

ரிசர்வ்வேஷன் செய்யப்பட்ட மறுநாளுக்கான ரயில் டிக்கெட்டை கிழித்தவளுக்கு ஆனந்தமாய் வாய்விட்டு அழ வேண்டும் போல் இருந்தது. வாயில் கர்ச்சீப்பை பொத்தியப்படி அவர்களை தொந்திரவு செய்ய விரும்பாமல் மழையில் நனைவதையும் பொருட்படுத்தாமல் அசோகா மரத்தினடியில் நின்றாள்.

அவர்கள் வாழ்க்கையில் இதுவரையில் சூழ்ந்திருந்த இருள் விலகியது. தென்றல் தாராளமாய் நுழைந்தது. கிழக்கு வானில் மின்னலொன்று தோன்றி வெளிச்சம் பரப்பியது.

★ ★ ★

# வெண்ணிலா

## 1

ஆதவன் மேற்கே அமிழ்ந்து கொண்டிருந்தான். கடற்கரை களை கட்டத் தொடங்கியது.

அடையாறிலிருந்து மைலாப்பூர் நோக்கி வந்துகொண்டிருந்த பியட் காரைப் படுவேகமாக கையாண்டு கொணடிருந்தாள் ராணி.

காரில் கட்டி தொங்கவிடப்பட்டிருந்த கிறிஸ்துமஸ் தாத்தா வேகத்திற்கேற்ப இப்படியும் அப்படியுமாய் ஆடிக் கொண்டிருந்தார்.

ராணி மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்துப் பதறினாள்.

'நேரமாயிடுச்சே... அங்கே எல்லோரும் காத்துக்கிட்டு இருப்பாங்களே! கொஞ்சம் கூட ஞாபகமே இல்லாமல் நாலு மணி வரை எப்படித் தூங்கிப் போனேன்? மிஸஸ் வத்சலா ராகவன் போன் பண்ணலைன்னா... இன்னும் கூட எந்திரிச்சிருக்க மாட்டேன். முதல்ல இந்த பகல் தூக்கத்தை விட்டொழிக்கணும். உடம்பு அதுபாட்டுக்கு ஏறிட்டுப் போகுது.'



பலதையும் நினைத்தபடி காரோட்டியவள் கண்கள் திடீரென விரிந்தன. பதைபதைப்பாய் சடர்ன் பிரேக் போட்டாள். வண்டி ஒருமுறை குலுங்கி நின்றது.

எதிரே பழ வண்டிக்காரன், காருக்கும், பழ வண்டிக்கும் நடுவில் இரண்டடியே இடைவெளி இருந்தது.

'ஓ... காட்! ஜஸ்ட் ஒரு செகண்ட் மிஸ் பண்ணியிருந்தாக் கூட எவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்டு இருக்கும்?' நடுங்கிப் போனாள்.

''ஏம்மா? கண்ணை ஆகாசத்துல மேயவிட்டா ஓட்றீங்க? பலி வாங்கிறதுன்னு வேண்டுதலா? என்னை நம்பி ஆறு ஜீவன் இருக்கு. இப்படி கண்ணுமண்ணு தெரியாமல் ஓட்டிட்டு வர்றீங்களே... ஏதாவதொன்னு ஆச்சின்னா... எம்புள்ளைங்களை நீயா காப்பாத்துவே?'' வண்டிக்காரன் கத்தினான்.

கூட்டம் சேரத் தொடங்கியது.

ராணிக்கு அவமானாகிவிட்டது.

'தப்பு எம்மேலதான். அதுக்காக? ஒண்ணுக்கும், ரெண்டுக்குமா தெருத் தெருவா பழத்தை கூவி விக்கிறவன் என்னை கேவலமாய் பேசுவதா? நான் யார்? என்னைப் போய்...' கோபமாய் காரைவிட்டு இறங்கினாள்.

'ஏதாவது கறக்கலாம்' என்ற நப்பாசையுடன் எதிர்முனையிலிருந்து ஓடி வந்தார் டிராபிக் கான்ஸ்டபிள்.

''என்ன? என்ன இங்கே கூட்டம் போடறீங்க? தள்ளுங்க... வழிவிடுங்க... என்னய்யா, என்ன ஆச்சு?''

வண்டிக்காரன் விலாவாரியாய் சொல்ல... கான்ஸ்டபிள் ராணிபக்கம் திரும்பினார்.

அவ்வளவுதான்!

எச்சிலைக் கூட்டி விழுங்கிக்கொண்டார்.

"மே... மேடம், நீங்களா? சாரி மேடம்.. நான் உங்களை கவனிக்கலே.. நீங்க புறப்படுங்க மேடம் யோவ்... ரோடு ஓரமா வரத்தெரியாது உனக்கு?" கான்ஸ்டபிள் அந்த பழ வண்டிக்காரனிடம் திரும்பிச் சத்தம் போட ஆரம்பித்தார்.

மதர்ப்பாய் ஒருமுறை எல்லாரையும் பார்த்துவிட்டு, கார் கதவை அறைந்து சார்த்தி... வேகமாய் காரை சீறவிட்டாள்.

அன்று மாதர் சங்கத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழா!

செயலாளர் ராணி! தலைவி வத்சலா ராகவன். அந்த சங்கத்தில் நிறைய உறுப்பினர்கள் உண்டு. அனைவருமே கார் வைத்திருப்பவர்கள். ஏசியில் குளித்து, கரன்சியில் துவட்டிக் கொள்ளும் மேல்தட்டு வர்க்கத்தினர்.

விதவைகள், இன்னபிற விசயங்களால் சமூகத்தால் கைவிடப்பட்ட பெண்கள், போன்றவர்களுக்கு தையல் எந்திரம், பண உதவி என்று செய்து வருகிறது. இதெல்லாம் சமூக பிரக்ஞையோடு செய்வதல்ல. தங்கள் போட்டோ பத்திரிகைகளில் இடம்பெற வேண்டும் என்கிற விளம்பர மோகத்தால்தான். எப்படியோ... இதனால் சில ஏழைகள் பயன்பெறுகிறார்கள்.

ராணி நிமிடத்திற்கொரு முறை அந்த பாரின் வாட்ச்சை பார்த்தாள்.

லஸ்கார்னர் வளைவில் காரை ஒடித்து திருப்பியபோது தான்... அது நிகழ்ந்தது.



'டம்' மென்ற சத்தத்துடன் வெள்ளை காண்டசாவின் முகத்தில் இடித்துவிட்டு நின்றது பியட்,

பயத்தில் வெலவெலத்துப் போனாள் அந்த காரிலிருந்து இறங்கியவனைக் கண்டு,

"நெனைச்சேன், உன்னைத் தவிர வேற யாருமே இப்படி தெனாவெட்டா ஓட்டிட்டு வரமுடியாதுன்னு! முன்னபின்ன பணத்தை பார்த்திருந்தா... ஒரு அடக்கம் இருக்கும். நடுவுல வந்ததுதானே... அதான் வகை தெரியாமல் ஆடறே! ஏய் இங்கே பார்... இப்படி அடுத்தவங்க வாழ்க்கையில்... அதாவது உயிரோட விளையாடாதே! பீகேர் புல்!" உதட்டை கடித்து கோபமாய் வார்த்தைகள் துப்பிவிட்டு போனான் அரவிந்தன்.

சேற்றை வாரியிறைத்த தினுசில் அவமானத்தில் குறுகிப் போய் நின்றிருந்தாள் ராணி.

## 2

மயிலிறகு நீலத்தில் குங்குமக் கலர் பார்டர் போட்டிருந்த பட்டுச்சேலையை உடுத்தினாள். உயரத் தூக்கி சின்னதாய் போட்டிருந்த கொண்டையின் ஓரத்தில் ஒற்றை ரோஜா. சென்ற பிறந்த நாளின்போது செண்பகராமன் பரிசளித்த புதுமாடல் காசுமாலை கழுத்தை நிறைத்தது.

ஆளுயர கண்ணாடியில் இப்படியும், அப்படியும் திரும்பிப் பார்த்து... திருப்தியுடன் புன்னகைத்தாள். செண்ட்டை எடுத்து பீய்ச்சிக் கொண்டாள்.

கம்பீரமாய் படியிறங்கினாள்.

முதலில் கற்பகாம்பிகை கோவிலுக்கு, அடுத்து மிஸஸ். சேகரன் வீட்டு பர்த்டே பார்ட்டிக்கு... மனதில் குறிப்பெழுதிக் கொண்டவள் நிதானமாகவே காரை செலுத்தினாள்.

கற்பகாம்பாள் முன் கண்மூடி நின்றாளே தவிர, அவளால எதையும் வேண்டிக் கொள்ள முடியவில்லை. கொஞ்ச காலமாகவே அவள் குழம்பிப் போய்த்தான் இருக்கிறாள். எதையும் யோசித்து செயல்பட முடியவில்லை. இதுவரை நடந்ததெல்லாம் சரியா? நடப்பதெல்லாம் சரியா? எதையும் பிரித்துணர முடியவில்லை, இனி தனக்கு என்ன வேண்டும் என்று கூட யாசிக்கத் தெரியவில்லை. ஆனால், அவள் உதடு மட்டும் ஒரு வார்த்தையை உச்சரித்துக் கொண்டே இருந்தது.

'நிம்மதியைத்தா... நிம்மதியைத்தா...!' என்று.

''ஏன்டி கமலா.. முன்னாடியே சொல்வதற்கென்ன? இவள் இங்கே இருக்கான்னு! நல்ல நாளும் அதுவுமா நான் இவள் முகத்திலேயா முழிக்கணும்?'' கர்ணகடூரமாய் ஒரு குரல் பின்னால் கேட்க... சகலமும் ஆடியது ராணிக்கு.

பர்வதம் நின்று கொண்டிருந்தாள். முகத்தில் வெறுப்பு தாண்டவமாட, கண்கள் கீழே விழுந்து விடுமோ என உருட்ட... கனமான உடம்பில் அலங்கார தேரோட்டம் போல நகைகளை பூட்டி நின்றிருந்தாள்.

வியர்த்துப் போன ராணி, அர்ச்சகர் தட்டு தருமுன்பே விரைந்து வந்து காரில் அமர்ந்துவிட்டாள். ஸ்டீரியங் மீது சிறிது நேரம் தலை கவிழ்த்து கிடந்தவள் கண்களில் முத்துக்கள்.



## 3

அம்மன் சிலைபோல் கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தை கண் கொட்டாமல் பார்த்து ரசித்தாள் ராணி.

'இந்த உருவத்திற்கு முப்பத்திமூன்று வயதென்றால் யாரும் நம்புவார்களா? அதுவும் குழந்தைத்தனமான இந்த முகத்தை பார்த்த பின்பும்?'

ராணியின் விசேஷமே அவளின் பாளை வெடித்தது போன்ற சிரிப்புதான்.

சிரிக்கும்போது இடதுபக்கம் சற்றே தூக்கலாய் தெரியும் அந்த சிங்கப்பல் கூடுதல் கவர்ச்சி. கூரான நாசிக்கு பக்கத்தில் உதட்டிற்கு மேலே மிளகு சைசில் உட்கார்ந்திருக்கும் மச்சம் கூடுதல் சிறப்பம்சம். பளபளவென்ற சந்தனநிறம். ஏசியின் வாசம் அதனுடன் சிவப்பை கலந்துவிட்டிருந்தது.

உடம்பில் தங்கமும், வைரமுமாய் ஜொலிக்க தன்னைப் பார்த்து தானே கர்வப்பட்டுக்கொண்டாள்.

'இந்த அழகுதானே.. எங்கோ கிராமத்தில் ஓட்டு வீட்டில், கொசுக்கள் ரீங்காரத்தில் குடியிருந்தவளை இந்த கோபுரத்தில் சிம்மாசனம் போட்டு அமர்த்தியது?

''அம்மா...'' லேசாய் திறந்திருந்த கதவை மெல்ல தட்டி குரலெழுப்பினாள் சிவகாமி.

''வா!''

''காபி..''

''வச்சிட்டுப் போ... ஐயா வந்ததும் சொல்லு...''

''சரிங்கம்மா...''

சிவகாமி போய்விட்டாள்.

காபியை மெல்ல உறிஞ்சத் தொடங்கினாள்.

'ஏழரை ஒன்பது முகூர்த்தம். மணியாகுதே இன்னும் ஏன் அவர் வரவில்லை?' யோசனையால் நெற்றி சுருங்கியது கூட அழகாக இருந்தது.

செண்பகராமனின் சக அமைச்சர் வீட்டுத் திருமணம். ராணியோடு செல்வதாக ஏற்பாடு. இன்றைய அரசியலில் செண்பகராமன் ஒரு பரபரப்பான மனிதர். முதல்வருக்கு அடுத்தபடியாய், அவர் நம்பிக்கைக்கு பாத்திரமானவர். தினசரிகளில் அவர் பெயர் இடம்பெறாத நாளே இல்லை என்றளவிற்கு பிரபலமானவர். ஐம்பத்தி ஐந்து வயதிலும் ஒரு வாலிபருக்குரிய தோற்றமும், சுறுசுறுப்பும் கொண்ட மார்க்கண்டேயன்.

''கீ...கீ...கீ...''

கார்ட்லெஸ் போன் இவளை கூப்பிட, சுதாரித்துக் கொண்டு போனை எடுத்தாள்.

''அலோ...''

''அலோ.. டியர்... நான் தான்.''

''எங்கேர்ந்து? நீங்க இந்நேரம் இங்கே வந்துக்கிட்டிருப்பீங் கன்னு நினைச்சிட்டிருக்கேன்... டைம் ஆச்சுங்களே...''

''டார்லிங்... ரெடியா இருக்கியா?''

''ம்...''

''ஒரு...பிராப்ளம்...''

''என்ன?'' என்றாள் பதற்றமாய்.



''நோ... நோ... பயப்படாதே! நீ காரை எடுத்துக்கிட்டு முட்டுக்காடு, மகாபலிபுரம்னு போயிட்டு வாயேன்.''

''சுத்திவளைக்க வேணாம். நேராக விசயத்துக்கு வாங்க.''

''வந்து... இப்ப கல்யாணத்துக்கு என்னோட பர்வதம் வர்றேன்னுட்டா...''

''....''

''உனக்கு புரியும்னு நெனைக்கிறேன். என்ன டியர் பண்றது? வர்றவளை வராதேன்னு நான் தடுக்க முடியுமா? பிளீஸ்... என்னை புரிஞ்சிக்க. உன்னை அவாய்ட் பண்றது என் நோக்கமில்லை. நீ கவலைப்படாதே... அடுத்த மாசம் பதினஞ்சி நாள் பாரின் டூர் போறேன். சத்தியமா என்னோட நீ மட்டும்தான் வர்றே.. ஓகே?''

பட்டென்று போனை வைத்த ராணி அழத் துடித்த உதடுகளை அழுந்தக் கடித்துக் கொண்டாள்.

'எப்பேர்ப்பட்ட அவமானம்?'

'பர்வதம் அவரோடு கல்யாணத்திற்கு கிளம்புவது இரண்டாவது காரணம்தான். முதலில் இவருக்கே... நான் இதுபோன்ற பொது விழாக்களில் இவரோடு கலந்து கொள்வதில் விருப்பமில்லை.

நான் கூண்டிலடைக்கப்பட்ட கிளி! வேண்டுமென்றபோது திறந்து... விருப்பப்படி தலையாட்டி, சொன்னதை செய்து.. பரிசாய் கரன்சிகளை கொடுத்து மறுபடி உள்ளே அடைக்கப் படும் கிளி. சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மனைவிக்கும் கூட இத்தனை வேறுபாடா? ஏன்... இவர் எனக்கும்தானே தாலி கட்டினார்?'

'எங்கே? ஆயிரம் பேர் அட்சதை போட, மேளதாளம் முழங்க, புரோகிதர் மந்திரம் ஓத... மங்கல நாண் பூட்டினாரா? இல்லையே... நாலு சுவருக்குள், வெங்கடேச பெருமாள் படத்தின் முன் ஒன்றரை பவுனில் தாலியை இவள் கழுத்தில் கட்டிய போது.. ராணியின் பெற்றோர் மட்டுந்தானே அட்சதைப் போட்டு வாழ்த்தினார்கள்?

எங்கே கட்டினால் என்ன? தாலி, தாலிதான். நான் அவர் மனைவிதான். ஒரு மனைவிக்குரிய அத்தனை உரிமையும் எனக்கும் உண்டு.

'உன் உரிமைக்கு உன் கணவர் தரும் மதிப்பென்ன? அங்கீகாரம் என்ன?'

'நீ ஒரு வைரக்கல்தான். ஆனால், அதை பதிக்கக்கூட தங்கம் அவசியம் தேவை. வெறுமனே அழகுக்காக, ஆசைக்காக, கவுரவத்திற்காக பெட்டிக்குள் வைத்து பூட்டப்படும் வைரமாக இருந்து என்ன பயன்?'

ராணியின் மனது இப்படியும் அப்படியுமாய் கேள்வி கேட்டு உசுப்பிற்று.

செண்பகராமன் ராணி மீது அன்பும் ஆசையும் கொண்டிருப்பது நிஜம். பர்வதமும், மற்றவர்களையும் பொறுத்தவரை செண்பகராமனுக்கு ராணி இரண்டாவதுதான்! பர்வதமும் ஆரம்பத்திலேயே கணவரின் வீக்னசை புரிந்து எச்சரித்து வைத்திருந்தாள்.

'நீங்க ஆசைப்பட்டு எத்தனை செருப்பை வாங்கினாலும், அது வாசலோடு கழட்டிவிட்றனும்! உள்ளே வரைக்கும் மாட்டிக்கிட்டு வராதீங்க... அப்புறம் நான் பொல்லாதவளா ஆயிடுவேன்.'



'செண்பகராமனுக்கு பர்வதம் என்றால் ஒரு கிலிதான். இடுப்பில் கை வைத்துமுறைக்கும்போதுதான் ஒரு அமைச்சர் என்கிற பந்தாக்கூட பதுங்கிவிடும். தன் மனைவி இந்தளவாவது தன் ஆசைகளை, இச்சைகளை தீர்த்துக் கொள்ள இந்தமட்டுமாவது அனுமதிக்கிறாளே...' என்கிற பாசமும், மரியாதையும் ஏற்படும். அதனால் பர்வதம் என்ன சொன்னாலும் வாய்ப்பொத்திக் கேட்பார்.

ராணிக்கு தனியாக வீடு வாங்கி, கார், வேலையாட்கள் என்று வசதியாக அவளை செட்டில் பண்ணியதை அறிந்ததும் தாம்தூம்மென்று குதித்தாள். கத்தினாள். செண்பகராமன் பூனையாய் அமைதியாகிவிட்டார். இதற்குமேல் கத்தினா.... எங்கே மனுஷன் எதிர்பேச்சு பேசிவிடுவாரோ? இதுவரை இருந்த பயமெல்லாம் விட்டுப்போய்விடுமோ? என்கிற எச்சரிக்கை உசுப்ப... அவளும் வாயை மூடிக் கொண்டாள்.

ஆனாலும், அவளை பொது இடங்களுக்கு அழைத்துச் செல்வதை மூர்க்கமாய் எதிர்த்தாள். செண்பகராமனுக்கும் ராணியை பப்ளிக்கில் பப்ளிக் படுத்த விருப்பமில்லை. தன் பதவிக்கு, கவுரவத்திற்கு இழுக்கு என்பதை அறிந்தே இருந்தார். அதனால் ராணியை வீட்டிற்குச் சென்று சந்திப்பதும், எங்காவது வெளியூர் போகும்போது உல்லாசத்துக்காக அழைத்துச் செல்வதுமாகத்தான் ஒரு கட்டத்தோடு அவளை நிறுத்தியிருந்தார்.

ராணியும் விடுவதாயில்லை. அவ்வப்போது தன் உள்ளக் கிடக்கைகளை எடுத்துச் சொல்வாள். வற்புறுத்துவாள். அப்போதெல்லாம் செண்பகராமன் கூறும் ஒரே வார்த்தை...

"இப்ப உனக்கு என்ன குறைவச்சிருக்கேன் டார்லிங்? நகை, பணம், கார் இப்படி எதை வேணாலும் கேளு. இன்னும்

தர்றேன். பட், முடியாததை எதிர்பார்க்காதே... பிளீஸ்... என் சூழ்நிலையையும் கொஞ்சம் புரிஞ்சுக்கோ...'' என்று இதமாய் பதமாய் எடுத்துச் சொல்லும்போது, அந்தக் குரலை, அது தரும் இதத்தை எதிர்த்து சொல்ல ராணியின் நாக்கு தயாராய் இல்லை.

முதன்முதலாய் கெஞ்சி, கொஞ்சி இந்த திருமணத்திற்கு அழைத்துப்போக சம்மதிக்க வைத்திருந்தாள். ஆனால்... ஆனால்...

எல்லாமே நாசம்.

சுயஇரக்கம் பீறிட... தலையை கலைத்தாள். பூவை பிய்த்தெறிந்தாள். நகைகளை உருவிப் போட்டாள்.

ஆத்திரத்தில் உடல் நடுங்கியது.

கப்போர்டை திறந்து ஸ்காட்ச்சை எடுத்தாள். கிளாஸில் ஊற்றி ஐஸ்கட்டிகளை எடுத்துப் போட்டாள். அப்படியே தொண்டையில் சரித்துக் கொண்டாள். மீண்டும்... மீண்டும்...

## 4

''வாங்க... வாங்க... சிவகாமி எல்லோருக்கும் டிரிங்ஸ் குடு'' ராணி வருபவர்களை மலர்ச்சியுடன் வரவேற்றாள். வீடு நிறைய ராணியின் தோழிகள். மாதர் சங்க உறுப்பினர்கள்.

இன்று செண்பகராமனின் பிறந்த நாள்! ஆனால், ராணி தன் வீட்டில் இதுவரை அதை விமர்சையாக கொண்டாடியதில்லை. செண்பகராமனும் அனுமதிப்பதில்லை. வழக்கம்போல அன்றைய நாளிலும் ஒரு மணி நேரம் இருந்துவிட்டுப் போய்விடுவார்.



ராணிக்கு ஒரு உறுத்தல். 'நான் இவரின் மனைவி என்பது எல்லோரும் அறிந்ததுதான். பிறகேன் அதை அனைவர் முன்னிலையிலும் வெளிப்படுத்தத் தயங்க வேண்டும்? இதுவரை அவமானப்பட்டது போதும். மயிலே, மயிலே என்று கெஞ்சினாலெல்லாம் இறகு கிடைத்துவிடாது. நாமேதான் பிடுங்கணும்!'

அவளின் எண்ணத்திற்கு உருவம் கொடுக்க சந்தர்ப்பமாய் அவரின் பிறந்த நாள் வந்தது. அவருக்கே தெரியாமல் அனைவரையும் அழைத்துக் கொண்டாட வேண்டும். நிச்சயம் அவருக்கு கோபம் வரும். ஆனால், வெளிப்படுத்தமாட்டார். தனிமையில் அதை சமாளித்துக் கொள்ளலாம். அதன்பின், மற்றவர்கள் முன் என் இமேஜ் உயரும். வெறும் 'கீப்'பாக என்னை நினைத்துக் கொண்டிருப்பவர்கள்... நானும் அவரின் மனைவிதான் என்பதை, பர்வதத்திற்கு உள்ள அத்தனை உரிமையும் எனக்கும் உண்டு என்பதை கண்கூடாக உணரட்டும்.

நினைக்க... நினைக்க... நெஞ்செல்லாம் நிம்மதியும், சந்தோஷமும் பரவியது.

''என்ன ராணி? நேரமாகுது... அவர் இன்னும் வரலே?'' வத்சலா ராகவன் பொறுமையிழந்து கேட்டாள்.

''வந்துடுவார். நாலஞ்சு கூட்டத்துல பேச ஏற்பாடு ஆகியிருக்கு. வர்றநேரம்தான்'' சமாதானம் சொன்னாள்.

பிரமாண்ட பங்களாவின் வாசலில் பெரிய ஷாமியானா பந்தல் போடப்பட்டிருந்தது. லாரியிலும், பஸ்ஸிலுமாய் வந்த தொண்டர்கள்... திருப்தியாக சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

நண்பர்கள், சக அமைச்சர்கள் வந்து வாழ்த்தினர். பெருமிதமாய் அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பர்வதம், வேலையாட்களை ஏவிவிட்டாள்.

''மசமசன்னு நிக்காம...வர்றவங்களை கவனியுங்க.''

காக்டெயில் பார்ட்டி! சைனீஸ், தந்தூரி வகை விருந்து.

செண்பகராமன் தன் வாரிசுகளை அறிமுகப்படுத்தினார்.

''இவன் அரவிந்தன். மூத்தமகன், எம்.சி.ஏ. படிச்சிருக்கான். சொந்தமா பிஸினஸ் பண்றான். அவன் ரெண்டாவது பொண்ணு நிகிதா! ஸ்டெல்லா மேரீஸ்ல பி.காம்! இவள் என் கடைக்குட்டி நிர்மலா. பிளஸ் டூ. படுசுட்டி. என்னைப் போலவே இவள் அரசியல்ல ஆர்வம் உள்ளவள், என் குடும்பத்தில் இவள் மட்டும்தான்'' பெருமையாய் தன் செல்ல மகளைப் பற்றிக் கூற... பத்திரிகைகாரர்கள் எழுதிக் கொண்டனர். மூலை முடுக்கிலிருந்தெல்லாம் பிளாஷ் கண்சிமிட்டியது.

ஒரு கிளாஸை எடுத்து கொஞ்சமாய் உறிஞ்சத் தொடங்கிய செண்பகராமனுக்கு ராணியின் நினைவு எட்டிப் பார்த்தது.

'இவர்களிடமிருந்து கழண்டுகொள்ள வேண்டும். காலையிலேயே ஏழெட்டு முறை போன் பண்ணிட்டா. கண்டிப்பா வந்துடுங்கன்னு. போகலேன்னா... தொடக்கூட விடமாட்டா!

பர்வதம் அருகில் வந்தாள்.

''சாப்பிட வாங்க...''

''வேணாம் பர்வதம். நான் இவங்களோட சாப்பிடறேனே...''



''டாக்டர் சொன்னதை மறந்துட்டீங்களா? மட்டன் சிக்கன் கண்ணால் கூட பார்க்கக்கூடாது எழுந்து உள்ளே வாங்க... கொஞ்சமா ரசம் சாதம் பிசைஞ்சு தர்றேன்.''

''என்னடி பாவம் பண்ணினேன்? என் பிறந்தநாளுக்கு அவனவன் இஷ்டத்துக்கு ஒரு புடி புடிக்கிறான். நான் ஒரு வாய் இதை சாப்பிடக்கூடாதா?''

''அம்மா, உங்களுக்கு போன்.''

வேலைக்காரர் வந்து இடைமறிக்க, பர்வதம், தன் கனமான உடம்பை சிரமமாய் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

''அலோ..''-

''அலோ... நான் வத்சலா ராகவன் பேசறேன்.''

''ஓ... மாதர் சங்க தலைவியம்மாவா? எப்படி இருக்கே வத்சலா? உன் பையன் லண்டன்லேர்ந்து வந்துட்டானா?''

''அது ஆச்சு ஒரு மாசம்? நீங்க எப்படி இருக்கீங்க!''

''எனக்கென்னடியம்மா குறைச்சல் ஒண்ணைத் தவிர, உனக்குத்தான் தெரியுமே! மனுஷன் தனியா அவளை கட்டும் செட்டுமா வைச்சி கொண்டாடறார்!''

''உங்க வீட்ல பார்ட்டி பலமோ?''

''ம்... நடந்துட்டிருக்கு. உன்னை கூப்பிட மறந்துட்டேன். இப்ப மட்டும் என்ன? இங்கே வாயேன்...''

''வேணாங்க... இங்கேயும் நான் பார்ட்டியில, அதுவும் உங்க கணவரோட பர்த்டே பார்ட்டியில கலந்துக்கத்தான் வந்திருக்கேன்.''

''என்ன சொல்றே வத்சலா? இப்ப நீ எங்கேர்ந்து பேசறே?''

''ராணியோட வீட்லேர்ந்துதான்...''

''ரா...ணி...! அவள் வீட்லேயா? பார்ட்டி நடக்குதா?'' முகம் மாறிப்போனது பர்வதத்திற்கு.

''இன்னும் ஆரம்பிக்கலே. அமைச்சருக்காகத்தான் வெய்ட் பண்ணிட்டிருக்கோம். காத்திருந்த நேரத்தில் போரடிச்சிது.சரி.. உங்களைப் பார்த்து நாளாச்சுதே... ஒரு போனாவது பண்ணு வோம்னு பண்ணினேன். டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?'' சரியாய் குறிபார்த்து கல்லை எறிந்துவிட்ட திருப்தி வத்சலாவுக்கு.

''இல்லை... சரியான நேரத்தில்தான் போன் பண்ணி யிருக்கே. உனக்கு நன்றி வத்சலா. அவகிட்ட சொல்லிவை! உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாதுன்னு திட்டமா போடறா! பார்ட்டி குடுக்கிறாளா பார்ட்டி? எப்படி நடக்குன்னு பார்த்துடறேன்!'' ஆவேசமாய் மூச்சிரைத்தாள்.

வத்சலா சந்தோஷமாய் தன் சீட்டில் வந்து உட்கார்ந்தாள். அவளுக்கு ராணி மீது பொறாமை. அவள் அழகு மீது, அமைச்சர் அவள் மீது பாசமும், பணமும் பொழிவது மீது. பணத்தில் பிறந்து பணத்தில் வளர்ந்த நம்மால் ஒரு பிளாட் வாங்கவே உன்னைப் பிடி, என்னைப் பிடி என்று இருக்கும் போது, பட்டிக்காட்டு நாய்... இவளுக்கு வந்த வாழ்வைப் பார்! என்று குமுறுவாள்.

செண்பகராமனின் வரவிற்காக உள்ளுக்கும், வாசலுக்குமாய் அலைந்த ராணியை பார்க்கையில் குதூகலமாய் உணர்ந்தாள் வத்சலா.

''எங்கே கிளம்பிட்டீங்க?''



முதுகுப் பின்னால் வந்த குரலால் திடுக்கிட்டு திரும்பினார் செண்பகராமன்.

''எ... என்ன பர்வதம்?''

''எங்கே கிளம்பறீங்கன்னு கேட்டேன்...''

''வாசலுக்குத்தான்.. தொண்டர்களை அனுப்பி வைச்சிட்டு வந்துடுறேன்..''

''பொய் சொல்லாதீங்க... எங்க போறீங்கன்னு எனக்குத் தெரியும்.. அவள் வீட்டுக்குத்தானே?''

''ஹி... ஹி..'' அஷ்டகோணலாய் சிரித்தார்.

''அவள் வீட்டுக்கு நான் தடுத்தாலும் போவீங்க. எனக்குத் தெரியும். ஆனா, இன்னைக்கு நீங்க அங்கே போகக்கூடாது!''

''என்ன சொல்றே பர்வதம்?'' ஏன் என்று கேட்கப் பயம்.

''அந்த மேனாமினுக்கி ஊர்ல உள்ள பொம்பளைங்களை யெல்லாம் அழைச்சு பிறந்த நாள் பார்ட்டி குடுத்திட்டிருக் காளாம். உங்களுக்காக அங்கே எல்லோரும் காத்துக்கிட்டு இருக்காங்களாம். யோசிச்சி பாருங்க. இதெல்லாம் உங்களுக்குத் தேவையா? தங்கத்தோட சேர்த்து செருப்பையும் பீரோவுல வைக்கலாமா? வைக்கத் தெரியாத எடத்துல வச்சு, இப்ப முழிக்கறதுல என்ன பயன்? தோளுக்கு மீறி வளர்ந்த பையன் இருக்கான். வயசுக்கு வந்த ரெண்டு பொண்ணுங்க இருக்கு. நீங்க இன்னும் சின்னப் பையனாட்டாம் ஆட்டம் போடறீங்க. பிறந்த நாளும் அதுவுமா இப்படி பேசக் கூடாதுதான். என்ன பண்றது? பேச வைச்சிட்டீங்களே! சீக்கிரம் அந்தச் சனியனை தலைமுழுகற வழியைப் பாருங்க!'' நீளமாய் பேசி முடித்தாள் பர்வதம்.

செண்பகராமன் தொப்பென்று சோபாவில் அமர்ந்து விட்டார்.

'நமக்கே தெரியாமல் ராணி பார்ட்டிக்கெல்லாம் ஏற்பாடு பண்றாளா? பர்வதம் சொல்றதிலேயும் தப்பில்லே. இனிமே உஷாரா இருக்கணும். இன்னைக்கு அவள் வீட்டுக்குப் போகக் கூடாது. இது மாதிரி அதிகப் பிரசங்கித்தனமா நடந்துக்கா தேன்னு எச்சரிக்கணும்...' யோசிக்கத் தொடங்கினார்.

## 5

அழகான, அடக்கமான பங்களா அது! கேட்டை திறந்து உள்ளே நுழைந்தால்... புற்களின் பச்சை விரிப்பு மெத்தென்று முத்தமிடும். இதுவரை பார்த்தேயிராத செடி வகைகளை இருமருங்கும் தலையாட்டிவரவேற்கும்.

போர்டிகோவில் ராணி தொட காத்திருக்கும் பியட். அதுவும் அவளுக்கு பிடித்த சாக்லேட் நிறத்தில், பங்களா உள்ளே நுழைந்ததால். இள நீல கார்ப்பெட் விரித்த தரை. குஷன் சோபாசெட். அலங்கார விளக்குகள். சுவற்றில் ஒரே ஒரு மோனோலிசா படம்.

அவள் படுக்கை அறையில் தலைக்குமேல் சிரிக்கும் அழகிய குழந்தையின் ஓவியம். எதிர்சுவற்றில் செண்பகராமனின் லாமினேட்டட் என்லார்ஜ் போட்டோ.

நவீன வசதிகளுடன் பாத்ரூம், வார்ட்ரோப் நிறைய வழிய... வழிய சேலைகள். பீரோ லாக்கரில் நகைகள். எடுபிடிக்கு வேலையாட்கள். பாங்க்கில் கணிசமாய் பணம்.

என்ன இல்லை?



''கார்... கார்...'' தொந்திவயிறு மேலே எழும்பி எழும்பி சப்தித்தது... குறட்டை விட வசதியாக லேசாக வாய்பிளந்து உறங்கிக் கொண்டிருந்த செண்பகராமனை உற்றுப் பார்த்தாள்.

அந்நியமாய் தெரிந்தார். அந்த குறட்டை சத்தம் முகத்தை சுளிக்க வைத்தது. மிகவும் வயதாகிவிட்டது போல் தோற்றமளித்தார்.

பார்வைக்கும், மனசுக்கும் ரொம்பவே தொடர்பு உண்டு ஆயிற்றே? இத்தனை நாள் கண்களுக்குப் புலப்படாத வயோதிகம் இப்போதுதானே தெரிகிறது?

முன்பு போல் இல்லை இவர்! பிறந்த நாளன்று வராமலே ஏமாற்றிவிட்டார். சரி, போகட்டும், ஜஸ்ட், ஒரு ஆறுதல் வார்த்தை... போனில் சொல்லக்கூட முடியாத அளவிற்கா நேர பற்றாக்குறை இருக்க முடியும்? அடுத்த நாள், அதற்கடுத்த நாள் என்று இவர் போனுக்காக காத்திருந்தாள். இவளாக பேசவும் தயக்கம். கெஞ்சினால் மிஞ்சி போகிறார். நான் ஒன்றும் அத்தனை இளப்பமில்லை என்று உயர்வு மனப்பான்மை தூண்ட.. பேசவில்லை.

அதன்பின் எப்படி நினைவு வந்ததோ? பத்து நாள் கழித்து இப்போதுதான் வந்திருக்கிறார். வந்தவர் போனில் யாருடனோ வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். அதென்னவோ? இங்கே வந்தால் எப்போதும் போனில் வெகுநேரம் பேசுகிறார். என்ன பிஸினஸோ, எழவோ?

ராணியின் இதயத்தை ஒரு விசயம் ரம்பமாய் அறுத்துக் கொண்டிருந்தது.

செண்பகராமன் வருகிறேன் என்று வராமல் போன நாட்கள் நிறைய. அப்போதெல்லாம் ராணியை சமாதானப்படுத்த

பட்டுச்சேலை, நகைகள், பரிசு பொருட்கள் என்று வகைக்கொன்றாய் வாங்கிக் குவிப்பார். அவர் கோபித்தால் நஷ்டமென்னவோ அவருக்குத்தான்.

இந்த முறையும் அவர் ஏதாவது வாங்கி வருவார் என்று எதிர்பார்த்தாள். ஆனால் அவர் கை வீசிக் கொண்டு வந்ததுதான் ராணியின் முகத்திலடிப்பது போல் இருந்தது. வந்ததும் வராததுமாய் 'என்னை கேட்காமலேயே எப்படி நீ பார்ட்டி கீர்ட்டியெல்லாம் அரேன்ஞ் பண்ணினாய்?' என்று கோபமாய் கேட்டார்.

செண்பகராமன் அவளிடம் கோபித்தது இதுதான் முதல்முறை.

'ஏன்? என்னைப் பிடிக்கவில்லையா? அலுத்துவிட்டேனா? அதற்குள்ளா? வயதானவர் என்றும் பாராமல் ஆட்டுக்குட்டிப் போல் பின்னாடி வந்தேனே! அதற்கு கிடைத்த பரிசா?

என் இளமை தேவைப்பட்ட அளவிற்கு என் இதயம் தேவைப்படவில்லையா? நிழலுக்கு ஒதுங்கும் மரமா நான்? எந்த உணர்ச்சியுமில்லா ஜடமா நான்? இன்பத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தேன். இவரால் எனக்குப் பணத்தைத் தவிர வேறென்ன சந்தோஷத்தைத் தர முடிந்தது? நான் சகித்துக் கொள்ளவில்லையா?

இப்படியே போனால்... என் வாழ்க்கை? சட்டரீதியாய் எந்த பாதுகாப்பையும் தரமுடியாத கல்யாணம். தவறா? அவசரப்பட்டு முடிவெடுத்துவிட்டேனா? இல்லையே... நிதானமாய் யோசித்து, எல்லோரும் சேர்ந்து மனப்பூர்வமாய் எடுத்த முடிவுதானே? பிறகெப்படி பிசகியது?



எல்லாம் அமைந்த நிறைவான வாழ்க்கை என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டதெல்லாம் குழந்தைத் தனமான சமாதானமா? திருமணத்திற்கு முன் இருந்த இல்லையில்லை... இவர் என்னை வைத்திருப்பதற்கு முன்... இதுதானே கசப்பான உண்மை! அந்த சந்தோசமெல்லாம் இந்த பணத்தால், விடாமல், நகையாய் கிடைத்ததா? ஏதோ ஒரு வெறுமை. பெண்மையின் முழு பரிமாணம் தாய் என்னும் பதவி. அதைக் கூட என்னால் வகிக்க முடியலையே... நான் பெண்தானா?

'இல்லை.. இப்போது நான் ஒன்றுமில்லாதவள்.'

''என்ன ராணி.. எந்த கோட்டையைப் பிடிக்கப் போறே! பயங்கர யோசனை! ம்!'' தூக்கம் கலைந்து எழுந்த செண்பகராமன் இவள் இடையில் கை போட்டு இழுத்தார்.

'கோட்டையை பிடிக்கறது பத்தியில்லே... கோட்டை விட்டது பத்திதான்' சொல்லவில்லை ராணி.. உயிரே இல்லாமல் அவரைப் பார்த்தாள்.

''கமான்... நேரமாகுது... நான் கிளம்பணும் வா இப்படி..!''

ராணிக்கு இப்போது அந்த அரவணைப்பு இதத்தை தரவில்லை. பெரிய சங்கிலியால் பிணைத்து கட்டுவது போல் கஷ்டமாய் இருந்தது.

## 6

''ஆசையே துன்பத்திற்கு காரணம், ஆசையை அடக் கிட்டா.. வாழ்க்கை நம்ம கையில் கிடைச்ச களிமண் மாதிரி. நம்ம விருப்பத்துக்கு அதை உருவாக்கலாம்'' பத்ரி அருமையான பாடம் நடத்திக் கொண்டிருந்தான்.

மாணவ, மாணவிகளிடையே குண்டூசி விழுந்தால்கூட சத்தம் கேட்கும் அமைதி. கம்பீரமான உடற்கட்டும், அதற்கு தோதான கணீர் குரலும் ஒரு வரி பாடமென்றால் கூட நாலு வரி சொந்த சரக்கோடு அவன் பாடம் நடத்துவது அலாதியானது.

மதியம் அவனிடம் சிவப்பு நிற இங்க் பேனாவை இரவல் வாங்கியதை திருப்பிக் கொடுக்க வந்த ராணி வாசல் வராண்டாவிலேயே நின்றுவிட்டாள்.

'என்ன ஒரு குரல்? என்னிடம் பேசும்போது மட்டும் கம்பீரம் மறைந்து கிசுகிசுப்பாய் ஒரு குழந்தையிடம் பேசுவது போல் பேசுகிறார்?' ராணி சிரித்துக் கொண்டாள்.

அது ஒரு மாநகராட்சி பள்ளி. பத்ரி ஐந்தாண்டாக அந்த பள்ளியில் பணிபுரிந்து வருகிறான். ராணி ஒரு வருடமாகத்தான்.

'டிங்..டிங்...டிங்...'

வகுப்பு முடிந்ததற்கான மணியடித்தது. பத்ரி வெளியில் வந்தான். சாக்பீஸ் அவன் விரல்களில் கோலம் போட்டிருந்ததை கர்ச்சீப்பால் துடைத்தப்படி வந்தவன், ராணியைப் பார்த்ததும் நின்றான். பார்வையில் மின்னல்.

''வாங்க மிஸ்...''

''இந்தாங்க... உங்க பென். ரொம்ப தேங்க்ஸ்...''

''இதுக்காகவா வந்து காத்திருந்தீங்க? வேணாங்க... இது உங்கக்கிட்டேயே இருக்கட்டும்.''

''ஐயோ.. வேணாங்க...''

''ஏன் பதர்றீங்க?'' சிரித்தபடி கேட்டான்.



''சொன்னா கிண்டல் பண்ணுவீங்க...''

''பரவாயில்லை... சொல்லுங்க..''

''ம்ஹூம்... ஒரு டீச்சர் இப்படியெல்லாம் பேசறதான்னு கேலி பண்ணுவீங்க'' அவளின் குழந்தைத்தனமான பிடிவாதம் பத்ரிக்கு ஆர்வத்தை கிளறிவிட்டது...

''பாருங்க மிஸ் ராணி! மண்டை பெருசாகிட்டே வருது... வெடிக்கறதுக்குள்ளே சொல்லிடுங்க...''

''அது வந்து... பேனாவோ, கர்ச்சீப்போ, நாம பரிசுப் பொருளா வாங்கிக்கக் கூடாது.''

''அடடா... ஏன்?

''வாங்கினா... அவங்களுக்குள்ள உறவு முறிஞ்சிடுமாம்...''

படக்கென்று திரும்பி அவளைப் பார்த்தான் பத்ரி.

'நம் உறவு முறிஞ்சிடக் கூடாதுன்னு உனக்குள் இவ்வளவு ஆதங்கமா... என்னைப் போலவே...?!'

''நான் சொல்றது சரிதானே சார்?''

''எனக்கு சென்டிமென்ட்ல நம்பிக்கையில்லை. பட், இப்படியொரு சென்டிமென்ட்டை உருவாக்குனவங்களுக்கு நான் ரொம்ப கடமைப்பட்டிருக்கேன் மிஸ் ராணி!''

''புரியலை..''

''இப்போதைக்கு புரியாததே நல்லது'' பளீரென சிரித்தான்.

இருவரும் பஸ் ஸ்டாண்டை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

'நான் உன்னை விரும்புவதும், நீ என்னை நேசிப்பதும், பரஸ்பரம் தெரிந்து வைத்திருக்கிறோம். ஒருநாள் நம் இதயக்

கோட்டை திறக்கத்தான் போகிறோம். அதுவரை புரிந்தும், புரியாத மாதிரி நடிக்கிற இந்த காதல் விளையாட்டை தொடருவோம். இதில் ஒரு தனி சுகம் இருக்கவே செய்கிறது இது நமக்கு பாதுகாப்பு வளையம். உரிமையுடன் எல்லை மீறாமல் பழக நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்ட சுவர்!

''என்ன சார்... அமைதியா வர்றீங்க?''

''அ.... ஒண்ணுமில்லே.. இன்னும் ரெண்டு வாரத்துல அரையாண்டுத் தேர்வு வரப்போகுதே... ஸ்டூடண்ஸை தயார் பண்ணிட்டீங்களா?

''ம்... ஆனா உங்க லெவலுக்கு என்னால சொல்லித் தரமுடியாது சார்!''

''அப்படியா?!''

''யெஸ்... இன்னைக்கு நீங்க பாடம் நடத்தின விதம் என்னையே ஒரு ஸ்டூடண்டா வைச்சிடுச்சு. ஆனா, ஒரு டவுட்.. ஆசைப்படறது தப்பா சார்? ஆசைப்பட்டாத்தான் அந்த பொருளை அடையறதுக்காக அவன் முயற்சிப்பான். ஸோ, உழைக்கிறான், பாடுபட்டு அதை அடைய சுறுசுறுப்பா இயங்கறான். முயற்சி வெற்றிபெறும். திரும்பவும் முன்னதைவிட எளிதில் கிடைக்காத ஒன்றின் மீது ஆசைப் படுவான். அப்ப... இன்னும் அதிகமாக உழைப்பான். நான் நினைக்கிறேன். ஆசைகள்தான் லட்சியங்களை உருவாக்குவது. அந்த லட்சியம்தான் பொருளாதாரத்தை உயர்த்துது.''

''நன்றாக சொன்னீர்கள் மிஸ் ராணி! பொய்தானே சொன்னீங்க? என்னை மாதிரி பாடம் நடத்த முடியாதுன்னு...''

''பேச்சை மாத்தாதீங்க சார்! கேட்டதுக்கு பதில்!''



''ஒக்கே... ஒக்கே....! நான் சொன்ன ஆசை... மனுஷன் தப்பான வழியில போய் அடையணும்னு நினைக்கறதை! எந்த ஆசையுமே அளவோடதான் இருக்கணும். உபயோகப்படற மாதிரி லட்சியங்கள் உருவாகறதுல தப்பில்லே! மனுஷன் எதிர்பார்ப்புகளை குறைச்சுக்கணும். எதிர்பாராம கிடைக்கிறதில ஒரு சந்தோஷமிருக்கு. உழைக்கறது தப்பில்லே. அதுக்காக முழு பலனை எதிர்பார்க்கறது தப்பு. தான் விதைச்சதெல்லாம். தனக்கே தனக்குத்தான்னு நினைக்க ஆரம்பிச்சிட்டா மத்தவங்க எப்படி சாப்பிடறது? உண்மையா சொல்லப்போனா... எந்த உழைப்புக்கும் முழு பலன் கிடைப்பதில்லை. பத்து விரலினால் உழைக்கிறவன் அஞ்சு விரலால மட்டும்தான் அள்ளி சாப்பிட முடியும். ஸாரி.. ரொம்ப போர் அடிக்கிறேனா?''

''இல்லை சார்... அசந்து போயிட்டேன்... அதோ.. நாம போற பஸ் வருது!''

''அட... கேக்க மறந்துட்டேனே! சித்ரா மிஸ் வரலையா?''

''இன்னைக்கு லீவு போட்டுட்டாங்க.''

''ஓ!''

'சித்ரா வந்தால் என்ன? வராமல் போனால் என்ன? அவ்வளவு அக்கறையாக விசாரிப்பு வேண்டிக்கிடக்கு?' சுர்ரென்று கோபம் ஏறியது ராணிக்கு.

பத்ரியும், ராணியும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள்தான். பள்ளி டவுனில் இருந்தது. எனவே இருவரும் ஒரே பஸ்ஸில் தான் புறப்பட்டு, ஒரே பஸ்ஸில் திரும்புவார்கள்.

கிராமம் போய் சேரும்வரை ராணி எதுவும் பேசவில்லை. அவளின் திடீர் மவுனத்திற்கு காரணம் புரியாத பத்ரி குழப்பத்தில் ஆழ்ந்தான்.

"என்னடி எழுந்துட்டே?"

"நீ செஞ்சு வைச்சிருக்கிற சமையலை இவ்வளவு சாப்பிட்டதே அதிகம்."

"என்ன கிண்டலா?"

"ஐயோ.. பொய் சொல்வேனா? நிஜம்தாம்பா!"

"பாருங்க இவள் சொல்றதை?"

"பாவம் முப்பது வருஷமா உன் சமையலை சாப்பிட்டு சாப்பிட்டே நாக்கு மரத்துப்போச்சு அப்பாவுக்கு. இதை காரக்குழம்புன்னு நீ கோயில்ல வைச்சு சத்தியம் பண்ணாக்கூட நம்பமாட்டாங்கம்மா! ஒரு காரமுமில்லே... உப்புமில்லே."

"இப்படி சொல்றவ.. நீ வந்து சமைச்சிருக்கணும்."

"அ... அதுக்கெல்லாம் நேரங்காலம் வந்தா சமைக்கத்தான் போறேன். எங்கப்பாவை நல்லா ஏமாத்தி உன்னை கட்டி வைச்சிட்டாங்க!"

"கரண்டியை எடு.. கழுதையை என்ன பண்றேன் பார்!" பத்மா விரட்டிக் கொண்டு வர, ராணி துள்ளி குதித்தபடி கொல்லைப்பக்கம் ஓடிவிட்டாள்.

"வயசாச்சுதேயொழிய.. இங்கிதம் தெரியமாட்டேங்குதே! இவளே சிறுபிள்ளைத்தனமா நடந்துக்கறா... இவள் எப்படி மத்த பிள்ளைங்களுக்கு என்னத்தை பாடம் நடத்தி, எப்படி உருப்படப் போகுதுங்க?" கவலைப்பட்டாள்.

"விடு பத்மா! அவள் தமாஷ் பண்றா" ஜகன்னாதன் சமாதானப்படுத்தினார்.



"நான் பெத்ததுல இவள் மட்டும்தான் இப்படி, வாய் காது வரைக்கும். ஆசையோ கடலளவு, தாலின்னு ஒரு கயிறு இவள் கழுத்துல விழுந்தாதான் பொறுப்பு வரும்."

"இதுக்குள்ளே என்ன அவசரம் பத்மா! இப்பத்தானே ரெண்டாவது பொண்ணை கரையேத்தினோம். இவளுக்கு ஒரு வருடம் போகட்டும்."

"ஏங்க... நம்ம நீலமேகம் தெரியுமில்லே..."

"யாரு... மதிவாணன் மச்சினனா?"

"அவர்தான்."

"அவருக்கென்ன?"

"அவருக்கு ஒரே ஒரு பையன்தான். பேரு கங்காதரன். சொந்தமா பிஸினஸ் பண்றான். கைநிறைய காசு புழங்குது. நீலமேகம் சம்சாரம் பார்வதியை போன வாரம் கோவில்ல தற்செயலா பார்த்தேன். அவங்களே வலிய, நம்ம ராணியை அவங்க பையனுக்கு..."

"முடிச்சிடலாம்னு சொன்னாங்களாக்கும். நீயும் ஆஹான்னு வாயப் பொளந்துட்டியாக்கும். உனக்கும் தெரியாததில்லே. நீலமேகம் சரியான குடிகாரன். அவன் சம்சாரம் அவன்கூட சேர்ந்து குடிக்குது. ஊரே காறித் துப்பற அளவுக்கு சின்ன குழந்தைக்கு கூட தெரிஞ்ச கதை. புருஷன்காரன் குடிச்சா பாதி வீடு எரிஞ்ச மாதிரி. பொண்டாட்டியும் சேர்ந்து குடிச்சா.. முழு வீடும் எரிஞ்ச மாதிரி... வாய மூடுவியா?" ஜகன்னாதன் கோபமாய் முறைத்தார்.

"இல்ல... வசதியான எடம். நம்ம பொண்ணு எதுக்கும் குறையில்லாமல் வாழ முடியும்... அதுக்குத்தான்."

"நீயும் பேராசைக்காரி பத்மா! இந்தப் பேச்சை இதோட விடு. ராணிக்கு ஏத்த பையனை நான் ஏற்கனவே பார்த்து முடிவு பண்ணிட்டேன். இந்த ஊர்க்காரன் தான். தங்கமான பிள்ளை. எந்த கெட்ட பழக்கமும் இல்லை. அப்படி ஒரு பிள்ளை கிடைக்கறதே கஷ்டம்."

"யாருங்க அது?"

"நேரம் வரும்போது தன்னாலே தெரியும். வெத்திலையை எடுத்துட்டு வா!"

"என்னம்மா நீ... விளையாடுறியா?" ராணியின் குரல் கேட்டது.

"பாருங்க இவளை. கொஞ்சம் மாவாட்டி தாடின்னு சொன்னா.. நான் வேலைக்காரியான்னு கேக்கறா?"

"பின்னே.. உட்கார்ந்து ஆட்டித் தரச் சொல்றியா? ஒரு கிரைண்டர் வாங்குங்கன்னு சொன்னா கேக்கறியா? கேட்டா, பணமில்லேன்னு பாட்டுப் பாடுவே. நம்மைவிட வசதி குறைச்சலா உள்ள வீட்ல எல்லாம் மிக்ஸி, கிரைண்டர், கலர் டி.வி.ன்னு அமர்க்களமாய் இருக்கு. நம்ம வீட்ல செகண்ட் ஹான்ட்ல வாங்கின ப்ளாக் அன்ட் வொயிட் டி.வி. மட்டும்தான். தவணையில் வாங்கினாக்கூட கொஞ்சம் கொஞ்சமா பணம் கட்டி அடைச்சிடலாம்."

"ராணி... இப்படி உக்காரும்மா! நீ சொல்றது தப்பில்லே. ஆனா. இந்த குடும்பத்தை கொஞ்சம் நினைச்சிப் பார். நான் ரிடையராகி மூணு வருடமாய்டுச்சி. இருந்த பணத்தை வைச்சி உன் அக்காங்களுக்கு கல்யாணத்தை முடிச்சேன். நிலத்துல வர்ற குத்தகை பணமும், என்னோட பென்ஷன் பணமும்தானே இப்ப நம்ம வயித்துக்கு சரியா இருக்கு. மண்ணச்சநல்லூர்ல



இருக்கிற நிலத்தை வித்துதான் நான் உன்னை கரையேத்தணும். அப்படியிருக்கப்ப.. தவணை முறையில் பொருள் வாங்கினாலும் அதை எப்படி கட்டறது? இருக்கிறதை வைச்சு சந்தோஷப்படணும். ஆசைப்பட்டு கிடைக்காமல் போனா.. ஏமாற்றம் விரக்தியை தரும். நீ இன்னும் சின்னப்பிள்ளை இல்லே. வேறொரு வீட்டுக்கு வாழப்போற பொண்ணு. கொஞ்சம் அம்மா சொல்றதையும் கேட்டுக்கக் கூடாதா?" இதமாய் சின்னக் குழந்தைக்கு சொல்வது போல் சொல்லிக் கொண்டிருந்த அப்பாவின் பிரசங்கம் ராணிக்குள் சலிப்பை உண்டாக்கியது. ஆனால், அதை அவள் வெளிக்காட்ட வில்லை.

"சரிப்பா!" என்று ஒற்றை வார்த்தையில் சொல்லிவிட்டு எழுந்து கொண்டாள்.

டிபன் பாக்சை திறந்து பூரியில் இரண்டை எடுத்து சித்ராவின் மேல்தட்டில் வைத்தாள். சித்ரா தக்காளி சாதத்தில் பாதியை ராணிக்குக் கொடுத்தாள்.

"அட மறந்துட்டேனே... ஆபீஸ் ரூம் போனப்ப... உனக்கொரு லெட்டர் வந்திருந்தது. எடுத்துட்டு வந்தேன். இந்தா!"

சித்ரா கடிதத்தை எடுத்து நீட்டினாள்.

'லெட்டர்? எனக்காக?"

'யார் எழுதியிருப்பார்கள்?' ஆச்சரியமாய் வாங்கிப் பிரித்தாள் ராணி.

படித்ததும் முகம் குப்பென்று சிவந்துபோனது.

''ராணி... ராணி... என்ன சிலையாயிட்டே.. யார் எழுதினது?''

''படிச்சுப் பார்!''

''பரவாயில்லை.. நீயே சொல்லு...''

''ப்ச்... படிச்சுப் பாரேன்.''

வாங்கிப் படித்தாள்.

'நான் அங்கு நலமா?'

- பத்ரி.

ஒரே ஒரு வரி! அழகாய் மணிகோர்த்ததுப் போல் எழுத்தில்.

அதை படித்ததும் சித்ராவின் இதயத்தில் ஊசி குத்தியது போல் வலித்தது.

''இதுக்கு என்ன அர்த்தம் சித்ரா?'' புரியாதது போல் வெகுளித்தனமாய் கேட்டாள்.

''புரியலையா?''

''ம்ஹூம்...''

''நிஜமாவே புரியலையா!''

''நிஜம்மா...'' கண்களை படபடத்தாள்.

''பத்ரி... உன்னை காதலிக்கிறார் ராணி.''

''அப்படியா?'' பதறியது போல் கேட்டாள் ராணி.

''நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி ராணி!''

''ஏன் பத்ரி அதிர்ஷ்டசாலி இல்லையா!''



சித்ரா சில கணங்கள் தலையை கவிழ்த்துக் கொண்டாள். சொற்ப நொடிகளில் ஏமாற்றம் கண்ணீராய் உற்பத்தியாகி... இரண்டு பொட்டுக்கள் தரையில் விழுந்து சிதறியது. தன்னை வெகுவாய் கஷ்டப்பட்டு சுதாரித்துக் கொண்டு புன்னகையுடன் ராணியை ஏறிட்டாள்.

''பத்ரி... எப்ப லீவு முடிஞ்சி வருவார் ராணி?''

''இன்னும் ரெண்டு நாள்ல வந்துடுவார்னு நினைக்கிறேன். பெரியப்பா மகனுக்கு பெங்களூர்ல கல்யாணமாம். பத்து நாள் லீவுல எட்டு நாள் முடிஞ்சி போச்சி. ஆமா.. ஏன் கேக்கறே?''

''வாழ்த்துக்கள் சொல்லத்தான்!''

## 7

கடிதம் கிடைத்ததா என்று பத்ரியோ, கிடைத்தது போல் ராணியே காட்டிக் கொள்ள வில்லை. வழக்கம் போல் இருவரிடையே தயக்கம் வந்து தடுக்க மவுனம் மட்டுமே ஆட்சி செய்தது.

'எப்படியோ என் மனதை தெரியப்படுத்திவிட்டேன்' என்று பத்ரி நிம்மதியாய் இருந்தான்.

இப்படியாவது எழுதி வெளிப்படுத்தினானே... என்று ராணியும் கனவுலகில் மூழ்கினாள்.

இனிய மாலைப் பொழுது!

இரத்தச் சிவப்பாய் பதுங்கிக் கொண்டிருந்த கதிரவன் மரங்களுக்கிடையே தெரிந்தான். தென்றல் சுகமாய் வருடிக் கொண்டு சென்றது. பத்ரி 'ஹா' வென மூச்சை உள்ளிழுத்தான்.

"வாசனை அருமையா இருக்கு! சென்ட் போட்டிருக்கீங்களா மிஸ் ராணி?"

'இன்னும் என்ன வாங்க போங்கன்னு?' பொய்யாய் கோபம் எட்டிப் பார்த்தது.

"ம்.. நேத்துதான் வாங்கினேன்... ஐநூறு ரூபாய்!" பெருமையாய் சொன்னாள்.

பத்ரி தனக்குள் யோசித்தபடி எதுவும் பேசாமல் வந்தான்.

"வாசனை நல்லா இருக்கா சார்?"

"நிஜத்தைச் சொன்னா, கோபம் வராதே?"

"என்ன?"

"பத்து பைசா கொடுத்து வாங்கி தேய்ச்சி குளிக்கிற மஞ்சள்ல இருக்கிற வாசனையும், அழகும், காத்தோட காத்தா போயிடற இந்த விலை உயர்ந்த சென்ட்ல இல்லேங்கறது என் அபிப்ராயம்."

"என்னை அம்மாஞ்சி மாதிரி மஞ்சள் பூசிக்கச் சொல்றீங்களா? நான் என்ன கிழவியா? வயசுக்கேத்த மாதிரி நம்மை சந்தோஷப்படுத்திக்க கொஞ்சம் செலவு செய்யறதில் தப்பில்லே. உண்மையாச் சொல்லப்போனா, அந்த சந்தோசம் தான் நம்மை அழகா வைச்சிருக்கிற அஸ்திவாரம். உங்களை மாதிரி வயசுக்கும், டிரஸ்ஸுக்கும் சம்மந்தமே இல்லாத மாதிரி இருக்க என்னால முடியாது சார்!" தோளை குலுக்கிச் சிரித்தாள்.

அவள் எதை குறிப்பிட்டுச் சொல்கிறாள் என்பது பத்ரிக்குப் புரிந்தது.



பத்ரி பள்ளிக்கு வரும்போது தூய வெண்ணிற வேட்டி, சட்டையில்தான் வருவான். ராணியும் எத்தனையோ முறை சொல்லிவிட்டாள்.

"பாண்ட் சர்ட்டை போட்டுகிட்டு டிப்டாப்பா வந்தா டீஸன்ட்டா இருக்கும். இப்படி இந்த கோலத்தில் வர்றதை பார்க்கிறவங்க, நீங்க முதியோர் பள்ளிக்குப் படிக்கப் போறீங்கன்னுதான் நினைச்சுப்பாங்க" கிண்டலடிப்பாள்.

இப்போதும் அப்படித்தான் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாள். அவனுக்கு வலிக்கவில்லை. லேசாய் கவலை எட்டிப் பார்த்தது.

"சார்... என்னுடைய சின்ன யோசனை..." மூன்றாவது பீரியடுக்கான பெல் அடுத்தபோது.. பத்ரியிடம் பீடிகையாய் ஆரம்பித்தாள்.

"சொல்லுங்க மிஸ் ராணி!"

"அடுத்து பிரியட் உங்க வகுப்புக்கு பீட்டிதானே? என் வகுப்பையும் சேர்த்து பார்த்துக்க முடியுமா?"

"ஏன்... நீங்க எங்க போறீங்க?"

"வீட்டுக்கு."

"ஏன்... நடுவில திடீர்னு? வீட்ல யாருக்கும்?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே... விசேஷம்."

"என்ன விசேஷம்?" குறும்பாய் கேட்டான் பத்ரி.

"என்னை பொண்ணு பார்க்க வர்றாங்க" வேண்டுமென்றே பதிலுக்கு குறும்பாய் சொன்னாள்.

''இருக்காதே! இன்னிக்கு உங்க வீட்டுக்கு வர்றதா நான் சொல்லவே இல்லையே?''

''ம்... ரொம்பத்தான் தைரியம்'' வெட்கமும், போய் கோபமுமாய் தரையைப் பார்த்தாள்.

''சரி... சரி... கவலைப்படாதீங்க. நான் பார்த்துக்கறேன். நீங்க போங்க... ஒருநிமிடம்.. விஷ் யூ ஆல் த பெஸ்ட்'' பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி வாழ்த்தினான் பத்ரி.

பள்ளி வாசலில் கல்யாணத்திற்கு போடுவது போல் பந்தல்... தோரணங்கள்! பாதையெங்கும் கோலம் போடப்பட்டிருந்தன. பூத்தூவ மாணவிகள் இரண்டு பக்கமும் தட்டோடு வெயிலில் கருகிக் கொண்டிருந்தனர்.

'கல்வி அமைச்சர் செண்பகராமன் அவர்களே வருக... வருக!' பேனர் வரவேற்றது. இதுதான் சாக்கு என்று மாவட்ட செயலாளர் கட்சி கொடிகளை அண்ணாந்து பார்த்தால் வானமே தெரியாதபடி தோரணமாய் கட்டியிருந்தார்.

பள்ளியின் ஆண்டு விழா! அதற்காகத்தான் அமைச்சர் அழைக்கப்பட்டிருந்தார்.

மேடை அமர்க்களமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சரியாய் மூன்று மணிக்கு அமைச்சரின் கார் உள்ளே நுழைந்தது.

கார் கதவு திறந்துவிடப்பட்டதும், புன்னகை முகத்தோடு இறங்கிய செண்பகராமன் கைகூப்பியபடி மேடை ஏறினார்.

பத்ரி வரவேற்றுப் பேச... தலைமையாசிரியர் மாலை அணிவித்தார். செண்பகராமன் பேசி முடித்து, மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகளை கொடுக்க எழுந்து நின்றார். ராணி



வரிசையாக பரிசுகளை எடுத்து அவரிடம் தர... அப்போதுதான் பார்த்தார் அவளை...

'யார் இந்த கிராமத்துக் கிளி? கார்ப்பரேஷன் ஸ்கூல்ல... அதுவும் காஞ்சுபோன இந்தப் பட்டிக்காட்டுல ஊட்டி ஆப்பிள் மாதிரி... தளதளவென்று இருக்காளே... என்ன ஒரு உடம்பு?'

அமைச்சர் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் ராணிக்கு முகம் சிவந்து போனது.

என்னவென்றே புரியாத ஒரு உணர்வு அவளுள் ஆட் கொண்டது. இயல்பை மீறி ஒரு படபடப்பு. செண்பகராமன் மெல்ல... யாரும் பார்க்காதபோது அவளைப் பார்த்து ஒரு சிரிப்பை சிந்தினார்.

ராணி ஆகாயத்தில் பறந்தாள்.

'அமைச்சரின் பக்கத்தில் நிற்பதே பெரும்பாக்கியம்! அவரே என்னை பார்த்து சிரிக்கிறார் என்றால்?'

மாட்டு வண்டியில் போகிறவன் விமானத்தில் போகிற நிலைதான் ராணிக்கு.

செண்பகராமனிடமிருந்து வீசிய உயர்ரக செண்ட்டின் நறுமணம்... கிறங்க வைத்தது. அவரை அதிசய மனிதரைப் போல் பார்த்து வாய்ப்பிளந்து நின்றாள்.

பரிசுப் பொருளை வாங்கும்போது விரல்களால் அவள் விரல்களை சீண்டினார்.

ராணிக்கு குப்பென்று வியர்த்துப் போனது.

## 8

அந்த வீட்டிலுள்ள அத்தனை பேர் இதயமும் துரிதகதியில் துடித்துக் கொண்டிருந்தன.

பலவற்றையும் நினைத்து... ஒன்றுமே பிடிபடாமல் குழம்பிப் போயினர்.

அன்று காலை வாட்டசாட்டமான ஒரு நபர் வந்தார். ஜகன்னாதனை தான் தங்கியிருக்கும் டிராவலர்ஸ் பங்களாவிற்கு கையோடு அழைத்துவரும்படி அமைச்சர் செண்பகராமன் தன்னை அனுப்பியதாக அறிமுகப்படுத்திக்கொண்டார்.

யாருக்கும் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை!

என்னையா!

அதுவும் அமைச்சரா?

எதற்காக?

முன்பின் அறிமுகமேயில்லாத என்னிடம் என்ன பேச அழைக்கிறார்?

அவர் முகத்தை இதுவரை பேப்பரில்தான் பார்த்திருக்கிறேன். அதுவும் எப்போதோ? சட்டென்று நினைவிற்குகூட வரவேயில்லை. அந்தளவுதான் மனதில் பதிந்தது முகம்.

ஒரு அரசியல்வாதிக்கு என்னிடம் பேச என்ன இருக்கிறது?

அரக்கப் பரக்க புறப்பட்டார் ஜகன்னாதன்.

ராணிக்கும் எதுவும் புரியவில்லை.

இரண்டு வாரத்திற்கு முன்பு வந்து சென்ற அமைச்சருக்கு அப்பாவிடம் பேச என்ன இருக்கு? அதுவும் முன்பின் அறிமுகமில்லாதவரிடம்?



கைகூப்பி வரவேற்ற அமைச்சரைப் பார்த்து வெலவெலத்துப் போனார் ஜகன்னாதன்.

''உக்காருங்க சார்?''

''இ... இல்லே... பரவாயில்லேங்க...''

''நின்னபடி பேசற விசயமில்லே இது... உக்காருங்க'' செண்பகராமன் வற்புறுத்தினார்.

அதற்குமேல அடம்பிடிக்காமல் சீட்டின் நுனியில் உட்கார்ந்தார்.

பணமும், பதவியும் தந்த செருக்கு, செண்பகராமனை தனி மனிதர்களிடமிருந்து தனித்துக் காட்டியது.

வி.ஐ.பி.கள் தங்குவதற்கென்றே கட்டப்பட்ட பங்களா. நவீனமாக இருந்தது

அந்த கிராமத்தில் இதுவரை பார்த்திராத நவீன பொருட்கள் அடக்கமாய் வைக்கப்பட்டிருந்ததை தன்னை மீறி பார்த்து வாய்ப்பிளந்தார்.

வழவழவென இளநீல மொசைக் கற்கள் பதித்த தரை. கண்ணாடி டீப்பாய். அதன் மீது ஆங்கில நாளிதழ்கள், வார இதழ்கள். சில்லென்ற ஏஸிக்காற்று! உயர்ரக துணிகளில் திரைச்சீலைகள். வளைவு வளைவாய் டிசைனாய் அமைக்கப்பட்ட கதவு, ஜன்னல்கள், உறுத்தாத வண்ணத்தில் பளபளத்த சுவர்.

சின்ன முக்காலி மீது பீங்கான் தட்டில் வைக்கப்பட்டிருந்த ஐதராபாத் திராட்சை. அதை தன்னிச்சையாய் ஒவ்வொன்றாய் எடுத்து வாயில் போட்டுக் கொண்டிருந்தார் செண்பகராமன்.

வெள்ளை நிற வேட்டி சட்டை! மார்பினுள் தடிமனாக புரண்ட தங்கச் செயின். கையில் சங்கிலி போல் கட்டப் பட்டிருந்த பிரேஸ்லெட்! கைவிரல்களில் நாலைந்து மோதிரங்கள். ஆள்காட்டி விரலில் இளநீல கல்வைத்த வெள்ளி மோதிரம் கூட அணிந்திருந்தார்.

அவரைப் பார்க்கப் பார்க்க வயிற்றை கலக்கியது.

''என்ன சாப்பிடறீங்க? காபி... டீ?''

''சார்... அதெல்லாம் எதுவும் வேணாங்க. நீங்க கூப்பிட்டீங் கன்னு..''

''பதட்டப்படாதீங்க... முதல்ல ஏதாவது சாப்பிடுங்க.. முத்து.. சாருக்கு குடிக்க ஏதாவது கொண்டுவரச் சொல்லு... உள்ளே யாரும் வரக்கூடாது. நாங்க தனியாப் பேசணும்!''

''சரிங்க சார்!'' முத்து அகன்றான்.

கொண்டுவரப்பட்ட காபியை கைகள் நடுங்க குடித்து முடித்தார்.

அதன்பின் அமைச்சர் அப்படியொரு குண்டைத் தூக்கிப் போடுவார் என்று ஜகன்னாதன் எதிர்பார்க்கவேயில்லை.

ஜகன்னாதன் வரும்வரை நெருப்பின்மேல் நிற்பது போன்ற அவஸ்தை!

திரும்பி வந்த ஜகன்னாதனின் முகம் களையிழந்து காணப்பட்டது. துண்டால் முகத்தை துடைத்துக் கொண்டு பத்மாவிடம், ''குடிக்கத் தண்ணீர் கொண்டு வா!'' என்றார்.

குடித்து முடித்ததும் பத்மா மெதுவாய் கேட்டாள். ''என்ன விசயங்க?''



அருகில் ராணி இருப்பதைப் பார்த்ததும் தயங்கினார். ''நீ உள்ளே போம்மா?'' என்றார்.

விசயம் தன்னைப் பற்றித்தான் என்று யூகித்துக் கொண்டாள். அறையினுள் சென்றாலும் பல்லி போல் சுவரோரம் ஒட்டிக் கொண்டு காதை கூர்மையாக்கிக் கொண்டாள்.

ஜகன்னாதன் தொண்டையை செருமிக் கொண்டார்.

''சொல்லுங்க... எதுக்காக காரை அனுப்பிக் கையோடு அழைச்சிட்டு வரச் சொன்னார்?''

''எதைன்னு சொல்ல? நம்ம ராணியை பள்ளி விழாவில் பார்த்தாராம்... பிடிச்சிப்போச்சாம்...''

''....''

'கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறாராம்!''

''நான் சொல்லலீங்க அப்பவே! நம்ம ராணியோட அழகுக்கு ராஜ வாழ்க்கைதான் அமையும்னு?''

''பைத்தியம் மாதிரி உளராதே! இதுவே பதவி இல்லாதவனாயிருந்தா... நாலு வார்த்தை கேட்டுட்டு வந்து இருப்பேன்... அந்தாள் பேசறதே... மிரட்டற மாதிரி இருக்குது. அவனால, ராணிக்கு ஏதும் ஆபத்து வந்திடும்மோன்னு பயமாயிருக்கு!''

''பயப்பட எதுவும் இருக்கிறதா எனக்குத் தோணலே!''

''புரியாமப் பேசாதே! அந்த ஆளுக்கு ஏற்கனவே கல்யாண மாகி.. ரெண்டு மூணு குழந்தைகளும் இருக்கு...''

''இருக்கட்டுமே!''

''இவருக்கு வயசு நாப்பத்தி மூணுடி''

''இதெல்லாம் ஒரு வயசா?''

''கல்யாணம் பண்ணினாலும் சட்டப்படி முதல் மனைவி இருக்கப்ப... செல்லாது பத்மா! சின்ன வீடு மாதிரி இருட்டுலதான் அவள் வாழணும்.''

''சின்ன வீடோ, பெரிய வீடோ? நம்ம பொண்ணு மந்திரியோட மனைவியாகப் போறது பெருமையான விசயமில்லையா?''

''அவசரப்பட்டு முடிவெடுக்கிற விசயமில்லே இது!''

''ஆறப் போடற விசயமும் இல்லே! பத்துப் பொருத்தம் பார்த்து, பண்டம் பாத்திரம் கொடுத்து, கட்டிவைக்கிற கல்யாணம் மட்டும் பிரச்சினையில்லாமலா இருக்கு! நம்ம ராணியோட அதிர்ஷ்டம் இப்படியொரு வாழ்க்கை அமையுது. மகாராணி போல வாழப்போறா! வயசு ஒரு பிரச்சினையா? இப்போ உங்களுக்கும், எனக்கும்கூட இடையில் பன்னெண்டு வயசு வித்தியாசமில்லையா! நாம மனசொத்து வாழலியா? அவருக்கிட்டே போயி மேற்கொண்டு பேச வேண்டியதை கவனியுங்க. நமக்கு அடுத்து இன்னொரு பொண்ணு இருக்கா! இனி அவளுக்காக குருவி மாதிரி சேர்த்து வைக்கணும்னு தலையெழுத்தில்லே! தெய்வம் நம்ம கூரையை பிய்ச்சிக்கிட்டு இருக்கப்போவது'' பத்மா சந்தோசத்தில் குதிக்காத குறைதான்.

''எனக்கென்னவோ... இதிலே இஷ்டமில்லே பத்மா! கட்டு செட்டாய் பட்ஜெட் போட்டு குடும்பம் நடத்தறதிலேயும் ஒரு சந்தோசமான தாம்பத்ய சுகம் கிடைக்கும். பத்ரிக்கு நம்ம ராணியை முடிக்கணும்னு நினைச்சிருந்தேன்.''



''யாரு? மாசமானா ஆயிரத்து சொச்சம் சம்பளம் வாங்கற பத்ரிக்கா? என்னங்க நீங்க?'' இளக்காரமாய் கேட்டாள் பத்மா.

''நாம முடிவு பண்ணா மட்டும் போதாது பத்மா! ராணியோட சம்மதம் ரொம்ப அவசியம். அவ மனசுல என்ன இருக்கோ, அதுப்படி நாம நடந்துக்கறதுதான் நல்ல அப்பா, அம்மாவுக்கு அழகு'' ஜகன்னாதன் பெருமூச்சுவிட்டார்.

''அது என் பொறுப்பு! நீங்க ஆகவேண்டியதை கவனியுங்க!'' குதூகலமாய் சொன்னாள்.

''நீ ராணியை வற்புறுத்தக் கூடாது... சொல்லிட்டேன்'' ஜகன்னாதன் அழுத்தமாய் சொன்னார்.

ராணி எல்லாவற்றையும் கேட்டு ஸ்தம்பித்து நின்று விட்டாள். அவள் இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

தூக்கம் பறிபோனது. பலதையும் அசைபோட்டுப் பார்த்து மனது, இப்படியும் அப்படியும் தத்தளித்தது.

செண்பகராமனா? பத்ரியா?

சுண்டினால் இரத்தம் வரும் சிவப்பு. இப்போதுதான் முன்பக்கம் முடி கொட்டத் தொடங்கியிருக்கிறது. எப்போதும் சிரித்த முகம், நாப்பத்தி மூன்று வயதில் பத்தை தாராளமாய் மைனஸ் பண்ணிவிடக்கூடிய தோற்றம் செண்பகராமனுக்கு. அவரின் சுறுசுறுப்பு இன்னும் இளைஞனாகவே காட்டியது.

பத்ரி கருப்புதான். ஆனாலும் தேக்கு போன்ற வலுவான உடற்கட்டு. திண்மையான தோள்கள். கம்பீரமான நடை. எப்போதும் புன்னகை நழுவவிடும் உதடுகள். ராணி மீது உயிரையே வைத்திருப்பவன். ராணி மனதையும் ஆக்கிர மித்தவன். அவனை நினைத்தபோதே... உடல் சிலிர்க்கிறது.

ஆனால், அதே மனதுதான் செண்பகராமனை முதன் முதலாக பார்த்தபோதும் பரபரத்தது. சிரித்தபோது வெட்கப்பட வைத்தது.

என்றாலும் நான் பத்ரியை நேசித்தது இல்லை என்றாகி விடுமா? காதல் என்ற வார்த்தையின் நேசத்தை நான் அவனிடம்தான் சுவாசித்தேன். அவன் இல்லாத வாழ்க்கையா எனக்கு? சித்ரா பெயரை அவன் உச்சரிப்பதைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாமல்... அவன் எனக்கு மட்டுமே சொந்தம் என்று உரிமை கொண்டாடிய எனக்கு அவனில்லாத வாழ்க்கையா? பத்ரி இதைத் தாங்கிக் கொள்வானா? அவன் தாங்கிக் கொள்வதிருக்கட்டும். நான் இதைத் தாங்கிக்கொள்ள முடியுமா? விடாப்பிடியாய் முடியாது என்று மறுத்தால்... யாரால் என்ன செய்துவிட முடியும்?

'அவனால், ராணிக்கு ஆபத்து வந்திடுமோன்னு பயம்மாயிருக்கு!' அப்பாவின் குரல் காதில் எதிரொலித்தது.

'நம்ம ராணியோட அதிர்ஷ்டம், இப்படியொரு வாழ்க்கை அமையப்போகுது. மகாராணி மாதிரி வாழப்போறா! நாப்பத்தி மூணு வயசு பெரிய வயசா? மந்திரி மனைவிங்கறது எவ்வளவு பெருமையான விசயம்?' பத்மாவின் குரல் மேலோங்கி ஒலித்தது.

நிஜம்தானா? நான் அதிர்ஷ்டக்காரிதானா? நான் இப்போது என்ன முடிவினை எடுப்பது? புத்திசாலித்தனமாகவா? உணர்வுப்பூர்வமாகவா? வசதிக்காகவா? காதலுக்காகவா?

சாதாரண செண்ட் போட்டதையே குறை சொல்லி மஞ்சள் தேய்த்துக் குளிக்கச் சொன்னவன் வாழ்க்கைக்கு ஒத்து வருவானா? செண்ட்டிலேயே குளிக்கப்போகும் வாழ்க்கை ஒத்துவருமா?



எது எனக்கு சந்தோஷம் தரும்? தீவிரமாய் யோசித்தாள். யோசிக்க.. யோசிக்க... கண் முன்னே காத்திருக்கும் ராஜபோக வாழ்க்கைதான் பெரிதாய் தெரிந்தது.

பத்ரியை திருமணம் செய்தால்... அந்த ஓட்டு வீட்டில், இந்த பட்டிக்காட்டில், ஆடு, மாடு, கோழி சாணத்துடன்தான் வாழ்க்கை நடத்த வேண்டும். என் ஆசைகள், ஏக்கங்கள் நிறைவேற வழியே இல்லை. காதலைத் தவிர. அப்படியானால் அது சலித்துப் போகாதா?

'ஆமாம்!' என்று கோஷம் போட்டு சொன்னது மனசாட்சி.

தமிழகத்தின் அமைச்சர். பெரும் பணக்காரர். நாடறிந்த மனிதர். சமூகத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர். அவரை மணப்பது.. என் அதிர்ஷ்டமல்லவா?

என்ன அதிர்ஷ்டம்? சின்ன வீடு என்கிற அந்தஸ்து கவுரமானதா? பத்ரியின் இதயத்தில் அரசியாய் வாழக்கூடிய அதிர்ஷ்டத்தை இழக்காதே!

'அதிர்ஷ்டம் செண்பகராமன் உருவில் வந்திருக்கிறது. சந்தர்ப்பம் ஒருமுறைதான் வாய்க்கும். அதை புத்திசாலித்தனமாய் தக்கவைத்துக் கொள்வதோ, விரட்டி அடிப்பதோ, அவரவர் சாமர்த்தியம். உன் சின்னச் சின்ன ஆசைகள், எதிர்பார்ப்புகள், ஆடம்பர வாழ்க்கை இதெல்லாம் செண்பகராமன் உருவில் வந்து நிறைவேறப் போகிறது. காதல், கத்திரிக்காய் எல்லாவற்றையும் மூட்டைகட்டி வை. அந்த மூட்டையை தீ வைத்து சாம்பலாக்கு. அதன் மீது புதிதாய் இந்த வாழ்க்கையைத் தொடங்கு! நீ பணத்தை மூட்டை கட்டி தலையணையாக்கி உறங்கலாம். விவேகத்தோடு முடிவெடு!'

மனசாட்சி ஒரேயடியாய் கத்தி, ஆர்ப்பாட்டம் பண்ணி அவளை விடியற்காலையில்தான் தூங்க அனுமதித்தது.

காலையில் அப்பா முன் நின்றாள்.

''நல்லா யோசிச்சி பார்த்தேன். இப்ப ஒரு முடிவுக்கு வந்துட்டேம்ப்பா!''

''...''

''செண்பகராமனை கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கிறேன்.''

ஜகன்னாதன் ஊசி குத்திய பலூனாய் தொய்ந்துபோனார். பத்மா பூரித்துப் போனாள்.

## 9

பரபரப்பு மிக்க சென்னை ராணியை வாய்பிளக்க வைத்தது. அடையாறு பெசன்ட் நகரில் அவளுக்கென்று ஒரு பங்களா வாங்கியிருந்தார். சின்ன ஓட்டு வீடும், கொல்லைப்புறமுமாய் வாழ்ந்தவள் பங்களாவைப் பார்த்து மலைத்துப் போனாள். வாழ்க்கைக்குத் தேவையான, தேவைக்கு மிஞ்சிய, அவள் எதிபார்த்த அத்தனை வசதிகளும் அதைவிடக் கூடுதலாகவே அங்கிருந்தன.

'நல்லவேளை, புத்திசாலித்தனமாய் முடிவெடுத்தேன். இல்லாவிட்டால்... அந்த பத்ரியை கட்டிக் கொண்டு கிராமத்தில் காய்ந்து கொண்டிருந்திருப்பேன். பத்ரி என் நிறத்திற்கும், அழகிற்கும் சற்றும் பொருந்தாதவன். நான் எப்படி அந்த கறுப்பனை காதலித்தேன்?'



ஏதோ, ஒரு பெரிய ஆபத்திலிருந்து மீண்டவளைப் போல தலையை உதறிக் கொண்டாள்.

டெலிபோன் அலறியது.

கஷ்டப்பட்டு இமைகளைப் பிரித்தாள் ராணி.

''ஹாய்... மை... டார்லிங்! குட்மார்னிங்!''

''நீங்களா? எங்கோர்ந்து பேசறீங்க?''

''என் வீட்லேர்ந்து... சாப்ட்டியா ராணி!''

''இப்பதான் கண்விழிச்சேன்.''

''மணி எட்டரையாகுதே...''

''லேசாய் தலைவலி... அதான் லேட்.''

''சரி... சாயங்காலம் வர்றேன். ஒரு முக்கியமான விசயம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் நீ வீட்டுக்கு போன் பண்ணாதே.. நானே பண்ணுவேன். ஓகே!''

''ஏன் பயமா? அவங்களுக்குத்தான் தெரியுமே!''

''தெரியும்தான்.. அதுக்காக...! அவள் என் மனைவி. நீ வீட்டுக்கெல்லாம் போன் பண்றதை விரும்பமாட்டா! புரிஞ்சுக்கம்மா...''

''ம்...'' என்று சொல்லி போனை வைத்தாள். செண்பகராமனின் பேச்சு தன்னை டீஸ் பண்ணுவது போல் உணர்ந்தாள்.

தலை கனத்தது. மூச்சில் இன்னமும் விஸ்கி வாசம் இருந்தது. இந்தப் பழக்கம் கூட செண்பகராமன் வற்புறுத்தியதால் தொற்றிக் கொண்டது. இருள்மங்கும் அந்திப் பொழுதில் வருவார். ராணியோடு ஜாலியாய் இருப்பார். அவர் எப்போது

புறப்பட்டுப் போகிறார் என்பதே தெரியாமல் போதையில் உறங்கிக் கொண்டிருப்பாள்.

ஆரம்பத்தில் கஷ்டமாகத்தான் இருந்தது. ஒருநாள் கூட அவர் முகத்தில் விழிக்க முடியவில்லையே என வருந்தினாள். பழகப் பழக தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

காலையிலிருந்தே பரபரப்பாய் இருந்தாள் ராணி. சந்தோஷத்தில் கால் தரையில் நிற்கவில்லை.

சிவகாமி ராணியைப் பார்த்து வியந்தாள்.

'இந்தப் பொண்ணுக்கு என்னாச்சு?'

வாசலில் பென்ஸ் வந்து நின்றது. ஓடோடிச் சென்று கார்க் கதவைத் திறந்தாள் ராணி.

அவளை ஏற இறங்க ஒருமுறை பார்த்தவர் சந்தேகமாய் கேட்டார்... "உனக்கு ஒன்றுமில்லையே ராணி?"

"ஏன்.. எனக்கென்ன?"

"முதல்ல... உள்ளே வா!"

"நான் எத்தனைமுறை சொல்லியிருக்கேன்! வீட்டுக்கெல் லாம் போன் பண்ணாதேன்னு! பர்வதம்கிட்டேயே என்னை கூப்பிடச் சொல்லி அதிகாரம் பண்ணியிருக்கே! என்ன இதெல்லாம்?"

"ஐயய்யோ... அது அவங்கதானா? நான் வேலைக்காரின்னு நினைச்சி... ஸாரி... ரியலி ஸாரி டியர்! உங்க போனை அணைச்சு வேற வைச்சிருக்கீங்க. அதான்!"

"சரி... சரி... அப்படியென்ன உயிர் போற விசயம்னு கூப்பிட்டே?"



"உயிர் போற விசயமில்லே... உயிர் வர்ற விஷயம்!"

"விடுகதை வேணாம்.. நேரமில்லே... கோட்டைக்குப் போகணும். சட்டு புட்டுன்னு சொல்லு!"

"எல்லாமே அவசரந்தான்" சலித்துக் கொண்டவள் அவர் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"நாப்பத்தி ஆறு நாள் இன்னையோட..."

"எது கல்யாணமாகியா?"

"ஐயோ... அதில்லீங்க... நாம உடனடியாக ஒரு லேடி டாக்டரைப் பார்க்கணும்!"

"ஏன்!" அவளை உறுத்துப் பார்த்தார்.

"எனக்கு சந்தேகமாயிருக்கு!" வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

"உண்டாகியிருக்கியா?"

"ம்..."

"ஏய்... இங்கே பார்! பைத்தியம் அப்படியெல்லாம் ஏதுமில்லே. இதுக்குப் போய் கலாட்டா பண்ணி என் கடைமை வேஸ்ட் பண்ணிட்டியே!"

"என்ன சொல்றீங்க?" திக்கென்று மனம் அதிர அவரைப் பார்த்தாள்.

"நா... நான் என்னால.. இதோ பார் ராணி! மூணு குழந்தை பிறந்த உடனே நான் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் பண்ணிக்கிட்டேன்.... அதுவும் பர்வதம் கட்டாயப்படுத்திய தால... ஏன்னு புரிஞ்சிருக்கும். சரி நேரமாச்சு, நான் வரட்டுமா?"

'இது என்ன புதுக் கதை? என் ஆசையெல்லாம் என்னாவது? நான் தாயாக மாட்டேனா? அம்மா என்றழைக்க எனக்கு குழந்தை வரம் இல்லையா? என் வாழ்க்கை இவ்வளவுதானா? இதற்குமேல் எதுவுமில்லையா? ஐயோ!'

ராணி முதன்முறையாக வாய்விட்டு அழத் தொடங்கினாள்.

'வெகு சீக்கிரத்தில் சலித்துப்போனது. பணம், பகட்டு என்று அலைந்தவளுக்கு இன்று அதுமட்டுமே வாழ்க்கையானது. சராசரி பெண்களைப் போல நானும் வாழமாட்டேனா?' என்று ஏங்கிப் போனாள்.

பத்து வருடங்கள்!

ராணியின் வாழ்க்கையில் ஆமை வேகத்தில் கடந்து விட்டன.

பால்கனியில் வந்தமர்ந்தவள். கறுப்பு நிற வானில் நட்சத்திரங்கள் இறைந்திருந்தன. சாலையில் கடந்து செல்லும் வாகனங்கள். இரவு விளக்கின் அலங்காரத்தில் தேவதையாய் ஜொலித்த சென்னை நகரம்... இப்போதெல்லாம் சிந்தையைத் தொடுவதில்லை. அவள் நெஞ்சில் நிறைந்திருப்பதெல்லாம்.. விரக்தி... விரக்தி மட்டுமே!

வீட்டில் ஒடுங்கியிருப்பதே பெரிய நிம்மதியாய் இருந்தது. மாதர் சங்கத்திற்குச் சென்று பல மாதங்களாகிவிட்டது. அந்த பார்ட்டி சம்பவத்திற்குப் பிறகு, செண்பகராமனின் கட்டளை யின்படி, அங்கு செல்வதில்லை. அதுமட்டுமின்றி கோவிலுக் குப் போகக்கூட அச்சமாக இருந்தது. போகும் வழியில் அரவிந்தனைப் பார்க்க நேருமோ? பிரகாரத்தில் பர்வதம் நின்றிருப்பாளோ?' இப்படியே பயந்து வீட்டுக்குள்ளேயே முடங்கிப் போனாள்.



நாய்க்கு எலும்புத்துண்டைக் காட்டி அழைப்பது போல.. பணத்தைக் காட்டி அழைத்தார். வந்துவிட்டாய். அவர் உடல் சூட்டை தணிக்கும் பனிக்கட்டி நீ! கரைந்துபோகும் வாழ்க்கை உன்னுடையது. ஆடம்பரமின்றி எளிமையாக சொன்னால்.. நீ ஒரு வேசி! அவ்வளவுதான்!

உண்மை உறைத்தபோது... ஊற்றுக் கண்கள் திறந்து துக்கம் பீறிட்டு அடித்தது.

பத்ரி... ஆசை கண்ணை மறைத்து, என் மனதிலிருந்து உங்களையும் மறைத்து... ரொம்ப கேவலமான வாழ்க்கையில் தள்ளிவிட்டது பத்ரி. இன்று எனக்கு எதுவும் வேண்டாம். பழையபடி அந்த பள்ளியில் நான் டீச்சராக வலம் வர வேண்டும். ஆனால், அது முடியுமா? முடியாதே! எல்லோரை யும் விட்டு நான் ரொம்ப தொலைவு போய்விட்டேன். குமறி குமறி அழுதாள்.

"இனியவளே.. என்று பாடி வந்தேன்! இனி அவள்தான் என்று ஆகிவிட்டேன். ஏழிசையில்..." டேப்பில் பழைய பாடல் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இந்தப் பாட்டு ராணிக்கு மட்டுமல்ல, பத்ரிக்கும் ரொம்பப் பிடிக்கும். அவன் அடிக்கடி இந்தப் பாடலைத்தான் முணு முணுப்பான். ஏனோ, இப்போதெல்லாம் பத்ரியின் ஞாபகம் அடிக்கடி வருகிறது.

"அம்மா..." சிவகாமி வந்து நின்றாள்.

"என்ன?"

"யாரோ ஒரு வயசுப் பொண்ணு உங்களைத் தேடி வந்திருக்கு?"

"என்னையா? என்னவாம்?"

"கேட்டா எதுவும் சொல்ல மாட்டேங்குது. உங்ககிட்டேதான் சொல்லணுமாம்..."

"எங்கேர்ந்து வர்றாளாம்!"

"உங்க ஊர்க்காரின்னு சொல்றா..."

"எங்க ஊர்க்காரியா?" குபீரென்று சந்தோஷ அலை எழும்பியது.

யாராய் இருக்கும்? தங்கையா? இருக்காது. அவள் கணவன் இவளோடு உறவு வைத்துக் கொள்ளக் கூடாது என்று கண்டித்து வைத்திருக்கிறான். அதை மீறி வரமாட்டாள். வேற யார்?

ராணியின் பெற்றோர் திடீரென்று வந்த காலராவில் அடுத்தடுத்து மறைந்த பின்.. அவளுக்கும், அவள் பிறந்த மண்ணுக்குமுள்ள பந்தம் முற்றிலும் அறுந்துபோனது. அவளது தம்பிகூட பெரிய அக்காவோடு தங்கிவிட்டான். ஆரம்ப காலத்தில் பணத் திமிரில் இவள் உடன்பிறப்புகள் என்றும் பாராது, அமைச்சர் மனைவி என்ற இறுமாப்பில் அவர்களை கேவலமாய் பேசி விரட்டியவள்தான். கழுதை தேய்ந்து கட்டெறும்பாய் ஆனபின், இவள் சங்காத்தமே வேண்டாம் என்று அனைவரும் ஒதுங்கிவிட்டனர். இப்போது இந்த கட்டெறும்பை தேடி வந்திருப்பது யார்?

"உள்ளே கூட்டிட்டு வா!"



சிறிது நேரத்தில் தயங்கித் தயங்கி இவள் அறையினுள் எட்டிப்பார்த்தாள் ஒரு பெண்.

பதினெட்டு வயதில் பருவத்தின் செழிப்பில் அழகாய் இருந்தாள்.

"யாரும்மா நீ? எங்கேர்ந்து வர்றே!"

அவ்வளவுதான். அந்தப் பெண் கண்கலங்கினாள்.

"என்னம்மா! அழாமல் சொல்லு... பணம் வேணுமா!"

"அய்யோ... அதெல்லாம் வேணாங்க! உங்களைத்தான் தெய்வமா நம்பி வந்திருக்கேன். என்னை கைவிட்டுடாதீங்க."

"எனக்கு எதுவுமே புரியலை. நீ யாரு? அதைச் சொல்லு முதல்ல..."

"என் பேரு காயத்ரி! குறிஞ்சிப்பட்டிலேர்ந்து வர்றேன். ஒரு நர்சரியில் டீச்சரா இருக்கேன். எங்கம்மா அப்பாவுக்கு நானும் அண்ணனும்தான். இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சி என் மாமாவுக்கும், எனக்கும் கல்யாணம் நடக்கப்போகுது. ஆனா..."

"ம்... சொல்லு!"

"இடையில் ஒருத்தர் புகுந்து எங்க ரெண்டு பேரையும் பிரிக்கப் பார்க்கிறார்."

"சரி.. இதுக்காக நீ ஏன் என்னைத் தேடிவரணும்? இது போலீஸ்ல போய் சொல்லவேண்டிய விசயம்."

"அங்கெல்லாம் போக முடியாதுங்க. போனாலும் நீதி கிடைக்காது."

''ஓ... அவ்வளவு பெரிய பலமுள்ள ஆசாமியா?''

''ஆமாங்க.''

''யார் அவர்?''

''மிஸ்டர் செண்பகராமன்!''

''எ.. என்ன சொல்றே நீ!'' உடம்பு ஒருமுறை தூக்கிப் போட்டது.

''நிஜம்தாங்க. உங்க புருஷன் தன்னோட ஆசைக்கு இணங்கலைன்னா... குடும்பத்தையே ஒழிச்சிடுவேன்னு மிரட்டறார். அவங்க மனைவிக்கிட்டே சொல்லலாம்னு போனோம். உள்ளேயே விடலே. உங்ககிட்டே சொன்னா. நிச்சயம் எனக்கு விடிவு பிறக்கும்னு தோணுச்சி. வந்தோம். என்னால என் மாமனை மறக்க முடியாது. இவர் அசம்பாவிதமா நடந்தார்னா... சத்தியமா நான் உயிரோட இருக்க மாட்டேங்க'' கதறினாள் காயத்ரி.

'நிஜமா! இதெல்லாம் நிஜம்தானா?' உறைந்தாள்.

'அன்று ஒரு ராணி! இன்று ஒரு காயத்ரி. மகள் வயதில் ஒரு மனைவி தேவைப்படுகிறதா? திமிர். பதவியும், பணமும் தந்த திமிர்!'

''நீ தனியாகவா வந்தே?''

''கூட அண்ணன் வந்திருக்காருங்க! வெளியே இருக்கிறார்.''

''போய்.. அழைச்சிட்டு வா!''

சோபாவில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்ட ராணியின் மனம் ஊமையாய் அழுதது.



'இவ்வளவு சீக்கிரம் நான் அலுத்துவிட்டேனா?'

''இவர்தாங்க... என்னோட அண்ணன்!'' காயத்ரியின் குரல் கேட்டு கண்களைத் திறந்த ராணி, மறுகணம் துள்ளியெழுந்து விட்டாள்.

''ப..த்..ரி!''

பத்ரி எந்தவித வியப்பையும் கண்களில் காட்டாமல் மார்பின் குறுக்கே கைகளை கட்டிக் கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீங்க... காயத்ரி...''

''காயத்ரி கொஞ்சம் வெளியே நில்லும்மா...''

''சரிண்ணா...!'' என்று போய்விட்டாள் காயத்ரி.

சற்றும் எதிர்பாராத இந்த சந்திப்பில் ஆடிப்போனாள் ராணி! எத்தனை வருடங்களுக்குப் பின் பார்க்கிறாள்?

''எ...எப்படி இருக்கீங்க பத்ரி!''

''ரொம்பவே சவுக்கியமா?''

''கல்யாணம்...?''

''ம்...ஆச்சு... பண்ணிக்காமல் இருக்க முடியுமா என்ன? நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டு போனவங்களை நினைச்சி ஏங்கி.. என் வாழ்க்கையைப் பாழாக்க நான் முட்டாளில்லே. அதிர்ஷ்டக்காரன். அதனாலதான் சித்ரா எனக்கு மனைவியா வாய்ச்சா...''

''சித்ராவா?''

''ஆமாம்... சித்ராதான் மனசுக்குள்ளேயே என்னை நேசித்த, வெளிப்படுத்த துணிவில்லாமல், வேற யாரையும் மணக்கவும் தைரியமில்லாமல் வாழ்ந்த அவள்தான் என் உத்தமி. அழகழகாய் மூன்று குழந்தைகள். அமைதியான வாழ்க்கை.''

''...''

''காயத்ரி என் தங்கை! அவள் மீது உயிரையே வைத்திருக்கிறேன். அவள் மீது தூசு விழுந்தால்கூட என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆனால் செண்பகராமன்?''

''சொல்லுங்கள் பத்ரி.. இந்த விசயத்தில் நான் என்ன செய்யணும்? கண்டிப்பா செய்றேன்!''

நக்கலாய் சிரித்தான் பத்ரி.

''இங்கே பாருங்க மேடம்! என் தங்கையை காப்பாத்த யாரும் தேவையில்லே. நான் சொல்ல வந்தது இதைத்தான். செண்பகராமனுக்கு நான்தான் எமன்.''

''ப..த்..ரி!''

''அவன் என்னமோ நினைச்சிட்டு இருக்கான். அவன் பணம், பதவிக்கெல்லாம் அஞ்சற ஆள் நானில்லே. நாங்களெல்லாம் உப்பு போட்டு திங்கறவங்க. ஒரு சொல், ஒரு செயல்தான். என் காயத்ரி ஒழுக்கமானவள்! இந்த கிழட்டு நாய் பணத்தைக் காட்டினா... எல்லாத்தையும் மறந்து அவன் பின்னாலேயே ஓடற ஜாதி இல்லை...''

''பத்ரி... போதும்... பத்ரி... போதும்...'' அவமானத்தில் உடல் கூனிக்குறுக கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விசும்பினாள்.



''நான் எல்லாத் துன்பங்களையும் இந்த பத்து வருடத்தில் அனுபவிச்சிட்டேன் பத்ரி! நீங்க நினைக்கிற மாதிரி... நான் சந்தோஷமா இல்லே... இது புரியாம...''

''எதுவுமே புரியவேண்டிய அவசியம் எனக்கில்லை'' அவன் கண்கள் வெறுப்பை உமிழ... அசிங்கத்தை மிதித்தவன் போல் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போய்விட்டான்.

ராணி வெறுமையான மனதுடன் வாசலைப் பார்த்தாள்.

''பத்ரி... போய்விட்டீர்களா? நான் நீங்கள் நினைக்கும் ராணி அல்ல. புதியவள், பட்ட அவமானங்களால் பட்டை தீட்டப்பட்டவள். அன்புக்காக ஏங்கும் அனாதை நான். என்னை நிச்சயம் ஒருநாள் உணர்வீர்கள். ரெண்டு சொட்டு கண்ணீர் விடுவீர்கள். ஆனால், அப்போது நீங்கள் தொடமுடியாத இடத்தில் நானிருப்பேன்!''

## 10

''ராணி டார்லிங்'' என்று அவளை தொட வந்தவரை பிடித்துத் தள்ளினாள்.

''ஏய்... என்ன இது? அதிர்ச்சியாய் பார்த்தார்.

''என்னைத் தொடாதீங்க. முதல்ல நான் கேக்கற கேள்விக்குப் பதில் சொல்லுங்க!''

''கேள்வியா? என்ன கேள்வி?'' ஏளனமாய் பார்த்தபடி ஒரு சிகரெட்டை பற்ற வைத்தார்.

''காயத்ரி யார்?''

''ஹக்...'' நாசியில் புகை சிக்கி இருமல் வந்தது. அவர் எதிர்பாராத கேள்வி!

'எப்படித் தெரிந்தது... இரகசியமாய் வைத்திருந்தேனே!'

''சொல்லுங்க... யார் காயத்ரி?''

''நீயே சொல்லு... யார் அந்த காயத்ரி?''

''நடிக்க வேண்டாம். எனக்கு எல்லாம் தெரியும். மரியாதையா உண்மையைச் சொல்லிடுங்க!''

''பைத்தியக்காரி... அதான் தெரிஞ்சுபோச்சுன்றியே... அதை வேற நானும் சொல்லணுமா? நல்ல பொண்ணுமா நீ...''

''அப்ப... அப்ப...''

''அப்படியேதான்.''

''அதான் ஏன்னு கேக்கறேன். நேத்து ஒரு ராணி. நாளைக்கு காயத்ரி, அடுத்தது ஒரு ரேகாவா?''

''ரேகா... பேரு நல்லாருக்கு... அந்தப் பேர்ல உனக்கு யாரையாவது தெரியுமா?''

''ஷட் அப்! என்னதான் நினைச்சிட்டிருக்கீங்க மனசுல!''

''உனக்கு வயசாய்டுச்சி ராணி! வீணா ஏன் கத்தறே? பார்வதம் கூட என்னை இப்படியெல்லாம் கேள்வி கேட்ட தில்லே... நீ ஏன் தாம் தூம்னு குதிக்கிறே? இனியொருமுறை இந்த மாதிரி கேள்வி கேட்காதே... அப்புறம் நான் நானாக இருக்க மாட்டேன்.. புரிஞ்சுக்கோ!'' எச்சரித்துவிட்டுப் போய்விட்டார்.



எதிர்பார்த்ததுதான். என்றாலும் அவர் வாயால் ஒப்புக் கொண்டது இதயத்தை இரண்டாய் கூறு போட்டது.

ஒரு கணம்தான். பின் சுதாரித்துக் கொண்டு மனதிற்குள் திட்டம் போட்டாள்.

மேசை அருகே சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்தாள். செண்பகராமனின் லெட்டர்பேடில் பேனாவை ஓடவிட்டாள்.

''இதையே திருப்பித் திருப்பி சொல்லிட்டிருக்காதே குரு! இன்பராஜனைப் பத்தி எனக்குத் தெரியும். அஞ்சு ரூபா நோட்டைப் பார்த்தாலே எச்சில் ஒழுகும். அம்பது லட்சத்தை வேணாம்னு தூக்கிப் போடறான்னா... உடனே கட்சி, விசுவாசம்னு பெரிய வார்த்தையெல்லாம் கற்பனை பண்ணிக்கக்கூடாது. கூட அஞ்சோ, பத்தோ தூக்கிப் போட்டா, நாய் வாலை ஆட்டிட்டுப் போகுது. அவரை நான் கவனிச்சுக் கிறேன். நீ ராஜேந்திரனை மடக்கிப் போடு!''

''....''

''பயமா இருக்கா?'' என்னடா பயம்? இப்ப என் பாக்கெட்ல எத்தனை அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் இருக்காங்க தெரியுமா? கட்சியை ரெண்டா உடைக்க வேண்டியதுதான் பாக்கி... பார்த்துக்கிட்டே இரு.. அடுத்த முதலமைச்சர் நான்தான்... நீ கவலைப்படாதே உனக்கு ஏதாவது வாரியத் தலைவர் பதவியை போட்டுத் தர்றேன். சரி.. வைச்சிடு. நானே உனக்கு போன் பண்றேன். ஜாக்கிரதை!''

போனை வைத்துவிட்டு பாட்டிலை திறந்தார் செண்பகராமன்.

டெலிபோன் பேச்சை முழுவதும் டேப் பண்ணிய ராணி அதை எடுத்து பத்திரப்படுத்தினாள். அந்த போனுக்கு கீழேயும் கனெக்க்ஷன் உண்டு.

எழுதி வைத்திருந்த கடிதங்களை எடுத்தாள். அதில் செண்பகராமனைப் பற்றி, அவர் கட்சியை உடைக்கும் முயற்சிகள். இளம்பெண்களை கட்டாயப்படுத்தி, மிரட்டி பணிய வைக்க முயற்சிப்பது, கடைசியாய் தன்னை கொல்லவும் திட்டம் போட்டிருப்பதாகவும், தான் அசம்பாவிதமாய் இறக்க நேரிட்டால்.. அதற்கு காரணம் செண்பகராமனே என்று தெளிவாய் எழுதியிருந்தாள்.

டேப் ஆதாரத்தை செண்பகராமன் ஒரு அமைச்சர் என்பதால் போலீஸால் அழிக்கப்படலாம் என்ற எச்சரிக்கையுடன், அந்த கேசட்டையும், ஒரு கடிதத்தையும் பார்சல் செய்து பிரபல முன்னணி அரசியல் இதழ் ஒன்றின் முகவரி எழுதினாள்.

இன்னொரு கடித உறையின் மீது கமிஷனர் பெயருக்கு எழுதினாள்.

''சிவகாமி...'' அழைத்தாள்.

''என்னம்மா?''

''இங்கே வா!''

''விளக்கிச் சொன்னாள்.

''பத்திரமாய் போய் சேர்த்துவிடு!''

''என்னம்மா இது?'' பயந்து போனாள் சிவகாமி.

''உண்மை சிவகாமி! பேச நேரமில்லே... சீக்கிரம் போ!''



''அம்மா... எனக்கு அடிவயித்தை கலக்குது. ரொம்ப பயமா இருக்கு.. ஏதோ நடக்கக்கூடாதது நடக்கப் போற மாதிரி...''

''இதுவரைக்கும் நடந்ததெல்லாம் கூட அசம்பாவிதம்தான் சிவகாமி. பிளீஸ்... இந்த உதவியை எனக்குப் பண்ணு!''

''அம்மா... உங்களுக்கொன்னும்...''

''தைரியமா போய் வா.. சிவகாமி!''

அவள் ராணியையே திரும்பித் திரும்பி பார்த்தபடி சென்றாள்.

''கடைசியா உங்க முடிவுதான் என்ன?''

''....!'' பதில் கூறாமல் அவளை முறைத்தார்.

''இவ்வளவு வயசான பிறகும் இப்படி மோசமா நடந்துக்கறீங்களே... உங்களுக்கு வெக்கமாயில்லே?''

''அதெல்லாம் பொம்பளைங்களுக்கு இருந்தாதான் அழகு!''

''உங்க பொண்ணு வயசு அவளுக்கு. அவளைப் போய்...''.

''அதுதானடி செண்பகராமன்!''

''சரி... அந்த காயத்ரிய நீங்க கட்டிக்குங்க. அதுக்குப் பதிலா உங்க மகளை காயத்ரியோட அப்பாவுக்கு... ஒரே ஒரு நாளைக்கு விட்டுக் குடுங்களேன்!''

''ப்ளார்...!'' அடுத்த நொடி செண்பகராமனின் கை அவள் கன்னத்தில் இடியாய் இறங்கியது.

''எச்சிலைத் தின்ற நாய்... நீ எம் பொண்ணைப் போய்... எவ்வளவு திமிர் இருக்கணும்டி உனக்கு? போனாப்

போகுதுன்னு விட்டா...என்னையே கூறு போட்டு வித்துடுவ போலிருக்கே! போடி வெளியே.. இந்த நிமிடமே இந்த வீட்டை காலி பண்ணு!'' சிட்டிகை போட்டுக் கத்தினார்.

''நான் ஏன் போகணும்? எனக்கு எல்லா உரிமையும் இருக்கு.. நான் உங்க மனைவி. இதோ.. நீங்க கட்டின தாலி. தட்டிக் கேட்க எனக்கும் பவர் இருக்கு!''

''அப்படியா! நாய்க்குக் கூடத்தான் கழுத்துல லைசன்ஸ் மாட்டறோம். ஏன் தெரியுமா? தன் வீட்டு வாசலை மட்டும் காவல் காக்கணுங்கற சுயநலத்துல. என்னைப் பொறுத்தவரை நீயும் நாய்தான். இந்த தாலி நான் மாட்டின லைசன்ஸ். இனி இந்த நாயே தேவையில்லாதப்ப... எதுக்கு லைசன்ஸ்? பட்டென்று இழுத்து தாலியை அறுத்தார்.

''இனி... நீ தெரு நாய்... ஓடுடி வெளியே!'' எட்டி உதைத்தார்.

ராணிக்கு வெறி உண்டானது.

''தாலி... என் தாலிய அறுத்திட்டேயில்ல... விடமாட்டேன். உன்னை உயிரோட விடமாட்டேன். நீ செத்தாதான். நீ அறுத்த தாலிக்கே ஒரு அர்த்தம் கிடைக்கும்'' ஆங்காரமாய் கத்தியபடி அவரின் சட்டையை தாறுமாறாய் கிழித்தாள். மார்புப் பகுதியில் நகத்தால் பிறாண்டினாள். இரத்தம் துளிர்த்தது.

எரிச்சல் தாளாமல் அவளை கீழே தள்ளினார்.

''நீயெல்லாம் ஒரு அமைச்சர்? எனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைச்சிட்டிருக்கியா? நீ அமைச்சர்களை விலை கொடுத்து வாங்கி, கட்சிய ரெண்டா உடைக்க திட்டம் போட்டிருக்கியே... அதை வெளியே சொல்லி உன் முகமூடிய கிழிக்கலே... என் பேரு ராணி இல்லே...''



திக்கென்றானது செண்பகராமனுக்கு.

'இதெல்லாம் இவளுக்கு எப்படித் தெரிந்தது! நோ... இவளை உயிரோட விட்டா நமக்குத்தான் ஆபத்து!'

''நாலு கால் குதிரைக்கு ஒரு கால்ல அடிபட்டாக்கூட அதை குதிரைக்கு சொந்தக்காரனே கொன்னு போட்ருவான். ஏன் தெரியுமா? இனி அதனால எந்த பயனுமில்லேன்னு. இப்ப நீயும் ஒரு நொண்டிக் குதிரைதான்டி. இப்பச் சொல்லு... நீ உயிரோட இருக்கலாமோ? வேணாமே.. பேசமா செத்துப் போயிடு!'' அவர் கண்களில் வெறி!

ராணியின் முகத்தில் எந்தவித சலனமுமில்லை. குறிபார்த்து கல்லை வீசிவிட்ட திருப்தியில் அவரை நேர்ப்பார்வை பார்த்தாள்.

அவள் எதிர்பார்த்ததும் அதுதானே? செண்பகராமனை தன்னை கொலை செய்யத் தூண்டி...

அதன்பின், அவன் சிறைக் கம்பிகளை எண்ணவேண்டும். தண்டனை அடைய வேண்டும். இளம் பெண்களின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். பத்ரி என்னைப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு விலை... தன் உயிர்! போகட்டும்... சீக்கிரம் போகட்டும்!

தயாராய் காத்திருந்தாள்.

செண்பகராமன் தன் பாதுகாப்புக்கென்று எப்போதும் வைத்திருக்கும் துப்பாக்கியை எடுத்தார்.

''என்னடி திமிராப் பார்க்கறே? பாவ்லா காட்றேன்னு நினைச்சியா? இதோ பார்'' துப்பாக்கியை ராணி மார்புக்கு நேரே குறிவைத்தார். விரல் விசையை அழுத்தியது.

சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி 'விசுக்'கென்று தோட்டாவை துப்பியது.

ரத்தம் கொப்பளிக்க... கீழே சாய்ந்த ராணியின் உயிரற்ற கண்களில் இப்போது அபாரமான திருப்தி!

மறுநாள் தினசரிகளில் பரபரப்பான தலைப்புச் செய்திகள்.

அமைச்சர் செண்பகராமன் கைது!

கட்சியை உடைக்க திட்டம்!

ராணியை கொன்று பிணத்தை தந்தூரி அடுப்பில் போட்டு எரிப்பு! உடந்தையாய் இருந்த கூட்டாளி குருவும் கைது!

படித்த பத்ரியின் கண்கள் கலங்கியது.

பெறப்பட்டது
சென்னை-600 008